வரு.73 இல. 19 ★

www.vaaramanjari.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

තිනකරන් වාරමන්ජරී

2021 மே 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

May 09 Sunday, 2021

32 பக்கங்கள் 40/-






மாற்றம் நிகழுமா தமிழக அரசியல் கலாசாரத்தில்?

02



திரிபடையும் கொரோனா வைரசுகள்; பாதுகாப்பு நம் கையில்

05



அன்னையர் தினம்; அன்னையரின் அந்திமம் விடுதிகளில் முடியலாமா?

17



கொரோனா வேகப்பந்தில் கிளீன் போல்ட் ஆன IPL

24

## ஐந்து மாவட்டங்களில் மேலும் சில GS பிரிவுகள் முடக்கம்

### விபரங்களை வெளியிட்டார் இராணுவத் தளபதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொழும்பு, காலி, களுத்துறை, கம்பஹா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் 21 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் நேற்றுக் காலை முதல் புதிதாக தனிமைப்படுத்தலுக்காக முடக்கப் பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். அதேவேளை குருநாகல் மாவட்டத்தில் குளியாப்பிட்டி பொலிஸ் நிர்வாகப் பிரிவுக்குட்பட்ட 82 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளில் 63 பிரிவுகள் நேற்றுக் காலை முதல் தனிமைப்படுத்தல் முடக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

அத்துடன் அம்பாறை

04

கொரோனா தொற்று அல்லது தனிமைப்படுத்தப்படும்

## தனியார்துறை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவது கட்டாயம்

### நிறுவன தலைமைகளுக்கு தொழில் அமைச்சர் பணிப்பு

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



தனியார் துறையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு கொவிட்19 தொற்று ஏற்பட்டாலோ அல்லது தனிமைப்படுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டாலோ கட்டாயம் அவர்களுக்கு சம்பளத்தை உரிய நிறுவனங்கள் வழங்க வேண்டுமென தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். தனியார்த் துறையில் பணிபுரியும் 35 இலட்சம்

04



கொரோனா நோயாளருக்காக

## பத்து நாட்களில் 10,000 கட்டில்கள்

### - பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக பத்து நாட்களுக்குள் 10,000 கட்டில்கள் ஏற்பாடு செய்யப்படுமென பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின்

04



# இந்தியாவை உலுக்கிவரும் B1 617 வைரஸ் இலங்கையில்

### வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவரிடம் இனங்காணப்பட்டுள்ளதாக தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இந்தியாவில் வேகமாக பரவி வரும் கொரோனா வைரஸான B1 617 வகை வைரஸ் இலங்கையில் நபர் ஒருவருக்கு இனங்காணப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் வாயு விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

வெளிநாடொன்றிலிருந்து வருகை தந்து தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று நோயாளி ஒருவரிடம் நடத்தப்பட்ட பரிசோதனையின்போதே மேற்படி இந்திய கொரோனா வைரஸ் வகை இனம் காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நபரிடமிருந்து பெறப்பட்டுள்ள மாதிரியை கொழும்பிலுள்ள தனியார் வைத்திய சாலையில் பரிசோதனை செய்தபின் அவருக்கு B1 617 வகை வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக உயிரியல் வாயு விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளர் தெரிவிப்பு

இந்தியாவில் பரவும் வைரஸ் இலங்கையில் முதல் தடவையாக இனங்காணப்பட்ட சந்தர்ப்பம் இதுவென்றும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் தென்னாபிரிக்காவில் பரவும் கொரோனா வைரஸ் வகையான B1 351 வகை வைரஸ் தொற்று நோயாளிகள் இருவர் நாட்டில் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பண்டாரகம மற்றும் கொழும்பு பிரதேசங்களில் இரு நபர்களிடருந்து பெறப்பட்ட மாதிரியை பரிசோதனை செய்தபின் அது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை நைஜீரியாவில் பரவிவரும் B1 525 வைரசும் பண்டாரகம மற்றும் கொழும்பு பிரதேசங்களில் இருவருக்கு இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில் அங்கு டென்மார்க், ஐரோப்பிய நாடுகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் பரவும் p1 428 வகை வைரஸ் சில நபர்களுக்கு இனங்காணப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் குறிப்பாக நல்லூர் பிரதேச பகுதி

04



புத்தசாசனம்,மத விவகார மற்றும் கலாசார விவகார அமைச்சின் ஏற்பாட்டில் பம்பலப்பிட்டி கதிரேசன் ஆலயத்தில் கொரோனாவில் இருந்து நாடு விடுபட மிருத்யுஞ்சய ஹோமம் நேற்று மாலை நடைபெற்றது.நிகழ்வில் பிரதமரின் இந்து மத இணைப்பாளர் பிரம்மஸ்ரீ பாபு சர்மா, இந்த சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் மற்றும் ஆலய தர்மகர்த்தா இராஜேந்திரன் செட்டியார் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்: கொழும்பு வடக்கு நிருபர்)

பாராளுமன்றத்தில் கொரோனா வைரஸ்;

## சபாநாயகர் அலுவலகம் தற்காலிகமாக பூட்டு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாராளுமன்றத்தில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்திற்கிடமான நபர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதால் சபாநாயகர் அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டு அங்குள்ள பணியாளர்கள்

04



ரமழான் தொழுகை நேரம்

| திகதி | 09– 14 |
|---|---|
| சஹர் | 04–20 |
| சுபஹ் | 04–35 |
| சூ.உதயம் | 05–55 |
| ளுஹர் | 12–08 |
| அஸர் | 03–28 |
| மஃரிப் | 06–20 |
| இஷா | 07–33 |

Halo

Complete Family Protection

Hotline: 077 4648855

கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு;

## சகல பிரதான வைத்தியசாலைகளிலும் கொரோனா சிகிச்சைக்கு தனிப்பிரிவு

### விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர பணிப்பு

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



நாட்டில் கொவிட் தொற்றுக்கு உள்ளாகுபவர்களின் எண்ணிக்கையில் தொடர்ச்சியாக அதிகரிப்பு ஏற்பட்டு வருவதால் அனைத்து பிரதான

04

செந்திலின் மற்றுமொரு முயற்சிக்கு பலன்;

## பெருந்தோட்ட கைக்காசு தொழிலாளர்களுக்கும் ரூ.1000 வழங்க தொழிற்திணைக்களம் அறிவிப்பு

**சுப்பிரமணியம் நிசாந்தன்**

பெருந்தோட்டங்களில் கைக்காசுக்கு வேலை செய்பவர்களுக்கும் (தினக்கூலி) ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படுவதில் நீடித்துவந்த இழுபறி நிலைக்கு பெருந்தோட்ட பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்பு செயலாளர் செந்தில்

04



நயினாதீவில் இடம்பெறவிருந்த

## அரச வெசாக் தினத்தை இடைநிறுத்த முடிவு

### வேறு இடத்தில் நடத்த தீர்மானம்

நாட்டின் தற்போதைய கொவிட்19 தொற்று பரவல் நிலைமையை கருத்திற்கொண்டு யாழ். நயினாதீவு நாக தீப ரஜமஹா விகாரையில் நடைபெறவிருந்த அரச வெசாக் தின நிகழ்வுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாக

04

வற்றாப்பளை உற்சவம்;

## பக்தர்கள் கலந்து கொள்வதற்கு தடை



முல்லைத்தீவில் இதுவரை 16 பேருக்கு கோவிட் 19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், வற்றாப்பளை கண்ணகை அம்மன் உற்சவத்தில் பக்தர்கள் கலந்து கொள்ள தடை விதிக்கப் பட்டுள்ளது.

04



ஸ்புட்னிக் தடுப்பூசி ஏற்றும் திட்டம் நேற்றும் (08) கொழும்பில் பல இடங்களில் நடைபெற்றன. முல்லேரியா வடக்கு, களனிமுல்ல கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள மக்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன. கலட்டுவாவத்த பௌத்த விஹாரையில் தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு நடைபெற்றது. (படம்: சமந்த வீரசிறி)

## ஜூலை மாத இறுதிக்குள் 03 மில். மக்களுக்கு தடுப்பூசி

### 09 இலட்சம் பைசர் ஊசிகளை வழங்க உறுதி


**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டிலுள்ள மூன்று மில்லியன் மக்களுக்கு எதிர்வரும் ஜூலை மாதத்திற்குள் கொரோனா வைரஸ் தடுப்பூசி வழங்க முடியுமென அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

04

## விமான போக்குவரத்து சட்டத்தில் திருத்தம்



### புதிய பரிந்துரை வெளியிடப்பட்டது

வெளிநாட்டிலிருந்து ஊழியர்களையும் சுற்றுலா பயணிகளையும் நாட்டுக்கு அழைக்கும் போது ஒரு விமான பயணத்திற்கான பரிந்துரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் ஒரு விமான பயணத்தின் போது 75 பேர் பயணிக்கலாமென பரிந்துரை

04

## பத்தரமுல்லையில் 44 KG கஞ்சாவுடன் நால்வர் கைது

### சந்தேகத்தில் கார் ஒன்றும் தடுத்து வைப்பு



பத்தரமுல்லை பகுதியில் 44 கிலோ கிராம் கேரளா கஞ்சா போதைப்பொருளுடன் நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித்ரோஹண தெரிவித்தார். தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்தரமுல்லை பகுதியில் நேற்று பொலிஸார் முன்னெடுத்த சோதனையின் போது

04

பாராளுமன்றத்தில் பாலர் வகுப்பு மாணவன் போல செயற்பாடு;

## நான்கு ஆங்கில, சிங்கள வார்த்தைகளை பேசினால் அறிவாளிகள் என நினைப்பு

### என்னை விமர்சிக்க பாராளுமன்ற நேரத்தை வீணடிக்காதீர்





சாணக்கியனுக்கு கருணா அம்மான் கடும் அறிவுரை

பாராளுமன்றத்தினுள் நான்கு ஆங்கில வார்த்தைகளையும் சிங்களத்தையும் பேசினால் தாங்கள் அறிவாளிகளென நினைக்கின்றார்கள்.

04

விக்கல் வீராச்சாமி



அண்ணே, அரசை அதிகமா விமர்சித்து பேசுற தமிழ் தலைவர்கள் எல்லாரும் அரசாங்கத்துடன் நல்ல உறவு வச்சிருக்கினமாம், உண்மையா....

இருக்கலாம் தம்பி, இது நடிப்பு அது பிழைப்பு, இல்லாட்டி அது நடிப்பு இது பிழைப்பு எனக்கும் ஒரு சந்தேகம், நீ ஓப்பனா போட்டு உடைச்சிட்ட.



அறிஞர் அண்ணா

# புதிய அரசியல் கலாசாரத்தை தமிழகத்தில் உருவாக்குவாரா முதல்வர் ஸ்டாலின்?



மு.க.ஸ்டாலின்

அருள் சத்தியநாதன்

பெரியார் ஈவேராவின் திராவிடர் கழகத்தின் நீட்சிதான் திராவிட முன்னேற்றம் கழகம். தன்னிலும் பார்க்க வயதில் மிகக் குறைந்த மணியம்மையை பெரியார் திருமணம் செய்வதாக எடுத்த தீர்மானமே திராவிடர் கழகம் இரண்டாகப் பிளக்கக் காரணம். கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் 1944ம் ஆண்டு ஜுலை 9ம் திகதி 72 வயதான தந்தை பெரியார் 27 வயதான மணியம்மையைத் திருமணம் செய்து கொண்டார்.

இன்றைய திகதியில் இத் திருமணத்தை நாம் ஆராய்ந்து பார்ப்போமானால், பெரியார் எடுத்தத் தீர்மானத்தில் எந்தத் தவறும் இருப்பதாகத் தெரியவில்லை. திருமணம் என்பது ஒருவரது தனிப்பட்ட வாழ்க்கை சம்பந்தப்பட்டது. தனது நலன்களை ஏற்கனவே உண்மையான பொறுப்புணர்வுடன் கவனித்துவந்த மணியம்மை என்ற திராவிடர் கழக தொண்டரை தன் வயதான காலத்தில் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும், தனது சொத்துகளை மிகவும் நம்பிக்கயான ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற அவசியம் இருந்ததாலும் அதற்கு மணியம்மை தான் உகந்தவர் எனத் தீர்மானத்ததில் தவறு இருக்க முடியாது. மேலும் தந்தை பெரியார் மதம், கலாசாரம், பாரம்பரிய நம்பிக்கைகள் போன்றவற்றுக்கு அப்பாற்பட்டவராக வாழ்ந்தவர் என்ற அளவில் இந்தத் திருமணத்தை பொருந்தாத் திருமணம் என பிறர் அழைப்பதை பெரியார் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டிய அவசியமும் கிடையாது.

அவரது சீடரான சி. என். அண்ணாதுரை ஆழமான அறிவு கொண்டவர். பேரறிஞர். பெரியாரின் பகுத்தறிவு சிந்தனையை அறிவார். எனவே, திராவிடர் கழகத்தில் இருந்து அவர் பிரிந்து செல்வதற்கு இத் திருமணம்தான் காரணமாக இருந்திருக்கும் என எண்ணுவதற்கில்லை. பிரிந்து செல்வதற்கு ஒரு பொருத்தமான காரணமாக இதை அன்னாதுரை கையாண்டிருக்க வேண்டுமே தவிர உண்மையான காரணமாக இதைக் கொள்ள முடியாது. உண்மையாகவே அண்ணா இதை பாரதூரமான விஷயமாகக் கருதியிருப்பாரானால் அவரது பகுத்தறிவு சிந்தனை குறைப்பாடு உடையாது என்ற முடிவுக்கே வர வேண்டியிருக்கும்.

திராவிடர் கழகம் ஒரு அரசியல் இயக்கம் அல்ல. அது ஒரு சமூக பகுத்தறிவு இயக்கம். ஆனால் அண்ணாதுரை நிறைய படித்தவர் என்ற வகையில் அடுத்த கட்டத்துக்கு செல்ல விரும்பினார். அரசியல் அதிகாரம் பெற்றால்தான் பகுத்தறிவுக் கொள்கைகளுக்கு சட்ட அங்கீகாரம் தர முடியும் என்று கருதினார். எனவே பெரியாரிடமிருந்து பிரிந்து சென்று ஒரு புதிய அரசியல் கட்சியை திராவிடர் கழகக் கொள்கைகளின் அடிப்படையில் அமைத்து தமிழக அரசியலில் இயங்குவதே எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்கும் வலுவை அளிக்கும் என அண்ணா கருதினார். அதற்கு வாய்ப்பாக அமைந்ததுதான் பெரியார் – மணியம்மை திருமணம்.



தந்தை பெரியார்

ஏனெனில், தி.க.வில் இருந்து பிரிந்து சென்ற பின்னர் 1967இல் ஆட்சி அமைக்கும் வரை பெரியார்தான் அண்ணாவையும் தி.மு.க.வையும் திட்டிக் கொண்டிருந்தாரே தவிர அண்ணாவோ அவரது தம்பிமாரோ பெரியாரையும் தி.க.வையும் விமர்சிக்கவே இல்லை. 1949 செப்டம்பர் 17ம் திகதி சென்னை ரொபின்சன் பூங்காவில் தி.மு.க உதயமானபோது கொட்டும் மழையில் சுமார் ஒன்றரை மணித்தியாலம் உரையாற்றிய அறிஞர் அண்ணா, பெரியாரே என் தலைவர் என்றும், தி.மு.கவின் தலைவர் பதவி அவருக்காகவே காலியாக விடப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

**'தமிழகத்தின் தேவைகளை நிறைவேற்றுவது முதல்வரின் கடமை என்பது ஒரு புறமிருக்க, அவர் உடனடியாகச் செய்ய வேண்டியது. தமிழகத்தின் சீர் கெட்டிருக்கும் அரசியல் கலாசாரத்துக்கு மாற்றாக கனவான் அரசியல் கலாசாரத்தை மீளவும் உருவாக்குவதாகும். தி.மு.க மீது ஒரு கறை தொடர்ந்து வருகிறது. அதற்கு ரவுடிக் கட்சி என்ற பெயர் உண்டு. ஒட்டகத்தை கட்டிவை என்பது போல தன் கட்சிக்காரர்களை கட்டுப்படுத்தும் கடினமான வேலையை, அவர் செய்தாக வேண்டும்.'**

எனினும் 1967 சட்ட மன்றத் தேர்தலில் தி.மு.கவுக்கு எதிராகவும் காங்கிரசுக்கு ஆதரவாகவும் பெரியார் பிரசாரம் செய்தார். தேர்தலில் 173 இடங்களில் போட்டியிட்ட தி.மு.க 138 இடங்களில் வெற்றி பெற்றது. 233 இடங்களில் போட்டியிட்ட காங்கிரஸ் 49 இடங்களையே கைப்பற்றியது. அமைச்சரவையை அமைப்பது தொடர்பாக ஆளுநர் உஜ்ஜல் சிங்கை சந்தித்து பேசிய அண்ணா, மறுநாள் 1967 மார்ச் இரண்டாம் திகதி காலையில் கருணாநிதி, நெடுஞ்செழியன் ஆகியோருடன் திருச்சி நோக்கிப் பயணமானார். ஏன் தெரியுமா? அங்கேதான் பெரியார் தங்கியிருந்தார்.

18 ஆண்டுகளின் பின்னர் பெரியாரை சந்தித்த அண்ணா, அவரிடம் ஆசி பெற்றபோது உணர்ச்சி வசப்பட்ட பெரியார் 'என்னைக் கூச்சப்பட வைத்து விட்டீர்கள்' என்று தழுதழுத்தார். அண்ணா கண்ணீர் விட்டார். பின்னர் பத்திரிகையாளர்களை சந்தித்த அண்ணா, எனது அமைச்சரவையை பெரியாருக்கு காணிக்கையாக்குகிறேன் என்றார்.

இந்தப் பழைய கதை இப்போது ஏன் என்று கேட்கிறீர்களா?

அன்று நிலவிய அரசியல் பண்பை, கொள்கை பிடிப்பை வாசகர்களுக்கு எடுத்துக் காட்டுவதற்காகத்தான்!

திராவிட அரசியல் என எடுத்துக்கொள்ளும் போது அதன் வரலாறு இரண்டு தலைமுறைகளைத் தாண்டி இன்று மூன்றாம் தலைமுறையிடம் வந்திருக்கிறது. பெரியார் – அண்ணா முதல் தலைமுறை என்றால் எம்.ஜி.ஆர். கருணநிதி இரண்டாம் தலைமுறை என்று சொல்லலாம். ஜெயலலிதா – பன்னீர் – எடப்பாடி ஆகியோரை திராவிட அரசியல் செய்தார்கள் என்று கூற முடியாது. கலைஞர் தன் கொள்கைக்காவும், ஈழத்தமிழர் போராட்டங்களின் பேரில் தன் பதவியை கலைஞர் இழந்ததைப் போலவே, கட்சி தன் வெற்றி வாய்ப்புகளையும் இழந்திருக்கிறது. 1976 இல் இந்திராகாந்தி பிறப்பித்த அவசர கால சட்டத்தையும் அவர் கொண்டுவந்த மிசா சட்டத்தையும் எதிர்த்ததால் அதைப் பயன்படுத்திக் கொண்ட எம்.ஜி.ஆர் தூண்டிவிட்டதில் இந்திரா காந்தி கலைஞரின் ஆட்சியை கலைத்தார். 1990ல் தமிழகத்தில் சட்ட ஒழுங்கு சீர் கெட்டிருப்பதாகவும் விடு தலைப் புலிகள் சுதந்திரமாக தமிழகத்தில் நடமாடுவதாகவும் புதுடில்லிக்கு ஜெயலலிதா போட்டுக் கொடுக்க, அன்றைய பிரதமர் வி.பி. சிங் கலைஞர் அரசைக் கலைத்தார். ராஜீவ் காந்தி மரணத்துடன் வந்த சட்டமன்றத் தேர்தலில் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் துறைமுகத்தில் கரையேறிய ஒரே தி.மு.க வேட்பாளர் கலைஞர் ஒருவர் மட்டுமே! இப்படி ஏனைய முதல்வர்கள் சந்தித்திராத சோதனைகளை கலைஞரும் அவரது கட்சியும் சந்தித்திருக்கிறது.

கடந்த ஏழாம் திகதி தமிழகத்தின் 26வது முதல்வராக மு.க. ஸ்டாலின் சத்தியப்பிரமாணம் எடுத்து பதவியை ஏற்றுக் கொண்டார். அவர் முன்பாக இருக்கும் இரு மிகப் பெரும் சவால்கள், கொவிட் 19 பெருந்தொற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதும், படிப்படியான தடுப்பூசி ஏற்றல் மூலம் கொரோனா அற்ற மாநிலமாக தமிழகத்தை மாற்றுவதுமாகும்.

இது தொடர்பான மற்றொரு முக்கிய தீர்மானத்தையும் அவர் எடுக்க வேண்டும். பதவி ஏற்ற சில தினங்களிலேயே இரண்டு வாரங்களுக்கு முழு மாநிலத்தையும் முற்றாக முடக்குவதா இல்லையா என்ற தீர்மானத்தை அவர் எடுப்பாரா? என்ற கேள்வி தமிழக சுகாதாரத்து றையினரிடம்

உள்ளது. உயிர் வாயு சிலிண்டர் தட்டுப்பாடு, கட்டில் தட்டுப்பாடு, வென்டிலேட்டர் தட்டுப்பாடு எனப் பல குறைபாடுகள் நிலவும் நிலையில் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லுமானால் டில்லி சூழல் தமிழகத்திலும் வரலாம் என்று சுகாதாரத்துறையினர் கருதுகின்றனர். சுகாதாரதுறையினரும் கடந்த ஒரு வருடகாலமாக தொடர் பணிகளால் களைத்துப் போயிருப்பதாலும் இரண்டுவாரகால முடக்கம் என்பது அர்த்த புஷ்டியான பலன்களைத் தரும், தொற்று வேகத்தைக் குறைக்கவும் செய்யும் என்பது அவர்களது எதிர்பார்ப்பாக உள்ளது.



மு.கருணாநிதி

உடனடியாக ஒரு முழு முடக்கத்துக்குப் போவதில் புதிய அரசுக்கு தயக்கம் இருக்கலாம். ஆனால் மக்கள் பணியாற்ற வந்த அரசு என்றால் கடினமான முடிவுகளை எடுக்கத்தான் வேண்டும்.

இரண்டாவது சவால், 5.7 லட்சம் கோடி கடனை திருப்பி செலுத்துவதும் அவ்வாறு செலுத்தும் வகையில் மாநிலத்தை பொருளாதார ரீதியாக அபிவிருத்தி அடையச் செய்வதுமாகும். இதேசமயம் அவர் மக்களுக்கு அளித்திருக்கும் தேர்தல் வாக்குறுதிகளில் சிலவற்றையாவது நிறைவேற்றி வைக்கவும் வேண்டும்.

தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சில முக்கியமான அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

திருக்குறளை தேசிய நூலாக அங்கீகரிக்குமாறு மத்திய அரசை வற்புறுத்துவோம் என்பது தேர்தல் அறிக்கையின் முதல் அம்சமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், கலைஞர் கருணாநிதியால் கொண்டுவரப்பட்ட அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கும் சட்டத்தை தான் அமுல்படுத்தப் போவதாகவும் அதன் படி அர்ச்சகராக பயிற்சி எடுத்துக்கொண்ட 205 அர்ச்சகர்களுக்கு உடனடி நியமனம் வழங்கப்படும், பால்விலை மூன்று ரூபாவினால் குறைக்கப்படும், அரசு துறையில் காலியாகக் கிடக்கும் 35 லட்சம் இடங்கள் நிரப்பப் படும், 75 சதவீதமான தனியார்த்துறை வேலைவாய்ப்புகள் தமிழர்களுக்கு வழங்கப்படும் வகையில் சட்டம் இயற்றப்படும், பள்ளிக் கல்லூரி மாணவர்களுக்கு கைக் கணனி வழங்கப்படும், பொதுப்பட்டியலில் உள்ள கல்வித்துறை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும், நீட் தேர்வு ரத்து செய்யப்படும் வகையில் சட்டம் கொண்டுவரப்படும், எட்டாம் வகுப்பு வரை தமிழ் கட்டாய பாடமாக்கப்படும், சமையல் எரிவாயுக்கு நூறு ரூபா மானியம் வழங்கப்படும் என்பன முக்கியமான அறிவிப்புகளாக பார்க்கப் பட்டன.

ஸ்டாலின் முதல்வராக பதவியேற்றதும், அரிசி அட்டை வைத்திருக்கும் வாழ்வாதாரம் பாதிக்கப் பட்டோருக்கு இரண்டாயிரம் ரூபா உதவித் தொகைக்கான ஆவணத்தில் தன் முதல் கையெழுத்தை போட்டியிருக்கிறார். நகர பேரூந்துகளில் பெண்கள் இலவசமாக பயணிக்கலாம் என உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

ஆனாலும் நாம் திருப்தி அடைந்துவிட முடியாது. ஏனெனில் புதுத் துடைப்பம் சீராகக் கூட்டிப் பெருக்கத்தான் செய்யும். பிரச்சினை அதுவல்ல. தமிழக அரசியல் கலாசாரத்தை மாற்றி அமைப்பதற்கான வித்தை ஸ்டாலின் ஊன்றுவாரா, பசளையிட்டு நீர் ஊற்றி வளர்ப்பாரா என்பதுதான் கேள்வி.

தமிழக அரசியல் கலாசாரம் மிகவும் கீழ் நிலையில் உள்ளது. கருணாநிதி செய்த எதையும் தான் தொடமாட்டேன் தொடர மாட்டேன் என்ற ஒரு கொள்கையை பிடிவாதமாக பின்பற்றியவர் ஜெயலலிதா. கலைஞரும் எம்ஜி ஆரும் கீரியும் பாம்பும் போல நடந்து கொண்டாலும் உள்ளூர அவர்களுக்குள் பரஸ்பர மரியாதையும் அன்பும் இருக்கவே செய்தது. ஒரு தடவை சட்ட சபையில் ஒரு அ.தி.மு.க. உறுப்பினர் கலைஞரை கருணாநிதி என விளித்து பேசினார். அவையில் அமர்ந்திருந்த எம்.ஜி.ஆர். முகம் மாறியது. பின்னர் அவரை தன் அலுவலகத்துக்கு அழைத்து, கருணாநிதி என நானே அவரை அழைப்பதில்லை. கலைஞர் என்றுதான் சொல்வேன். நீ எப்படி அவரை பெயர் சொல்லி அழைக்கலாம்? எனக் கண்டித்து அனுப்பிவைத்தாராம் எம்.ஜி.ஆர். ராஜாஜியும் தந்தை பெரியாரும் கடுமையாக மோதிக்கொள்வார்கள். ஆனால் அவர்களின் ஆழ்ந்த நட்பை அது பாதித்ததில்லை. இப் பண்புகள் இப்போது, குறிப்பாக ஜெயலலிதாவின் வருகையின் பின்னர், காணாமற் போனது.

இந்த நல்ல அரசியல் பண்புகளை மீண்டும் மேலெழச் செய்ய வேண்டியது ஸ்டாலினின் கடமை. இதற்கான சமிக் ஞைகளை இப்போது காண முடிகிறது. உதயநிதி ஸ்டாலின் தான் வெற்றி பெற்றதும் வைகோ, முத்தரசன், திருமாவளவன், விஜயகாந்த், வீரமணி ஆகிய கட்சித் தலைவர்களை சந்தித்து ஆசி பெற்றதை வித்தியாசமான, முன்மாதிரியான நகர்வாகக் கொள்ளலாம்.

(18ம் பக்கம் பார்க்க)

## தமிழக முதல்வர் பட்டியல்

சுதந்திரத்துக்கு முன்னர் தமிழகம் மெட்ராஸ் பிரஸிடென்சி என்றே அழைக்கப்பட்டது. சென்னை மாகாணத்துக்கென சட்டசபை இருந்தது. 1946ம் ஆண்டு இச் சபைக்கு தேர்தல் நடைபெற்றது. காங்கிஸ் வெற்றி பெற்றது. இதற்கு முன்னர் 1939 இல் முதல் மந்திரியாக விளங்கிய ராஜாஜியே மீண்டும் முதல்வராக வேண்டும் என காந்தியடிகள் விரும்பிய போதிலும் 'ஆந்திர கேசரி' என அழைக்கப்பட்ட டி. பிரகாசம் முதல்வாரானார். இவர் 1947ஆம் ஆண்டு பதவி விலக, புதிய முதல் அமைச்சராக ஓமத்தூர் ராமசாமி ரெட்டியார் பதவி ஏற்றார். அதன் பின்னர் குமாரசாமிராஜா முதல்வரானார்.

1952 ராஜாஜி (1952 – 1954–)
1954 காமராஜ் 1954– 1957
1957 காமராஜர் 1957– 1962
1962 காமராஜர் 1962–1963
1963 பக்தவர்சலம் 1963–1967
1967 அண்ணாதுரை 1967– 1969
1969 கருணாநிதி 1969– 1971
1971 கருணாநிதி 1971 – 1976
1977 எம்.ஜி.ஆர் 1977– 1980
1980 எம்.ஜி.ஆர் 1980 – 1984
1985 எம்.ஜி.ஆர் 1985 – 1987
1988 ஜானகி 1988 – 1988 (23 நாட்கள்)
1989 கருணாநிதி 1989 – 1991
1991 ஜெயலலிதா 1991 – 2001
2001 ஓ. பன்னீர் செல்வம் 2001 – 2002
2002 ஜெயலிலதா 2002 – 2006
2006 கருணாநிதி 2006 – 2011
2011 ஜெயலலிதா 2011 – 2014
2014 பன்னீர் செல்வம் 2014 – 2015
2015 ஜெயலலிதா 2015 – 2016
2016 ஜெயலலிதா 2016 – 2016 (7 மாதங்கள்)
2016 பன்னீர் செல்வம் 2016 – 2017 (2 மாதங்கள்)
2017 எடப்பாடி பழனிச்சாமி 2017– 2021
2021 மு.க. ஸ்டாலின் 2021 –


சேதன உர வழங்குநர்களைப் பதிவு செய்தல்

உர உற்பத்தி மற்றும் வழங்கல், இரசாயன உரம் மற்றும் பூச்சிக் கொல்லிகள் பயன்பாட்டு இராஜாங்க அமைச்சு
(விவசாய அமைச்சு)

காலநிலை மாற்றங்களுக்கு நிலையான தீர்வுடன் சமூக - பொருளாதார அமைப்பை நோக்கிய பயணத்தில்

வ/ப இலங்கை உரக் கம்பனி, கௌரவ ஜனாதிபதியின் நோக்கிற்கு இயல்பாக நாடளாவிய ரீதியில் பரந்துபட்டுள்ள தகைமையான சேதன உர உற்பத்தியாளர்களிடமிருந்து உயர் தரத்திலான சேதன உர உற்பத்தியை கொள்வனவு செய்வதற்காக வழங்குநர்கள் பதிவு செய்யப்படுகின்றனர்.

இதற்காக நீங்கள் கீழ்க்காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் மற்றும் சேதன உர வழங்குநராக முழு அரச நிறுவனமான வ/ப இலங்கை உரக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து நாடளாவிய ரீதியில் சேதன உரத்தை விநியோகிக்கும் வலையமைப்பின் அங்கத்தவராவதற்கு விரும்பின் கீழ் கோரப்பட்டுள்ள தகவல்களை 2021 ஜூன் 30ம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வைக்குமாறு இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

அடிப்படைத் தகைமைகளுக்காக சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் :

1. வியாபார பதிவுச் சான்றிதழ் :
2. சேதன உர உற்பத்தியாளராக தேசிய உர செயலகத்தின்/ மாகந்துர சேதன உர உற்பத்தி மற்றும் ஆய்வுநிறுவனத்தின் பதிவுச் சான்றிதழ்.
3. செல்லுபடியாகும் சுற்றாடல் அனுமதிப்பத்திரம்.
4. ஒவ்வொரு உற்பத்திக்கும் கிட்டிய 03 மாதத்திற்குள் அங்கீகாரம் சான்றிதழ் பெற்ற ஆய்வுகூடத்தின் மூலம் பெற்றுக்கொண்ட ஆய்வுகூட அறிக்கைகள்.

ஏனைய ஆவணங்கள்.

1. நிறுவன விபரக் குறிப்பு (Company Profile)
2. தற்போதைய உற்பத்தி வகைகள் மற்றும் கொள்வனவுகள்
3. ஒவ்வொரு உற்பத்திகளினதும் ஒரு அலகிற்கான உற்பத்தி செலவுகள்
4. உற்பத்தியகத்தை நடத்திச் செல்வதற்கான கடிதம்
5. உங்களது உற்பத்திகளை பாவிக்கக்கூடிய பயிரினங்கள் மற்றும் அதற்கான பரிந்துரைகள்.

(அரசினால் இந் நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக்குவதற்காக எதிர்காலத்தில் வழங்குவதற்கு எதிர்பார்க்கின்ற சகல வசதிகளையும் எமது கம்பனியூடாக வழங்குவதற்கு உத்தேசிக்கப்படுகிறது)

பதில் பெறுகை முகாமையாளர்,
பெறுகைப் பிரிவு,
வ/ப, இலங்கை உரக் கம்பனி,
லக்பொஹர சுவர்ணஜயந்தி மாவத்தை, ஹுனுப்பிட்டிய,
வத்தளை.
தொலைபேசி - 011-2947762, 0112930298.'.99
பெக்ஸ் :- 011-2947760
ஈமெயில் :- lakpohora@sltnet.lk, mm@lakpohora.lk
www. lakpohora.lk lakpohora.lk

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “சேதன வழங்குநர்களை பதிவு செய்தல்” என்று குறிப்பிட்டு 21.06.30ம் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் இங்கு குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்புவதற்கு அல்லது கொண்டு வந்து ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும்.



# மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக

# யாழ் வீட்டு திட்டங்களால் அல்லல்படும் மக்கள்

மயூரப்பிரியன்

ஆட்சியாளர்கள் மாறினாலும் வடக்கில் யுத்தத்தால் இடம்பெயர்ந்து வாழும் மக்களின் கஷ்டங்கள் தீர்ந்தபாடில்லை. குறிப்பாக மீள் குடியேறியோரின் வீட்டுப் பிரச்சினைகளை கவனிப்பார் யாருமில்லை.. மீள் குடியேற அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் மீள் குடியேறி அங்குள்ள தமது காணிகளில் கொட்டகை அமைத்தோ, அரை நிரந்தர வீடுகளை அமைத்தோ தங்கியுள்ளோருக்கு மாத்திரமே வீட்டுத் திட்டங்களின் கீழ் நிதி வழங்கப்படும் என யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர்கள் சிலர் அறிவித்துள்ளனர். இவ்வாறான அறிவிப்புகளால் தாம் பல இன்னல்களை சந்திப்பதாகவும் மீள் குடியேறி வீட்டுத் திட்டங்களின் கீழ் நிதி கிடைக்கப் பெறாதவர்கள் தொடர்ச்சியான குற்றச்சாட்டுக்களை முன் வைத்து வருகின்றனர்.

மீள் குடியேற அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் மீள் குடியேறவில்லை என்பதால் பலருக்கு வீட்டுத் திட்டங்கள் மறுக்கப்பட்டு உள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். குறிப்பாக கோப்பாய் பிரதேச செயலகம் மற்றும் தெல்லிப்பளை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் இந்நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்நிலையில் காணிகளில் தங்கியுள்ளவர்களுக்கு மாத்திரம் தான் வீட்டுத் திட்டங்களின் கீழ் நிதி வழங்க வேண்டும் என சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளதா ? என கோப்பாய் பிரதேச செயலகத்திடம் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட போது, அவ்வாறான சுற்று நிருபங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை என பதிலளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சில அரச அதிகாரிகளிடம் கேட்கப்பட்ட போது, , மீள் குடியேற அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஆரம்ப காலத்தில் பதிவு செய்தவர்களுக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டன. வீட்டு திட்டங்களை பெற்று வீடுகளை அமைத்த பலர் வீடுகளுக்கு திரும்பாமல் தொடர்ந்து வெளியிடங்களில் தங்கியுள்ளனர். அதனால் அவர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகள் பராமரிப்பின்றி கைவிடப்பட்டுள்ளன. இதனாலயே காணிகளில் மீளக் குடியேறி கொட்டகை அல்லது அரை நிரந்தர வீடுகள் அமைத்து தங்கி உள்ளோருக்கு வீடுகளை வழங்க முடிவு செய்து அவ்வாறான புதிய நடைமுறையை சுற்று நிருபங்களில் குறிப்பிடாத போதிலும் நாம் கடைப்பிடிக்கிறோம் எனத் தெரிவித்தனர்.

மீள் குடியேற அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படாததால் பலரும் மீள் குடியேற பின்னடிக்கின்றார்கள் என்று பொது மக்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.



30 வருடங்களுக்கு பின்னர் காணிகளுக்கு சென்று காணிகளை துப்பரவு செய்து அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் மீள் குடியேற முடியாதுள்ளது. எங்களுக்கான அடிப்படை வசதிகள், வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டால் நாம் மீள் குடியேற தயாராக உள்ளோம் என்கின்றனர்.

பற்றை காடுகளாக இருக்கும் பகுதிகளில் வயதானவர்கள், நோயால் பாதிக்கப்பட்டவர்கள் , பெண்கள் உள்ளிட்டவர்களுடன் எவ்வாறு தங்கி இருந்து வீட்டு திட்டத்தை பெற்று வீட்டினை கட்ட முடியும் என கேள்வி எழுப்புகின்றார்.

அதேவேளை, அப்பகுதிகளில் உள்ள கிணறுகள் 30 வருட காலமாக பாவனை இன்றி பாழடைந்துள்ளது. கிணற்று நீரினை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. அதேவேளை மலசல கூட வசதிகள் கூட இல்லாத நிலைமை காணப்படுகிறது.

குடிநீர் வசதிகள், மலசல கூட வசதிகள் என எந்த அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் பற்றை காடுகளாக உள்ள தமது காணிகளை துப்புரவு செய்து பாதுகாப்பு வேலியிட்டு (வேலி அடைத்து) அங்கு அரை நிரந்தர வீடமைத்து தங்குவது என்பது எல்லோராலும் சாத்தியமற்ற விடயம். அதற்கான பொருளாதார வசதிகள் அற்ற நிலையிலையே நாம் வாழ்ந்து வருகின்றோம் என்கின்றனர் மக்கள்.

இதேவேளை, சிலர் தமது காணிகளில் அரை நிரந்தர வீடுகள் அமைத்து தங்கி உள்ள போதிலும் பல மாதங்கள் கடந்தும் வீட்டுத் திட்டங்கள் கிடைக்கப் பெறவில்லை என கவலை தெரிவிக்கின்றனர். அடிப்படை வசதிகள் இன்றி பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் காணிகளில் அரை நிரந்தர வீடுகள் அமைத்து தங்கியுள்ள போதிலும், வீட்டு திட்டங்கள் இன்னமும் கிடைக்காமை அவர்களை மிகுந்த மன அழுத்தத்துக்குள்ளாக்கியுள்ளது.

30 வருட காலமாக இடம்பெயர்ந்து ஒரு தலைமுறையே வேறு இடங்களில் தங்கி விட்டு திடீரென சொந்த இடங்களில் மீள் குடியேறு என வற்புறுத்தும் போது சில நடைமுறை சிக்கல்களையும் தாம் எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.


குறிப்பாக பிள்ளைகள் நகர்ப்புற பாடசாலைகளில் கல்வி கற்று வருவதனால், தனியார் வகுப்புக்கள் உள்ளிட்ட சில கல்வி செயற்பாடுகளுக்காக இதுவரை காலமும் தங்கி இருந்த இடத்தில் தங்கி இருக்க வேண்டிய தேவை உள்ளது. இவற்றை எல்லாம் குழப்பிக்கொண்டு மீள் குடியேற அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் வந்து கொட்டகை போட்டு தங்கி இருந்து வீட்டுத் திட்டத்தை எதிர்பார்த்து இருக்க முடியாத நிலை உள்ளது என்கின்றனர் சிலர்.

எனவே மக்கள் மத்தியில் சொல்லப்படும் காரணங்களை அதிகாரிகள் பரிசீலிக்க வேண்டும். தாம் ஏற்கனவே வழங்கிய வீட்டுத் திட்டங்களில் வீடுகளை பெற்றுக் கொண்டவர்கள்வீடுகளில்தாங்காது , அந்த வீடுகளை பராமரிக்காது கைவிட்டு சென்றார்கள் எனும் காரணத்திற்காக சுற்று நிருபங்களில் குறிப்பிடாத விடயங்களை மக்கள் மத்தியில் திணித்து பாதிக்கப்பட்ட மக்களை புறக்கணிக்க கூடாது எனவும், வீட்டுத் திட்டங்களை பெற்று வீடுகளை அமைத்து விட்டு குடியேறாது, அவ்வீடுகளை பராமரிப்பின்றி கைவிட்டவர்கள் தொடர்பில் அதிகாரிகள் சிந்தித்து அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை வழங்கப்படும் வீட்டுத் திட்டங்கள் தொடர்பில் பல குறைப்பாடுகள் பயனாளிகள் தரப்பில் சொல்லப்படுகின்றது. குறிப்பாக கட்டம் கட்டமாக பணம் வழங்கப்படுவதனால், உரிய நேரத்தில் வேலைகளை செய்து முடிக்க முடியாதுள்ளமை, கட்டுமான பொருட்களின் விலையேற்றம், கூலி ஏற்றம் என்பவற்றால் வீட்டுத் திட்டங்களை பெற்று கடனாளி ஆகும் நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே வீட்டுத் திட்டங்கள் தொடர்பில் மீள் பரிசீலனைகளை செய்து, அதிகாரிகள் அதற்கான உரிய தீர்வுகளை தமக்கு பெற்றுத் தர வேண்டும் என வீட்டுத் திட்டங்களை எதிர்பார்த்திருப்போர் கோரியுள்ளனர்.






# அடிப்படை வாதத்தால் எவ்வித பலனுமில்லை

பௌத்தர்களுக்கு வெசாக் மாதம் முக்கிய காலமாகும். சிக்கலான வாழ்க்கைக்கு பௌத்த கொள்கை வழிகாட்டியாகும். தர்மம் காட்டும் நடைமுறையை பின்பற்ற வேண்டும். அடிப்படை வாதத்தால் எதுவித பலனுமில்லை. நடுநிலை வகிப்பது முக்கியமாகும். அனைத்து போகங்களையும் துறந்த சித்தார்த்தர் சத்தியத்தை புரிந்து கொள்ளும் முயற்சியில் தனக்கு அருகில் விழுபவற்றை தவிர எதனையும் உண்ணாமல் இருக்க முடிவு செய்தார். அது தீவிரவாத போக்காகும். மிகவும் சிரமத்துக்குள்ளானார். அதிகளவு சுகமோ அதிகளவு துன்பமோ பிரயோசனமற்றது என பின்னர் புரிந்து கொண்டார்.

அன்றாட வாழ்க்கையில் எல்லா முடிவுகளும் நடு நிலையாக இருப்பது நல்லது. தீவிரவாதமாக இருக்கக் கூடாது. நபர்களுக்கு மாத் திரமல்ல நாட்டுக்கும் நடைமுறையொன்றுண்டு. பொருளாதார, சமூக மற்றும் வெளிநாட்டு கொள்கைகள் நடைமுறை சாத்தியமானதாக இருக்க வேண்டும். நடுநிலையாக செயற்படுவது அவசியம்.

சமூகத்தில் பலவிதமான விவாதங்கள் நிலவுகின்றன. தனித்துவமான கருத்துக்கள் உண்டு. தர்க்கம் செய்வது மாத்திரம் முடிவெடுப்பதற்கான ஒரே காரணமல்ல. தரவுகள் சேகரிக்கப்பட்டு அவை ஆராயப்படவேண்டும். பரிசோதிப்பின் பின்னரே முடிவுக்கு வர வேண்டும். புத்தரின் வாழ்க்கை சிறந்த எடுத்துக்காட்டு. உலக சரித்திரமும் பாடங்களை கற்றுத்தந்துள்ளது. சுதந்திரம் பெற்ற பின்னரான காலத்தில் இலங்கை பின்பற்றிய கொள்கைகளால் அடைந்த நன்மை தீமைகளை மறந்து விடக்கூடாது.

நஞ்சற்ற உணவு உற்பத்தியை நோக்கமாகக் கொண்டு உரம் மற்றும் இரசாயன திரவியங்கள் பாவனையை நிறுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதற்கு ஆதரவான சிலர் உண்டு. இயற்கையோடு இயைந்த வாழ்க்கை முறையை பின்பற்றினால் எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டும். அது பொய்யல்ல. அனைத்து செயற்கை பொருட்களையும் கைவிட்டு பழைய சமூக கட்டமைப்புக்குள் நுழைய முடியுமென்றால் அது சிறப்பான வாழ்வாகும். ஆனால் நாம் நுழைந்துள்ள யுகம் சமனற்ற ஒன்றாகும். அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டிய அவசியத்தை புரிந்து கொள்ள வேண்டும். மக்கள் தொகை அதிகரித்து செல்கிறது. காணிகள் குறைவு. விவசாயத்தில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை குறைவு. பாரியளவில் உற்பத்தி செய்ய வேண்டியுள்ளதோடு வர்த்தக சந்தைக்காகவும் உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது. வேலியடைத்து, சேதன பசளையை பயன்படுத்தியும் மேற்கொள்ளப்படும் உற்பத்தி சனத் தொகையின் தேவையை நிறைவேற்றப் போதுமானதல்ல. உலக உணவு அமைப்பும் ஏற்படவுள்ள பற்றாக்குறையை தவிர்க்க தற்போது உணவுக்கு பயன்படுத்தப்படாத பூச்சிகள் மற்றும் தாவர பகுதிகளை மனித உணவுக்கு ஏற்றதென உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது. தரைப்பகுதியில் உற்பத்தி செய்யப்படும் உணவு போதாதென்ற நிலையில் மண் இல்லாமல் மாத்திரமல்ல கடலில் கூட பயிர் செய்யும் நிலைமை தோன்றியுள்ளது. அவ்வாறான நிலைமையில் இரசாயனங்கள் மற்றும் தொழில்நுட்ப முறைகள் பாவிக்கப்படும் என்பது ரகசியமான விடயமல்ல. அதிக அறுவடை மற்றும் குறைந்த விலைக்கு பாவனையாளர்களுக்கு உணவை வழங்கும் நோக்கம் அனைத்தும் இன்னும் ஆய்வு மட்டத்திலேயே உள்ளன.

நஞ்சற்ற உணவுக்கு நாட்டில் சந்தை வாய்ப்பு உண்டு. அது பாரியளவில் உற்பத்தி செய்யப்படுவதில்லை. தற்போது இயற்கை பசளை அரிசி, மரக்கறி மற்றும் பழங்களின் விலையை நோக்கும் போது சாதாரண மக்களால் அவற்றை விலைக்கு வாங்க முடியாது. அதிகமான மக்கள் நச்சு தன்மை காணப்பட்டாலும் குறைந்த விலையிலான பொருட்களையே பாவிக்கின்றார்கள்.

மஞ்சள் இறக்குமதி நிறுத்தப்பட்டது. பாம் ஒயில் இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளது. சாதாரண மக்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மஞ்சள் ஒரு கிலோ மற்றும் ஒரு போத்தல் தேங்காய் எண்ணெய் விலையை நோக்கினால் சாதாரண மக்கள் எவ்வளவு பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை ஏன் சிந்திக்க மறுக்கிறார்கள். நாட்டில் உரம் மற்றும் இரசாயன திரவியங்களை தடை செய்து வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் பொருட்கள் நஞ்சற்றவை என்பதற்கான உறுதி என்ன? உர இறக்குமதியை நிறுத்தி அந்தப் பணத்தை கொம்போஸ்ட் வாங்க விவசாயிகளுக்கு சலுகையாக அளிக்கலாம். நாட்டிற்குள் உற்பத்தி குறையும் போது அந்த பற்றாக்குறையை தீர்க்க இறக்குமதிக்காக அந்நிய செலாவணியை பெறுவது எவ்வாறு? படிப்படியாக எடுக்க வேண்டிய முடிவுகளை உடனடியாக செயல் படுத்துவதால் பிரச்சினைகள் ஏற்படலாம். தேசிய கொள்கையை தயாரிப்பது நல்லது. உரம் மற்றும் இரசாயன திரவியங்களை இறக்குமதி செய்து அவற்றை விற்பனை செய்து வாழும் அநேகரின் வேலைவாய்ப்பும் ஆபத்திலுள்ளது. இவ்வாறான பிரச்சினைகளுக்கு விடை காண்பது இலகுவல்ல.

தமிழில்: வீ.ஆர்.வயலட்

# தேங்காய் எண்ணெய்யில் கலப்படத்திற்கு தடை

## அரசு விசேட வர்த்தமானி வெளியீடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டு மக்கள் உணவுத் தேவைக்கு உபயோகிக்கும் தேங்காய் எண்ணெய்யில் வேறு எந்த எண்ணெய் வகைகளும் கலப்படம் செய்வதை அரசாங்கம் தடை செய்துள்ளது.

நேறறைய தினம் 2226/59ஆம் இலக்க விசேட வர்த்தமானி மூலம் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அதற்கான அறிவித்தலை வெளியிட்டுள்ளதுடன் இம்மாதம் 07ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகாரசபையின் சட்டமூலத்தின்படி அதிலுள்ள அதிகாரத்திற்குட்பட்டு அதிகாரசபையின் தலைவர் மேஜர் ஜெனரல் சாந்த திசாநாயக்க கையொப்பமிட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி, போத்தலில் அடைக்கப்பட்ட தேங்காய் எண்ணெய் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டுள்ள தேங்காய் எண்ணெய் உள்ளிட்ட அனைத்து வகை உணவுக்குப் பயன்படுத்தப்படும் தேங்காய் எண்ணெய்யில் வேறு எந்த எண்ணெய்யும் கலக்கக்கூடதென குறிப்பிடப்பட்டுள்ளது.

தேங்காய் எண்ணெய் இறக்குமதியாளர்கள், சுத்திகரிப்பாளர்கள்,உற்பத்தியாளர்கள், மொத்த களஞ்சியப் படுத்துனர்கள்,விநியோகிப்பவர்கள் உள்ளிட்ட அனைவரும் மேற்படி வர்த்தமானியை முறையாக பின்பற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எஃப்லடொக்சின் எனப்படும் புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய இரசாயனம் அடங்கியுள்ள 1850 மெட்ரிக் தொன் தேங்காய் எண்ணெய் இலங்கைக்கு இறக்குமதி செய்துள்ளமை தொடர்பில் சமூகத்தில் பெரும் சர்ச்சைக்குரிய சூழ்நிலை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேற்படி தேங்காய் எண்ணெய்யை மீள் ஏற்றுமதி செய்வதற்கு நீதிமன்ற உத்தரவிற் கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதற்கமைய ஒரு நிறுவனம் இறக்குமதி செய்திருந்த 105 மெற்றிக் தொன் தேங்காய் எண்ணெய் கடந்த ஏப்ரல் 12ஆம் திகதி மலேசியாவுக்கு மீள் ஏற்றுமதி செய்யப்பட்டது.

அதனை அடுத்து கடந்த ஏப்ரல் 04 ஆம் திகதி மேலும் 230 மெற்றிக் தொன் தேங்காய் எண்ணெய்யை மீள் ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அத்துடன் மற்றுமொரு நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்டுள்ள நான்கு கொள்கலனில் உள்ளடக்கப்பட்டுள்ள 1513 மெற்றிக் தொன் தேங்காய் எண்ணெய் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வரும் நிலையில் பரிசோதனை முடிவில் அதனை உடனடியாக மீள் ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக சுங்கத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஸ)




# புரிந்து கொள்ளப்பட வேண்டிய உண்மை

மனிதன் இரண்டு முக்கிய மூலப் பொருட்களைக் கொண்ட படைப்பாவான். அவற்றில் ஒன்று அல்லாஹ்வின் ரூஹ்விருந்து ஓர் ஊதல் மூலமான ஆன்மா. மற்றையது அல்லாஹ்வின் பூமியிலிருந்து பெறப்பட்ட ஒரு பிடி மண். இவற்றின் கலவையே மனிதன்.

அதனால் தான் அவனது உடலியற் தேவைகள் எப்போதும் மண் சார்ந்ததாக உள்ளது. அத்தேவைகளை நிறைவேற்றுவதற்கான பொருட்களை அவன் மண்ணிலிருந்தே பெற வேண்டும். அவனது ஆன்மா இதற்கு நேர்மானது. அதன் தேவைகள் எப்போதும் விண்ணுலகுடன் சம்பந்தப்பட்டதாக இருக்கும். அதன் தேவைகளை நிறைவு செய்துகொள்ள அது எப்போதும் விண்ணுலகையே நாடும்.

மண்ணிலிருந்து பெறப்படும் பொருட்களும் மனித உடலும் அழியக் கூடியவை. ஆனால் மனித ஆன்மாவுக்கு அழிவு கிடையாது. அது உடலுக்கு முன்பே படைக்கப்பட்டதாகும். அதனால் ஆன்மா தன் மூலத்தில் உதயமான இடத்தை நோக்கி மனிதனை ஈர்த்துக்கொண்டே இருக்கும். அந்தஸ்தில் வானவர்களை விடவும் தகுதியால் மனிதனால் உயர முடியும் என்பதையும் அவனது இலக்கையும் நோக்கையும் அது அவனுக்கு எடுத்துக்காட்டிக்கொண்டே இருக்கும். தன்னைப் படைத்த இரட்சகனுடனான நெருக்கத்தை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொள்ள உள்ளுணர்வு மூலம் அது அவனுக்கு ஊக்கமளிக்கும்.

எனினும் மனிதனின் ஆன்மா பலம் குன்றி அதன் கட்டுப்பாடும் பலமிழக்குமாயின் அவனில் உடல் அளவுக்கு மீறிய செல்வாக்கு செலுத்தத் தொடங்கிவிடும். இதன் விளைவாக உலக மாயையிலும், ஆசாபாசங்களிலும், மனோ இச்சைகளிலும் உழலும் நிலைக்கு மனிதன் உள்ளாவான்.

இந்நிலைக்கு உள்ளாவதிலிருந்து மனிதனை நெறிப்படுத்தி சமநிலைப்படுத்தும் வழிகாட்டல்களையே இஸ்லாம் வழங்கியுள்ளது. அவற்றில் ரமழான் மாத நோன்பு முக்கியமானது. அது மனிதனின் ஆன்மாவுக்கு புத்தூக்கமளிப்பதோடு தன்னைப்படைத்த இரட்சகனை நோக்கி முன்னேறிச் செல்லவும் வழிவகுக்குகின்றது.

ஆகவே நோன்பை உரிய முறையில் பயன்படுத்தி அதன் பயிற்சிகளையும் அதற்கு ஏற்ப பயன்படுத்திடுவோம்.

மர்லின் மரிக்கார் ...

# அரசாங்கம் வழங்கியுள்ள வாய்ப்பை பயன்படுத்தி எந்த தடுப்பூசி என்றாலும் பெற்றுக் கொள்ளுங்கள்

## இலங்கை மருத்துவர் சங்கம் மக்களுக்கு வேண்டுகோள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் வழங்கப்படுகின்ற அனைத்து தடுப்பூசிகளும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதியை பெற்றுக் கொண்டவை என்றும் எந்த வித பயம் அச்சமின்றி அதனை பெற்றுக்கொள்ள நாட்டு மக்கள் முன்வரவேண்டும் என்றும் இலங்கை மருத்துவர் சங்கத் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் பத்மா குணரட்ன தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தலில் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வது மிகவும் முக்கியம் என தெரிவித்துள்ள அவர் அரசாங்கம் வழங்கியுள்ள சந்தர்ப்பத்தை நாட்டு மக்கள் புத்தி சாதுரியமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுவரை ஏழு தடுப்பூசிகள் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதி பெற்றுள்ளன. அவற்றில் எந்த தடுப்பூசியையும் மக்கள் பெற்றுக்கொண்டு தம்மை கொரோனா வைரஸ் பாதிப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதி பெற்றுள்ள அனைத்து தடுப்பூசிகளும் 65 வீத பாதுகாப்பைத் தரக்கூடியன.

மேற்படி ஊசிகளை பெற்றுக் கொண்டுள்ள 90 வீதமானோர் பாதுகாப்புடன் உள்ளதாகவும் அவர்களில் சிலருக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டாலும் தீவிர சிகிச்சைப் பிரிவு சிகிச்சைக்கான அவசியம் கிடையாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(ஸ)

## சபாநாயகர் அலுவலகம்...

தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டுள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

சுகாதாரப் பாதுகாப்பை கருத்திற்கொண்டு சபாநாயகர் தற்காலிகமாக சபாநாயகர் அலுவலகத்துக்கு சமுகமளிப்பதை தவிர்த்துள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி கொரோன வைரஸ் சந்தேகத்திற்கிடமான நபர் அடையாளம் காணப்பட்டதையடுத்து சபாநாயகர் அலுவலகம் உள்ளிட்ட அருகிலுள்ள அனைத்து பிரிவுகளும் கிருமித்தொற்று நீக்கத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

அதேவேளை பாராளுமன்ற ஊழியர்கள் சிலர் வைரஸ் தொற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் அதற்கான அறிக்கை இன்று கிடைக்கலாமென பாராளுமன்றத்தின் படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே சில மாதங்களுக்கு முன்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற ஊழியர்கள் மற்றும் பாராளுமன்ற ஊடகவியலாளர்கள் சிலருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ஸ)

## நயினாதீவில் இடம்பெறவிருந்த...

அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரச வெசாக் நிகழ்வை வேறு இடத்தில் நடத்துவதற்கு எதிர்காலத்தில் திட்டமிடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## பத்து நாட்களில் 10,000 கட்டில்கள்...

போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, புத்தளம், குருநாகல் ஆகிய மாவட்டங்களில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பத்தரமுல்லையில் 44 KG...

4 கிலோகிராம் கேரளா கஞ்சாவுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட வாக்கு மூலத்தின் படி பாதுக்க கலகெதர பகுதியில் இரு பகுதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 8 கிலோ கிராம் மற்றும் 32 கிலோ கிராம் கேரள கஞ்சா போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கார் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேக நபர்களை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி ஏழு நாட்கள் தடுப்புகாவலில் வைத்து விசாரணைக்குட்படுத்தவும் பொலிஸார் தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

## சகல பிரதான வைத்தியசாலைகளிலும்...

வைத்தியசாலைகளிலும் சில வாட்டுகளை கொவிட் தொற்றுக்கு உள்ளாகுபவர்களுக்கு சிகிச்சையளிக்கும் நோக்கில் தயார்படுத்தப்பட்டுள்ளதாக தொற்று நோய் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக நாட்டில் கொவிட் தொற்றுக்கு உள்ளாகுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. குறிப்பாக தினமும் ஆயிரத்திற்கும் அதிகமான தொற்றாளர்கள் பதிவாகி வருகின்றனர். தற்போதைய சூழலில் எமது மொத்த வைத்தியசாலை கட்டமைப்பில் 18,000 பேர் கொவிட் தொற்றாளர்களாக சிகிச்சைப் பெற்று வருகின்றனர். எதிர்காலத்தில் பல வைத்தியசாலைகளில் கொவிட் தொற்றுக்கு சிகிச்சையளிக்க எதிர்பார்ப்பதுடன், நாட்டில் உள்ள அனைத்து பிரதான வைத்தியசாலைகளிலும் தொற்றுக்கு உள்ளாகுபவர்களுக்கு சிகிச்சையளிக்க பல வாட்டுகளை ஒதுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று தனிமைப்படுத்தல் நிலையங்களை வைத்தியசாலை கட்டமைப்பை போன்று இடைநிலை சிகிச்சை நிலையங்களாக மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. முழுமையான கண்காணிப்பின் கீழ் கொவிட் தொற்றாளர்களுக்கான சிகிச்சை நிலையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

## விமான போக்குவரத்து...

செய்யப்பட்டிருந்தது. எனினும் இதற்கு ஏற்ப சரியான முறையில் இயங்க தவறியமையினால் புதிய திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

75 பயணிகளில் 50 பேருக்கு அறவீடுகளின்றி தனிமைப்படுத்தல் வசதி செய்து கொடுக்கப்படும். வெளிநாடுகளில் தொழில் புரிந்துவிட்டு நாட்டுக்கு வருவோருக்கு இந்த சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

ஏனையவர்கள் பணம் செலுத்தி தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டும்.

விமானத்தின் ஆசனம் 200 ஆக இருக்குமானால் அவற்றில் 75 பேர் தனிமைப்படுத்தல் முறைக்கமைய நாட்டுக்கு வர வேண்டும். ஏனைய 125 பேர் சுற்றுலா பயணிகளாக இருக்க வேண்டும். இவர்கள் ஹோட்டல்களில் தனிமைப்படுத்தப்படுவர்.

## பெருந்தோட்ட கைக்காசு தொழிலாளர்களுக்கும்...

தொண்டமான் மேற்கொண்ட நடவடிக்கைகளால் தீர்வு கிடைத்துள்ளது,

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபா சம்பளம் வழங்கப்பட்டுள்ள போதிலும், பல தோட்டங்களில் கைக் காசுக்கு வேலை செய்பவர்களுக்கு கடந்த ஒரு மாதகாலமாக ஆயிரம் ரூபா சம்பளம் நிராகரிக்கப்பட்டு, 700 ரூபா சம்பளம் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக செந்தில் தொண்டமானுக்கு பல மாவட்டங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் பிரகாரம், கைக்காசுக்கு வேலை செய்பவர்களுக்கு 1,000 ரூபா சம்பளம் வழங்கப்படாமையை உறுதிப்படுத்துவதற்கான தரவுகள் சேகரிக்கப்பட்டு, அவை தொழில் திணைக்களத்தில் (Labour Department) ஒப்படைக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து, கடந்த ஒன்றரை மாதமாக முன்னெடுக்கப்பட்ட விடா முயற்சியின் பிரகாரம் அரச வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட 1,000 ரூபா சம்பளம் அதிகரிப்பு கை காசுக்கு வேலை செய்யும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்ட வேண்டுமென்ற அறிவித்தல் முதலாளிமார் சம்மேளனத்திற்கு உத்தியோகபூர்வ கடிதம் தொழில் திணைக்களத்தின் ஊடாக நேற்று முன்தினம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் கடந்த மாதம் 05 ஆம் திகதியிலிருந்து கைக் காசுக்கு வேலை செய்பவர்களுக்கும் 1,000 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டுமென முதலாளிமார் சம்மேளனத்துக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

## பக்தர்கள் கலந்து கொள்வதற்கு தடை...

அத்துடன் பொது மக்களை சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடிக்குமாறு அரசாங்க அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போதைய கோவிட் 19 நிலமைகள் தொடர்பில் முல்லைத்தீவில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர்,...

கடந்த காலங்களில் கோவிட் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் குறைந்திருந்தாலும் தற்போது அதிகரித்து வருகின்றது.

எனவே மக்கள் பொது இடங்களுக்கு செல்வதை தவிர்த்து கொள்ளவும்.

இந்நிலையில் எதிர்வரும் கிழமைகளில் நடைபெறவுள்ள வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் நிகழ்வில் பொதுமக்கள் கலந்து கொள்வதை தவிர்த்து கொள்ளுமாறும் ஆலய நிர்வாகத்தினரால் கிரிகைகள் மட்டும் இடம்பெறும் என்றும் தெரிவித்துள்ளார்.

## ஐந்து மாவட்டங்களில் மேலும்...

மாவட்டத்தில் உகண பொலிஸ் நிர்வாக பிரிவுக்குட்பட்ட குமாரிகம கிராம உத்தியோகத்தர் பிரிவும் நேற்றுக் காலை முதல் தனிமைப்படுத்தல் முடக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் நேற்றுக் காலை முதல் அமுலுக்கு வரும் வகையில் மேலும் 13 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகள் தனிமைப் படுத்தலுக்காக முடக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதற்கிணங்க யாழ்ப்பாண மாவட்டத்தில் கொடிகாமம் பொலிஸ் நிர்வாக பிரிவுக்குட்பட்ட கொடிகாமம் மத்திய கிராம உத்தியோகத்தர் பிரிவு மற்றும் கொடிகாமம் வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு, கம்பஹா மாவட்டத்தில் வத்தளை பொலிஸ் நிர்வாகப் பிரிவுக்குட்பட்ட கெரவலப்பிட்டிய, வத்தளை, ஹேகித்த, பள்ளியாவத்த ஆகிய கிராம சேவை உத்தியோகத்தர்கள் பிரிவுகளும் மஹபாகே பொலிஸ் நிர்வாகப் பிரிவுக்குட்பட்ட ஹெறங்க பொக்குண, கல் உடுபிட்ட , மற்றும் மத்துமகல ஆகிய கிராம உத்தியோகத்தர்கள் பிரிவும் களுத்துறை மாவட்டத்தில் களுத்துறை தெற்கு பொலீஸ் நிர்வாக பிரிவுக்குட்பட்ட யோசிரிபுர மஹ கஸ்கடுவ வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு, மத்துகம போலீஸ் நிர்வாக பிரிவுக்குட்பட்ட யடதொலவத்த மேற்கு கொரடுஹேன கிராம உத்தியோகத்தர் பிரிவு ஆகியவை நேற்றுக்காலை நடைமுறைக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தலுக்காக முடக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## இந்தியாவை உலுக்கிவரும்...

கொரோனா கொத்தணியிலேயே மேற்படி வைரஸ் பரவல் இனங்காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் பிரிட்டனில் கென்ட் பிராந்தியத்தில் இனம் காணப்பட்டுள்ள B.1.1.7 வகை வைரஸ் தொற்று நோயாளர்களும் இலங்கையில் இனங் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் கொழும்பு மாநகர சபை பிரதேசம் ஹோமாகம ஆகிய பிரதேசங்களிலும் குருநாகல் மாவட்டத்தில் பொல்பிதிகம, குளியாபிட்டி நிக்கவரெட்டிய, கனேவத்த, அம்பன்பொல, கிரியுள்ள பன்னல மற்றும் வாரியபொல பிரதேசங்களிலும் அத்தகைய தோற்று நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.அத்துடன் களுத்துறை, கண்டி, மன்னார் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களிலும் சில நபர்களுக்கு இந்த வகை கொரோனா வைரஸ் இனங் காணப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(ஸ)

## ஜுலை மாத இறுதிக்குள்...

அதேவேளை எதிர்வரும் ஜூலை மாதத்திற்குள் 09 இலட்சம் தடுப்பூசிகளை பெற்றுக்கொடுக்க முடியும் என பைஸர் நிறுவனம் உறுதியளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த முக்கியமான கால கட்டத்தில் எதிர்வரும் இரண்டு, மூன்று வாரங்களுக்கு நாட்டு மக்கள் சுகாதார வழிமுறைகளை முறையாக பின்பற்றி செயற்பட்டால் சிறந்த பிரதிபலனை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அமெரிக்காவின் தயாரிப்பான பைஸர் தடுப்பூசியை இலங்கையில் பயன்படுத்துவதற்கு மருந்துப் பொருட்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் ஆலோசனைக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கிணங்க ஐந்து மில்லியன் பைஸர் தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

நாட்டில் இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்கப்பட்டு வரும் நிலையில் இதுவரை ஒரு இலட்சத்து 60 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் 06 இலட்சம் கொவெக்ஸ் தடுப்பூசிகள் தேவையாக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முதலாம் கட்ட தடுப்பூசியை பெற்றுக்கொண்டவர்கள் 12 முதல் 16 வாரங்களுக்குள் இரண்டாம் கட்ட தடுப்பூசியை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை குறிப்பிட்டுள்ள இராஜாங்க அமைச்சர், வெளிநாடுகளிலிருந்து கொவெக்ஸ் தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ)

## தனியார்துறை ஊழியர்களுக்கு...

ஊழியர்கள் மாத்திரமல்ல அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், திணைக்களங்கள் உட்பட ஏனைய நிறுவனங்களில் ஓய்வூதியம், ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கு உரித்தானவர்கள் அனைவருக்கும் கட்டாயம் சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

கொவிட்19 தொற்று காரணமான பணிக்கு வருகைத்தர முடியாது போனவர்களுக்கு அரைசாசி சம்பளத்தை வழங்குவது தொடர்பில் முதலாளிமார் மற்றும் தொழிற்சங்கங்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொவிட்19 தொற்றுக் காரணமாக தனியார் நிறுவனங்கள் பல வாரங்கள் மூடப்பட்டாலும் ஊழியர்களுக்கு கட்டாயம் சம்பளத்தை வழங்க வேண்டும்.

நட்டமீட்டும் நிறுவனங்களாக தரவுகள் மூலம் நிரூபிக்கப்பட்டால் மாத்திரம் குறைந்தபட்டச தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ள 14,500 ரூபாவை வழங்க வேண்டும். சம்பளத்தை செலுத்தாதுள்ள நிறுவனங்கள் தொழில் தொடர்பில் தொழில் அமைச்சுக்கு தெரியப்படுத்துமாறும் தொழில் அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## நான்கு ஆங்கில, சிங்கள வார்த்தைகளை...

பொதுவாக பேசுவதற்கு பல விடயங்கள் இருக்கின்றன. ஒரு தனி நபரின் விடயத்தை போய் பாராளுமன்றத்தில் பேசி நேரத்தை வீணடிக்க வேண்டாமென முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) தெரிவித்தார்.

தனிப்பட்ட முறையில் என்னை விமர்சிக்க வேண்டுமென்றால் ஒரு ஊடக சந்திப்பை ஏற்படுத்தி எம்மை விமர்சியுங்கள் .

அதை விடுத்து பாராளுமன்றத்தில் பேசி , பெறுமதியான பாராளுமன்ற நேரத்தை வீணடிக்க வேண்டாமென்றும் முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாணக்கியன் போன்றோர் உண்மையிலேயே பாலர் வகுப்பு படிப்போர்போல்தான்செயற்படுகின்றனர் என்றுதான் நான் கூறுவேன்.காரணம் அவருக்கு அறிவு இருந்தால் அவ்வாறு பேச மாட்டார் .

தமிழ் மக்களின் பிரதிநிதி என்றால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக பல உள்ளன அவற்றை எடுத்து வைக்க வேண்டும் என்பதை நான் அவருக்கு அன்பாக கூறிக் கொள்ள விரும்புகிறேன் .

கருணா அம்மானை தற்போது காணவில்லை என சாணக்கியன் தெரிவித்தார். வாழைச்சேனை பிரதேச சபைக்கு உதவி செய்து தர வேண்டும், தமிழ் தேசியக் கூட்டமைப்பை காப்பாற்ற வேண்டும் என கூறினார். அன்று என்னுடன் பலர் செங்கலடி அலுவலகத்தில் இருந்தனர்.அங்கு தான் வந்து சந்தித்தார்.

மக்களின் பிரச்சினைகள் என பல விடயங்கள் இருக்கின்றன. அவற்றை பாராளுமன்றத்தில் கதையுங்கள். கல்முனை சம்பந்தமான விடயம் தொடர்பாக குரல் கொடுங்கள் வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

கருணா அம்மான், அம்பாரை மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட்டு வாக்குகளை பிரித்துவிட்டு தற்போது தலைமறைவாகிவிட்டாரென பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அண்மையில் தெரிவித்திருந்தார்.அவருக்கு உண்மையிலேயே நாம் முன்னெடுத்து வருகின்ற வேலைத்திட்டம் புரியவில்லை.முஸ்லிம் பிரதிநிதிகளை எடுத்துக்கொண்டால் அவர்கள் அனைவரும் ஒற்றுமையாக தமது இருப்பை தக்கவைப்பதற்காக தான் பாராளுமன்றத்தில் குரல் கொடுக்கின்றார்கள். ஏனைய இனத்தவர்கள் அவர்கள் கதைப்பதில்லை இனத்தை பிரதிநிதித்துவப்படுத்தி கதைத்து எமது மக்களுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுங்கள் என்றும் கருணா அம்மான் தெரிவித்தார்.



# நாடு முழுவதும் முடக்கப்படுமா?



**இலங்கையில் கொவிட் 19 தொற்றுக்கு உள்ளாவோரினதும், உயிரிழப்போரினதும், தொற்றுக்குள்ளாகி சிகிச்சைக்காக தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் அனுமதிக்கப்படுவோரினதும் எண்ணிக்கைகளில் கடந்த சில தினங்களில் பெரிதும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இது நாட்டின் அனைத்து மட்டங்களதும் அவதானத்தைப் பெற்றுள்ளது.**

பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் கருத்துப்படி , இந்தியாவை விடவும் இந்நாட்டில் இத்தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை தற்போது அதிகமாகும். சுகாதார அமைச்சின் தரவுகளும் இத்தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை முன்பை விடவும் அதிகமென்பதை எடுத்துக்காட்டுகின்றது.

அதேநேரம் தற்போது பரவும் தொற்று சில விஷேட தன்மைகளை வெளிப்படுத்தியுள்ளது. அவற்றில் ஏற்கனவே இந்நாட்டில் பரவிய இத்தொற்றின் முதல் இரண்டு அலைகளை விடவும் இம்முறை இத்தொற்றுக்கு உள்ளானவர்களாகத் தினமும் பதிவாகின்றவர்களதும் உயிரிழப்பவர்களதும் எண்ணிக்கைகளில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு முக்கியமானதாகும். அத்தோடு இத்தொற்றின் பரவுதல் மிக வேகமாகக் காணப்படுவதோடு நோய் அறிகுறிகளும் தீவிரத்தன்மையைக் கொண்டிருக்கின்றன. சிறுவர்களும் இளம் வயதினரும் முன்பை விடவும் அதிகளவில் இத்தொற்றுக்கு உள்ளாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது. அத்தோடு நாட்டில் முதல் தடவையாக 19 பேர் இத்தொற்றினால் கடந்த வெள்ளியன்று உயிரிழந்துள்ளனர். அதுமாத்திரமல்லாமல் கர்ப்பிணிப் பெண்மணியொருவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரும் இத்தொற்றினால் முதல் தடவையாக உயிரிழந்துள்ள சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

## திரிபடைந்த கொவிட் 19 தொற்றுகள்

இவ்வாறு தன் கோர முகத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் தற்போது பரவும் கொவிட் 19 தொற்று தொடர்பில் ஆராய்ச்சிகளை மேற்கொண்ட ஸ்ரீஜயவர்தனபுர பல்லைக்கழகத்தின் தொற்று நோயியல் மற்றும் மூலக்கூற்று மருத்துவ பீடம், 'தற்போது நாட்டில் திரிபடைந்த ஆறு விதமான கொவிட் 19 தொற்று வைரஸுகள் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளது. அவற்றில் பிரித்தானியாவில் திரிபடைந்த கொவிட் 19 தொற்றின் பி.1.1.7 என்ற வைரஸ், டென்மார்க், ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கில் திரிபடைந்த பி.1.428 என்ற வைரஸ், இலங்கையில் திரிபடைந்துள்ள பி.1.411 என்ற வைரஸ், நைஜீரியாவில் திரிபடைந்த பி.1.525 என்ற வைரஸ், இந்தியாவில் திரிபடைந்த பி.1.617 என்ற வைரஸ், தென்னாபிரிக்காவில் திரிபடைந்த பி.1.351 என்ற வைரஸ் என்பன அடங்கியுள்ளன என்று அப்பீடத்தின் மருத்துவ பேராசிரியர் நீலிக்கா மாலவிகே வும், கலாநிதி சந்திம ஜீவேந்திரவும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

நாட்டில் திரிபடைந்த கொவிட் 19 தொற்று வைரஸுகள் பரவுவதன் விளைவாகவே இத்தொற்று முன்பைவிடவும் வேகமாகப் பரவுவதாகவும் கடுமையான அறிகுறிகளைக் கொண்டிருப்பதாகவும் சுகாதார மேம்பாட்டு பணியகம் குறிப்பிட்டுள்ளது.

பொதுவாக தொற்று நோய் வைரஸ்கள் காலத்திற்குக்காலம் அதன் தோற்றத்தில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்வது இயல்பானது. அதிலும் வைரஸின் ஒரு புரதத்தில் ஏற்படும் மாற்றம் கூட அதன் செயற்பாட்டில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்திவிடும். இம்மாற்றத்தினால் வைரஸ் பரவும் வேகமும் அதன் நோய் அறிகுறிகளும் அதிகரித்து தீவிரத்தன்மையை அடையலாம்.

அந்த வகையில் இத்தொற்று குறித்து கடந்த சில காலமாக உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி, 'இவ்வைரஸ் குறித்த இடமொன்றில் விரைவாக பரவுவதற்கு மூன்று காரணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவை திரிபடைந்த வைரஸ்களுக்கு ஏற்றவையாக உள்ளன.

அதாவது,

1. சனநெரிசல் மிக்க இடங்கள்: இவ்வாறான இடங்களில் இத்தொற்றாளர்கள் காணப்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம். அதனால் அவ்விடங்கள் இத்தொற்று பரவும் அச்சுறுத்தல் மிக்க இடங்களாக விளங்கும்.
2. மக்கள் நெருக்கமாக இருக்கும் சந்தர்ப்பங்கள்: குறிப்பாக ஒருவருக்கொருவர் அருகருகே நெருக்கமாக இருக்கும்போதும், கதைக்கும் போதும் , உண்ணும் போதும், பருகும்போதும் இத்தொற்று பரவுதற்கான வாய்ப்புகள் அதிகம்.
3. போதிய காற்றோட்டமில்லாத மூடப்பட்ட இடங்கள்: காற்றோட்டமில்லாத மூடப்பட்ட இடங்களில் இத்தொற்று பரவுவதற்கான வாய்ப்பு காற்றோட்டமான இடங்களை விட மிக அதிகம்.

இம்மூன்று காரணிகளில் ஒன்றாவது காணப்படும் இடத்தில் வேறு எங்குமில்லாத அளவுக்கு இத்தொற்று பரவலாம். இக்காரணிகளில் ஒன்றுக்கு மேற்பட்டவை ஒரு இடத்தில் காணப்படின், அத்தகைய இடங்களில் இத்தொற்று பரவும் வேகம் மேலும் அதிகரிக்கும். அதனால் இதுபோன்ற இடங்களை முடிந்தவரை தவிர்த்துக்கொள்வதே சிறந்தது. சில அவசர காரணங்களுக்காக அத்தகைய இடத்திற்குச் சென்றாலும், அங்கு செலவழிக்கும் நேரத்தைக் குறைத்துக்கொள்வதன் மூலம் தொற்று ஆபத்தைக் குறைக்கலாம். குறிப்பாக தற்போது போன்ற அதிக ஆபத்து நிலவும் காலங்களில், இக்காரணிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை காணப்படும் இடங்களை முடிந்தவரை தவிர்த்துக்கொள்வதே ஆரோக்கியத்திற்கு உகந்தது.

## கர்ப்பிணிப் பெண்கள்

மேலும் தற்போது பரவும் தொற்று கர்ப்பிணிப் பெண்களுக்குஏற்படுமாயின் அவர்கள் ஆரோக்கிய ரீதியிலான நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கான வாய்ப்பும் அதிகமாகும். அந்நெருக்கடிகள் கர்ப்பிணி பெண்ணை மாத்திமல்லாமல் கர்ப்பப்பையில் வளரும் குழந்தையிலும் கூட தாக்கங்களை ஏற்படுத்தலாம் என்பது தான் மருத்துவ நிபுணர்களின் கருத்தாக உள்ளது. அதனால் அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த வேறெதற்காகவும் வீடுகளை விட்டு கர்ப்பிணி பெண்கள் வெளியேறலாகாது. குறிப்பாக கிளினிக்குக்கோ அல்லது வைத்தியசாலைக்கோ செல்வதாயின் நல்ல காற்றோட்டமில்லாத இடங்களில் இருப்பதைத் தவிர்க்கவும், எந்நேரமும் முகக்கவசம் அணிந்து கொள்ளவும், சமூக இடை வெளியை உரிய முறைப்படி பேணிக்கொள்ளவும், மக்கள் கூடும் இடங்களுக்கு செல்லாதிருக்கவும், அடிக்கடி கைகளைக் கழுவிக்கொள்ளவும் தவறக்கூடாது.

என்றாலும் தற்போதைய கொவிட் 19 தொற்று அச்சத்தினால் கர்ப்பிணிப் பெண்கள் உரிய நேர காலத்தில் கிளினிக்குகளுக்கும் வைத்தியசாலைக்கும் சிகிச்சை பெற வருகை தராதிருப்பது குறித்த தகவல்களும் வெளியாகியுள்ளன. ஆனால் அவ்வாறான தாமதங்களால் கர்ப்பிணிப் பெண்ணுக்கும் கர்ப்பப்பையில் வளரும் குழந்தைக்கும் கூட பாதிப்புகளை ஏற்படுத்தலாம். அதனால் பிரதேச மருத்துவ மாது மற்றும் பிரதேச மருத்துவ அதிகாரி போன்றோருடன் தொடர்பு கொண்டு அவர்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். குறிப்பாக கர்ப்ப காலத்தில் ஏற்பக்கூடிய காய்ச்சல், உயர் குருதி அழுத்தம். கடும் தலைவலி, கண் பார்வையில் நெருக்கடி, வலிப்பு, நெஞ்சிலும் வயிற்றிலும் வலி, குழந்தை துடிப்பது குறைதல், உடலில் வீக்கம் போன்றாவான அறிகுறிகள் தென்படுமாயின் தாமதியாது வைத்தியசாலைக்கு செல்வதும் பிரதேச மருத்துவ மாதுவுக்கு அறிவிப்பதும் இன்றியமையாததாகும்.

அதேநேரம் கர்ப்பிணிப் பெண்கள் வாழும் குடும்பத்திலோ அல்லது அவர்களது உறவினர்களிலோ எவராவது இத்தொற்றுக்குள்ளாகி தனிமைப்படுத்தப்பட்டிருந்தாலும் அல்லது இத்தொற்றுக்குரிய சந்தேகத்தைக் கொண்டிருந்தாலும் அவர்களிடமிருந்து விரைவாகத் தூர விலகி இருப்பது அவசியம். அது தொடர்பில் பிரதேச மருத்துவ மாதுவுக்கு அறிவிக்கவும் வேண்டும்.

கர்ப்பிணி எவருக்குகாவது இத்தொற்று ஏற்படுமாயின் அல்லது அதற்கான அறிகுறிகள் வெளிப்படுமாயின் அது தொடர்பிலும் மருத்துவமாதுவிடம் எடுத்துக்கூறுவும் தவறக்கூடாது. ஏனெனில் நாட்டில் 70 க்கும் மேற்பட்ட கர்ப்பிணி பெண்கள் இத்தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சை பெறுகின்றனர். அவர்களில் ஒருவர் உயிரிழந்துமுள்ளார். அதனால் தற்போதைய சூழலில் கர்ப்பிணி பெண்கள் தொடர்பில் விஷேட கவனம் செலுப்படுவது மிகவும்அவசியமானதாகும். அத்தோடு இத்தொற்று இளையோர், முதியோர் உட்பட சிறு குழந்தைகளுக்கும் கூட தொற்றக்கூடிய அச்சுறுத்தலைக் கொண்டுள்ளது. அதனால் அவசர நிலைகளைத் தவிர வீட்டிலிருந்து வெளியேறுவதைத் தவிர்த்துக்கொள்வதே உசிதமானதாகும்.

## கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

இவ்வாறான நிலையில் இந்நாட்டில் இத்தொற்று தவிர்ப்புக்கான நடவடிக்கைகள் விரிவான அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக இத்தொற்றுக்குள்ளானவர்கள் அதிகளவில் பதிவாகும் பிரதேசங்கள் கிராம மட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டு முடக்கப்படுகின்றன.

'அதனால் இத்தொற்று தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகளை மக்கள் ஒழுங்குமுறையாகப் பின்பற்றத் தவறுவார்களாயின் நாட்டில் இத்தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை நாளாந்தம் 8,000 10,000 வரை அதிகரிக்கு'மென கொவிட் 19 தொற்று கட்டுப்பாட்டுக்கான இராஜாங்க அமைச்சர் டொக்டர் சுதர்ஷணி பெர்னாண்டோ புள்ளே கூறியுள்ளார்.

'அடுத்துவரும் சில தினங்களில் இத்தொற்றுக்குள்ளவோரினதும் உயிரிழப்போரினதும் எண்ணிக்கை அதிகரிக்கு'மென மருந்துப்பொருட்கள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன குறிப்பிட்டுள்ளார்.



- 6 இலட்சம் கொவிஷீல்ட் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள WHO தலைவருடன் ஜனாதிபதி கலந்துரையாடல்.
- வருட முடிவுக்குள் 63 வீதமானோருக்கு கொவிட் 19 தடுப்பூசி



- தொற்றைக் கட்டுப்படுத்த விரிவான நடவடிக்கைகள்.
- இலங்கையில் திரிபடைந்த பல கொவிட் 19 தொற்றுகள்?
- முதல் தடவையாக 19 பேர் வெள்ளியன்று உயிரிழப்பு.
- கர்ப்பிணி பெண்கள் அதிகம் பேர் தொற்றாளர்களாக...

இந்தப் பின்புலத்தில் இத்தொற்றுக்கு சிகிச்சை அளிக்கவென தற்போது 13 ஆயிரத்து 800 கட்டில்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதனை மேலும் 10 ஆயிரத்தால் அதிகரிப்பதற்கான ஏற்பாடுகளை சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ளது. அத்தோடு ஒட்சிசன் தேவையை 23 தொன்களில் இருந்து 80 தொன்கள் வரை அதிகரிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இத்தொற்றுக்கு உள்ளாகின்றவர்களுக்கு சிகிச்சை அளிக்கவென 7500 கட்டில்களைக் கொண்ட சிகிச்சை நிலையமொன்றை இராணுவத்தினர் சீதுவவில் அமைத்து வருகின்றனர். அவற்றில் 2500 கட்டில்களைக் கொண்ட பகுதியின் அமைப்பு பணிகள் நிறைவுற்றுள்ளதோடு எஞ்சிய பகுதியின் பணிகளும் அடுத்துவரும் சில தினங்களில் நிறைவடைய உள்ளன. இலங்கை கடற்படையினரும் காலி, பூஸா பிரதேசத்தில் சிகிச்சை நிலையமொன்றை அமைத்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் இத்தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பல்வேறு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் பாடசாலைகள், பொது வைபவங்கள் உள்ளிட்ட மக்கள் கூடக்கூடிய அனைத்து செயற்பாடுகளும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன. சமய நிகழ்வுகளும் அவற்றில் அடங்கும். இந்தியாவிலிருந்து இலங்கைக்கான பயணிகள் விமான சேவைகளும் மறுஅறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளன.

ஆனாலும் இத்தொற்று அச்சத்தினால் படகுகள் மூலம் இந்தியாவிலிருந்து இலங்கைக்குள் வருவதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இப்பின்னணியில் நாட்டின் சர்வதேச கடற்பரப்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பயனாக அண்மையில் கடல் வழியாக இலங்கைக்குள் படகுகள் மூலம் பிரவேசிக்க முயன்ற 86 பேர் திருப்பி அனுப்பப்பட்டனர். அதேநேரம் படகு மூலம் வந்து புத்தளம், வேப்பமடுவிலும் வென்னப்புவவிலும் மறைந்திருந்தவர்களும் கைது செய்யப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அத்தோடு தனிமைப்படுத்தல் சட்ட ஏற்பாடுகளை மீறுபவர்களையும் சுகாதார வழிகாட்டல்களை உதாசீனம் செய்பவர்களையும் கைது செய்து சட்டத்தின் முன் ஆஜர்படுத்தும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## கொவிட் 19 தடுப்பூசி வழங்கல்

இவ்வாறான சூழலில் இத்தொற்று தவிர்ப்புக்கான தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன. இந்நடவடிக்கை இரண்டு கட்டங்களாக முன்னெடுக்கப்படுகின்றன. அவற்றில் ஒன்று ஏற்கனவே கொவிஷீல்ட் (அஸ்ட்ரா செனகாவின் இந்திய உற்பத்தி) தடுப்பூசியின் முதல் சொட்டைப் பெற்றுள்ளவர்களுக்கு இரண்டாம் சொட்டு வழங்கும் நடவடிக்கை. மற்றையது ரஷ்ய உற்பத்தியான ஸ்புட்னிக் வீ தடுப்பூசியை முதல் தடவையாக வழங்கும் நடவடிக்கையாகும். ஸ்புட்னிக் வி தடுப்பூசி வழங்குதல் கொலன்னாவ, கொத்தொட்டுவ பிரதேசத்தில் கடந்த 06 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இப்பின்னணில் 13 மில்லியன் ஸ்புட்னிக் வி தடுப்பூசியை தருவிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனினும் கொவிஷீல்ட் தடுப்பூசியின் முதல் சொட்டு 9 இலட்சத்து 25 ஆயிரத்து 240 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம் சொட்டு வழங்கும் நடவடிக்கை கையிருப்பிலுள்ள 03 இலட்சம் சொட்டுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் தற்போது உருவாகியுள்ள நிலைமையில் கொவிஷீல்ட் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அதனால் இத்தடுப்பூசியை மேலதிகமாக கொண்டுள்ள நாடுகளிலிருந்து பெற்றுக்கொள்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டிருக்கின்ற இதேவேளையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுமார் 06 இலட்சம் கொவிஷீல்ட் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனத் தலைவருடன் இணைய வழி ஊடாகக் கலந்துரையாடியுள்ளார்.

இதேவேளை கொவிட் 19 தொற்றுக்கான பைசர் என் பயோ டெக் தடுப்பூசியை பயன்படுத்துவதற்கும் தேசிய மருந்துப்பொருட்கள் அதிகார சபை வெள்ளியன்று அனுமதி வழங்கியது. அத்தடுப்பூசியை மறை 70 வெப்பநிலையில் வைத்திருக்கத் தேவையான களஞ்சிய வசதியை செய்து கொடுக்க அந்நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது. சீன உற்பத்தியான சினோபாம் தடுப்பூசியை அவசர தேவையின் நிமித்தம் பயன்படுத்த உலக சுகாதார ஸ்தாபனம் அங்கீகாரம் வழங்கியுள்ள நிலையில் இலங்கைக்கு ஏற்கனவே கிடைக்கப்பெற்றுள்ள 06 இலட்சம் தடுப்பூசியை பாவிக்கவும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

இவ்வாறான ஏற்பாடுகளின் ஊடாக இவ்வருட இறுதிக்குள் நாட்டில் 63 வீதமானோருக்கு இத்தொற்று தவிர்ப்புக்கான தடுப்பூசியைப் பெற்றுக் கொடுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

என்றாலும் தற்போதைய கொவிட் 19 தொற்று பரவுதல் சூழலைக் கருத்தில் கொண்டு நாட்டை சில நாட்களுக்கு முடக்குமாறு பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கம் உள்ளிட்ட சில அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. இருப்பினும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, 'இத்தொற்றுக்கு எதிராகப் போராடுவோமே தவிர நாட்டை ஒரு போதும் முடக்க மாட்டோம்' என்றுள்ளார்.

ஆகவே இத்தொற்று தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்களாக விளங்கும் கைகளைக் கழுவுதல், முகக் கவசங்களை தவறாமல் அணிதல், சமூக இடைவெளியைப் பேணல் என்பன இத்தொற்றின் பரவுதல் அபாயத்தை பெரிதும் குறைக்கும் அடிப்படை விடயங்களாகும். அதனால் தற்போதைய சூழலில் சுகாதார வழிகாட்டல்களையும் தனிமைப்படுத்தல் சட்டங்களையும் சுகாதார ஆலோசனைகளையும் உச்சளவில் மதித்து செயற்பட வேண்டும். அதுவே இத்தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்தி அச்சுறுத்தலைக் குறைப்பதற்கான சிறந்த வழியாக அமையும்.








மர்லின் மரிக்கார்...

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429294, 2429296
பெக்ஸ் : 2429329

பிலவ வருடம் சித்திரை மாதம் 26ம் நாள் ஞாயிற்றுக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ரமழான் பிறை 26

# தமிழகத்துடன் நல்லுறவை பேண வேண்டியது அவசியம்

இலங்கை மற்றும் இந்திய அரசியல்வாதிகளும் அரசு உயர் அதிகாரிகளும் இராஜதந்திரிகளும் அடிக்கடி கிளிப்பிள்ளையைப் போல ஒரு விஷயத்தைச் சொல்வார்கள். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கலாசார, பாரம்பரிய மற்றும் வரலாற்று ரீதியான நெருங்கிய தொடர்புகள் நிலவி வந்திருப்பதாகவும் அந்த உறவு மென்மேலும் இறுக்கமடைந்து வருவதாகவும் குறிப்பிடுவார்கள். ஊடகத்துறையில் உள்ளவர்களுக்கு இத்தகைய அறிக்கைகள் புளித்துப்போன ஒன்று. உண்மையாகவே அத்தகைய சினேகபூர்வமான இறுக்கமும் பிணைப்பும் மிகுந்த ஒரு உறவு இரு நாடுகளுக்கும் மத்தியில் இல்லை என்பதால்தான் இத்தகைய முகமன் கூறும் வார்த்தைகள் பாவிக்கப்படுகின்றனவோ என்ற சந்தேகமும் ஊடகவியலாளர் மத்தியில் இருக்கவும் செய்கிறது. இந்தியா தொடர்பான இலங்கையின் அரசியல் மற்றும் சமூகப் பார்வையும் அதேபோல இந்தியாவின் இலங்கை மீதான அரசியல் மற்றும் சமூக பார்வையும் எவ்வளவு தூரம் யதார்த்த தளத்தில் பொருள் பொதிந்தவையாக இயங்குகின்றன என்பது ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டிய ஒன்று. நெருக்கம், சகோதரத்துவம் பற்றி எவ்வளவு பேசப்பட்டாலும் இரு நாடுகளுக்கும் இடையே ஒரு கனதியான திரை என்றென்றும் காணப்படுவதை உணர முடிகிறது.

சிங்கள சமூகத்துக்கு வரலாற்று ரீதியான ஒரு சந்தேகம் இந்தியா மீது எப்போதும் இருந்து வந்திருக்கிறது என்பதோடு அச் சந்தேகம் அவ்வப்போது புதுப்பிக்கப்படவும் செய்கிறது. சோழர் கால படையெடுப்பில் இருந்து ஆரம்பமாகும் இச் சந்தேக பார்வைக்கு, இந்தியத் பெருந்தோட்டங்களில் பணியாற்ற தொழிலாளர்கள் பிரிட்டிஷ் அரசினால் வரவழைக்கப்பட்டு குடியேற்றப்பட்டமை, வட கிழக்கு ஆயுத போராட்டத்துக்கு இந்தியா உதவி வழங்கியமை, இலங்கை – இந்திய சமாதான உடன்படிக்கை, இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவில் வகிபாகம், தமிழகத்தில் உமிழப்படும் வெறுப்புணர்வு, உலகத் தமிழர்கள் இந்தியாவை பூர்விக நாடாக கருதுதல் என்பன தீனி போடுகின்றதாக உள்ளன. இலங்கையின் வட புலத்துக்கு அண்மையில் தமிழகம் அமைந்திருப்பதும் இந்திய மீனவர்களின் தொடர்ச்சியான ஊடுருவல் என்பனவும் இச் சந்தேகத்துக்கு வலு சேர்க்கின்றன.

தமிழகத்தை எடுத்துக் கொண்டால் சிங்கள சமூகத்தை சந்தேகக் கண் கொண்டு அந் நாட்டுத் தமிழர்கள் பார்க்கும் வகையிலேயே தமிழகம் வாழ் தமிழர்களுக்கு செய்திகளும் தகவல்களும் தயாரித்து வழங்கப்படுகின்றன. தமிழகத்துக்கும் இலங்கை சிங்கள சமூகத்துக்கும் இடையிலான தொடர்பு குறைபாடுகளைக் கொண்டதாகவே இருந்து வருகிறது. தமிழக ஊடகவியலாளர்களை இலங்கையில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளச் செய்தல் மற்றும் சிங்கள ஊடகவியலாளர்கள் தமிழக சுற்றுப்பயணமொன்றில் ஈடுபடுத்துவது காத்திரமான பலன்களை உருவாக்கக் கூடியதாக இருப்பினும் ஏதோ காரணங்களினால் இத்தகைய உடனடி பலன்தரக் கூடிய ஆக்க பூர்வமான யோசனைகள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

தமிழகத்தின் புதிய முதலமைச்சராக 68 வயதான மு.க.ஸ்டாலின் கடந்த ஏழாம் திகதி பதவியேற்றார். இச் சட்ட மன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி அமோக வெற்றி பெற்றது. இவ் வெற்றியையடுத்து இலங்கைத் தமிழ் அரசியல்வாதிகள் அவருக்கு வாழ்த்துகளை தெரிவித்த அதே சமயம் சிங்கள அரசியல் கட்சிகள் இதைக் கண்டு கொள்ளவில்லை. சிங்கள, ஆங்கில ஊடகங்களும் ஒரு செய்தியாக வெளியிட்டதோடு நிறுத்திக் கொண்டன. ஸ்டாலின் முதல்வராக பதவியேற்ற பின்னரும் இலங்கை உயர் மட்ட அரசியல்வாதிகள் அவருக்கு வாழ்த்துத் தெரிவிக்க முன்வரவில்லை.

அரச நடைமுறைகளின் பிரகாரம், இந்திய மாநிலங்களில் ஒன்றான தமிழக மாநிலத்துக்கான முதல்வரே மு.க. ஸ்டாலின் என்பதால் ஒரு அரசு அவருக்கு வாழ்த்துத் தெரிவிக்கவும் அல்லது தமிழக அரசு நிகழ்வில் உத்தியோகபூர்வமாகக் கலந்துகொள்ளவும் வேண்டிய அவசியம் இலங்கை அரசுக்குக் கிடையாது என்பது உண்மை.

ஆனால் புவியியல் பிரகாரம் கலாசார ரீதியாகவும், தமிழகத்துக்கும் இலங்கைக்கும் இடையே நெருங்கிய உறவு காணப்படுகிறது. இலங்கையில் நடைபெறும் அரசியல் நகர்வுகளை தமிழகம் உற்றுக் கவனிக்கிறது. கருத்துகளைத் தெரிவிப்பதோடு இந் நகர்வுகளுக்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மூலமும் பதில் தர முற்படும் சந்தர்ப்பங்களையும் நாம் பார்த்திருக்கிறோம். இலங்கை தொடர்பில் குறுக்கீடு செய்யுங்கள், அழுத்தம் கொடுங்கள், தலையிடுங்கள் என்றெல்லாம் தமிழக அரசு மத்திய அரசுக்கு அழுத்தம் தந்த தருணங்களையும் பார்த்துள்ளோம்.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் நடைபெற்ற போது தமிழகம் தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிக்கும் அரசாங்கம், தமிழகம் ஒரு மாநிலம் என்ற வகையில் தமிழகத்துடன் நேரடியான தொடர்புகளை பேண வேண்டிய அல்லது தமிழக அரசுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் இலங்கை அரசுக்குக் கிடையாது என்றும் இலங்கை ஒரு சுதந்திரமான இறைமை கொண்ட நாடு என்ற வகையில் இந்திய மத்திய அரசுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக் கொள்ளும் என்பதாக இலங்கை அரச ஒரு கொள்கையை பின்பற்றி வந்தது. அரசு கோட்பாட்டியல் முறைப்படி இது சரியானதே.

ஆனால் உலக அரசியலில் அரசு நடைமுறைகள் பிரகாரம் மட்டுமே அனைத்தும் நடைபெறுவதில்லை. மக்கள் நலன், சமூக நலன், நாட்டு நலன் முன்னிட்டும் பிரச்சினைகளின் தீவிரம் கருதியும் அரசு நடைமுறைகள் மீறப்படுவதுண்டு. இலங்கையின் தீர்க்கப்பட வேண்டிய தமிழர் அரசியல் அதிகாரம் தொடர்பில் இந்திய மத்திய அரசு தொடர்ந்து அக்கறையும், தலையீடும் செய்து வருகிறது என்றால் அதற்கான காரணத்தை தமிழகத்திலேயே தேட வேண்டும். அங்கே வாழும் எட்டு கோடி தமிழர்கள் இலங்கை வாழ் தமிழர்கள் குறித்து கரிசனை கொண்டிருப்பதே இலங்கை மீது இந்தியா செல்வாக்கு செலுத்துவதற்கான காரணம். எனவே இலங்கையை ஆளும் எந்தத் தேசிய கட்சியானாலும் அது மத்திய அரசுடன் நல்லுறவு பேணுவதைப் போலவே தமிழகத்தை ஆளும் அ.தி.மு.க மற்றும் தி.மு.கவுடனும் நல்லுறவு பேண வேண்டியது அவசியம். சிங்கள சமூகத்துக்கும் தமிழகத் தமிழர்களுக்கும் இடையே எப்படி புரிந்துணர்வில் கோளாறோ அவ்வாறே தமிழக அரசியல் கட்சிகளுக்கும் சிங்கள தேசிய கட்சிகளுக்கும் இடையே எந்த புரிந்துணர்வும் காணப்படுவதாகத் தெரியவில்லை.

சிங்கள அரசியல்வாதிகள் ஸ்டாலின் பதவியேற்பை ஒரு புரிந்துணர்வுக்கான நல் ஆரம்பமாகக் கருதி ஸ்டாலினுக்கு வாழ்த்து தெரிவித்திருக்கலாம். அரசு மட்டத்திலும், அது அரசு நடைமுறையல்ல என்பதாக இருந்தாலும், வாழ்த்து தெரிவித்து புதிய நட்பு அத்தியாயத்தை ஆரம்பித்திருக்கலாம். இதுவும் ஒரு இராஜதந்திர நகர்வு என்பதும் இதன் மூலம் சாதகமான பலன்களை அறுவடை செய்ய முடியும் என்பதும் உணர்ந்து கொள்ளப்பட வேண்டும். இலங்கைத் தமிழ்ப் பிரச்சினை தீர்க்கப்படுமானால் இந்தியாவின் இலங்கை மீதான செல்வாக்கு குறையும். எவ்வகையில் பார்த்தாலும் இலங்கை அரசு தமிழக அரசுடன், கட்சிகளுடன், மக்களுடன் வெளிப்படையாக நல்லுறவைப் பேணுவதே பொருத்தமான இராஜதந்திர நகர்வாக இருக்கும்.

தினகரன் விளம்பரம் : 0112429367 | விற்பனை பிரிவு : 0112429444, 0112429378 | விளம்பர முகாமையாளர் : 0112429673 | தினகரன் ஆசிரியபீடம் : editor.vm@lakehouse.lk

# தடுப்பூசி ஒன்றுதான் ஆபத்தில் இருந்து மீள்வதற்கான வழி!



**இலங்கையில் கொவிட்19 வைரஸ் தொற்று நாளுக்கு நாள் தீவிரமாக அதிகரித்து வரும் இன்றைய நிலையில், தொற்று பரவலைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் நாடு முழுமையாக முடக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் பல்வேறு தரப்பில் இருந்தும் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வருகின்றன.**

இந்தியா போன்றதொரு நெருக்கடி நிலைமை இங்கும் ஏற்பட்டு விடக் கூடாதெனில், மேலும் காலதாமதப்படுத்தாது பொது முடக்கமொன்றுக்குச் செல்வது சிறந்தது என சுகாதாரத் துறை அதிகாரிகள் பலரும் அரசாங்கத்துக்கு சுட்டிக் காட்டியுள்ளனர்.

எனினும், அரசின் நிலைப்பாடு அதுவல்ல என்பது தெரிகின்றது. ஒட்டுமொத்த நாட்டையும் முடக்காது, சுகாதாரப் பாதுகாப்பு அச்சுறுத்தல் நிலவுகின்ற பகுதிகளை மாத்திரம் முடக்கி வைத்து தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்கே அரசினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

நாட்டை முடக்குவது தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான சரியான தீர்வாக அமையாது, மாறாக தடுப்பூசிகளை ஏற்றுவதே கொரோனா தொற்றைத் தடுக்கக் கூடிய தீர்வாக அமையும் என அரசாங்கம் திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

எனினும், மக்களுக்கு வழங்குவதற்கான தடுப்பூசிகள் போதியளவு கிடைக்காதுள்ளமை நிலைமையை மேலும் மோசமடையச் செய்திருப்பதாகவே தெரிகிறது. நாடெங்கும் மக்களுக்கு வழங்குவதற்கான தடுப்பு மருந்து கையிருப்பில் இல்லையென்பதே உண்மை. தடுப்பூசி மருந்து போதியளவு இலங்கைக்கு வந்து சேருவதற்கு சில நாட்கள் செல்லக் கூடும்.

தொற்றுநோயியல் பிரிவின் தலைவர் டொக்டர் சுதத் சமரவீரவின் கருத்துப்படி, முதலாவது 'டோஸ்' தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்களில் 60 முதல் 65 சதவீதமானவர்கள் கொவிட் தொற்றுக்கு உள்ளாகின்றார்களா என்ற சந்தேகம் இருக்கின்றது. இவ்வாறான நிலையில் இரண்டாவது 'டோஸ்' தடுப்பூசி வழங்கப்படுவதுடன், நாட்டில் தடுப்பு மருந்துக்காகப் பரிந்துரைக்கப்பட்ட வயதெல்லை கொண்ட அனைவருக்கும் தடுப்பூசி வழங்குவதே காலத்தின் தேவையாகவுள்ளது.

உலகில் கொவிட் தொற்று பரவத் தொடங்கி ஏறத்தாழ ஒரு வருடத்தின் பின்னரே அதற்கான தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. எமது அயல் நாடான இந்தியா 'ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராசெனெகா' தடுப்பு மருந்தை உற்பத்தி செய்யத் தொடங்கியதும் கடந்த ஜனவரி மாதம் இலங்கைக்கு 5 இலட்சம் தடுப்பூசிகள் முதற்கட்டம் இலவசமாக வழங்கப்பட்டன.

இரண்டாவது தொகுதியில் மேலும் 5 இலட்சம் தடுப்பூசிகள் இலங்கை அரசாங்கத்தினால் இந்தியாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டன. இவ்வாறு கிடைக்கப் பெற்ற தடுப்பூசிகள் சுகாதாரத்துறை அதிகாரிகள், பாதுகாப்புப் படையினர் அதன் பின்னர் சாதாரண பொதுமக்கள் என பலருக்கும் ஏற்றப்பட்டன.

குறித்த தடுப்பூசி இரண்டு தடவைகள் ஏற்றப்பட்டாலே அதன் முழுமையான பலன் கிடைக்கும் என்பதே மருத்துவ நிபுணர்களின் கருத்தாகும். முதலாவது மருந்து கொடுக்கப்பட்டு 10 முதல் 14 வாரங்களுக்குள் அடுத்த ஊசி ஏற்றப்பட வேண்டும் என்பதே மருத்துவ அதிகாரிகளின் பரிந்துரை.

இருந்த போதும், இலங்கையில் இரண்டாவது தடுப்பு மருந்து ஊசியை ஏற்றுவதற்குப் போதியளவு மருந்துகள் கையிருப்பில் இருக்கவில்லையென்பதால் தாமதம் ஏற்பட்டது. இதற்கு பிரதான காரணம் இந்தியாவின் கொவிட் தொற்று நிலைமை மோசமடைந்ததாகும். இந்தியாவில் கொவிட் நிலைமை மோசமடைந்ததால் அங்கு உற்பத்தி செய்யப்படும் தடுப்பு மருந்துகள் தமது நாட்டு பிரஜைகளுக்கே முதலில் வழங்கப்பட வேண்டும் என இந்திய அரசியல்வாதிகள் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கினர்.

அது மாத்திரமன்றி, குறித்த தடுப்பு மருந்தை உற்பத்தி செய்வதற்காக அமெரிக்காவிலிருந்து மூலப்பொருட்கள் தருவிக்கப்படுவதிலும் தடங்கல் ஏற்பட்டமை நிலைமைய மேலும் சிக்கலுக்கு உள்ளாக்கியது.

இலங்கையைப் பொறுத்த வரையில், இந்தியாவிடமிருந்து மாத்திரமன்றி உலக சுகாதார ஸ்தாபனத்தின் கொவக்ஸ் திட்டத்தின் கீழ் முதல் தொகுதி தடுப்பூசிகள் வழங்கப்பட்டிருந்தன. உலக சுகாதார ஸ்தாபனத்துடன் இலங்கை செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு ஏறத்தாழ நாட்டின் சனத்தொகையில் 20 வீதமானவர்களுக்கு இலவசமாக தடுப்பூசிகள் கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. இவ்வகையில் இலங்கைக்கு 4 மில்லியன் தடுப்பூசிகள் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. எஞ்சியவர்களுக்கான தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டியுள்ளது. எனினும், கொவக்ஸ் திட்டத்தில் மிகவும் சிறியதொரு தொகுதியே முதற் கட்டமாக இலங்கைக்கு வழங்கப்பட்டது. இவ்வாறான நிலையில், கடந்த இரு தினங்களுக்கு முன்னர் உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவரை ஒன்லைன் மூலம் தொடர்பு கொண்டிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, விரைவில் இலங்கைக்கு தடுப்பூசிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

அத்துடன், சீனாவினால் தயாரிக்கப்பட்டுள்ள சினோபார்ம் தடுப்பூசிக்கு அனுமதி கிடைத்தவுடன் அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று இக்கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டதாக ஜனாதிபதி தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டிருந்தார். இந்தப் பதிவு இடப்பட்டு ஒரு சில மணிநேரத்தில் சினோபார்ம் தடுப்பூசிக்கு உலக சுகாதார ஸ்தாபனம் அனுமதி வழங்கியுள்ளது என்ற செய்தி வெளியானது.

ஏற்கனவே 6 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் சீன அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்டன. உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதி கிடைக்காமையால் முதற் கட்டமாக இலங்கையில் உள்ள சீன நாட்டுப் பிரஜைகளுக்கு மாத்திரமே இந்த ஊசி ஏற்றப்படும் என முன்னர் கூறப்பட்டது. எனினும் தற்பொழுது அனுமதி கிடைக்கப் பெற்றிருப்பதால் இத்தடுப்பூசியைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன.

இது தவிரவும், ரஷ்ய நாட்டின் தயாரிப்பான ஸ்புட்னிக் தடுப்பு மருந்து கடந்த சில நாட்களுக்கு முன்னர் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ரஷ்யாவிடமிருந்து 13 மில்லியன் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்வதற்கு 'ஓடர்கள்' வழங்கப்பட்டுள்ள நிலையில், முதற் கட்டமாக 15,000 தடுப்பூசிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. குறித்த தடுப்பூசியை இலங்கையில் பயன்படுத்த தேசிய மருந்து கட்டுப்பாட்டு அதிகாரசபை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

**உலகில் தயாரிக்கப்பட்ட தடுப்பு மருந்துகளில், அங்கீகரிக்கப்பட்ட 4 தடுப்பூசிகளை இலங்கையில் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு**







**மக்களின் நடத்தையில் மாற்றம் ஏற்படாத வரை கொவிட் தொற்றை ஒழிப்பதற்கு வாய்ப்பே கிடையாது**

இதேவேளை, சீனாவின் சினோபார்ம் தடுப்பூசிக்கு அனுமதி வழங்கும் விடயத்தில் அதிகாரசபையின் உறுப்பினர்களுக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் சில ஊடகங்களில் வெளியாகியிருந்தன. எனினும், உலக சுகாதார ஸ்தாபனம் இதற்கு அனுமதியளித்திருப்பதால் இலங்கையில் அதனை பயன்படுத்துவதில் சிக்கல்கள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

இது இவ்விதமிருக்க, அமெரிக்கத் தயாரிப்பான பைசர் தடுப்பூசியை அவசர தேவைகளுக்கு இலங்கையில் பயன்படுத்துவதற்கும் தேசிய மருந்து கட்டுப்பாட்டு அதிகாரசபை அனுமதி வழங்கியுள்ளது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது உலகில் தயாரிக்கப்பட்டுள்ள கொவிட் தடுப்பூசிகளில் அங்கீகரிக்கப்பட்ட நான்கு மருந்துகளை இலங்கையில் தற்பொழுது பயன்படுத்துவதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது.

எனவே முறையான திட்டமிடல்கள் ஊடாக நாட்டில் குறித்த வயதெல்லை கொண்ட அனைவருக்கும் தடுப்பூசிகளை ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் தற்பொழுது ஏற்பட்டுள்ள சிக்கலான நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்.

இருந்தபோதும், இந்த மாற்றத்தை ஓர் இரவில் ஏற்படுத்தி விட முடியாது. தடுப்பூசிகளை ஏற்றி நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கும் அதேநேரம், பொது மக்களும் சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல்களை உரியபடி பின்பற்றுவதற்கான நடத்தை மாற்றங்களை தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தற்பொழுது தோன்றியுள்ள சுகாதார அச்சுறுத்தல் அனைத்து சக்திகளின் கட்டுப்பாடுகளுக்கும் அப்பாற்பட்டது என்பதால், மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் ஊடாகவே கொவிட் அச்சுறுத்தலில் இருந்து வெளியே வர முடியும்.

பி.ஹர்ஷன்...

# ஸ்டாலினின் வெற்றியும் இலங்கை தமிழர் தரப்பின் வீண் கற்பனாவாதங்களும்!

வார இறுதி
## அரசியல் குறிப்பேடு
சம்யுக்தன்



**இந்தியாவின் தமிழ்நாடு மாநில சட்டசபைக்கு நடத்தப்பட்ட தேர்தலில் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் அறுதிப் பெரும்பான்மை வெற்றி பெற்று ஆட்சி அமைத்திருக்கின்றது. தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின் தமிழகத்தின் புதிய முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ளார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அமைச்சரவையில் முதலமைச்சருடன் சேர்த்து மொத்தம் 34 அமைச்சர்கள் இட ம்பெற்றுள்ளனர். தமிழ்நாடு ஆளுநர் மாளிகையில் நேற்றுமுன்தினம் காலை மிக எளிமையான முறையில் பதவியேற்பு வைபவம் நடைபெற்றது. கொரோனா தொற்று இந்தியாவில் தீவிரமாக உள்ளதனால் இவ்வாறு எளிமையான முறையில் பதவியேற்பு வைபவம் நடைபெற்றது.

தமிழக அரசியலில் நீண்ட காலமாக நிலவி வருகின்ற தி.மு.கவின் அரசியல் வெற்றிடத்தை ஈடு செய்யும் வகையில், ஸ்டாலின் இப்போது ஆட்சியை கைப்பற்றியுள்ளார். தமிழக அரசியல் களத்தில் கலைஞர் கருணாநிதி இல்லாத காலகட்டத்தில், தி.மு.கவின் ஆட்சியொன்று இப்போது மலர்ந்துள்ளதால், ஸ்டாலின் தொடர்பில் பலரும் எதிர்பார்ப்புக்களை கொண்டிருப்பதுடன், அவருக்கு உலகெங்குமிருந்து பாராட்டுகளும் குவிந்து வருகின்றன.

இந்த வரிசையில் வடக்கு, கிழக்கு அரசியல் களத்திலுள்ள இலங்கை தமிழ் அரசியல்வாதிகள் பலரும் ஸ்டாலினுக்கு தமது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருவதுடன், தமிழர்களின் அரசியல் உரிமை பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஸ்டாலின் மீதும் நம்பிக்கைகளை வெளியிட்டுள்ளனர்.

**இந்திய தேர்தல்கள் நெருங்குகையில் தமிழக அரசியல்வாதிகள் 'ஈழத் தமிழர் கரிசனை' என்ற ஆயுதத்தை கையிலெடுப்பதும், இலங்கை தமிழ் அரசியல்வாதிகள் தமிழர்களுக்கு மாயத் தோற்றம் காண்பித்து வீண் நம்பிக்கை அளிப்பதும் முடிவின்றித் தொடரும் அபத்தங்கள்!**




**இலங்கை அரசுக்கு இந்திய மத்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டுமென தமிழக அரசியல்வாதிகள் கோஷமிடுவதும், கச்சதீவை மீட்போம் என்று கூறுவதும் நடைமுறைச் சாத்தியமற்ற வெறும் கனவுகள்!**

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் குறிப்பாக தமிழகத்துக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் இடையில் பண்டைய காலம் தொட்டு உறவுகள் தொடர்ந்து வருகின்றன. இலங்கை கடந்த காலங்களில் இக்கட்டான, நெருக்கடியான சூழல்களுக்கு முங்கொடுத்த போதெல்லாம் இந்தியா வழங்கிய உதவிகள் ஏராளம். தமிழகத்துக்கும், இலங்கைத் தமிழர்களுக்குமிடையே 'தொப்புள் கொடி உறவு' உள்ளதென்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இலங்கையில் 1983 ஆம் ஆண்டு பகுதியில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் ஆரம்பமானதில் இருந்து இலங்கைத் தமிழர்களை வரவேற்று அரவணைப்பதில் தமிழகம் கொண்டிருந்த அக்கறையை வார்த்தைகளால் விபரிக்க இயலாது.

இருந்த போதும், தமிழக சட்டமன்றத்துக்கோ அல்லது இந்திய நாடாளுமன்றத்துக்கோ தேர்தல் வரும் போது, தமிழக அரசியல்வாதிகளின் பிரசாரத்துக்கு ஈழத் தமிழர்கள் விவகாரம் வாய்ப்பாகப் பயன்படுத்தப்படுவதை காலங் காலமாக நாம் கண்டு வருகின்றோம்.

யுத்தம் இடம்பெற்று வந்த காலங்களில் தமிழகத்தில் தேர்தல் வரும் போது இலங்கைத் தமிழர்கள் குறித்த கரிசனைகள் அதிகமாக வெளிப்படுத்தப்பட்டன. இந்த நிலைமை இன்னமும் மாற்றமடையவில்லையென்பது நடைபெற்ற முடிந்த தமிழக சட்டசபைத் தேர்தலிலும் புலப்பட்டது.

தமிழகத்தின் இரு பிரதான கட்சிகளுமே தத்தமது தேர்தல் அறிக்கைகளில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது அல்லது அது குறித்து மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுப்பது தொடர்பான விடயங்களை உள்ளடக்கியிருந்தன. இவற்றில், ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க வெளியிட்டிருந்த தேர்தல் அறிக்கையிலும் இவ்வாறு ஈழத் தமிழர் மீதான கரிசனைகள் பற்றிப் பேசப்பட்டுள்ளது.

'இலங்கையில் இடம்பெற்றதாக குற்றம் சாட்டப்படுகின்ற மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றம் நடந்ததாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள், தமிழர் தரப்பினால் முன்வைக்கப்படும் இனப்படுகொலை குற்றச்சாட்டுகள் பற்றியெல்லாம் சுதந்திரமான, நம்பகமான சர்வதேச விசாரணையை மேற்கொள்ள இந்திய அரசு உலக நாடுகளை வலியுறுத்த வேண்டும் என மத்திய அரசை தி.மு.க.கழகம் வலியுறுத்தும் என்று தி.மு.கவின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

'இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முழுவதும் நீர்த்துப் போன அரசியல் அதிகாரப் பங்கீடுகளே அனுமதிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள தமிழர்களின் விருப்பத்திற்கேற்றவாறு நிரந்தரமான அரசியல் தீர்வு அமைய இலங்கையில் உள்ள தமிழர்கள் மற்றும் புலம்பெயர்ந்த தமிழர்களிடையே ஐ.நா சபையின் மேற்பார்வையில், பொதுவாக்கெடுப்பு நடத்தவும், இலங்கையில் புதிதாக உருவாக உள்ள அரசியல் அமைப்புச் சட்டத்தில் முழுமையான அதிகாரங்கள் தமிழர்களுக்குக் கிடைத்திடும் வகையில் சட்டப் பிரிவுகளை உருவாக்கவும் இலங்கை அரசை நிர்ப்பந்திக்க வேண்டுமென இந்திய மத்திய அரசை தி.மு.க.கழகம் தொடர்ந்தும் வலியுறுத்தும்.

ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு மேலாக அகதிகள் முகாம்களில் தங்க அனுமதி வழங்கப்பட்டுள்ள ஈழத் தமிழ் உறவுகளுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதற்கும் மத்திய அரசை தி.மு.க வலியுறுத்துவதுடன், இவர்களில் இலங்கைக்குத் திரும்பிச் செல்ல விரும்புவர்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்யும்' என ஸ்டாலின் முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன் கச்சதீவு குறித்தும் தி.மு.க சுட்டிக் காட்டியிருந்தது.

'கச்சதீவில் மீன் வலைகளை உலர்த்துவதற்கும், தேவாலயங்களில் வழிபாடு நடத்துவதற்கும் இருந்த உரிமை 1976ஆம் ஆண்டு இந்தியாவில் அவசரநிலை காலத்தில் பறிக்கப்பட்டன. இதன் காரணமாக அடிக்கடி கச்சதீவு அருகே தமிழக மீனவர்கள் இலங்கை இராணுவத்தினரால் தாக்கப்படுவதும், சிறைப் பிடிக்கப்படுவதும் தொடர் நிகழ்வாக அதிகரித்து வருவதால் தமிழக மீனவர்களைப் பாதுகாத்திட, கச்சதீவைத் திரும்பப் பெறுவதற்கான முயற்சிள் மேற்கொள்ளப்படும்' என்பதாக தி.மு.கவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தற்போது தி.மு.க ஆட்சியமைத்துள்ள நிலையில், தேர்தல் அறிக்கையில் அக்கட்சி குறிப்பிட்டுள்ள இந்த விடயங்களை நிறைவேற்றுமா என்பது சாத்தியமானதல்ல. தி.மு.க கூறியதெல்லாம் தேர்தலுக்கான வெறும் வார்த்தைகள் என்பது உலகுக்கே தெரிந்த விடயமாகும்.

ஆனால் தி.மு.கவினால் முன்வைக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளை அடிப்படையாக வைத்தே அக்கட்சியின் தலைவர் ஸ்டாலினுக்கு இலங்கையின் வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல்வாதிகள் வாழ்த்துகளைத் தெரிவித்து வருவதுடன், தமிழர் பிரச்சினைத் தீர்வு தொடர்பில் நம்பிக்கை கொள்வதாகவும் கூறி வருகின்றனர்.

'தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையில் தமிழகத்தின் ஆட்சி அமைவதனால் இலங்கைத் தமிழரின் இன விடுதலைக்கும் பேராதரவு கிடைக்குமென நம்பிக்கை கொண்டுள்ளோம். இலங்கைத் தமிழினமும், தமிழர் தேசமும் விடுதலை பெறுவதற்கும் அனைத்துக் கட்சிகளுடனும் மத்திய அரசுடனும் இணக்கம் கொண்டு செயற்படுவதற்கும் வாய்ப்பு ஏற்படும் என நம்புகிறோம்' என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

இதுபோன்று ஸ்டாலினுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த பல இலங்கைத் தமிழ் அரசியல்வாதிகள் ஸ்டாலினின் ஆட்சியில் இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு கிடைத்து விடும் என்ற தோரணையில் நம்பிக்கை தரும் கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

அரசியல் நோக்கத்துக்காக முன்வைக்கப்படும் இந்த நம்பிக்கைக் கருத்துக்கள் தமிழ் மக்கள் மத்தியில் எந்த அளவுக்கு பொருட்படுத்தப்படும் என்பது குறித்து முதலில் நாம் பார்க்க வேண்டும். ஏனெனில் கடந்த காலங்களில் இந்திய தரப்பில் இருந்தும், தமிழ் அரசியல் தரப்பில் இருந்தும் வெளிவந்த வாக்குறுதிகளும், கிடைத்த அனுபவங்களும் சிந்திக்கத் தூண்டுகின்றன.

இந்தியாவைப் பொறுத்தவரையில், மத்தியில் ஆட்சியமைக்கும் அரசாங்கத்தின் நிலைப்பாடே இலங்கையில் பிரதிபலிக்கும் என்பது கடந்த கால நிகழ்வுகளின் மூலம் உறுதியாகியுள்ளது. இந்திரா காந்தியின் ஆட்சிக் காலத்திலும், இந்திராவின் மறைவின் பின்னரும் இலங்கையில் தமிழ்த் தீவிரவாத இயக்கங்கள் வளர்த்து விடப்பட்டன. தீவிரவாத இயக்கங்களுக்கான ஆயுதப் பயிற்சி உள்ளிட்ட பல உதவிகள் அன்றைய காலத்தில் இந்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் கிடைத்தன.

இவ்வாறான பின்னணியிலேயே ஜே.ஆர். ஜயவர்த்தனவின் ஆட்சிக் காலத்தில் இந்தியா கொடுத்த அழுத்தத்திற்கு அமைய 13வது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு மாகாணசபை முறைமை கொண்டு வரப்பட்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமது செல்வாக்கு இருக்க வேண்டும் என்பதற்காக இந்தியா தன்னால் வளர்க்கப்பட்ட இயக்கங்களிடம் அல்லது தமிழ் அரசியல் கட்சிகளிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்க முயற்சித்தது.

இதனையடுத்து இயக்கங்களுக்கிடையில் முரண்பாடுகள் தோன்றி ஒருவரை ஒருவர் அழிக்கும் நிலைக்குச் சென்றிருந்தனர். இவ்வாறு இருக்கையிலேயே எல்.ரி.ரி.ஈயினர், நேரு மற்றும் இந்திரா மறைவுக்குப் பின்னர் இந்திய தேசத்தின் செல்வாக்கு மிக்க தலைவராக விளங்கிய ராஜீவ் காந்தியை படுகொலை செய்திருந்தனர்.

இச்செயலானது ஒட்டுமொத்த இயக்கங்கள் மீதும் இந்தியாவுக்கு வெறுப்பை ஏற்படுத்தியதுடன், தாம் உருவாக்கிய இயக்கங்களையே வழிக்குக் கொண்டு வருவதற்கு தமது படைகளை அனுப்பும் நிலைக்கு இந்தியா தள்ளப்பட்டமையை நாம் அறிவோம்.


தமிழகத்திலுள்ள அகதி முகாமொன்றில் வாழும் இலங்கை அகதிகள்

அதன் பின்னரான காலப் பகுதியில் அதிகாரப் பகிர்வு தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என இந்தியா வலியுறுத்தி வந்தாலும், இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தங்கள் எதனையும் பிரயோகித்திருக்கவில்லை. அது மாத்திரமன்றி 2009ஆம் ஆண்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர இந்தியா இலங்கை அரசாங்கத்துக்கு ஒத்துழைப்புக்களையும் வழங்கியிருந்தது.

அப்போது இந்தியாவின் மத்திய அரசாங்கத்தில் காங்கிரஸ் கட்சியும், தமிழகத்தில் தி.மு.கவும் ஆட்சியதிகாரத்தில் இருந்தன. குறிப்பாகச் சொல்லப் போனால் எல்.ரி.ரி.யினருக்காக ஆயுதங்களைக் கடத்தி வந்த பல கப்பல்கள் இந்திய கடற்படையினரின் உதவியுடனேயே இலங்கை கடற்படையினரால் அன்று தாக்கி அழிக்கப்பட்டன. இலங்கையில் தீவிரவாதக் குழுக்கள் இனிமேல் இயங்கலாகாது என்பதில் இந்தியா உறுதியாக இருந்தமைக்கு இந்த செயற்பாடுகள் எடுத்துக்காட்டுக்களாக அமைந்தன.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் பொறுப்புக் கூறல் விடயங்களில் இந்தியா இலங்கை அரசாங்கத்துக்குப் பாரிய அழுத்தங்கள் கொடுக்கவில்லை என்பதுடன், அவ்வப்போது அதிகாரப் பகிர்வு குறித்த தனது நிலைப்பாட்டை மாத்திரம் வலியுறுத்துவதையே மேற்கொண்டு வந்தது. இதில் கவனித்துப் பார்க்க வேண்டிய விடயம் என்னவெனில், தமிழகத்தில் எக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இந்திய மத்திய அரசாங்கமே இலங்கை குறித்த நிலைப்பாட்டை தீர்மானிக்கின்றது என்பதாகும்.

இந்நிலையில் தமிழகத்தில் ஆட்சியில் இருப்பவர்கள் அவ்வப்போது தமது அரசியல் இருப்புக்களுக்காக ஈழத் தமிழர் விவகாரத்தை துரும்பாக எடுப்பதையே காணக் கூடியதாகவுள்ளது.

அதேபோன்றுதான், இலங்கையின் வடக்கு, கிழக்கு அரசியலில் உள்ள தமிழ் அரசியல்வாதிகளும் தமிழகத்தில் ஆட்சி செய்பவர்களுடன் தமது நட்புக்களை நீடிப்பதற்காகவும், இங்குள்ள மக்களை உஷார் நிலையில் வைத்திருப்பதற்காகவும் அவ்வப்போது குரல் கொடுப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

குறிப்பாக தமிழகத்தில் ஒவ்வொரு முறையும் ஆட்சி மாற்றம் வரும் போது தமிழகத்தின் புதிய ஆட்சியாளர்களால் இலங்கைத் தமிழர்களுக்கு தீர்வு பொற்றுக் கொடுக்கப்படும் அல்லது இவ்விடயத்தில் இந்திய மத்திய அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கப்படும் என்பன போன்ற போலியான நம்பிக்கைகள் இங்குள்ள தமிழ் அரசியல்வாதிகளால் விதைக்கப்படுவதையும் காணக் கூடியதாகவுள்ளது.

இலங்கை தமிழர்களுக்கு தனியான அரசியல் அதிகார அலகொன்று பெற்றுக் கொடுக்கப்படுமானால், அது இந்தியாவுக்கே பாதகமாக அமைந்து விடும் என்பது அந்நாட்டின் மத்திய அரசாங்கத்துக்கு தெட்டத் தெளிவாகத் தெரியும். காஷ்மீர் போன்ற பல மாநிலங்கள் தனி அலகாகப் பிரிந்து செல்வதற்காக இலங்கை விவகாரம் மேற்கோள் காட்டப்படலாம் என்பதால் இலங்கை விடயத்தில், குறிப்பாக அதிகாரப் பகிர்வு போன்ற விடயங்களில் இந்திய மத்திய அரசாங்கம் பட்டும் படாமலுமே காய்களை நகர்த்துமென்பதுதான் உண்மை.

இந்த கள யதார்த்தம் சாதாரண மக்களால் நன்கு உணரப்பட்டுள்ள நிலையில், தமிழக ஆட்சி மாற்றங்கள் இங்குள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நேரடியான தீர்வுகளைப் பெற்றுத் தரும் என்று நம்பிக்கை கொள்வது அபத்தமானதாகும்.

இவ்வாறான யதார்த்தங்களை வடக்கு, கிழக்கு தமிழர்கள் நன்கு அறிவர். அதேவேளை தமிழர் தரப்பு அரசியல்வாதிகளும் நன்கறிவர். ஆனாலும் தமிழ் மக்களை அரசியல் கொதிநிலையில் வைத்திருப்பதற்காகவும், நம்பிக்கைகளை ஊட்டுவதற்காகவும் இவ்வாறான துரும்புகளையே தமிழ் அரசியல்வாதிகள் எப்போதும் பயன்படுத்தி வருகின்றனர்.

**தமிழ் மக்கள் அரசியல் ஞானமும், யதார்த்தமும் நிறைந்தவர்களென்பதை வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல்வாதிகள் முதலில் புரிந்து கொள்வது அவசியம்**

## மாகாணசபைத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் :

# கட்சிகள் ஒன்றுபடாவிட்டால் பறிபோகும் பிரதிநிதித்துவம்!

'முன்னைய அரசாங்கத்தின் முனைப்பும் தற்போதைய அரசாங்கத்தின் முடிவும் மலையகக் கட்சிகளுக்கு கலக்கத்தை ஏற்படுத்தவே செய்யும். பாராளுமன்றம், மாகாணசபை, பிரதேச சபைகளில் பிரதிநிதித்துவங்களைப் பெற்றும் பெரிதாக எதனையும் செய்திராத மலையகக் கட்சிகள் அப்பிரதிநிதித்துவங்கள் பறிபோய்விடும் என்று பதற்றப்படுவது ஆச்சர்யமான சங்கதியல்ல'

'புதிய தேர்தல் முறையானது அமுலுக்கு வரும் பட்சத்தில் 25 மாகாணசபை உறுப்பினர்கள் உள்வாங்கக்கூடிய தற்போதைய வாய்ப்பு கைநழுவிப் போவது தவிர்க்கமுடியாது என்பது செந்தில் தொண்டமானின் கவலை'

சிறுபான்மை மக்களின் சுய நிர்ணய கோரிக்கைக்குத் தீர்வுகாணும் முகமாக இந்திய அரசாங்கம் கட்டாயப்படுத்தி உள்வாங்கச் செய்யப்பட்டதே மாகாணசபை முறைமை. இதற்கான சட்டவரைபுகள் 13 ஆம் அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தின் மூலம் உருவாக்கம் பெற்றன. இதன்மூலம் அதிகார பரவலாக்கல் என்னும் பொறியை இந்திய அரசாங்கம் வலிந்தேற்றியது. எனினும் இம் மாகாணசபை தேர்தல் என்றாலே ஆட்சிக்கு வரும் அனைத்து அரசாங்கங்களும் அலட்சிய போக்கையே கடைப்பிடிக்கின்றன.

சில சக்திகள் வெளிப்படையாகவே மாகாணசபை முறைமையை ஒழித்துக் கட்டுங்கள் என்ற ஓலமிடுகின்றன. எனினும் இந்திய அரசாங்கத்தின் அழுத்தம் காரணமாக இதனை நடத்தியாக வேண்டிய கட்டாயத்தில் இருப்பதுதான் நிஜம். எனவேதான் காலம் தாழ்த்தியாவது இத்தேர்தல் நடந்தே தீரும். ஆனால் மலையக கட்சிகளின் மனக்கிலேசத்துக்கு இதுவல்ல காரணம்.

மாகாணசபைத் தேர்தல் புதிய முறையின் கீழ் நடத்தப்பட வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கிறது. முன்னைய அரசாங்கம் முன்னகர்வுகளை செய்தது. கலப்புமுறையில் தேர்தல் நடத்துவதே பெரும்பான்மையின அரசியல்வாதிகளின் ஆசை. இதன் மூலம் விகிதாசார முறைமைக்கு விடைகொடுத்துவிடலாம். அதனால் சிறுபான்மை சமூகங்களுக்கான பிரதிநிதித்துவங்கள் சிதைவடைந்து போகும்.

இவ்வாறான நிலைமை உருவாகுவது இந்திய அரசாங்கத்துக்கு விருப்பமான காரியமாக இருக்காது. எனவே மாகாணசபைக்கான சீர்திருத்த சட்டமூலத்தை 70 வீதம் தொகுதி வாரி முறையிலும் 30 சதவீதத்தை விகிதாசார முறையிலும் தயாரிக்க அரசாங்கம் முன்வந்தது. முன்னைய ஆட்சி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை 60 வீதம் தொகுதி 40 வீதம் விகிதாசாரம் என்னும் ரீதியில் நடாத்தி இருந்தது.

இது ஒரு கலப்பு தேர்தல் முறை. ஆனால் இதன் பிரதிகூலங்கள் சிறுபான்மை இன கட்சிகளுக்கு சாதகமாக சாத்தியமே இல்லை என்பதுதான் மலையக கட்சிகளின் மனகலக்கம். ஏனெனில் புதிய மாகாணசபை சட்டமூலம் பாராளுமன்றத்தில் அங்கீகாரம் பெறுமாயின் அதனால் பெரும்பான்மை இன கட்சிகளே பயனடையும். அக்கட்சிகளின் பிரதிநிதித்துவங்கள் அதிகரிக்கும். மலையகக் கட்சிகள் தமக்கான இருப்பை இழக்க நேரிடும்.

இதை உணர்ந்து கொண்டுதான் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் இப்புதிய முறைமைக்கு தமது எதிர்ப்பை வெளிக்காட்டி இருக்கின்றார். ஆளும் கட்சியில் பங்காளியாக இருந்து கொண்டு வெறுமனே அடக்கி வாசிக்காமல் ஆணித்தரமாக தனது ஆட்சேபணையை முன் வைத்திருப்பது மலையக அறிவு ஜீவிகளிடத்து வரவேற்பை பெற்றுத்தந்துள்ளது. ஆட்சேபணையோடு அடங்கிவிடாது அனைத்து சிறுபான்மை இன கட்சியினரையும் அழைத்து ஆலோசனை செய்யப் போவதாகவும் ஜீவன் தொண்டமான் கூறியிருக்கின்றார்.

இதே கருத்தை தமிழ் முற்போக்குக் கூட்டணியும் தெரிவித்திருந்தது. ஆனால் தமது பக்க நியாயத்தை அரசாங்கத்துக்கு எடுத்துரைத்து சிறு சலனத்தையாவது ஏற்படுத்த இ.தொ.கா.வுக்கு மட்டுமேதான் கூடிய வாய்ப்பு இருக்கின்றது என்பதை மறந்துவிட முடியாது. தற்போதைய ஆட்சியாளர்களுடன் அமரர் ஆறுமுகன் தொண்டமான் கொண்டிருந்த நெருக்கமான உறவு பகிரங்கமானதே. ஜீவன் தொண்டமானும் தந்தை வழியிலேயே அந்த உறவைப் பேணி செல்லக் கூடிய கள நிலவரமே காணப்படுகின்றது. சர்ச்சைக்குள்ளாகியிருந்த போதிலும் 1000 ரூபாய் சம்பள அதிகரிப்பை பெற்றுத்தந்த இந்த அரசாங்கத்தை பாதிக்கும் எவ்வித நடவடிக்கைகளிலும் இ.தொ.கா இறங்கப் போவது கிடையாது.

எனவே இ.தொ.கா இதர சிறுபான்மையின கட்சிகளோடு பேச்சுவார்த்தை நடாத்தி புதிதாக யோசனையொன்றை முன்வைத்தாலும் அது எந்தளவுக்கு எடுபடும் என்பது கேள்விக்குறியே. உண்மையில் விகிதாசார தேர்தல் முறைமை சிறுபான்மை சமூகங்களுக்கு வரப்பிரசாதமாகவே விளங்கி வந்தது. இந்த முறைமை ஜே.ஆர் . ஜெயவர்தனவின் ஆட்சிக்காலத்திலேயே நடைமுறைக்கு வந்தது. பிற்காலத்தில் பாராளுமன்ற, மாகாணசபை, உள்ளூராட்சி சபை தேர்தல்களின்போது மலையகப் பிரதிநிதிகள் கணிசமாக உள்வாங்கப்பட்ட விகிதாசார தேர்தல் முறைமையே சிறுபான்மை இன கட்சிகளுக்கு வழங்கியமையால் மலையக அரசியல் கட்சிகள் அதனை இழப்பது ஆபத்தானதே.

எனினும் முன்னைய அரசாங்கத்தின் முனைப்பும் தற்போதைய அரசாங்கத்தின் முடிவும் மலையகக் கட்சிகளுக்கு கலக்கத்தை ஏற்படுத்தவே செய்யும். பாராளுமன்றம் மாகாணசபை பிரதேச சபைகளில் பிரதிநிதித்துவங்களைப் பெற்றும் பெரிதாக எதனையும் செய்திராத மலையகக் கட்சிகள் அப்பிரதிநிதித்துவங்கள் பறிபோய்விடும் என்று பதட்டப்படுவது ஆச்சர்யமான சங்கதியல்ல. ஏனெனில் தமக்கான அரசியல் இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள விகிதாசார முறைமையானது இக்கட்சிகளுக்குக் கைகொடுத்து வந்துள்ளமையை இழப்பது என்பது ஆரோக்கியமானதாக இருக்காதே.

பன். பாலா ...

இதேவேளை தற்போது பாராளுமன்றத்தில் மலையக மக்களை பிரநிதித்துவம் படுத்தும் 9 உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். வாக்காளர் செறிவின் அடிப்படையில் சுமார் 15 உறுப்பினர்களாவது தெரிவு செய்யபடல் வெண்டும். ஆனால் புதிய தேர்தல் முறைமை கையாளப்படுமாயின் 5 உறுப்பினர்கள் மட்டுமே உள்வாங்கப்படும் அபாயமுள்ளது என்கிறார் முன்னாள் ஊவா மாகாணசபையின் கல்வி அமைச்சரும் இ.தொ.காவின் உபதலைவருமான செந்தில் தொண்டமான். இவரே பெருந்தோட்ட அபிவிருத்திக்கான பிரதமரின் இணைப்பாளருமாவார். எனவே இவரது கருத்து அவதானத்துக்கு உரியதாகும். புதிய தேர்தல் முறையானது அமுலுக்கு வரும் பட்சத்தில் 25 மாகாணசபை உறுப்பினர்கள் உள்வாங்கக்கூடிய தற்போதைய வாய்ப்பு கைநழுவிப் போவது தவிர்க்கமுடியாது என்பதும் செந்தில் தொண்டமானின் கவலை.

நுவரெலியா, பதுளை, கண்டி, இரத்தினபுரி, மாத்தளை ஆகிய மாவட்டங்கள் மட்டுமே மலையக பிரதிநிதித்துவங்களை உறுதிப்படுத்தும் இடங்களாகும். மாகாணசபைத் தேர்தலில் கிடைக்கும் பிரதிநிதித்துவங்களின் அடிப்படையிலேயே தான் பாராளுமன்றப் பிரதிநிதித்துவங்களும் கிட்டும். இதன்படி புதிய முறைமையானது அச்சுறுத்தலாகவே அமையும் என்கிறார்கள் அரசியல் ஆய்வாளர்கள். புதிய மாகாணசபை தேர்தல் சட்டமூலம் சிறுபான்மை இனங்களின் அரசியல் பிரதிநிதித்துவங்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படுத்தும் என்பதையிட்டு சகல மலையக கட்சிகளும் ஓரே நிலைப்பாட்டையே கொண்டுள்ளன.

பிற கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒருமுகமான தீர்வொன்றினை எட்டி அதை ஆலோசனையாக அரசாங்கத்தின் கவனத்துக்கு சமர்ப்பிக்கும் முடிவில் அவை உள்ளன. குறிப்பாக அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்க வேண்டுமாயின் இ.தொ.காவே தலைமை தாங்கும் அந்தஸ்து பெற வேண்டும் என்பதே பலரதும் கருத்து. அரசாங்கத்தின் பங்காளி கட்சி என்ற ரீதியில் அதன் யோசனைகளை அரசாங்கம் பரிசீலிக்கலாம் என்று இவர்கள் வாதிடுகிறார்கள்.

அனைத்து சிறுபான்மைக் கட்சிகளும் ஒரு குழுவாக தமது யோசனையைக் கையளிப்பதே சாலச்சிறந்தது என்கிறார்கள் ஒரு சாரார். இல்லாவிட்டால் இவ்விவகாரம் தலைமைத்துவங்களின் கௌரவப் பிரச்சினையாக மாறி பலவீனப்பட்டு போகும் என்பதே இவர்களின் நிலைப்பாடு.

இந்த இரண்டு தெரிவுகளையும் புறந்தள்ளிவிட்டு ஒவ்வொரு கட்சியும் தனித்தனியாக ஆலோசனைகளை அடுக்கி கொண்டு போகுமாயின் ஆகப்போவது ஒன்றுமில்லை என்பது மட்டும் நிச்சயம். மாகாணசபை தேர்தல் சம்பந்தமான புதிய சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படலாமென தெரிகின்றது. அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களினதும் கவனத்தை ஈர்க்கும் வகையில் நியாயத்தை நிலைநிறுத்தியாக வேண்டிய அவசியம் மலையக உறுப்பினர்களுக்கு உள்ளது.

# செம்பனை செய்கைக்கான தடை தொடர வேண்டும்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம், சேமநலன்கள் உள்ளிட்ட பல விடயங்களை உள்ளடக்கி பெருந்தோட்டத் தொழிற் சங்கங்களுக்கும் முதலாளிமார் சம்மேளனத்திற்கும் இடையில் செய்துகொள்ளப்படும் கூட்டு ஒப்பந்தம் ஜனவரி மாதம் 28ஆம் திகதியுடன் காலாவதியாகிவிட்டது. நீண்டகால இழுபறி நிலையிலிருந்த தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினையை அரசாங்கம் தலையிட்டு சம்பள நிர்ணய சபையினூடாக ஒரு முடிவுக்கு கொண்டு வந்ததன் மூலம் கூட்டு ஒப்பந்தத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாகி இருக்கிறது.



அரசின் பொறுப்பிலிருந்த பெருந்தோட்டங்களை 22 கம்பனிகள் பொறுப்பேற்றதன் பின்னர் இந்த சம்பளப் பிரச்சினைகளைப் போலவே பெருந்தோட்டங்களின்வளர்ச்சியிலும் பாதிப்புகளை ஏற்படுத்தியிருந்தது. தோட்டங்களை பொறுப்பேற்ற கம்பனிகள் தேயிலையுடன் மாற்றுப் பயிர்ச் செய்கைகளையும் மேற்கொண்டு வந்தன. உரிய பராமரிப்பின்றி பெருந்தோட்ட நிலப்பரப்பில் கணிசமான பகுதிகள் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் அவை காடுமண்டி காணப்படுகின்றன.

பல தோட்டங்களில் இயங்கிய தேயிலை உற்பத்தித் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. பறிக்கப்படும் தேயிலைக் கொழுந்து வெளியிடங்களிலுள்ள தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படுகிறது. இதுபோல் இரப்பர் தோட்டங்களிலும் இதே நிலையே காணப்படுகிறது. வெட்டப்படும் இரப்பர் பால் வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது. தோட்ட நிர்வாகங்களின் இத்தகைய செயற்பாடுகளால் தேயிலை தொழிற்சாலைகளில் வேலை செய்த தொழிலாளர்களும் இரப்பர் தொழிற்சாலைகளில் வேலை செய்த தொழிலாளர்களும் பெருந்தோட்டங்களுக்கு வெளியில் சென்று வேறு வேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். பெருந்தோட்டங்களை பொறுப்பேற்ற கம்பனிகளுக்கு தொழிலாளர்களின் நலனில் அக்கறை இல்லை என்பது இதன்மூலம் புலப்படுகிறது. கம்பனிகள் எதிர்பார்ப்பது என்னவெனில் யார் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை. அவற்றின் முக்கிய நோக்கம் வெறும் இலாபம் மட்டுமே.

இந்நிலையில் நுவரெலியா மாவட்டத்திலுள்ள பெருந்தோட்டக் கம்பனிகள் தேயிலைப் பயிர்ச்செய்கை மேற்கொண்ட காணிகளில் மரக்கறிச் செய்கைகளை மேற்கொண்டு வருகின்றன. தாழ்நிலப் பகுதிகளிலுள்ள தோட்டங்களின் நிலைமையும் அவ்வாறே இரப்பருக்குப் பதிலாக வேறு பயிர்கள் நாட்டப்படுகின்றன.

தோட்டக் கம்பனிகளால் நிர்வகிக்கப்படும் தெரணியகலை, அங்கெட்டிகம தோட்டத்தின் வெலிஹிந்த பிரிவில் தோட்ட நிர்வாகம் ஐம்பதாண்டுகளுக்கு மேலான பழைமைவாய்ந்த மயானத்தில் அமைக்கப்பட்டிருந்த சமாதிகளை டோசர் கொண்டு நிர்மூலமாக்கி புதைக்கப்பட்ட சடலங்களுக்கு மேலாக செம்பனை கன்றுகளை நாட்டியுள்ளது.

(21ஆம் பக்கம் பார்க்க)

சி.ப. சீலன் ...

## மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய

# மாணவன் மஹரதன்



கடந்தாண்டு நடைபெற்ற க .பொ .த (உ/த) பரீட்சை பெறுபேறுகளுக்கமைய உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய மாணவன் கருணைராசன் மஹரதன் முதலிடம் பெற்றுள்ளார்.

பாடசாலை வரலாற்றில் முதற் தடவையாக உயிரியல் விஞ்ஞான பிரிவில் இருந்து 3A சித்திகளைப் பெற்று நுவரெலியா மாவட்டத்தில் முதலாம் இடத்தை பெற்று க. மஹரதன் மருத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் தேசிய ரீதியில் 50 ஆவது இடத்தை பெற்றுள்ளார். கருணைராசன் உமா தர்ஷினி தம்பதியினரின் மகனான இவர், தரம் 1 முதல் 11 வரை ஆங்கில மொழி கல்வியில் பயின்று உயர்தரத்தை மட்டும் தமிழில் பயின்று இச்சாதனையை படைத்துள்ளார். அத்துடன் இவர் 2018 ம் ஆண்டில் போட்ஸ்வானாவில் நடைபெற்ற கனிஷ்ட விஞ்ஞான பிரிவிற்கான சர்வதேச ஒலிம்பியாட் போட்டியில் பங்குபற்றி வெண்கலப் பதக்கம் பெற்ற சாதனையாளராவார்.

டி.சுரேன்

# நீலகிரியில் இருந்து சட்டமன்றத்துக்கு தெரிவான முதல் மலையக தமிழர்



தாயகம் திரும்பிய மலையகத் தமிழரான பொன். ஜெயசீலன் கூடலூர் தனித் தொகுதியில் அ.தி.மு.க சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருப்பதன் மூலம், நீலகிரியில் தாயகம் திரும்பிய தமிழர்களின் முதல் எம்.எல்.ஏ. என்ற பெருமையைப் பெற்றுள்ளார். இவருக்கு மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வீ. ராதாகிருஷ்ணன், பொதுச் செயலாளர் பேராசிரியர் எஸ். விஜயச்சந்திரன் ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

கடந்த 50 ஆண்டு காலமாக கோத்தகிரி பகுதியில் வாழ்ந்துவரும் புலம்பெயர்ந்த மலையக மக்கள் பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர். கூடலூரில் மட்டும் சுமார் ஒன்றரை லட்சம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். திராவிட கட்சிகளின் வாக்கு வங்கியாக இருக்கும் இந்த மக்களுக்கு எந்தக் கட்சியும் அரசியலில் முக்கியத்துவம் வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்து வந்தது. இந்நிலையில் கடந்த சட்ட சபைத் தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் பொன். ஜெயசீலன் போட்டியிட்டு 64,496 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார். இதன் மூலம் தாயகம் திரும்பிய மலையக தமிழர்களில் நீலகிரி மாவட்டம் கூடலூர் சட்டமன்ற தொகுதியில் தெரிவான முதல் தமிழர் என்ற பெருமையை பெற்றிருக்கும் இவர், பதுளை, பசறை யூரி குறூப் ஏழுமலைத் தோட்டத்தில் 5.6.1973 இல் சந்திரன் என்ற பொன்னையாவிற்கும், விசாலாச்சி அம்மாளுக்கும் மகனாகப் பிறந்தவர்.

1978 இல் தனது ஐந்தாவது வயதில் ஸ்ரீமா நீலகிரி சட்டமன்றத்துக்கு தெரிவான முதல் தாயகம் திரும்பிய மலையக தமிழர்சாஸ்திரி ஒப்பந்தத்தில் தாயகம் திரும்பிய இவர், ஆரம்பக் கல்வியை நம்பிவயலிலும் 1 மற்றும் 2 ஆம் வகுப்பு முடித்து பின்னர் தேவாலா அரசு பழங்குடியினர் உணவு உறைவிட வசதியுடன் கூடிய பள்ளியில் 3 முதல் 5 ஆம் வகுப்புவரை படித்து பின்னர் அரச மேனிலைப் பள்ளியில் தாவரவியலில் Bsc பட்டம் பெற்றவர். பின்னர் கோவை அரச சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று வழக்கறிஞராக பணியாற்றி வருகிறார். தாயகம் திரும்பிய மக்களுக்காக கோத்தகிரியில் இர. சிவலிங்கம், எஸ். செந்தூரன், ம. சந்திரசேகரன் ஆகியோர் தலைமையில் செயற்பட்டு வந்த மலையக மக்கள் மறுவாழ்வு மன்றத்தின் அனுசரணையில் உயர்கல்வி கற்றதாக நன்றியுடன் நினைவு கூறுகின்றார் பொன். ஜெயசீலன்.

மலையகத் தமிழர் பேரவையைச் சேர்ந்த ராமச்சந்திரன் கட்சி வேறுபாடுகளைக் கடந்து தேர்தலில் போட்டியிட்டு சட்டமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டமை தாயகம் திரும்பிய தமிழ் மக்களுக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும். ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தத்தில் தாயகம் திரும்பி தற்போது தமிழகத்தில் வாழ்ந்து வரும் எங்களுக்குக் கிடைத்த பெரிய அங்கீகாரமாகும் என்று கோத்தகிரி வாழ் மக்கள் கருதுகின்றனர்.

தகவல் :
எச்.எச். விக்கிரமசிங்க

## அச்சத்தின் மத்தியில் வாழ்ந்துவரும்

# டுனாலி மேற்பிரிவு மக்கள்



### தரிசுக் காணியை பகிர்ந்தளித்தால் தமது வாழ்க்கையை அவர்களே பார்த்துக் கொள்வார்கள்

கண்டி, தெல்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கலஹா குறூப், அப்பர் டுனாலி தோட்டத்தில் 60 குடும்பங்கள் வாழ்கின்றனர். இவர்களின் லயன் குடியிருப்புகள் 2012 ஆம் ஆண்டு இயற்கை அனர்த்தத்திற்குள்ளான நிலையில் இரண்டு மாதங்களுக்கு மேலாக அப்பர் டுனாலி தமிழ் வித்தியாலயத்தில் தங்கியிருந்தனர்.



மழைக்காலத்தில் மண்சரிவு ஏற்படும் அபாயம் இருப்பதால் பலமுறை இடம்பெயர்ந்து அகதிகளாக இடம்பெயர்ந்து செல்வதும் பின்னர் தமது குடியிருப்புகளுக்கு சென்று குடியிருப்பதுமாகவே அவர்களது வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கிறது. 150 வருடங்களுக்கு மேல் பழைமையான இந்த வீடுகளின் கூரைத் தகடுகள் உக்கி சேதமடைந்து காணப்படுகிறது. வீட்டு சுவர்களிலும் அதனைச் சூழவுள்ள நிலப்பகுதிகளிலும் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன.

கண்டி அனர்த்த முகாமைத்துவ காரியாலயம் தெல்தோட்டை பிரதேச செயலகம் ஆகியன இவர்களுடைய குடியிருப்புகள் பாதுகாப்பற்றது, தொடர்ந்து மக்கள் அங்கு குடியிருக்க முடியாது என சான்றுகள் வழங்கியுள்ளது. இவர்களுக்கு தெல்தோட்டை லிட்டில் வெலி தோட்டத்தில் காணிகள் வழங்கப்பட்டது. எனினும் இங்குள்ள மக்கள் வெளியாருக்கு காணிகள் வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால் இக் காணிகள் மீளப்பெறப்பட்டன.



அரசு நிர்வகிக்கும் ஜனவசம தோட்டக் காணிகள் தரிசாக கிடக்கின்றன. தேயிலைக் காணிகள் காடாக்கப் பட்டுள்ளது. இவற்றை தமக்கு தரும்படியும் இதில் வீடுகள் கட்டி, விவசாயம் செய்து சுயமாக வாழமுடியும். அல்லது இந்த காடுகளை அழித்து தேயிலைக் கன்றுகளை நட்டு தமக்கு தொழில் வாய்ப்பை தரும்படியும் இக்குடும்பங்கள் கோருகின்றன.

தொழில் வாய்ப்பின்றி எதுவித வருமானமும் இன்றி பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்துவரும் இவர்களின் வீட்டைச் சுற்றிலும் உள்ள நிலப்பகுதி காடுமண்டிக் கிடக்கிறது. சிறுத்தை, காட்டுப் பன்றிகள், குரங்குகள் போன்றவற்றின் அட்டகாசம் இப்பகுதியில் அதிகரித்து காணப்படுவது மேலும் அச்சத்தைத் தருகிறது. அண்மையில் வீட்டுக்கருகில் வந்து மாடு ஒன்றை சிறுத்தை தின்று சென்ற சம்பவமும் நிகழ்ந்திருக்கிறது.

மேலும் லயத்தின் கூரைத்தகடுகள் உக்கிப்போய் காணப்படுவதால் எந்நேரமும் இடிந்து விழலாம் என்ற அச்சத்துடனேயே அவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அப்பகுதி பாதைகள் போக்குவரத்துக்கு உகந்ததாக இல்லை. கண்டி நகரில் இருந்து சுமார் 14 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள காணிப்பகுதி 1880 காலப்பகுதியில் தேயிலை தோட்டமானது. 2500 ஹெக்டெயர் நிலப்பரப்பைக் கொண்ட இந்தத் தோட்டம் ஆரம்பத்தில் கோப்பி பயிர் செய்யபட்ட இடமாகும். 1975 காலப்பகுதி வரை 3000 தோட்டத் தொழிலாளர்கள் தொழில் புரிந்து வந்த இடம் இது.

ஏழு தோட்டப் பிரிவுகளைக் கொண்ட கலஹா குறூப் தோட்டத்தில் மிகவும் நீர்வளமிக்க தோட்டமாக அப்பர் டுனாலி தோட்டம் விளங்கியது.

(18ஆம் பக்கம் பார்க்க)

தெல்தோட்டை
ஆர். நவராஜா ...



## வார்த்தெடுக்கப்பட்ட திராவிட வாரிசு;


# பி.ஜே.பி ஆசைகள் அஸ்தமனம்!

இந்திய அரசியலில் மாநில அரசுகள் பேசப்படுவதுதான் அதிகம். அந்தளவுக்கு இவற்றுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு மற்றும் நிதி, நீதி விவகாரங்கள் தவிர அனைத்திலும் மாநிலங்களின் மன நிலைகளைப் பொறுத்துத்தான் அரசியலும், ஆட்சியும் நகருகிறது. இருந்தாலும் உள்ளூர் காவல்துறை மாநில அரசுக்குள் இயங்குவதும், தேவை ஏற்படின் வெளிநாடுகளில் வரவுள்ள நிதிகளைப் பெற்றுத்தருமாறு மத்திய அரசாங்கத்தைக் கோரும் தைரியங்களும் இந்த மாநிலங்களிடம் இருக்கின்றன. இத்தனையும் ஒட்டுமொத்த வாய்ப்பாக இருக்க வேண்டுமானால், மத்திய அரசின் பங்காளியாக இருந்துவிட்டால் போதும். இப்போது நடந்து முடிந்துள்ள ஐந்து மாநிலங்களின் தேர்தல் முடிவுகளில் நான்கு, மத்திய அரசாங்கத்தின் எதிரிகள் வசம் வந்துள்ளதுதான், இந்திய அரசியலைப் பரபரப்பாக்கியுள்ளது.

தமிழகம், மேற்குவங்கம், கேரளா, புதுச்சேரி ஆகியவை மத்திய அரசாங்கத்தின் பிடியிலில்லை. இது, ஹிந்தி மொழி பேசாத மாநிலங்களிலும் காலூன்ற விழையும் கோட்பாட்டிலுள்ள மத்திய அரசுக்குப் (பாரதீய ஜனதாக் கட்சி) பிடிக்காதுதான். என்ன செய்வது! மக்களது ஆணை இப்படியான ஆசையில் மண்தூவிவிட்டதே! இந்தக் காலூன்றும் ஆசையை, இந்திய காங்கிரஸ் தலைமையிலான முற்போக்கு ஜனநாயகக் கூட்டணியின் பிரதான பங்காளியான திராவிட முன்னேற்றக் கழகம் மொழித் திணிப்பாகவும், மத ஒடுக்குமுறையாகவும்தான் பிரச்சாரங்களில் முதன்மைப்படுத்தியது. தமிழகக் கோயில்களில் ஹிந்தி மொழியில்தான் அர்ச்சனை செய்ய வேண்டி ஏற்படும் என்றும் எச்சரிக்கப்பட்டனர் தமிழர்கள். கலைஞருடைய கால கட்டத்திலும் இவ்வாறான நிர்ப்பந்தங்கள் எழுந்தபோது, ”தமிழில்தான் அர்ச்சனை செய்வோம், தமிழ் தெரியாத கடவுள்கள் தமிழ்நாட்டில் இருக்கத் தேவையில்லை” என்றார். இந்தத் தத்துவங்களை அவரது மகனான புதிய முதல்வர் ஸ்டாலினும் வேறு வடிவத்தில் வாக்காளர்களுக்கு விளக்கியிருந்தார். இதற்காகத்தான் இத்தனை வெற்றி என்றும் கூறுமளவுக்கு நிலைமைகள் இல்லை. ஏனெனில், சுமார் 15 கோடி ரூபா செலவிட முடியுமானவர்களே, தி.மு.கவில் வேட்பாளராக வரமுடியுமென்ற கட்சியின் நிபந்தனைகளில் தெரிகிறதே வெற்றியின் இலட்சணம். ஏதோ மொத்தமுள்ள 234 தொகுதிகளில் 174 இல் போட்டியிட்டு 125 இல் தனித்து வென்றிருக்கிறது தி.மு.க. இதிலுள்ள ஸ்டாலினின் ஏனைய சாதனைகளாக, தமிழக முதலமைச்சர்களின் புதல்வரென எவரும் இதற்கு முன்னர் முதலமைச்சராக வந்திராதமை, மட்டுமல்ல முன்னாள் முதல்வர்களான கலைஞர், ஜெயலலிதாவுக்குப் பின்னர் ,நேரடியாக மக்களால் தெரிவானமை என்பனவும் பார்க்கப்படுகின்றன. மற்றும் 25 தொகுதிகளில் போட்டியிட்ட இந்திய காங்கிரஸ் 18 இல் வெற்றியை சாதனைகளாக்கியுள்ளது. ஒட்டுமொத்தமாக இந்தக் கூட்டணிக்கு 159 ஆசனங்கள் கிடைத்ததில் உள்ளூரக் குதூகலிக்கிறது இந்திய காங்கிரஸ். தமிழகத்திலுள்ள 39 எம்.பிக்களில் 38 ஐ வென்று தந்த தி.மு.க, மாநில அதிகாரத்தில் அமர்வது, பாராளுமன்றத்தில் இந்திய காங்கிரஸுக்குப் பலமில்லாமலா போகும்? பிராந்தியப் பலங்களைத் தகர்ப்பதில்தான், மத்தியில் நிலைப்படும் மரபு இந்திய அரசியலில் இருக்கிறதே!. இதற்காகத்தான், பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி, இந்தப் பிராந்தியங்களின் பலங்களைத் தகர்த்தெறிய பகீரதப் பிரயத்தனம் செய்தது.

**சுஜப் எம்.காசிம் ...**

தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்காளத்தில் அதிக முனைப்புடன் நின்ற மத்திய அரசு மண்வாரிக் கொண்டது. தமிழ் நாட்டில் ஜெயலலிதாவின் தோழியான சசிகலாவை புதிய கட்சி ஆரம்பிக்க விடாமல் தடுத்ததும் இதற்காகத்தானே. இதிலும் திரிணாமுல் காங்கிரஸை வீழ்த்துவதற்கு எத்தனித்த மத்திய அரசின் அத்தனை சக்திகளும், ஒரு தாய்ப்பாசத்துக்கு முன்னால் தவிடுபொடியாயிற்று. 294 தொகுதிகளில் 216 ஐ வென்றதால், மூன்றாவது முறையாகவும் மம்தா பெனார்ஜி முதலமைச்சராகியுள்ளார். மத்தியிலுள்ள பிரதான எதிர்க்கட்சியான இந்திய காங்கிரஸையும் இந்த மாநிலத்தில் மறந்த பா.ஜ.க, எப்படியாவது திரிணாமுல் காங்கிரஸுக்கு தீவைக்க முனைந்து, தன்னைத் தற்கொலைக்குள் திணித்துக்கொண்ட செய்தி, பிரதமர் மோடியின் மவுசில் மண்ணைப் போட்டிருக்கலாம். ஏனெனில், சுதந்திரமாக விடப்பட்டுள்ள பிராந்திய அரசுகளின் ஒத்துழைப்புக்களின்றி மத்திய அரசில் பணியாற்றுவது பார்வைக்கு அழகாகத் தென்படினும் ஆட்சிக்கு அழகாக இருக்காதுதானே. இதனால்தான், இந்த முடிவுகள் இந்திய அரசிலைப் பரபரப்படுத்தியுள்ளது. இதேபோன்றுதான், கேரளா மற்றும் புதுச்சேரி செய்திகளும் உள்ளன.



மீண்டும் நாம் தமிழகம் பக்கம் வந்து பார்க்கவேண்டிய பார்வைகள் பலவுள்ளன. 179 தொகுதிகளில் போட்டியிட்ட அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 65 இலும், 23 தொகுதிகளில் களமிறங்கிய இதன் பங்காளியான பாரதீய ஜனதாக் கட்சி 04 இலும் வென்று என்ன செய்தியைச் சொல்கின்றன? கலைஞருடைய அல்லது காந்தியுடைய குடும்ப வாரிசுகளை ஒழிக்க முடிந்ததா? தேசியவாதம் என்ற போர்வைக்குள் மறைந்திருந்த மதவாதத்தை வாழவைக்க இயன்றதா? அல்லது அம்மா புகழை (ஜெயலலிதா) அரியணையேற்றக் கிடைத்ததா? இல்லை. ஏன் தனியாக அம்மா புகழையே பேசிக் கொண்டிருந்த அம்மா முன்னேற்றக் கழகத்தின் தலைவரான டி.டி.வி.தினகரனுக்காவது வெல்லக் கிடைத்ததா? இத்தனைக்கும் காரணம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களுக்கு வாரிசுகள் இல்லாதது அல்லது வாரிசுகளை அவர்கள் வெளிப்படுத்தாததுமே.

ஈழத்துத் தமிழரைக் கூறி பிழைப்பு நடத்தும் அரசியலின் வீழ்ச்சி, புலிகள் செய்த 1991 தவறுக்குப் பின்னர் ஆரம்பமாகத் தொடங்கிய துயரத்தை நாம் மறக்க முடியாது. இந்தப் பிடிக்குள் இந்தியாவின் பிராந்திய அரசியலியங்கும் யதார்த்தங்களையும் நமது தலைவர்கள் உணராதிருக்கவும் இயலாது. சீமான் ஆறு வீத வாக்குகளைப் பெற்று மூன்றாம் அணியாகவும், இதே அளவிலிறங்கி கமல்ஹாஸன் எட்டாவது இடம் சென்றுள்ளதையும் வருங்கால வளர்ச்சிக்கான பாதைகள் எனச் சிலர் வர்ணிக்கலாம். அவ்வாறானால், விஜேகாந்தின் தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் ஒரு முறை 28 ஆசனங்களை வென்று, இப்போது சென்றுள்ள நிலைமையை என்னென்று சொல்வது?

எனவே, தமிழகத்தைப் பொறுத்தவரை கலைஞரின் தி.மு.க மற்றும் எம்.ஜி.ஆரின் அ.தி.மு.க என்பனதான் நிலையான அத்திவாரங்கள். அடுத்ததெல்லாம் ஆழமறியாது காலைவிட்ட கூட்டங்கள்தான். எனினும், எதிரிகளை வீழ்த்தும் தொனியில் மத்திய அரசு இயங்காமலா இருக்கும்? சொத்துக் குவிப்பு, காட்டிக் கொடுத்தல் மற்றும் தேசத் துரோகக் குற்றச்சாட்டுக்களில் இந்த மாநிலங்கள் மாட்டாதிருந்தால்தான் இவர்களுக்கு ஆயுளும் கெட்டி, ஆட்சியும் கிட்டி. கலைஞரின் வாரிசல்லவா, ஈழத்து தமிழர் பிரச்சினையை 2009 இல் இவரது தந்தை பார்த்தாற்போல் கடைக்கண்ணால்தான் பார்ப்பாரோ தெரியாது.

# வடக்குடன் ஒப்பிடப்படக் கூடாது கிழக்கு தமிழர் அரசியல்



“அம்பாறை மாவட்டத்தைப் பாதுகாப்பதற்கு கருணாவை வெற்றியடைய வைத்திருக்க வேணும். அதைச் செய்யாமல் விட்டுவிட்டு அம்பாறை பறிபோகிறது என்று அழுவதால் பயனில்லை. இது மாதிரித்தான் திருகோணமலையில் சம்பந்தன் வெல்லும் வரை அதைக் காப்பாற்றவே முடியாது” என்றார் நண்பர் ஒருவர்.

“இது அரசாங்கத்துக்குச் சார்பான ஒருவரின் கருத்து” என்ற எண்ணமே தமிழிரிற் பலருக்கு உடனடியாகவே ஏற்படும். அவர்கள் அப்படியான சிந்தனை முறைக்கூடாகவே பயிற்றப்பட்டுள்ளனர். ஆகவே அவர்கள் இந்தக் கருத்தையும் இதிலுள்ள நோக்கையும் பொருட்படுத்தவே மாட்டார்கள். முற்றாக மறுதலிப்பர். அந்த அடிப்படையிலேயே தமிழ் வாக்காளர்கள் சிந்திக்கின்றனர். தமிழ்ப் பெருந்திரளின் அரசியல் தெரிவுகள் அமைகின்றன. இது ஒரு கேள்வியற்ற மரபாகி விட்டது. மாற்றுச் சிந்தனை, மாற்று நோக்கு என்பதற்கு இடமேயில்லை. எத்தனை ஆண்டுகளான தோல்வி என்றாலும் அதிலே பரிசீலனையோ மறுபார்வையோ விமர்சனமோ கிடையாது.

இதற்குக் காரணம், அரசியல் என்பது ஒரு செயல்முறை. அது ஒரு அறிவியல். அது ஒரு தந்திரோபாய நடவடிக்கை. அது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான வழிமுறை. அது எதிர்த்தரப்பை முறியடிப்பதற்பான பொறிமுறை. தோல்விகளிலிருந்தும் பின்னடைவுகளிலிருந்தும் மீண்டெழுவதற்கான படிக்கல். அல்லது உயர் வாய்ப்பு. அது படிப்பினைகளின் அடிப்படையில் செயற்பட வேண்டிய ஒன்று என்ற எண்ணமோ விளக்கமோ பெருந்திரள் தமிழ்ச்சமூகத்திடமில்லை. மட்டுமல்ல தமிழ்ப் புத்திஜீவிகளும் பத்தாம் பசலித்தனமாகவே பழைய ட்ராக்கில் பத்திரமாக ஓடிக் கொண்டிருக்கின்றனர். இப்படி ஓடினால் இந்தப் போட்டியுலகில், இந்தச் சுழிப்புகள் நிறைந்த உலகில் எப்படித்தான் வெற்றியடைய முடியும்? எப்படித் தாக்குப் பிடித்து நிற்க இயலும்?

நம்முடைய நண்பரின் நோக்கு நிலை சற்று வித்தியாசமானது. அவருடைய நோக்கின் படி ஒரே நேரத்தில் பல கண்ணிகளை வைப்பதாக கருணாவின் தெரிவு இருந்திருக்கும் என்பது உண்மையே. ஒன்று கருணாவை தெரிவு செய்திருந்தால் அம்பாறை என்ற தமிழர் பிரதேசத்தின் தனித்துவத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு – கடப்பாடு கருணாவுக்கு ஏற்பட்டிருக்கும். இதற்காக கருணா சில தந்திரோபாயங்களை வகுத்திருப்பார். அது அரசாங்கத்தை ஏதோ வகையில் கருணா வசப்படுத்துவதாக இருந்திருக்கும். இதன் மூலம் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலை கருணா ஏதோ வகையில் இடையீடு செய்திருப்பார். இதனால் தமிழர்கள் பாதுகாக்கப்பட்டிருப்பர். தமிழர்களுக்கு அபிவிருத்தி உள்ளிட்ட பல நன்மைகளும் ஏற்பட்டிருக்கும். இதில் சாத்தியப்பாடுகளே அதிகமுண்டு. ஏனென்றால் கருணாவை வைத்தே முஸ்லிம்களை அரசாங்கம் கையாள முற்பட்டிருக்கும். இதனால் அங்கே முஸ்லிம்களின் அரசியலிலும் வேறொரு விதமான நொதிப்பு ஏற்பட்டிருக்கும். அதாவது அம்பாறையின் அரசியல் விறுவிறுப்பும் உச்ச விழிப்பு நிலைக்குமாக மாறியிருக்கும்.

இரண்டு, இதற்கு அரசாங்கம் ஒத்துழைக்காமல் கருணாவை பலவீனப்படுத்தும் வகையில் – கருணாவுக்கு மாறாகச் செயற்பட்டிருந்தால் அதனால் கருணாவுக்கும் அரசாங்கத்தரப்புக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கும். அதுவும் ஒரு வகையிலான நல் அரசியல் விளைவொன்றை உருவாக்கியிருக்கும். அப்போதும் முஸ்லிம்களின் அரசியலில் இன்னொரு விதமான ரச மட்டம் உயர்ந்திருக்கும்.

மூன்றாவது, கருணா அம்பாறையில் வெற்றியடைந்திருந்தால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட ஏனைய தமிழ்த்தேசிய அரசியற் தரப்பினருக்கு ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்கும். அவர்கள் வெறும் வாய்ப்பேச்சு அரசியலைக் கைவிட்டு செயற்பாட்டு அரசியலை நோக்கி நகர வேண்டிய நெருக்கடி ஒன்று உருவாகியிருக்கும். கருணாவின் வெற்றியும் சம்மந்தனின் தோல்வியும் இதை நிச்சயமாக உண்டாக்கியிருக்கும்.

நான்காவது, கருணாவின் வெற்றியானது நிச்சயமாக முஸ்லிம்களுக்கு நெருக்கடியை உண்டாக்கியிருக்கும். ஆகவே அவர்கள் தமது அரசியலைச் சிறதறலாக மேற்கொள்ளாமல் – பலவீனமான நிலையில் மேற்கொள்ளாமல் – பலமான முறையில் வலுவான தரப்பாக மாறுவதைப் பற்றிச் சிந்தித்திருப்பர். இது முஸ்லிம்களுக்கு அங்கே ஒரு பாதுகாப்பை எதிர்காலத்தில் உயர்ந்த பட்சம் உருவாக்கக் கூடியதாக இருந்திருக்கும்.

ஐந்தாவது, எல்லாவற்றுக்கும் அப்பால் கருணாவின் வெற்றியானது அரசாங்கத்துக்கு கூடிய நெருக்கடியையும் சிந்தனைச் சுமையையும் வழங்கியிருக்கும்.

இதெல்லாம் தமிழ் மக்களுக்கு கணிசமான வெற்றியைப் பெற்றுத் தந்திருக்கும். கூடவே அரசியலில் பல நொதிப்புகளையும் உண்டாக்கியிருக்கும். இப்போது இவை எதுவுமே நிகழாது உறைநிலையே ஏற்படுத்தப்பட்டுள்ளது. அங்கே தெரிவு செய்யப்பட்ட கலையரசன் வெறும் பொம்மையாகவே உள்ளார். அவரால் எதிர்காலத்துக்கான ஒரு புதிய பாதையைக் கூடத் திறக்க முடியாது. ஏன் ஒரு காலடியைக் கூட வைக்க முடியாது. இதனால் ஏற்படும் பாதிப்புகள் அனைத்தும் அங்குள்ள தமிழர்களையே முழுதாகப் பாதிக்கிறது. அரசாங்கத்துககு மிக வாய்பான ஒருத்தர் கிடைத்துள்ளார். ஆதரவாகவோ எதிர்த்தோ எந்த விளைவுகளையும் உண்டாக்கக் கூடிய வல்லமை கலையரசனிடம் இல்லை.

இப்படித்தான் திருகோணமலையில் சம்பந்தன் தமிழ்த் தரப்பின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்படும் வரையில் அங்கே நிகழ்ந்து கொண்டிருக்கும் இனத்துவ நெருக்கடிகளையோ குடிப்பரம்பல் பிரச்சினைகளையோ தீர்க்க



முடியாது. ஏனெனில் சம்பந்தனுடைய அரசியல் வழிமுறையிலும் தலைமைத்துவத்திலும் அவர் ஒரு போதுமே எத்தகைய செயற்பாட்டு விதிகளையும் விளைவுகளையும் உருவாக்கியவரல்ல. திருகோணமலையின் அரசியல் பிரதிநிதியாக அவர் தொடர்ந்து பல ஆண்டுகாலமாக நீடித்திருக்கிறார். இதுவரையான காலத்தில் திருகோணமலைக்கு அவர் இனத்துவ ரீதியிலும் பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி போன்றவற்றிலும் செய்திருக்கும் பங்களிப்புகள் என்ன? அதாவது எதிர்காலத்தில் சம்பந்தனை நினைவு கொள்ளக் கூடிய அளவுக்கு அவர் ஆற்றிய பணியும் பங்களிப்புகளும் என்ன?

தொடர்ந்தும் இதே போல திருகோணமலை வாழ் தமிழர்கள் சம்பந்தனையோ அவரைப்போன்ற வேறு ஒருவரையோ தெரிவு செய்தால் தமிழர்களின் நெருக்கடிகள் மேலும் மேலும் அதிகரிக்குமே தவிரத் தீராது, ஒழியாது. ஏனெனில் இவர்கள் பிரச்சினைகளை உற்பத்தி செய்யும் அரசியல் வழிமுறையைச் சேர்ந்தவர்கள். அதில் எத்தகைய இடையீட்டையும் செய்வதற்கு வழியும் வக்குமற்றவர்கள்.

இது ஒன்றும் எழுந்தமானமான குற்றச்சாட்டல்ல. வரலாற்று ஆதாரங்களை மையப்படுத்திய குற்றச்சாட்டும் உண்மை உரைத்தலுமாகும். இதை மறுத்துரைப்போர் அதற்கான ஆதரங்களோடு அறிவு பூர்வமாக உரையாட முன்வரலாம். அப்படி அவர்கள் முன்வர வேண்டும். அது கடப்பாடாகும். அது அறிவியல் ஒழுக்கத்துக்கு அழகும் கூட.

கிழக்கின் தமிழர் நிலை மற்றும் தமிழர் அரசியல் தமிழர்களின் பாதுகாப்பு என்ற பல அம்சங்களைக் குறித்து இதையும் விட ஆழமாகப் பல கோணங்களில் விவாதிக்கவும் உரையாடல்களைச் செய்யவும் வேண்டும். இலங்கையின் பிற பிரதேசங்களையும் விட கிழக்கு வேறான சமூக நிலைகளையும் நிலைமைகளையும் வரலாற்றுப் பின்புலங்களையும் கொண்டது கிழக்கு. அதை வடக்குடன் ஒப்பிட முடியாது. வடக்கின் கண் கொண்டு பார்க்கவும் முடியாது. அதன் யதார்த்தமே வேறு. அதற்குரிய யதார்த்தத்தின் வழியேதான் சிந்திக்க வேண்டும். அதுவே சரியானது. அதில் ஒன்றுதான் நம் நண்பரின் நோக்கும். இதில் மட்டக்களப்பில் பிள்ளையானின் பாத்திரத்தையும் சமகாலத்தில் இணைத்து நோக்குவது அவசியம். அது பல பாடங்களுக்கும் அவதானங்களுக்கும் உதவும்.

**கருணாகரன் ...**

லங்கா சதொச LANKA SATHOSA
தேசத்திற்கு விலை நிர்ணயிப்பவர்
வர்த்தக அமைச்சு

## லங்கா சதொச லிமிடட்டுக்கு வாடகை அடிப்படையில் இலகுரக வாகன வழங்குனர்களைப் பதிவு செய்தல் - 2021/2022

2021/2022ஆம் வருடங்களில் சதொச லிமிடட்டுக்கு பின்வரும் வகையான இலகுரக வாகனங்களை வாடகை செலுத்தல் அடிப்படையில் வழங்குவதற்கு பதிவு செய்து கொள்ள விரும்பும் உள்நாட்டு போக்குவரத்து வசதிகள் வழங்குனர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**இலகுரக வாகனங்களுக்கான பதிவுக் கட்டணம் (மீளளிக்கப்படாதது)**

| வகை | பதிவுக் கட்டணம் (ரூபா) |
|---|---|
| Double Cabs | 5000.00 |
| Van | 5000.00 |
| X Trailer | 5000.00 |

**பதிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்படும் வாகனங்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நிலைமைகளில் இருத்தல் வேண்டும்.**

2007ஆம் வருடத்திற்குப் பின்னரான உற்பத்தி வருடம், சிறந்த நிலைமையிலான மேலதிக டயர் / ஜெக் / வீல் பிரஷ் / கருவிகள் இருத்தல் வேண்டும். மேலும் சிறந்த பொறிமுறை மற்றும் செயற்பாட்டு நிலைமையிலான, ஓட்டத்திற்கு உகந்த டயர்கள் இடப்பட்ட, ஓட்டத்திற்கு உகந்த சுத்தமான நிலைமையிலான இலகுரக வாகனமாகவிருத்தல் வேண்டும்.

2021 மே மாதம் 10ஆம் திகதி முதல் 2021 மே மாதம் 31ஆம் திகதி வரையில் விண்ணப்பப் படிவங்கள் மற்றும் இயைபுடைய ஆவணங்களை பின்வரும் இணைய தளத்தில் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அல்லாவிடில் ரூபா. 2,500/= செலுத்தி லங்கா சதொச லிமிடட் பிரதான அலுவலகத்தின் 3ஆம் மாடியிலுள்ள கொள்வனவுப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

www.lankasathosa.org

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் மற்றும் ஆவணங்களை, 2021 மே மாதம் 31ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு நேரில் கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும்.

**03ஆம் மாடி,
கொள்வனவுப் பிரிவு,
லங்கா சதொச லிமிடட்,
இல. 27, சதொச பொதுச் செயலாளர் கட்டிடம்,வொக்ஷோல் வீதி,
கொழும்பு 02.**

மேலதிக விபரங்களுக்கு பின்வரும் அதிகாரியைத் தொடர்புகொள்ளவும்.
சிரேஷ்ட வழங்கல் முகாமையாளர், லங்கா சதொச லிமிடட் - 070 1560768

இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை சதொச லிமிடட் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

தலைவர்,
லங்கா சதொச லிமிடட்,
சதொச பொதுச் செயலாளர் அலுவலகம்,
இல 27, வொக்ஷோல் வீதி, கொழும்பு - 02

## விலைக்கேள்வி அழைத்தல்

நிதி மற்றும் மூலதனச் சந்தை மற்றும்
அரச நிறுவன மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு

**கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்**

**தேசிய போட்டி விலைக்கேள்வி முறைமையின் கீழ் மடிக்கணினிகள் மற்றும் அனைத்தும் ஒன்றிலடங்கிய டெஸ்க்டொப் கணினிகளை கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்கோரல்**

IFB No: DPMM/AD/08/03/2021/02

01. கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திற்காக (PMMD) மடிக்கணினிகள் மற்றும் அனைத்தும் ஒன்றிலடங்கிய டெஸ்க்டொப் கணினிகளைகொள்வனவு செய்வதற்காக தகைமையுள்ள விலைக்கேள்விதாரர்களிடமிருந்து பெறுகைக்குழுத் தலைவரால் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் சார்பாக பொறியிடப்பட்ட விலைமனுக்களுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

| நிறை. இலக்கம் | விபரம் | தொகை/(இல) |
|---|---|---|
| 1 | 14" - i5 மடிக்கணினிகள் அனைத்தும் | 26 |
| 2 | ஒன்றிலடங்கிய டெஸ்க்டொப் கணினிகள் | 01 |

02. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிறை இலக்கங்களுக்கு விலைகளை கூறுவதற்கு விலைக்கேள்வியாளர்கள் அனுமதிக்கப்படுகின்றார்கள்.

03. ஆர்வமுடைய விலைக்கேள்வியாளர்களினால் தமது கடித தலைப்பில் (அசல்) எழுத்து மூலமான விண்ணப்பத்தினை சமர்ப்பித்து, ரூபா.5.000 இணை மீள் செலுத்தப்படாத கட்டணமாக செலுத்தி ஆங்கிலத்தில் உள்ள விலைக்கேள்வி ஆவணங்களின் ஒரு முழுமையான தொகுப்பினை கொள்முதல் அதிகாரியிடம், அறை இல. 331, கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்கள அலவலகத்திலிருந்து 10ம் திகதி மே மாதம் 2021 தொடக்கம் 28ம் திகதி மே மாதம் 2021 வரை வேலைநாட்களில் மு.ப 09:00 தொடக்கம் பி.ப.15:00 க்குள் கொள்வனவு செய்துகொள்ளலாம். பணம் செலுத்தும் முறைமை காசாக காணப்படும்.

04. விலைக்கேள்வியாளர்கள் மேலதிக தகவல்களை பணிப்பாளர் (நிர்வாகம்) இடமிருந்து தொலைபேசி இலக்கம் : 0112-034403/0112-034402 மூலம் பெற்றுக்கொள்ளலா மற்றும் விலைக்கேள்வி ஆவணங்களை கீழே தரப்பட்டுள்ள முகவரியில் வேலைநாட்களில் மு.ப. 09:00 தொடக்கம் பி.ப.16:00 வரை பெற்றுக்கொள்ள முடியும்.

05. விலைக்கேள்வி ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் அனைத்து விலைக்கேள்விகளும் விலை பாதுகாப்பு பிரகடனத்தை இணைத்தல் வேண்டும். விலை பாதுகாப்பு பிரகடனப் படிவம் இல்லாத எந்தவொரு விலைக்கேள்வியும் பதிலளிக்காதவையாக கவனத்தில் கொள்ளப்படும் மற்றும் எந்த வினவலும் இல்லாமல் நிராகரிக்கப்படும்.

06. தயாரிப்பு அங்கீகார கடிதத்தினை பரிந்துரைக்கப்பட்ட மாதிரிப்படிவத்தில் தயாரித்து விலைக்கேள்வியுடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும், அவ்வாறில்லையெனில் விலைக்கேள்வியானது பதிலளிக்காதவையாக கவனத்தில் கொள்ளப்பட்டு நிராகரிக்கப்படும்.

07. விலைக்கேள்வி ஆவணத்தின் அனைத்து பக்கங்களும் விலைக்கேள்வியாளரினால் கையொப்பமிடப்பட்டு அவரது முத்திரை பதிக்கப்படவேண்டும்.

08. பூர்த்திசெய்யப்பட்ட விலைக்கேள்விகளை கொழும்பு 01, செயலகம், நிதி அமைச்சு, கருத்திட்டம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம், 3ம் மாடி, அறை இலக்கம் 328 இல் இந் நோக்கத்திற்காக வைக்கப்பட்டிருக்கும் ஒப்பந்த பெட்டியில் வைப்பிடலாம் அல்லது தலைவர், திணைக்கள பெறுகைக்குழு மேற்கூறப்பட்டுள்ள முகவரிக்கு 31ம் திகதி மே மாதம் 2021 14:00 மணிக்கு (பி.ப.2.00) அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க முடியும். விலைக்கேள்வியானது 2021 மே மாதம் 31ம் திகதி 14:00 மணிக்கு (பி.ப. 2.00) விலைக்கேள்வியின் பெறுகைகள் மூடப்பட்டு விலைக்கேள்விகள் உடனடியாக திறக்கப்படும். தாமதமான விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். தயவுசெய்து விலைமனுக்கோரலுக்கான விபரங்கள் மற்றும் விலைக்கேள்வி இலக்கத்தினை (IFB No.) இனை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

09. விலைக்கேள்வியாளர்கள் அல்லது பங்குபற்ற விரும்பும் அவர்களது பிரிதிநிதிகளின் முன்னிலையில் விலைக்கேள்விகள் திறக்கப்படும். மேற்குறிப்பிடப்பட்ட கேள்வி முடிவுறுத்தப்படும் தினத்தில் அலுவலகத்தை மூடவேண்டியேற்பட்டதெனின் விலைக்கேள்விகள் மூடப்படும் தினமானது அடுத்து துவங்குகின்ற உடனடி வேலைநாளாகும், மேலும் விலைக்கேள்விகளானது அதே நேரம் மற்றும் அதே இடத்தில் வைத்துத் திறக்கப்படும்.

10. 2021ம் ஆண்டு மே மாதம் 17ம் திகதி (மு.ப. 11.00) 11:00 மணிக்கு விலைக்கேள்விக்கு முன்பதான கூட்டம் அறை இலக்கம் 328, 3ம் மாடி, செயலகம், நிதி அமைச்சு, கொழும்பு 01 இல் நடைபெறும்.

11. திணைக்கள பெறுகைக்குழுவின் தீர்மானமே இறுதி மற்றும் முடிவானதாகும். ஏதாவதொரு அல்லது அனைத்து விலைக்கேள்விகளையும் அதன் சொந்த தீர்மானத்தின் பேரில் நிராகரிக்கும் அதிகாரம் திணைக்கள பெறுகைக்குழுவிற்கே உள்ளது.

**தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு
கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்
(PMMD) அறை எண் 328,
மூன்றாம் மாடி நிதி அமைச்சு, செயலகம்,
கொழும்பு 01.
மே 09, 2021**

### தமிழ் இளைஞர்கள் சொந்த காலில் நிற்க உதவும்

# தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம்




**இதன் முக்கியத்துவத்தை மலையகம் சரிவர அறியாதுள்ளதே என ஆதங்கப்படுகிறார் ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் பயிற்சி மற்றும் வதிவிட முகாமையாளர் எஸ். விஜேசிங்**




தலவாக்கலை தமிழ் மகாவித்தியாலயம், ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் அதிபரும், கல்வித்துறையில் ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு மேலாக சேவையாற்றிய எஸ். விஜேசிங் தற்போது ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் பயிற்சி மற்றும் வதிவிட முகாமையாளராக கடமையாற்றுகிறார். தொழிற்பயிற்சி நிலையத்தின் தற்போதைய நிலை மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து வாரமஞ்சரிக்கு அவர் வழங்கிய நேர்காணல்.

நேர்கண்டவர்:
**தலவாக்கலை பி. கேதீஸ்...**





**கே: ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் பின்னணி பற்றி கூறுவீர்களா?**

சௌமியமூர்த்தி தொண்டமானின் முயற்சி காரணமாக 2001ஆம் ஆண்டு நோராட் நிறுவனத்தின் 132 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதியுதவியில் இத்தொழிற்பயிற்சி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது சௌமிய மூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் கீழ் இயங்கி வருகின்றது.

அமரர் ஆறுமுகன் தொண்டமானின் முயற்சியில் இந்நிறுவனத்துக்கு இந்தியாவிலிருந்து ஏழு போதானாசிரியர்கள் அமர்த்தப்பட்டனர். ஆரம்பத்தில் 15 தொழிற்பயிற்சிகள் இங்கு போதிக்கப்பட்டாலும் தற்போது 17 சான்றிதழ் பாடநெறிகள் இங்கு போதிக்கப்படுகின்றன. இத்தொழிற்பயிற்சி நிலையம் ஸ்தாபிக்கப்பட்டமை பெருந்தோட்டத்துறை இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சி வழங்கல் என்ற கனவினை நனவாக்கியுள்ளது. பெருந்தோட்டத்துறை சமூகத்திற்கான தொழிற்பயிற்சியை வழங்கும் உயரிய நிலையமாக இந்நிலையம் விளங்குகின்றது. கண்டி மற்றும் பதுளை இளைஞர் யுவதிகளை கருத்திற்கொண்டு குறித்த மாவட்டங்களிலும் இரண்டு தொழிற்பயிற்சி நிலையங்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேற்கொண்டுள்ளார்.

**கே: தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் செயற்பாடுகள் பற்றி பேசுவோமா?**

மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகாரம் பெற்ற சுமார் 250 தொழிற்பயிற்சி நிலையங்கள் இலங்கையெங்கும் காணப்படுகின்றன. இவற்றில் சுமார் 4549 பயிற்சி நிலையங்கள் தமிழர்கள் செறிவாக வாழ்ந்துவரும் வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ளன. அதேவேளை பெருந்தோட்ட மக்களின் பிள்ளைகளுக்காக மட்டுமே செயற்படக்கூடிய நிறுவனமாக இது விளங்குகிறது.

பெருந்தோட்டப் பகுதிகளைச் சேர்ந்த சாதாரண தரம், உயர்தரம் கற்று அடுத்த இலக்கை நோக்கி காத்திருப்பவர்களுக்கு இந்நிறுவனம் உயர் அங்கீகாரம் கொண்ட தேசிய தொழிற்தகைமை சான்றிதழ்களை (NVQ) வழங்குகின்றது. இலங்கையில் எல்லா தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மாணவர்கள் தங்கி கல்வி பயில விடுதிகள் காணப்படுகின்றன. ஆனால் இங்கு மட்டுமே 3 நேர உணவு இலவசமாக அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்றது. இங்கு பெருந்தோட்ட மக்களின் பிள்ளைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படுகின்றது. வழமையாக இங்கு 80 தொடக்கம் 90 வரையிலான மாணவர்களே பயிற்சி பெறுவார்கள். நான் முகாமையாளராக பதவியேற்ற பின்னர் அது மூன்று மடங்குகாக அதிகரித்துள்ளது.

இப்பயிற்சி நிலையத்தில் 6 மாதகால பயிற்சி நெறிகளும் ஒரு வருடகால பயிற்சி நெறிகளும் காணப்படுகின்றன. ஜனவரியில் ஆரம்பித்து ஜீன் மாதம் நிறைவடையும் பயிற்சி நெறிகளும் ஜனவரியில் ஆரம்பித்து டிசம்பர் மாதம் நிறைவடையும் பயிற்சிநெறிகளும் உள்ளன. 6 மாதம் காலம் கற்கை நெறி நிறைவடைந்த பின்னர் தொழிற் பயிற்சி நெறி 6 மாத காலம் பெறவேண்டும். அதன் பின்னர் வருட இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும்.

ஒருவர் கல்வி பொது சாதாரண தரத்தில் 6 பாடங்களில் முழுமையாக சித்தியடையாமல் குறிப்பாக கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் போன்ற பாடங்களில் சித்தியடையாமல் உயர் தரத்திற்கு தகுதி பெறாமல் இங்கு வந்து நிலை 3 சித்தியடைந்தால் கல்வி பொது சாதாரண தரத்திற்கு இணையாகும். அதேபோல நிலை 4 கல்வி பொது உயர்தரத்திற்கு இணையாகிவிடும். நிலை 5 டிப்ளோமாவிற்கு இணையாகும். நிலை 6 கல்வி இளங்கலை பட்டத்திற்கு இணையாகும். நிலை 7 முதுகலை பட்டத்திற்கு இணையாகும். தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தினுளடாக நிலை 3 மற்றும் நிலை 4 மாத்திரமே வழங்க முடியும்.

மலையகத்தில் மிகவிரைவில் நகர் பல்கலைக்கழகம் அமைக்கப்படவுள்ளது. அப்படி அமைக்கப்படுகின்ற பல்கலைக்கழகங்கள் மரபு ரீதியான பல்கலைக்கழகமாக அமைக்கப்பட வேண்டுமென மலையகத்தின் மூத்த கல்விமான்கள் கூறுகின்றார்கள். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, பேராதெனிய போன்ற இடங்களில் காணப்படும் பல்கலைக்கழங்களுக்கு செல்ல என்னகல்விதகுதி வேண்டுமோ அதுவே மலையகத்தில் அமைக்கப்படவுள்ள நகர் பல்கலைக்கழகத்திற்கும் வேண்டும் என்கின்றனர். நகர் பல்கலைக்கழகம் கொட்டகலையில் அமைக்கப்படவுள்ளது. இது தொடர்பாக திறன் அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகள் இங்கு வந்து உரையாடிவிட்டே சென்றனர். இதனூடாக நுவரெலியா மாவட்டத்திலுள்ளவர்கள் முழுமையான பலனை பெற வேண்டும். இங்குள்ளவர்களுக்கு கிடைக்கும் கல்வி வாய்ப்புக்கு அமைவாகவும், இச்சமூகத்தின் தொழில்சார் தேவை அடிப்படையிலும், விவசாயம், தகவல் தொழிநுட்பம், வர்த்தகம் போன்ற துறைகளுடன் வேறு துறைசார்ந்த கற்கை நெறிகளும் ஆரம்பிக்கப்படும் என்கின்றனர்.


உதாரணமாக, தேயிலை ஆராய்ச்சி நிலையம் தலவாக்கலை மண்ணிலே இருந்தாலும் அதனை நாம் தூர இருந்தே பார்க்கின்றோம். அதனுள்ளே சென்று இதுவரை பார்த்ததில்லை. அதேபோன்றே மலையகத்திற்கு வரப்போகும் நகர் பல்கலைக்கழகமும் மலையகத்தில் அமைந்தாலும் அதனை நாம் அனைவரும் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் அமைய வேண்டும். எமது தொழிற்பயிற்சி நிலையத்தில் தொழிற்தகமை சான்றிதழ்களை பெறுபவர்களுக்கு நேரடியாக நகர் பல்கலைக்கழக கற்கை நெறியில் இணையும் வாய்ப்பு மிக அதிகமாகவே உள்ளது.

இதனை இவர்கள் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதன் மூலம் பட்டப்படிப்பை தொடர்ந்து பட்டதாரியாக வெளியேறும் பட்சத்தில் அரசாங்க வேலை வாயப்புகளை பெறமுடியும். அத்துடன் நிலை 3, 4 இருந்தால் நகர் பல்கலைக்கழத்திற்குள் சென்று கல்வியைத் தொடர முடியும். யார் என்று பார்க்கும்போது கல்வி பொது சாதாரண தரத்தில் 3 பாடங்கள் சித்தியடைந்து 3 (S) பெற்றவர்களும் வேறு பல்கலைக்கழகத்திற்கு செல்லாமல் இருந்தவர்களும் இங்கு வந்து தொழிற்பயிற்சி நிலையங்களில் நிலை 3, 4 சித்தி பெற்று நகர் பல்கலைக்கழத்தில் நுழைந்து நிலை 5, 6 முடித்து பட்டதாரிகளாக வெளியே வரலாம். சுயதொழில் முயற்சியாளர்களாக உருவாக முடியும். இங்கு பயிற்சிநெறி, தொழில் பயிற்சி, வங்கி கடன், உபகரணங்கள் போன்றன கிடைக்கும்.

**கே: தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் கற்கை நெறியை மேற்கொள்ள ஒரு மாணவனிடம் இருக்க வேண்டிய அடிப்படை கல்வி தகுதி என்ன?**

பாடசாலைகளில் க.பொ.த.சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சை எழுதியவர்கள் இங்கு பயிலுனர்களாக இணையலாம். 16 தொடக்கம் 26 வயதுக்குட்பட்டவர்களாகவும் திருமணம் முடிக்காதவர்களாகவும் இருத்தல் வேண்டும். இவர்களுக்கு திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை பயிற்சி நெறிகள் கற்பிக்கப்படும். பயிலுனர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்கள் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவின் தர நிரணய அங்கீகாரத்துக்கு உட்பட்டவையாக இருக்கும்.

(21ஆம் பக்கம் பார்க்க)





# Facebook இல் தவறான தகவல்களை எதிர்ப்பது எப்படி?

சமூக அக்கறையை தவறான தகவலுடன் பகிர்ந்து கொள்கிறோம், அதனால்தான் அதை சீர்திருத்துவதற்கான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளோம் Fact Sheet ஐ செய்வதற்கு பிரதிநிதிகளின் உலகளாவிய வலையமைப்பை உருவாக்குவது, எங்கள் விதிகளை மீறும் போது தகவல்களை அகற்றுவதற்கான துல்லியமான தகவல்களை ஊக்குவிப்பது போன்ற நடவடிக்கைகள் செயற்பாட்டில் உள்ளது. தவறான தகவல்கள் சிக்கலானது மற்றும் தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்கும் அதனால்தான் Fact Sheet ஐ மேம்படுத்துவதுடன் உள்ளகத் தொழில்நுட்பமும் மேம்படுத்தப்படுகின்றது.

**தவறான தகவல்களை வரையறுத்தல்**

தவறான தகவல் என்பது பிழையான தகவல், இது பொரும்பாலான நேரத்தில் தற்செயலாகவே பகிரப்படுகின்றது. உள்ளடக்கம் தனிப்பட்ட அடிப்படையில் பகிரப்படுகின்றது. மற்றும் மக்களை தவறாக வழிநடத்த அல்லது ஏமாற்றுவதற்கான எந்தவொரு ஒருங்கிணைந்த முயற்சியும் அல்ல. தவறான தகவல் மக்களின் மனதை மாற்றும் நோக்கத்துடன் செய்யப்படும் பிரச்சாரம் அல்லது தகவல்கள் மக்களைத் தவறான பாதையில் வழிநடத்தும் நோக்கத்துடன் பகிரப்படும் தகவல்களைக் குறிக்கும். இச் செயல்பாடு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது மற்றும் போலி கணக்குகளின் பயன்பாட்டை உள்ளடக்கியது. இச் செயல்பாட்டை face Book பொறுத்துக்கொள்ள மாட்டாது, இந்த போலிகளையும் அவர்களின் தகவல்களையும் அறிந்தவுடன் அவற்றை face Book அகற்றிவிடும்.

**தவறான தகவல் தொடர்பான அணுகுமுறை**

Facebook இல் தவறான தகவல்களைத் தடுப்பதற்கு மூன்று வழிமுறைகள் கையாளப்படுகின்றன. அவை அகற்றல், குறைத்தல் மற்றும் அறிவித்தல் போன்ற உபாயங்களாகும். இவ் உபாயத்தின் ஒரு பகுதி உண்மையை அறிந்து கொள்ளும் திட்டமும் ஆகும்.

**மூன்றாம் தரப்பு மெய் உறுதிப்பாட்டு சோதனை**

எது உண்மை எது பொய் என்பதை தீர்மானிக்கும் உரிமை எந்த ஒரு நிறுவனத்திற்கோ தனியார் நிறுவனத்திற்கோ அரசாங்கத்திற்கோ இருக்ககூடாது. ஒரு போலியான ஒரு வர் உண்மையின் நடுவராக இருக்கும் போது, அதிகார ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட அதிகப்படியான சாத்தியக்கூறுகள் உள்ளன. இதைக் கருத்திற் கொண்டு தவறாக இருக்கக்கூடிய தகவல்களைக் கண்டறிந்து மதிப்பாய்வு செய்ய சுயாதீனமாக தகவல்களை சரிபார்ப்பவர்களை நாம் நம்புவது எமக்கு இவ் நடவடிக்கைகளை எடுக்க உதவுகின்றது.

சர்வதேச ரீதியாக face Book 80க்கும் மேற்பட்ட சுயாதீனமான மூன்றாம் தரப்பு உண்மைச் சரிபார்ப்பாளர்களுடன் இணைந்து 60க்கும் மேலதிகமான மொழிகளில் இந் நடவடிக்கைகளை செய்கின்றது. அதன் இணைப்பாளர்களுக்கு சுயாதீனமான பாகுபாடற்ற சர்வதேச உண்மை சரிபார்ப்பு வலையமைப்பு மூலம் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் மூன்றாம் தரப்பு உண்மை சரிபார்ப்போர் AFP மற்றும் Fact Crescendo ஆகியோர் ஆகும்.

**அகற்றல்**

மிகவும் தீங்கு விளைவிக்கும் சில தவறான தகவல்களை நிவர்த்தி செய்வதற்கான கொள்கைகள் face Book இடம் உள்ளன, இந்த தகவல்களை அறிந்தவுடன் அது அகற்றப்படும்

உலகில் உண்மையான வன்முறையை அல்லது தீங்கை விளைவிக்கும் தகவல்கள் உடனடியாக அகற்றப்படுகின்றது

போலியான மற்றும் பொய்யாக சித்தரிக்கப்பட்ட தகவல்களை உடனடியாக அகற்ற face Book விதிமுறைகளை கொண்டுள்ளது

கடந்த ஆண்டின் பிற்பகுதியில் அமெரிக்காவில் இராணுவமயமாக்கப்பட்ட Kenosha Guard மற்றும் QAnon போன்ற சதிகாரக் குழுக்களை தடுத்தது.. வாக்காளர்களை அடக்கும் வகையிலான தகவல்களையும் தவிர்த்தது

COVID – 19 பற்றிய தவறான சிகிச்சை வழிமுறைகள், நிவாரணங்கள், அத்தியாவசிய தேவைகள் பற்றிய மற்றும் தொற்று அதிகமாகப் பரவியுள்ள இடங்கள் பற்றிய பிழையான தகவல்களை உடனடியாக அகற்றுகிறது. தடுப்பூசி தொடர்பான தவறான கூற்றுக்களை அகற்றுகின்றது. அல்லது தடுப்பூசியின் செயல்திறன், பாதுகாப்பு அல்லது பக்க விளைவுகள் பற்றிய தவறான கூற்றுகள் போன்றன உடனடியாக அகற்றப்படும். கடந்த ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து இன்று வரை COVID – 19 பற்றிய 16 மில்லியன் தவறான தகவல்களை face Book அகற்றியிள்ளது.



றொட்டரி மாவட்டம் 3220 இலங்கை மற்றும் மாலதீவுக்கான மாவட்ட இன்டரெக்ட் பிரதிநிதியாக முர்தாஸ் பாரி பாணந்துறை பர்ன்ஹவுஸ் ஸ்டுடியோவில் நடைபெற்ற 30 வது இன்டரெக்ட் மாவட்ட மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் இலங்கை மற்றும் மாலைதீவு இன்டரெக்ட் இயக்கத்திற்கு பொறுப்பாக இருப்பார். (படம் : ரூசெயிக் பாரூக்)

கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவை இலங்கைச் சட்டக் கல்லூரி

## விசேட அறிவித்தல்

## கற்கைநெறியினை நிறைவு செய்வதற்கான கால எல்லை

கற்கைநெறியினை நிறைவுசெய்வதற்காக கீழ் குறிப்பிட்டவாறு கால எல்லையினை நிர்ணயிப்பதற்கு கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையானது தீர்மானித்துள்ளது:

- 2021 ஆம் ஆண்டு முதல் இலங்கைச் சட்டக் கல்லூரிக்கு அனுமதி பெறுகின்ற ஏதேனும் மாணவரொருவர் அனுமதி பெற்ற திகதியிலிருந்து அடுத்து வருகின்ற பத்து (10) வருடங்களுக்குள் கற்கை நெறியை பூர்த்தி செய்தல் வேண்டும்.
- 2021 ஆம் ஆண்டிற்கு முன்பதாக இலங்கை சட்டக் கல்லூரியில் பதிவு செய்துள்ள ஏதேனும் மாணவரொருவர் தமது கற்கை நெறியினை குறிப்பிட்ட திகதியிலிருந்து கட்டாயமாக அடுத்து வருகின்ற (10) பத்து வருடங்களுக்குள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

**பதிவாளர்**
**கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவை,**
**இலங்கைச் சட்டக் கல்லூரி,**
**இல. 244, புதுக்கடை வீதி,**
**கொழும்பு 12.**

09-05-2021

## மருத்துவராவதற்கு புலமைப்பரிசிலுடன் மருத்துவரான பின் செலுத்துவதற்கு கடன் வசதி



**MBBS/MD Become a DOCTOR**

இலங்கை மருத்துவர் சங்கம் (SLMC) மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) அங்கீகாரம் பெற்ற கிழக்கு ஐரோப்பாவில் Yerevan State Medical University அரச பல்கலைக்கழகத்திற்காக புலமைப்பரிசில் மற்றும் 12 ஆண்டுகளில் செலுத்துவதற்கு கடன் வசதியும் வழங்கப்பட்டிருப்பதோடு அதற்கு 2021 மே மாதம் 17ஆம் திகதிக்கு முன்னர் **www.qib.queensia.com** என்ற இணையதளத்தின் மூலம் உங்களது பதிவினை உறுதி செய்யுங்கள்.

**0787855855 அல்லது 0763468568 என்ற தொலைபேசி இலக்கங்கள் மூலம் விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.**

உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் உயர் தரத்தில் தோற்றிய மாணவர்களின் மருத்துவராகும் கனவை உண்மையாக்குவதற்கு கிடைத்துள்ள இறுதி சந்தர்ப்பம் இதுவென்பதோடு இதில் உலக சுகாதார அமைப்பு (WHO), ஐரோப்பிய ஒன்றியம் (EU), அவுஸ்திரேலிய மருத்துவர் சங்கம் (AMC), பிரித்தானிய மருத்துவர் சங்கம் (GMC), அமெரிக்க மருத்துவர் சங்கம் (USMC) மற்றும் கனேடிய மருத்துவர் சங்கம் (CAMC) மூலம் அங்கீகரிக்கப்பட்ட Yerevan State Medical University முழுமையாக ஆங்கில மொழியில் கல்வியை தொடர்வதற்கு தகுதி பெற்ற பல்கலைக்கழகம் ஒன்றாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

அங்கு காலை உணவு மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுவதோடு, முதல் ஆண்டு தொடக்கம் இறுதி ஆண்டு வரை பிரெஞ்ச் மொழியும், மூன்றாவது ஆண்டு தொடக்கம் ERPM, AMC மற்றும் PLAB ஆகிய பரீட்சைகளுக்காக இலவசமாக மாணவர்கள் தயார்படுத்தப்படும்.

கடந்த காலத்தில் புலமைப்பரிசில் பெற்றவர்களின் விபரத்தை **www.youtube.com/qibcampus** என்ற முகவரிக்கு பிரவேசித்து பெற்றுக்கொள்ள முடியும்.

இம்முறை 2021/ 2022 கல்வி ஆண்டுக்காக மிகவும் மட்டுப்படுத்தப்பட்டவர்களுக்கு புலமைப்பரிசில் கிடைப்பதோடு, 2021 மே 17 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்வதன்மூலம் உங்களது இடத்தை ஒதுக்கிக்கொள்ளுங்கள்.

இதன்போது **www.qib.queensia.com** என்ற இணையத்தள முகவரியில் பதிவு செய்துகொள்ள முடியும் என்பதோடு டொக்டர் சின்தக்க குணசேகர அவர்களிடம் இருந்து விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும். (0778638118) மேலும் 0787855855, 0763468568 அல்லது **(தமிழ் மொழியில்) 0718468568** என்ற தொலைபேசி இலக்கங்கள் மூலம் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

17 வருடங்கள் அனுபவம் பெற்ற எமது நிறுவனம் மூலம் வேறு 100 பட்டப்படிப்பு கற்கைகளுக்காகவும் புலமைப்பரிசில்கள் வழங்குவதற்கு ஏற்பாடு எடுக்கப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு **www.qib.queensia.com** அல்லது **www.qibcampus.com** என்ற இணையத்தள முகவரிகளுக்கு பிரவேசிக்கவும். மேலதிக விபரங்களுக்கு www.qib.queensia.com அல்லது **www.qibcampus.com** என்ற இணையத்தள முகவரிகளுக்கு பிரவேசிக்கவும். 2021 மே 17 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்தல் வேண்டும் என்பதோடு 2021 ஜூன் 22 ஆம் திகதி முதல் மருத்துவ பட்டப்படிப்பு கற்கை Online ஊடாக YSMU மூலம் நடத்தப்படும்.

## ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்



### அங்கீகரிக்கப்பட்ட பதவியின் பெருமையை அனுபவிக்கவும்

மாணவர் பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்களை அனுமதித்தல் (2021/2022)



பட்டப் படிப்பு பயிலிளவல்களை ஆட்சேர்ப்பதற்காக தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பட்டப் பாடநெறிகள் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் - இரத்மலானை

| பட்டப் பாடநெறி | காலம் | ஆண்/பெண் |
|---|---|---|
| **பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய கற்கைகள் பீடம்** | | |
| தந்திரோபாய கற்கைகள் மற்றும் சர்வதேச உறவுகள் விஞ்ஞானமாணி பட்டம் | 03 ஆண்டுகள் | ஆண் பெண் பயிலிளவல் |
| **மருத்துவ பீடம்** | | |
| மருத்துவ மற்றும் சத்திர சிகிச்சையியல் மாணி பட்டம் (MBBS) [illegible] | 5 ஆண்டுகள் | ஆண் / பெண் பயிலிளவல் |
| **பொறியியல் பீடம்** | | |
| பொறியியல் விஞ்ஞான மாணி பட்டம் (விசேடம்) | 04 ஆண்டுகள் | ஆண் / பெண் பயிலிளவல் |
| **சட்ட பீடம்** | | |
| சட்டமாணிப் பட்டம் (LLB) | 04 ஆண்டுகள் | ஆண் பயிலிளவல் |
| **முகாமைத்துவ சமூக விஞ்ஞான மற்றும் மனிதவியல் பீடம்** | | |
| முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்பவியல் விஞ்ஞானமாணி | 03 ஆண்டுகள் | ஆண் பயிலிளவல் |
| விநியோகங்கள் முகாமைத்துவ விஞ்ஞானமாணி பட்டம் | 03 ஆண்டுகள் | ஆண் / பெண் பயிலிளவல் |
| சமூக விஞ்ஞானங்களில் விஞ்ஞானமாணி பட்டம் | 03 ஆண்டுகள் | ஆண் / பெண் பயிலிளவல் |
| **கணனி பீடம்** | | |
| கணனியியல் விஞ்ஞானமாணி பட்டம் (விசேடம்) | 04 ஆண்டுகள் | ஆண் பயிலிளவல் |
| மென்பொருள் பொறியியல்மாணி பட்டம் (விசேடம்) | 04 ஆண்டுகள் | ஆண் பயிலிளவல் |
| கணனி பொறியியல் விஞ்ஞானமாணி பட்டம் (விசேடம்) | 04 ஆண்டுகள் | ஆண் பயிலிளவல் |

பட்டப் பாடநெறிகள் தெற்கு வளாகம் - சூரியவெவ

| பட்டப் பாடநெறி | காலம் | ஆண்/பெண் |
|---|---|---|
| **நிர்மாண சூழல் மற்றும் வெளி விஞ்ஞான பீடம்** | | |
| கட்டடக்கலையியல் மாணி பட்டம் | 05 ஆண்டுகள் | ஆண் / பெண் பயிலிளவல் |
| அளவையியல் விஞ்ஞானமாணி பட்டம் (விசேடம்) | 04 ஆண்டுகள் | ஆண் பயிலிளவல் |
| கணிய அளவையியல் விஞ்ஞானமாணி பட்டம் (விசேடம்) | 04 ஆண்டுகள் | ஆண் / பெண் பயிலிளவல் |
| **கணனி பீடம்** | | |
| தகவல் முறையியல் விஞ்ஞானமாணி பட்டம் (விசேடம்) | 04 ஆண்டுகள் | ஆண் பயிலிளவல் |

### ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள்

பட்டப் படிப்பு மாணவர் பயிலிளவல் உத்தியோகத்தர்களுக்கு ஏறத்தாழ 40,000/- ரூபாய் மாதாந்த சம்பளம் மற்றும் படிகள் வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக பின்வரும் வசதிகளும் இலவசமாக வழங்கப்படும்.

(அ.) உணவும் தங்குமிட வசதியும்
(ஆ.) சீருடை
(இ.) இணை சேவைகள்
(ஈ.) விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள்
(உ.) மருத்துவ வசதிகள்

### தேவையான தகைமைகள்

**Cambridge / Pearson Edexel மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்**

- **விண்ணப்பதாரர்**
  (அ) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
  (ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 22 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
  (இ) பொதுச் சாதாரண பரீட்சையில் சித்தியெற்றிருத்தல் வேண்டும். (குறைந்தது 30 புள்ளிகள்)
  (ஈ) பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமை பெற்றிருத்தல் வேண்டும்.
  (உ) மணமாகாதவராக இருத்தல் வேண்டும்.
  (ஊ) அனைத்து பட்டப்படிப்புகளுக்கும் குறைந்தபட்சம் க.பொ.த (சாதாரண தர) தேர்வில் அல்லது கேம்பிரிட்ஜ் / பியர்சன் எடெக்ஸெல் சாதாரண தர தேர்வில் ஆங்கில பாடத்தில் திறமைச்சித்தி (C) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஆகக் குறைந்த பட்டப்பாடநெறிக்கான தகைமைகள் மற்றும் உடல்கட்டமைப்பு அளவுகோல்களை அறிந்து கொள்வதற்கு இணையத்தளத்திற்கு www.kdu.ac.lk பிரவேசிக்கவும்.

### விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முறை

**Online விண்ணப்பம்**

- www.kdu.ac.lk எனும் இணையத்தளத்திற்குள் சென்று நிகழ்நிலையில் (Online) மூலம் மாத்திரமே விண்ணப்பிக்கலாம். தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- விண்ணப்பதாரிகள் தாம் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பட்டப்பாடநெறிக்கும் தலா ரூ.1500 ஐ மீளச்செலுத்தப்படாத கட்டணமாக Online மூலம் செலுத்த வேண்டும்.

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2021 மே 28**

### முக்கியமானவை

- நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட வேண்டிய விண்ணப்பதாரர்கள் பற்றிய தீர்மானம் முற்றுமுழுதாக பல்கலைக்கழகத்திற்கு உரியது ஆகும்.
- கொத்தலாவல பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படும் முன்னர் இலங்கை குடியரசுடன் ஒப்பந்தம் ஒன்றிலும் பிணை ஒன்றிலும் ஒப்பமிடல் வேண்டும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் பட்டப்படிப்பு பாடங்களை முடிப்பதற்கு முன்னும் பின்னும் அந்தந்த இராணுவ / பொலிஸ் கல்விக் கூடங்களில் இராணுவ / பொலிஸ் பயிற்சியை பூர்த்தி செய்ய வேண்டும்.
- வெற்றிகரமாக பட்டப் பாடநெறியைப் பூர்த்தி செய்யும் பட்டதாரி கெடட் உத்தியோகத்தர்கள் தரை / கடல் / வான் படையின் நிரந்தர படையணியின் / பொலிஸ் சேவையின் உத்தியோகத்தர் ஒருவராக கட்டாய சேவைக்காலம் ஒன்றைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

**அங்கீகாரம்**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) - இலங்கை
**உறுப்புரிமை**
பொதுநலவாய நாடுகளின் பல்கலைக்கழக சங்கம் - ஐக்கிய இராச்சியம்
சர்வதேச பல்கலைக்கழக சங்கம்
World Directory of Medical Schools இன் கீழ் பட்டியல் படுத்தப்பட்டுள்ளது


மேலதிக விபரங்களுக்கு எமது இணையத்தளத்திற்குப் பிரவேசிக்கவும்.
**www.kdu.ac.lk**

தொலைபேசி : +94 112635039 +94 112632028 Ext. 459, 460,
மின்னஞ்சல் : arenlist@kdu.ac.lk

பதிவாளர்
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
இரத்மலானை, 10390, இலங்கை

பொருளாதார அரசியல்

# சீன பொருளாதார வளர்ச்சிக்கு உதவிய உலகளாவிய பெருந்தொற்று



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

**2019** ஆம் ஆண்டின் இறுதியில் சீனாவின் வுஹான் மாகாணத்தில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் தொற்று இன்று உலகின் 220 நாடுகளையும் பாதிப்புக்கு உள்ளாக்கி ஒரு சுகாதாரப் பிரச்சினையாக மட்டுமன்றி சமூக பொருளாதார சமூக பண்பாட்டுப் பிரச்சினையாகவும் உருவெடுத்து கோடிக்கணக்கான மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது.

ஆரம்பத்தில் இந்நோயினால் மிக மோசமான பாதிப்புகளைச் சந்தித்த நாடுகள் பல அவற்றிலிருந்து ஓரளவு மீண்டுள்ளதாகத் தெரிகிறது. குறிப்பாக இந்நோயின் தோற்றுவாயாக விளங்கிய சீனாவில் இப்போது இந்நோய் பெருமளவு கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளது. ஆனால் நோய் தோன்றிய ஆரம்ப காலகட்டத்தில் வெற்றிகரமாக நோயைக் கட்டுப்படுத்திய நாடுகள் பின்னர் மோசமான பாதிப்புக்களைச் சந்தித்து வருகின்றன.

இதில் முக்கியமாகக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய விடயம் என்னவெனில் கிடைக்கப்பெறும் தரவுகளின்படி நோயின் மூலாதாரமாக விளங்கிய சீனாவில் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையும் இறந்தவர்களின் எண்ணிக்கையும் மிகக்குறைந்த எண்ணிக்கையிலேயே உள்ளமையாகும்.

கொவிட் 19 இனால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட முதல் பத்து நாடுகளின் பட்டியலில் சீனா இல்லவே இல்லை 08.05.2021 இற்றைப்படுத்தப்பட்ட தரவுகளின்படி இப்பட்டியலில் சீனா 96 ஆவது இடத்திலேயே உள்ளது. 90739 பேர் பாதிக்கப்பட்டதாகவும் அதில் 4636 பேர் மட்டுமே இறந்து போனதாகவும் கிடைக்கத்தக்கதாக உள்ள புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. ஆனால் தகவல் பரிமாற்றத்தில் கடுமையாக கட்டுப்பாடுகள் உள்ள சீனாவின் தரவுகள் எந்தளவுக்கு நம்பகத் தன்மை வாய்ந்ததாக இருக்குமெனத் தெரியவில்லை.

| | நாடு | தொற்றாளர்கள் | இறப்புகள் |
|---|---|---|---|
| 1 | அமெரிக்கா | 33 414 937 | 594 884 |
| 2 | இந்தியா | 21 886 556 | 238 265 |
| 3 | பிரேசில் | 15 087 360 | 419 393 |
| 4 | பிரான்ஸ் | 5 747 214 | 106 101 |
| 5 | துருக்கி | 4 998 089 | 042 465 |
| 6 | ரஸ்யா | 4 863 514 | 112 622 |
| 7 | இங்கிலாந்து | 4 431 043 | 127 598 |
| 8 | இத்தாலி | 4 092 747 | 122 470 |
| 9 | ஸ்பெயின் | 3 567 404 | 078 792 |
| 10 | ஜேர்மனி | 3 504 012 | 085 056 |

அட்டவணையில் உள்ள தரவுகளின் படி கொவிட் 19 வைரசினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட மூன்று நாடுகளாக அமெரிக்காவும் இந்தியாவும் பிறேசிலும் இடம்பிடிக்கின்றன. அமெரிக்காவில் மூன்று கோடி முப்பத்து நான்கு இலட்சத்திற்கு மேற்பட்டோர் நோய்த்தொற்றுக்கு உள்ளாகி அதில் கிட்டத்தட்ட

**'உலகம் பூராகவும் தடுப்பூசிகளை விரைவாக ஏற்றுவதே சாத்தியமான தெரிவாக இருக்க முடியும். சில நாடுகளில் மக்களின் நடவடிக்கைகளே தொற்று தீவிரமடைந்து செல்வதற்கான காரணங்களாகும். உதாரணமாக அமெரிக்காவில் அந்நோய் தீவிரமாகப்பரவ அந்நாட்டு முன்னாள் அதிபரின் செயற்பாடுகளே காரணமாக அமைந்ததாக குற்றம் சாட்டப்பட்டது'**

ஆறு இலட்சம் பேர் இறந்துள்ளனர். இந்தியாவில் இரண்டு கோடி பத்தொன்பது இலட்சம் பேர் தொற்றுக்குள்ளாகி அதில் சுமார் இரண்டு இலட்சத்து முப்பத்தெட்டாயிரம் பேர் இறந்துள்ளனர். அமெரிக்காவுடன் (1.7) ஒப்பிடுகையில் இந்தியாவில் நோய்த்தொற்றுக்கு உள்ளானவர்களில் இறப்புகளின் சதவீதம் (1.0) குறைவாகவே உள்ளது.

ஆனால் பிறேசிலில் இறப்புகளின் சதவீதம் உயர்வாக (2.7) உள்ளது. கோவிட் 19 வைரஸ் போலவே முன்னரும் தொற்று நோய்கள் உலகைத் தாக்கியுள்ளன. அந்நோய்த்தாக்கம் காரணமாக ஏற்பட்ட இறப்புகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் கோவிட் 19 நோய் காரணமாக ஏற்படும் இறப்புகளின் சதவீதம் சார்பளவில் குறைவாகவே உள்ளதாக புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

உதாரணமாக சார்ஸ் (SARS) எனப்படும் நோய்த்தொற்றின் காரணமாக ஏற்பட்ட இறப்புகளின் எண்ணிக்கை 9.6 சதவீதமாகும் அதேபோல மேர்ஸ் எனப்படும் நோய்த்தொற்றின் காரணமாக ஏற்பட்ட இறப்புகளின் 34 சதவீதமாகும். அதேவேளை உலகளாவிய கணிப்பீட்டின்படி கோவிட் 19 நோய்த்தொற்றின் காரணமாக ஏற்பட்டுள்ள மரணங்களின் சதவீதம் 2.0 சதவீதம் மாத்திரமே என கணிப்பிடப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் கடுமையாக பாதிக்கப்பட்ட இத்தாலி, ஸ்பெயின் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் நோய்த்தொற்று குறைந்து வரும் அதேவேளை இங்கிலாந்திலும் இந்தியாவிலும் அண்மையில் நோய்த்தொற்று தீவிரமடைந்து செல்வது அவதானிக்கப்பட்டுள்ளது. நோய் தடுப்பூசிகள் பெருமளவில் ஏற்றப்படுவதும் இயற்கையாகவே நோய்க்கு எதிரான சக்தி தூண்டப்பட்டுள்ளமையும் தொற்று பலநாடுகளில் குறைவடைந்து செல்வதற்கான காரணங்களாகும்.

ஆனால் தற்போதுள்ள சூழ்நிலையில் இவ்வைரஸ் புதிது புதிதாக தன்னை வடிமைத்துக்கொண்டு தாக்குவதாகக் கூறப்படுகிறது. இதனால் ஒரு வைரசுக்கு எதிராக நோயெதிர்ப்பு சக்தி ஏற்பட்டிருந்தாலும் அதன் மற்றொரு வடிவத்திற்கு தாக்குப்பிடிக்க முடியாத நிலை ஏற்படலாம். இந்நிலையில் குழுநோயெதிர்ப்புச் சக்தி (herd immunity) எனப்படும் விடயம் தொழிற்பட முடியாது போகும். இந்நிலையில் புதிதாக தொற்றுக்குள்ளாமல் தவிர்த்துக்கொள்வதே புத்திசாலித்தனமாகும்.

உலகம் பூராகவும் தடுப்பூசிகளை விரைவாக ஏற்றுவதே சாத்தியமான தெரிவாக இருக்க முடியும். சில நாடுகளில் மக்களின் நடவடிக்கைகளே தொற்று தீவிரமடைந்து செல்வதற்கான காரணங்களாகும். உதாரணமாக அமெரிக்காவில் அந்நோய் தீவிரமாகப்பரவ அந்நாட்டு முன்னாள் அதிபரின் செயற்பாடுகளே காரணமாக அமைந்ததாக குற்றம் சாட்டப்பட்டது.

இப்போது இந்தியாவில் ஏற்பட்டுள்ள நோய்வெடிப்பு நிலைமைக்கு இந்திய அதிபரை நோக்கி விரல்கள் நீளுகின்றன. சீனாவில் நோய் நிலைமை குறுகிய காலத்திற்குள்

**'உலகின் ஏனைய நாடுகள் யாவும் எதிர்க்கணிய பொருளாதார வளர்ச்சியை எதிர்கொண்ட வேளை சீனப் பொருளாதாரம் நேர்க்கணிய பொருளாதார வளர்ச்சியை எதிர்கொண்டது. நோய்த்தொற்றை ஏற்படுத்திய நாடு குறுகிய காலத்திற்குள் அதிலிருந்து மீள, தவிர்க்க முடியாதவாறு அதில் சிக்குப்பட்ட நாடுகள் இதுவரை அதிலிருந்து மீள முடியாமல் உழன்று கொண்டிருக்கின்றன'**

கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட கடுமையான கட்டுப்பாடுகளும் சட்ட திட்டங்களும் விதிக்கப்பட்டமையே காரணமெனக் கூறப்படுகிறது. உலகின் ஏனைய நாடுகள் யாவும் எதிர்க்கணிய பொருளாதார வளர்ச்சியை எதிர்கொண்ட வேளை சீனப் பொருளாதாரம் நேர்க்கணிய பொருளாதார வளர்ச்சியை எதிர்கொண்டது. நோய்த்தொற்றை ஏற்படுத்திய நாடு குறுகிய காலத்திற்குள் அதிலிருந்து மீள, தவிர்க்க முடியாதவாறு அதில் சிக்குப்பட்ட நாடுகள் இதுவரை அதிலிருந்து மீள முடியாமல் உழன்று கொண்டிருக்கின்றன.

உலகின் முன்னணிப் பொருளாதாரமாகிய அமெரிக்கா இச்சூழலில் இருந்து மீள முடியாமல் தவிக்கிறது. பிரிக்ஸ் நாடுகளில் பிறேசிலும் ரஷ்யாவும் இந்தியாவும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட முதல் பத்து நாடுகளின் பட்டியலில் உள்ளடங்குகின்றன. எனவே சீனாவுக்கு சவாலாக அமையக்கூடிய நாடுகள் (ரஷ்யா தவிர) எல்லாமே பாதிக்கப்பட்ட நாடுகள் பட்டியலில் முன்னிலையில் உள்ளன. எனவே தான் சீனாவின் பொருளாதார விரிவாக்கத்திற்கு கோவிட் 19 நோய்த் தொற்று சாதகமாக அமைவதாகத் தெரிகிறது.

இந்நோய் காரணமாக நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பின்னடைவு, தொழில்வாய்ப்பு இழப்புகள், வர்த்தகச் சுருக்கம், மக்களின் வாழ்வியலில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் உளவியல் தாக்கங்கள் எனபவற்றிலிருந்து மீண்டுவர நீண்டகாலம் எடுக்கலாம். பொருளாதார ரீதியில் வலுவான நாடுகள் ஊக்குவிப்புப் பொதிகளை நாட்டு மக்களுக்கும் உற்பத்தித் துறையினருக்கும் வழங்குவதன் மூலம் பொருளாதாரத்தை உதைத்து இயங்கச் செய்ய முயற்சிக்கலாம்.

ஆனால் பொருளாதார ரீதியில் வலுவிழந்து கடன்சுமையில் சிக்கித்தவிக்கும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அதனைச் செய்வது சாத்தியமில்லை.

ஒருபுறம் புதிதாக நோய்த்தொற்று ஏற்படாமல் தடுப்பதற்கான யதார்த்த பூர்வமான எத்தனங்களை எடுக்கும் வேளை மறுபுறம் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார நடைமுறைகளை பின்பற்றி இந்நோய்த்தாக்கத்தை எதிர்கொள்ள முயற்சிப்பதே புத்திசாலித்தனம்.

---

பொருளாதார ரீதியாக சீனாவுக்கு எதிராக

# வியூகம் அமைக்கும் G7 லண்டன் செயலாளர் மாநாடு



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

உலகளாவிய ரீதியில் அரசியல், பொருளாதார, ஜீ7 நாடுகள் முக்கியமான பங்கினை வகித்து வருகின்றன. எதிர்வரும் ஜீன் 11 தொடக்கம் 13 வரை இங்கிலாந்தின் தலைநகரிலுள்ள ஊயசடிளை டீயல எனுமிடத்தில் உச்சிமாநாடு நடைபெறவுள்ளது. இதே சமயம் இந் நாடுகளின் வெளியுறவு செயலாளர்கள் சந்திப்பொன்று கடந்த வாரத்தில் (03.05.2021) நடைபெற்றது. ஜீ7 நாடுகளின் செயலாளர்கள் உரையாடிய விடயங்களில் கொவிட் தொற்றை முதன்மைப்படுத்தியுள்ளனர். குறிப்பாக, கொவிட் தொற்றுக்கு எதிரான நடவடிக்கைகளை வலுப்படுத்துவதோடு உலகளாவிய ரீதியில் அத்தகைய வைரஸில் இருந்து மீட்சி பெறுவதற்கான நகர்வுகளை மேற்கொள்வது எனவும், சுதந்திரமானதும், நியாயமானதுமான வர்த்தகத்தை வென்றெடுப்பதன் மூலம் எதிர்கால பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துவது எனவும், காலநிலை மாற்றங்களை எதிர்க்கொள்வதற்கான உத்திகளை வகுத்தல் என்றும் அம் மாநாட்டில் விவாதிக்கப்பட்டுள்ளன. சீனா தொடர்பாக ஜீ7 நாடுகளின் செயலாளர்கள் முன்வைத்த விடயங்கள் ஊடகப் பரப்பில் அதிகம் பேசப்பட்டுள்ளது.

முதலாவது, ஜீ7 நாடுகளின் சீனா தொடர்பான எச்சரிக்கைக்கு முன்னதாகவே அமெரிக்காவின் சீ.ஐ.ஏ, சீனாவின் போக்கு தொடர்பான தகவலை வெளிப்படுத்தியுள்ளது. அதன் வெளிப்பாடு முழுவதும் அமெரிக்காவிற்கு எதிராக சீனாவின் நகர்வினை அடையாளப்படுத்தியுள்ளது. அமெரிக்காவிற்கும் மேற்குக்கும் அதிக சவால் விடும் நாடாக சீனா மாறியுள்ளதாக அமெரிக்க காங்கரஸிற்கு சீ.ஐ.ஏ சமர்ப்பித்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே கொவிட் 19க்கு பின்னர் சீனப் பொருளாதாரம், இராணுவ தொழிநுட்ப ஆயுத தளபாட வளர்ச்சி, அரசியல் ரீதியான ஆதிக்கம், புதிய பட்டுப் பாதை விரிவாக்கம் என அனைத்துமே சீனாவை 2049ம் ஆண்டில் முதன்நிலை வல்லரசுக்கான சாத்தியப்பாட்டை உறுதிப்படுத்தும் என்ற தகவலை வெளிப்படுத்துகின்றது. இதனை அடிப்படையாக கொண்டே ஜீ7 நாடுகளின் செயலாளர்கள் சீனாவிற்கெதிரான அதீதமான நகர்வுகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளனர். அதில் சீனாவிற்கு எதிராக உரையாடப்பட்ட விடயங்கள் அதீதமான அரசியல் முக்கியத்துவம் பெற்ற விடயமாக இருப்பதோடு சீனா உலகளாவிய ரீதியில் பின்பற்றி வரும் கொள்கைகளை நிராகரிக்கும் விதத்திலும் அதை முறியடிக்கும் உத்திகளோடும் ஜீ7 நாடுகள் நகர ஆரம்பித்திருக்கிறது.

ஒன்று, ஜீ7 நாடுகள் ஆபிரிக்காவுடனான கூட்டாண்மையை வளர்க்கும் நோக்கில் சில உபாயங்கள் ஜீ 7 செயலாளர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன. சீனாவில் புதிய பட்டுப்பாதை ஆபிரிக்காவில் ஏற்படுத்தி வரும் மாற்றங்களை முறியடிக்கும் விதத்தில் ஆபிரிக்காவுடனான கூட்டாண்மையை விருத்தி செய்ய வேண்டும் என ஜீ7 நாடுகளின் செயலாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். அதுமட்டுமன்றி ஆபிரிக்க கூட்டாண்மை ஜி 7 நாடுகளோடு இணைத்து செயற்படவும் பொருளாதார கட்டுமானங்களை அதிகரிக்கவும், சீனா முன்வைத்திருக்கின்ற பொருளாதார உட்கட்டமைப்புகளை தோற்கடிக்கும் விதத்தில் இத்தகைய நகர்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஜி7 நாடுகளின் செயலாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இரண்டு, இந்தோ பசுபிக் பகுதியில் அதிக ஈடுபாட்டை ஏற்படுத்துவதுடன் ஜீ7 நாடுகளுக்கும், ஆசியான் அமைப்புக்குமிடையே அரசியல், பொருளாதார. வர்த்தக மற்றும் இராணுவ உரையாடல்கள் ஏற்படுத்தும்போது நெருக்கமான அபிவிருத்தி திட்டங்களை வகுப்பது என செயலாளர்களின் உரையாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, இந்தோ பசுபிக் தந்திரோபாயத்தில் சீனாவின் ஒரே பாதை ஒரே சுற்று என்ற உபாயத்திற்கெதிராக மேற்கொள்ள வேண்டிய உபாயங்களை முன்வைத்துள்ளது. இந்தோ பசுபிக் மையத்துக்கான ஆதரவை அதிகரிப்பதோடு சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ பசுபிக் உபாயத்தை ஊக்குவிப்பது என்றும் ஜனநாயக விழுமியங்களையும், பிராந்திய ஒருமைப்பாட்டையும், வெளிப்படைத் தன்மையையும், மனித உரிமைகள் அடிப்படை சுதந்திரங்கள் என்பனவற்றை பாதுகாப்பதோடு, நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகளை அமைதியான முறையில் தீர்ப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மூன்று, சர்வதேச மற்றும் தேசிய மட்டத்தில் மனித உரிமை அடிப்படை உரிமையை மதிப்பதற்காக சீனாவை நோக்கி அழைப்பு விடுக்கின்றது. ஜீ7 வெளிவிவகார செயலாளர்களின் சந்திப்பானது சீனாவில் முஸ்லிம்கள் அதிகம் வாழும் சின்சியாங் பிரதேசத்தில் காணப்படும் மனித உரிமை மீறல்களை






நிராகரிப்பதோடு திபெத்தியர்களின் அரசியல் உரிமைகளை மீறும் சீனாவின் நடவடிக்கைகளை கண்டிப்பது என்றும் உய்குர் முஸ்லிம்களின் இருப்பை உறுதிப்படுத்தவும் அவர்களின் மீதான அடக்குமுறையை இல்லாது ஒழிக்கவும், பிற இன மற்றும் மத சிறுபான்மைக் குழுக்களின் மீது சீனாவின் மனித உரிமை மீறல்களினை தடுக்கும் விடயங்களை உருவாக்குவதென்றும் ஜீ 7 அமைப்பு செயலாளர்கள் யோசனைகளை முன்வைத்துள்ளனர்.

நான்கு, தையைக்வான் மீது சீனாவின் நடவடிகை கண்டிக்கும் ஜீ 7 செயலாளர்கள் சந்திப்பில் தைய்வானியர்களின் அரசுரிமையையும், இறையாண்மையினையும் பாதுகாப்பதற்கான பொறிமுறைகளை உருவாக்குவதென்றும் அதற்காக ஜீ 7 நாடுகள் செயற்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது .

ஐந்து, சைபர் தாக்குதல்களையும், அறிவுசார் சொத்து திருட்டையும் நடத்துவதையோ அல்லது ஆதரிப்பதையோ நிராகரிப்பதோடு சீனா மற்றும் ரஷ்யாவின் நடவடிக்கைகளை முற்றாக தடுப்பதற்கான பொறிமுறையை உருவாக்க வேண்டும் எனவும் செயலாளர்கள் யோசனை வெளியிட்டுள்ளனர்.

ஆறாவது, வடகொரியாவின் மனித உரிமை மீறல்களையும், இராணுவ அச்சுறுத்தல்களையும் தடுப்பதற்கான பொறிமுறையை உருவாக்குவதோடு சீனா ரஷ்யா போன்றவை வடகொரியாவிற்கு வழங்கும் ஆதரவை ஐக்கிய நாடுகள் சபையின் விதிமுறைகளுக்கு உட்பட்டு மேற்கொள்ளவேண்டும் எனவும் அதற்கான நடவடிக்கைகளை சீனா ரஷ்யாவோடு இணைத்து ஜீ7 நாடுகள் செயற்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

ஏழாவது , ஜீ 7 நாடுகளோடு ஒத்துழைத்து செயற்படக்கூடிய இந்தியா, யப்பான், தென்கொரியா, அவுஸ்திரேலியா போன்றவற்றை இவ்வமைப்பில் இணைத்துக் கொள்ளவேண்டும் எனவும் பிராந்திய ரீதியாக அந்த நாடுகள் எதிர்க்கொள்ளும் சவால்களுக்கு ஜீ 7 நாடுகள் முகம்கொடுக்கவும், ஒத்துழைக்கவும் தயாராக வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது.

எட்டாவது, மியன்மாரில் நிகழ்ந்துவரும் இராணுவ சதித்திட்டத்தை தோற்கடிப்பதற்கு ஜீ 7 நாடுகள் செயற்பட வேண்டுமென்றும், ஜனநாயக ரீதியான அரசாங்கத்தை மீள நிலைநிறுத்துவதற்கும் ஜனநாயகத்தை மீட்டெடுப்பதற்கும் ஜீ 7 நாடுகள் முயலுதல் வேண்டும் எனவும், அதற்கான நடவடிக்கைகளை சீனா மற்றும் ரஷ்யாவோடு உரையாடி பிராந்தியத்தை அமைதி வலயமாக உருவாக்க வேண்டும் என்றும் வலியுதியுள்றுத்தியுள்ளது.

ஒன்பது, தென்கிழக்கு மற்றும் தென் சீனக்கடலில் ஏற்பட்டிருக்கும் பதற்றமான நிலையை முடிவுக்கு கொண்டுவர ஜீ 7 நாடுகளின் தலைவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், ஐக்கிய நாடு சபையின் கடற்சட்டத்தினை மதித்து சீனா செயற்ட வேண்டும் என்றும் அதனை மீறுகின்ற சந்தர்ப்பத்தில் ஜீ 7 நாடுகள் கூட்டாக முடிவினை எடுத்து செயற்பட வெண்டும் எனவும் அம் மாநாட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பத்து, அவ்வாறே சிரியா, ஆப்கானிஸ்தான் ஈரான் போன்ற நாடுகளில் ஏற்பட்டு வரும் நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதோடு உலகளாவிய ரீதியில் கடற்சார் பாதுகாப்பையும் ஆயுத மோதல்களையும் பயங்கரவாத நடவடிக்கைகளையும் மதவாத தாக்குதல்களையும் முடிவுக்கு கொண்டுவருவதோடு பிராந்தியங்களையும் நாடுகளையும் ஒன்றிணைத்து நகர்வுகளை ஜீ7 நாடுகள் மேற்கொள்ள வேண்டும் என செயலாளர்களின் லண்டன் சந்திப்பு முடிவெடுத்துள்ளது.

எனவே, கொவிட் தொற்றில் இருந்து உலகளாவிய அரசியல் , பொருளாதார, இராணுவ விடயங்களில் சீனாவிற்கெதிரான உத்திகளை அதிகம் பிரதிபலிப்பதாக ஜீ7 மாநாட்டுகான பூர்வாங்க ஏற்பாட்டு குழு வெளிப்படுத்திய அறிக்கை உறுதிப்படுத்துகின்றது. எனவே அமெரிக்கா தனித்தும், ஜீ 7 நாடுகளும் , ஐரோப்பிய நாடுகளும் சீனாவிற்கு எதிராக முக்கியமான நகர்வுகளை மேற்கொள்ளும் தம்மைத் தயார்ப்படுத்தி வருகின்றன. இராணுவ ரீதியில் நேட்டோவை முதன்மைப்படுத்தும் விதத்தில், பொருளாதார ரீதியில் ஜீ 7 சீனாவிற்கு எதிராக முன்னிருத்தும் உபாயத்தை ஜீ 7 லண்டன் மகாநாடு உறுதிப்படுத்துகின்றது. ஆனால் ஜீ7 அணியின் உறுப்பு நாடுகளான யப்பான், இத்தாலி என்பன சீனாவுக்கு எதிரான நடவடிக்கையை முதன்மைப்படுத்தத் தயங்குவதாகவும் சீனாவுடனான வர்த்தக மற்றும் சந்தை விடயங்களிலும் சுகாதார விடயங்களிலும் நெருக்கமான உறவை பின்பற்றிவரும் நாடுகளாக அவை உள்ளதாகவும் தெரியவருகிறது.

தினகரன் வாரமஞ்சரி

# மஞ்சரி மாருதம்

# ஆயிரம் மாதங்களை விட மேலான லைலத்துல் கத்ர் இரவு

'இந்த அல்குர்ஆனை மகத்துவமிக்க இரவில் நாம் இறக்கினோம். மகத்துவமிக்க இரவைப்பற்றி உமக்குத் தெரியுமா? அந்த மகத்துவமிக்க இரவு ஆயிரம் மாதங்களை விட சிறந்ததாகும்.'(அல்குர்ஆன் 97: 13)

ரமழான் மாதம் பல சிறப்பம்சங்களையும் தனித்துவங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அதில் மிகமுக்கியமான ஒன்றாக லைலத்துல் கத்ர் இரவு விளங்குகின்றது.

இந்த இரவானது ஒரு வருடத்தில் இருக்கும் இரவுகளில் மிகவும் சிறந்த இரவாகும். பல வருடங்கள் செய்யும் நன்மைகளை ஒரே இரவில் பெற்றுத்தரும் இரவு இது. அந்தளவுக்கு பாக்கியமுடைய இவ்விரவு ஆயிரம் மாதங்களைவிட மேலானதாக விளங்குகிறது. இவ்விரவு ரமழான் மாதத்தின் இறுதிப் பத்திலுள்ள ஒற்றைப்படையான நாளொன்றில் அமைந்திருக்கின்றது.

இந்த இரவு தன்னகத்தே கொண்டுள்ள சிறப்பம்சங்களில் அருள்மறையாம் அல்குர்அன் அருளப்பட்டது பிரதானமானதாகும். நபி (ஸல்) அவர்களுக்கு முதல் முதலாக அல்குர்ஆன் அருளப்பட ஆரம்பித்ததும் இந்த இரவிலேயேயாகும்.

அதனைத் தொடர்ந்து பின்னர் கால, சூழ்நிலைகளுக்கு ஏற்ப ஒரு வசனமோ அல்லது சில வசனங்களோ அல்லது ஒரு முழு அத்தியாயமோ என்றபடி நபி (ஸல்) அவர்களுக்கு அல் குர்ஆன் அருளப்பட்டது. இதனை



அல் குர்ஆனே தெளிவாகக் குறிப்பிட்டு வைத்திருக்கின்றது.

அதேநேரம் இக்குர்ஆன் அருளப்பட்ட இரவு பற்றி அல் குர்ஆன் '(இந்த அல்குர்ஆனை) மகத்துவமிக்க இரவில் இதை நாம் அருளினோம். மகத்துவமிக்க இரவு என்றால் என்னவென உமக்கு எப்படித் தெரியும்? மகத்துவமிக்க இரவு ஆயிரம் மாதங்களை விடச் சிறந்தது. வானவர்களும், ரூஹ_ம் அதில் தமது இறைவனின் கட்டளைப்படி ஒவ்வொரு காரியத்துடனும் இறங்குகின்றனர். ஸலாம்! இது வைகறைவரை இருக்கும்.(97: 15) என்று குறிப்பிட்டிருக்கின்றது.

ஆயிரம் மாதங்கள் என்பது சுமார் 83 வருடங்களும் 4 மாதங்களும் ஆகும். இதன்படி இவ்விரவில் புரியப்படும் இறை வணக்கங்களுக்கு சராசரி மனித ஆயுளை விடவும் அதிகமான ஆண்டுகள் நன்மைகள் செய்த பிரதிபலன்கள் கிடைக்கப்பெறும்.

இந்த மகத்துவம் மிக்க இரவை 'ரமளானின் கடைசிப் பத்து நாட்களில் ஒற்றைப்படையான நாட்களில் தேடுங்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் (ஆதாரம் புஹாரி, முஸ்லிம், திர்மிதி)

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் லைலத்துல் கத்ர் பற்றி அறிவிப்பதற்காகப் புறப்பட்டு வந்த சமயம் இரண்டு முஸ்லிம்கள் சச்சரவு செய்து கொண்டிருந்தனர். அதனால் அவ்விரவு குறித்த விளக்கம் தமக்கு நீக்கப்பட்டு விட்டதாகவும் அது உங்களுக்கு நன்மையாக இருக்கலாம். அதனால் அவ்விரவை 23,25,27,29 ஆகிய இரவுகளில் தேடுங்கள்' என அன்னார் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)

ரமழானின் கடைசிப்பத்து நாட்களில் ஒற்றைப்படையான இரவுகளில் தான் அவ்விரவு இருக்கிறது என்று மேலும் சில நபிமொழிகளில் குறிப்பிட்டுள்ளன. ஆகவே ரமழானின் கடைசி பத்து நாட்களில் லைலத்துல் கத்ர் இரவு இருக்கிறது என்பதை தெளிவாகின்றது.



மேலும் இவ்விரவை அடைந்து கொள்வதற்காக நபி (ஸல்) அவர்கள் கடைசிப்பத்து நாட்களில் இஃதிகாப் இருந்துள்ளார்கள். அதனால் இவ்விரவை கடைசிப்பத்தில் ஒற்றைப்படை இரவில் தேடுவதே மிகச் சிறந்ததாகும். அதுவே நபி வழிமுறையாகும்.

நபி(ஸல்) அவர்கள் 'மற்ற எந்த நாட்களிலும் வணக்கத்தில் ஈடுபடாத அளவுக்கு ரமழானின் பிந்திய பத்துகளில் வணக்கங்களில் ஈடுபடக் கூடியவர்களாக இருந்துள்ளார்கள்'. (ஆதாரம்: முஸ்லிம்)

ஆனால் இவ்விரவுக்கென்று அவர்கள் எந்தவொரு பிரத்தியேகத் தொழுகையையும் நபி(ஸல்) அவர்கள் காட்டித் தரவில்லை. ஆனால் ஒரு பிரார்த்தனையைக் கற்றுத் தந்துள்ளார்கள்.

'அல்லாஹ்வின் திருத்தூதரே! லைலத்துல் கத்ர் எது என்பதை நான் அறிந்தால் அதில் நான் என்ன சொல்ல வேண்டும்? என்று கேட்டேன். அதற்கு,'அல்லாஹ{ம்ம இன்னக்க அஃபுவ்வுன் துஹிப்புல் அஃப்வஃபஃபுஅன்னி'(யா அல்லாஹ! நீ மன்னிக்கக் கூடியவன். மன்னிப்பை விரும்புபவன். என்னை நீ மன்னித்து விடு!) என்று கற்றுக் கொடுத்தார்கள்' (ஆதாரம்: அஹ்மத், இப்னு மாஜா, திர்மிதி)

அதனால் தான் நபி(ஸல்) அவர்கள் நம்மால் ஏவப்படாத செயலை மார்க்கம் என்ற பெயரில் எவரேனும் செய்வார்களேயானால் அது நிராகரிக்கப்படும்' என்றார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

அத்தோடு வார்த்தைகளில் சிறந்தது அல்லாஹ்வின் வார்த்தை என்றும், நடைமுறையில் சிறந்தது என்னுடைய நடைமுறை என்றும் அன்னார் குறிப்பிட்டுள்ளார்கள்.

ரமழானின் கடைசிப் பத்து நாட்கள் வந்துவிட்டால் நபி (ஸல்) அவர்கள் இல்லறத் தொடர்பை நிறுத்திக் கொள்வார்கள். இரவை (அல்லாஹ்வைத் தொழுது) உயிர்ப்பிப்பார்கள். அந்நாட்களில் வணக்க வழிபாடுகளில் ஈடுபட தம் குடும்பத்தினரையும் எழுப்பி விடுவார்கள்.



'யார் ரமழானில் நம்பிக்கையுடனும் நன்மையை எதிர்பார்த்தும் நோன்பு நோற்கிறாரோ அவர் (அதற்கு) முன் செய்த பாவங்கள் மன்னிக்கப்படும். யார் லைலத்துல் கத்ர்கண்ணியமிக்க இரவில் நம்பிக்கையுடனும் நன்மையை எதிர்பார்த்தும் நின்று வணங்குகிறாரோ அவர் அதற்கு முன் செய்த பாவங்கள் மன்னிக்கப்படும் என்று நபி(ஸல்) கூறினார்கள். (ஆதாரம்: புஹாரி)

## கொவிட் 19 தொற்று பரவலுக்கு துணைபோகாத வகையில் ரமழானைக் கொண்டாடுவோம்

இந்த இரவை அடைந்து கொள்வதற்காக நபி (ஸல்) அவர்கள் ரமழான் மாதத்தின் கடைசி 10 நாட்கள் இஃதிகாப் இருந்துள்ளார்கள். நபித்தோழர்களும் இருந்துள்ளனர்.

இஃதிகாப் இருக்க நாடுபவர், 20ம் நாள் காலை சுப்ஹ{த் தொழுது விட்டு இஃதிகாப் இருக்கும் இடத்திற்குச் சென்று விட வேண்டும் அதுவே நபி வழியாகும். நபி (ஸல்) அவர்கள் இஃதிகாப் இருக்கும் N;பாது (மிக முக்கியமான அவசியத் தேவைகளைத் தவிர) பள்ளியைவிட்டு வெளியே செல்ல மாட்டார்கள்.

இஃதிகாப் இருப்பவர் ரமழான் மாதம் நிறைவடையும் நாளின் மஃரிப் தொழுகைக்குப் பிறகு (அதாவது ஷவ்வால் பிறை தென்பட்ட இரவில்) இல்லம் திரும்பலாம்.

மேலும் இத்தகைய சிறப்பு வாய்ந்த லைலத்துல் கத்ர் உடைய இரவில் நின்று வணங்கியும் குர்ஆன் ஓதியும் திக்ரு செய்தும் நம்முடைய அமல்களை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும். வீணானஒ பேச்சுக்கள், சண்டை சச்சரவுகள் இவற்றை அறவே தவிர்த்துக் கொண்டு இறைவனிடம் அதிகமதிகம் பாவமன்னிப்பு கோர வேண்டும்.

அதனால் அல்லாஹ்விடம் அதிகமதிகம் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் இக்காலப்பகுதியை அமைத்துக்கொள்ள வேண்டும். இருப்பினும் இவற்றை மறந்தவர்களாக செயற்படுபவர்களை சமூகத்தில் நிறையவே அவதானிக்க முடிகின்றது.

இந்த பொன்னான காலப்பகுதியை பெருநாளுக்கு தயாராதல் உள்ளிட்ட உலகியல் தேவைகளின் நிமித்தம் செலவிடுகின்றனர். ஆனால் கடந்த காலங்களைப் போலல்லாது இந்த மகத்துவம் மிக்க காலப்பகுதியை மிகுந்த பொறுப்புணர்வுடனும் முன்னவதானத்துடனும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

உலகிற்கே பெரும் சவாலாக விளங்கும் கொவிட் 19 தொற்று அச்சுறுத்தலுக்கு மத்தியில் இந்த மகத்துவம் மிக்க காலப்பகுதியை நாம் அடைந்துள்ளோம். அதனால் ரமழான் உள்ளடக்கியுள்ள லைலத்துல் கத்ர் உள்ளிட்ட அல்லாஹ்வின் அருள் வளங்களை கொவிட் 19 தொற்றுக்கு துணை போகாத வகையில் அடைந்து கொள்ள முயற்சிப்பது இன்றியமையாததாகும். அத்தோடு ஈதுல் பித்ர் நோன்பு பெருநாளையும் அதற்கேற்ப சுகாதார வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகளைப் பேணியபடி அமைத்துக்கொள்ளவும் தவறக்கூடாது. அவையே இன்றைய தேவையாகும்.

நஸ்லின் றிப்கா அன்ஸார் ...
பிரதிஅதிபர்
கமு/கமு/ அல்ஹிலால் வித்தியாலயம்,
சாய்ந்தமருது

## சுவர்க்கம் தரும் சுகந்த ரமழான்



வந்தது ரமழான் வசந்தம்
தந்தது நிறையருள் சுகந்தம்
செய்திடு நன்மைகள் அனந்தம்
பெற்றிடு சுவர்க்கத்தின் ஆனந்தம்
அருளினை பெற்றிட பத்து
பாவ மன்னிப்புக்குப் பத்து
நரக விடுதலைக்கு பத்தென
ரமழானில் நற்றினங்கள் முப்பத்து
சத்தான ரமழானின்
முத்தான முப்பத்தில்
வித்தகனின் முத்துக்களை
கொத்தாக பெற்றோமா?
அல்லாஹ்வின் நல்லருளை
அல்லாஹ்வின் மன்னிப்பை
நரகத்தின் விடுதலையை
உறுதியாய் நாம் வென்றோமா?
உடல் நலனை உள நலனை
உயர்வாக தரத்தானே ரமழான்
உண்டு சுவைத்து உடல் பருத்து
சுகம் தொலைக்கவா ரமழான்?
பசித்திருந்து விழித்திருந்து நாளும்
நல்லமல்கள் நிறைவாய் புரிந்து
உயரருளைப் பெறத்தானே ரமழான்
சுவையுணவை நிதம் புசித்து
விழித்திருந்து கதை கதைத்து
வீண் விரயம் செய்திடவா ரமழான்?
இதுவா ரமழானின் சீர்மை
இதுவா நோன்பதன் மேன்மை
இதுவா அல்லாஹ்வின் தேவை
உணர்ந்தாலே பெறுவோமே உயர்வை
ரமழானில் நோன்பிருந்து
பசியின் பிணியதையுணர்ந்து
படைத்தவன் அருளுணர்ந்து
படைத்ததன் நோக்குணர்ந்து
பாரினில் நலன் புரிந்து
பெற்றோமா இறை விருந்து?
ரமழான் அல்குர்ஆனின் மாதம்
நிறையருள் சுரக்கின்ற மாதம்
அருள்மறை அருளப்பட்ட மாதம்
வல்லோனின் வழி வந்த மாதம்
இருள் மறைய ஒளி வந்த மாதம்
வாழ்வினையே வளமாக்கும் மாதம்
புனிதமிகு ரமழானில் நாம்
அல்குர்ஆனை ஓதுவோம்
அல்குர்ஆனை விளங்குவோம்
அல்குர்ஆன் வழி நடப்போம்
அதன் பால் அழைப்போம்
என்றெல்லாம் பேசினோம்
என்றாலும் செய்தோமா?
எண்ணித்தான் பார்த்தோமா?
எத்தனை ஜுஸுக்களை ஓதினோம்
எத்தனை வார்த்தைகள் விளங்கினோம்
எதனை வாழ்வினில் ஒழுகினோம்
எதனைதான் பிறர்க்கு ஏகினோம்
உள்ளத்தைத் தொட்டுக் கொள்ளுங்கள்
உள்ளத்தைத் தொட்டுச் சொல்லுங்கள்
உங்களுக்கே உண்மை தெரியும்
உங்களுக்கே உள்ளமை புரியும்
தெருவெல்லாம் மிஸ்கீன்கள் கூட்டம்
ஹதியாக்கள் பெறுவதவர் நோக்கம்
ரமழானில் ஏன் இத்துயர் தோற்றம்
எப்போது வரும் இதிலொரு மாற்றம்
ஸக்காத்தை ஸதகாவை ஹதியாவை
பக்காவாய் ஏழைகள் துயர் கண்டு
மிக்கதாய் வாழ்வுயர வழங்கிட்டால்
சத்தியமாய் வரும்தானே இதில் மாற்றம்
பயபக்தி உடையோராய் நாம் மாற
படைத்தோனின் நெறியில் நாம் வாழ
பயகம்பர் சொன்ன வழி செல்ல
பசித்தோரின் பசப்பிணியை உணர
பசிபோக்கும் போசனைகள் பகிர
பரிதவிப்போர் துயர்களை துடைக்க
ஸக்காத்தை கணக்கிட்டு செலுத்த
ஸதக்காவை கணக்கின்றி கொடுக்க
ஐவேளை ஜமாஅத்தாய்த் தொழ
அநியாய பாவங்களை ஒழிக்க
நள்ளிரவில் தஹஜ்ஜத்துக்கு எழ
நன்மைகள் நிறைவாகப் பெற
நல்லதையே நம் விழிகள் காண
நல்லதையே நம் செவிகள் கேட்க
நல்லதையே நம் நாவு மொழிய
நல்லதையே நாள்தோறும் செய்து
நல்லோராய் நாம் என்றும் வாழ
நற்பயிற்சி தந்ததுவே ரமழான்
ரமளானின் பயிற்சியை தொடர்வோம்
நாளெல்லாம் நன்மைகள் செய்வோம்
நலமோடு ஜெகத்தினில் வாழ்வோம்
ரஹ்மானின் அருளினை பெறுவோம்
மறுமையில் சுவர்க்கத்தை அடைவோம்
மகிழ்வோடு சதா அதில் வாழ்வோம்



இலக்கியச் செம்மல்,
கலாபூஷணம்
சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ்...

# கவிதை மஞ்சரி

கிருஷா

# நோன்புப் பெருநாள்



றுசைனா ஹாசீம்
அக்கரைப்பற்று02.

தவமாய் தவமிருந்து முப்பது நாள் நோன்பு நேற்று
தான் கண்ட இன்பமதை குதூகலமாய் கொண்டாட
தரணி எங்கும் ஒலிக்கிறதாம் தக்பீர் முழக்கம்
தரம் வாய்ந்த நாள் அதுவாம் நோன்புப் பெருநாள்

முதல், இரண்டாம் ரக்அத்கள் முறையே ஏழு, ஐந்து என தக்பீர்
சொல்லி நிறைவேறுமே பெருநாள் தொழுகை
அதில் கலந்து கொண்டால் அது நீ பெற்ற பேறு
அதை உலகத்தார்க்கு நீயும் எடுத்துக் கூறு

பெருநாளை சிறப்பேற்றும் ஈகையாம்
'ஸகாத்துல் பித்ர்' எனும் கொடை அதுவாம்
உரிய நேரத்திற்கு அது நிறைவேற்றுவதை யதார்த்தம்
அதில் விளங்குமே நோன்புப் பெருநாளின் அர்த்தம்

சின்னஞ் சிறார்கள் முதல் பென்னம் பெரியார் வரை
புத்தாடை அணிந்து வீசுமே புது வசந்தம்
அறு சுவையுடன் ஜொலிக்கும் விருந்து
உற்றார், உறவினர், அண்டை அயலவர் என சிறக்கும் விருந்தோம்பல்

ஈகைத் திருநாளின் இதயம் சொல்லும் அருள் வாக்கு
தொழுகையை நிறைவேற்றுவோம் இறையருள் பெற்றிடுவோம்
இதயம் பெறுகின்றதே பரிசுத்தம
அதில் யாரும் உணர்வர் இறை அச்சம்

## கீர்த்தி பெறும் பெருநாள்!

கல்லொளுவை பாரிஸ்


அன்பாய்ப் பேசி நீ
அறமாய் வாழ்ந்திடவே
அன்பைப் பெருக்கிடும்
அருமைப் பெருநாள் இது!

நேசக் கரம் வளர்த்து
நெடுந்தூரம் சேர்த்து வாழ
நெஞ்சாமல்லாம் பூரிக்குமே
நேசர்களின் பெருநாள் இது!

இருள் சூழ்ந்த இதயத்தில்
இறை தீபம் ஏற்றி வைத்து
இன்னல்களை துரத்துகின்ற
இனிய பெருநாள் இது!

கண்ணியம் கட்டுப்பாட்டை
காத்து நின்று
கருணையை ஏந்தி வரும்
கீர்த்தி பெறும் பெருநாள் இது!





## தரணியில் இணை உண்டோ தாய்க்கு!

சுந்தரராஜ் சுபாஷினி,
வோல்ட்றிம் லிந்துல.

கருவில் சுமந்து கஷ்டங்கள்
களைந்து மடியில் சுமந்து மனதை வருடி
நாளொருமேனியாய் பொழுதொரு வண்ணமாய் வளர்த்து

கண்கொட்டாமல் கண்மலரவைத்தாள்
கண்ணே பொன்னே என பாராட்டி சீராட்டி
பாலூட்டி நீராட்டி தாலாட்டி எனை வளர்த்தாய்

தலைநிமிர்ந்து நான்வாழ
தன்னுயிரை துச்சமென எண்ணி
தினம்தினம் உழைத்து உருமாறி போனவள்

உலக அழகிகள்கூட தோற்றுப்போவர்
என்தாயவள் அழகின்முன்
நீண்டுவளர்ந்த கூந்தல்
மின்னல் வெட்டும் அவள் கண்கள்

நொடிக்கு நொடி முத்தமிடும்
செவ்வண்ண இதழ்கள்
சேர்த்தணைக்கும் இருகைகள்

செப்பினால் சொற்கள் காணாது
எங்கே சென்று கடன்பெறுவேன்
அவள் அழகை வர்ணிப்பதற்கு

விடைதெரியா புதிரவள்
விண்வெளியில் தேடினாலும்
கிடையாது இன்னொன்று

அரிய பொக்கிஷத்தை
அநாதை இல்லங்களில் விடும்
சில காட்டு மிராண்டியையும்
காடையர்களையும் கருவுற்று
பெற்றவளும் இத் தாய்தான்

தாய்க்கு இணையுண்டோ இத்தரணியில்

## வேண்டும்

வை.எல்.எம். நயீம், பெரிய நீலாவணை02

நம்மை நாம் படிக்கவேண்டும் – ஆனால்
நம் கண்மேந்திரியம் ஒழிய வேண்டும்
நம்மை நாம் அறிய வேண்டும் – ஆனால்
நம் ஞானேந்திரியம் ஒய வேண்டும்
நம்மை நாம் உணர வேண்டும் – ஆனால்
நம் பேத அறிவு நீங்க வேண்டும்

நம்மை நாம் காணவேண்டும்
நம் அறிவு பேரின்பம் காணவேண்டும்
இறையறிவைப் பெற வேண்டும் – ஆனால்
நம் இதயத்தில் ஒழி வேண்டும்
இவை அனைத்தையும் அடைவதற்கு
உள்ளம் தூய்மை பெற வேண்டும்

## வெல்வாய் ஈருலகில்



கிண்ணியா
மஜீத் ராவுத்தர்

படி
படி
பள்ளிக் கூடம் சென்று
படி
படிக்க நேரமில்லை
பகல் இரவு பாராதே நடையில்
வீட்டில் பணி இடையில்
கல்
கல்வி விலை மதிப்
பற்ற(து)
அதன்
மேல் பற்றுக் கொள்
அது
உன் தொழில் ஒப்புக் கொள்
நீ படி

கல்வி கலக நாசினி
கல்வியை நேசி நீ
நிறை குடமாக வாசி
பொறுமை உன் கல்வியால்
பொக்கிஷம்

கற்ற கல்வி அறிவுக்
களஞ்சியம்
காக்கும்
கொடியதிலும் கொடிய
வறுமை
போக்கும்

உன்னத கல்வி அறிவால் ஏகி
உலகை கற்றுக் கல்வி
உதவும் வாகனம்

மின்னல் வேகத்தில்
மிளிரும் உலகத்து அறிவு
அனைத்து நொடியிற் பெற
கல்
வயது ஏற (ஏற)
வளரும் அறிவுப்பயன்
விஞ்ஞானி
ஆகும் பேறு உலகுக்கு பயன்

இளமையிற்
கல்
இனி வராது
இளமை
முதுமைக்கும் ஊண்டு கோல்
கல்வி

வறுமை போக்கும் கல்வி
பொறுமை காக்கும் கல்வி
புதுமை காணும் கல்வி
முதுமையிலும் தேவை கல்வி
கல்
கல்
வெல்வாய் ஈருலகில்

## பூவுக்குள் ஒரு பூகம்பம்...



பாண்டியூர் பொன். நவநீதன்

மானஸ்தன்
மரியாதைக்காரன்
அன்பாளன் நல்ல
பண்பாளன்
என்றெல்லாம்
ஊருக்குள் நல்ல
பேர் அவனுக்கு

"உடுப்பென்ன
நடப்பென்ன அவன்
எடுப்பென்ன"
எனறெல்லாம்
புகழ்ந்தார்கள்!

ஒரு பூவை (யை)
மணந்து "ஆஹா, ஓகோ"
வண்டாகினான்!
தேனையுண்டு
கொண்டாடினான்!
பிள்ளைகள் பெற்றுத்
திண்டாடினான்!

"ஏனிவன் இப்படி?"
என்றா கேட்கிறீர்
எல்லா மந்தப்
பூவுக்குள் எழுந்த
பூகம்பம் தான்!

## எல்லாம் அவன் செயல்!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்

எது எது எப்படி நடக்கும் என்பது
இறைவனின் திட்டம் உணர்ந்திடுவோம்
புதிதென நாம் இடும் திட்டங்கள் கூட
புரிந்திட முடியாது அறிந்திடுவோம்
நிச்சய நிகழ்வுகள் அவன் செயல்படியே
நடந்திடும் என்பதை எண்ணிடுவோம்
நாளைய நடப்புகள் நிகழ்தலைக்கண்டு
இறைவனின் செயலிது என பகர்வோம்

எத்தனைக் கற்பனை நாம் உருவகித்தும்
எல்லாமே நடத்திட முடிவதில்லை
எதற்கும் நேரமும் காலமும் சரியாய்
அமைந்தாலே காரியம் கைகூடும்
நடக்காத செயலினை எண்ணி எண்ணி
துவல்வது உலகில் மடமையன்றோ?
எல்லாமே அவன் செயல் என்றெண்ணி
இயங்கிடுவோம் இப்பாரினிலே

## செல்

இராணி பௌசியா,
கல்லளை.


செல் பேசியே
சற்று விலகிச்
செல்

நான் என்
விரல்களுக்கிடையில்
வெண்கட்டிகளை
செருகப் போகிறேன்

எனக்கும் மாணவர்களுக்குமான
இந்த புனிதப்
போரிலே
என் ஆயுதத்தை
கெட்டியாகப் பிடித்துக்கொள்ள
என் விரல்களைக்
கொடுத்து விடு

ஆசிரியத்தின் புனிதம்
அறுந்து விடாதிருக்க
கொஞ்சம் அனுமதி கொடு
செல்பேசியே

முற்றும் நீயாக
முகம் தெரியாப்
பேர்வழிகளுடன்



முழு நேரமும்
வீணாக விட்டதுபோல்
ஒரு பிரமை

எட்டி நீயும் நின்று
எதிர்காலச் சிற்பிகளைச்
செதுக்கும் பணிக்கு
இடங்கொடு
எனக்கும் விடுதலை
கொடு

## தீர்க்க தரிசனம்

இர்ஷாத், வாழைச்சேனை

பலா மரத்தின் கீழ்
காலம் கனிந்து
வீழ்ந்தது

என் மகன்
அதன் நிழல்களில்
கோலமிட்டான்

## பணக்காரனாக வாழ ஆசை இல்லை...

கே.எல். ஹில்மி,
சம்மாந்துறை10

மரணம் வரை
யாரிடமும் கையேந்
தாமல் வாழந்தான்
ஆசை...

நேர்மை என்பது
மிக அரிதான
பொக்கிஷம்...

அதை கீழ்த்தரமான
மனிதர்களிடம்
எதிர்பார்க்காதீர்கள்
ஏமாந்து போவீர்கள்

SPMC

அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்

இலங்கையில் ஔடத உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சின் கீழானது

# ஆர்வ வெளிப்பாட்டுக்கான அழைப்பு (EOI)

## இலங்கையில் ONCOLOGY மருந்துகள் உற்பத்தி தொழிற்சாலை ஒன்றை அமைத்தல்

## (TO SET UP AN ONCOLOGY DRUGS MANUFACTURING PLANT IN SRI LANKA)

1. **பின்னணி**

இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனமானது (SPMC) உள்நாட்டு தேவைகளை சிறந்த முறையில் வழங்குவதற்கு அரசாங்கத்திற்கு அத்தியாவசிய மருந்து உற்பத்திகளை தயாரிப்பதற்காக, 1957 இன் கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1987 இல் நிறுவப்பட்ட இலங்கையில் உள்ள அரசுக்கு சொந்தமான மிகப்பெரிய மருந்து உற்பத்தி நிறுவனமாகும். இலங்கையில் ONCOLOGY மருந்துகள் உற்பத்தி தொழிற்சாலை ஒன்றை நிறுவுவது நீண்ட காலத் தேவையாக கருதப்படுவதோடு அது நாட்டிற்கு முதன்மையான தேவையாக SPMC மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இலங்கையின் 20 மில்லியனுக்கு மேற்பட்ட மக்களின் சுகாதார பராமரிப்பு தேவைக்காக ONCOLOGY மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு கணிசமான அந்நியச் செலாவணியை இலங்கை செலவிடுகிறது.

2. **நோக்கம்**

இலங்கையில் ONCOLOGY மருந்துகள் உற்பத்தி தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு SPMC மேலுள்ளவாறு திட்டமிட்டிருப்பதோடு இது தொடர்பில் பொருத்தமான மற்றும் EU/ WHO/US GMP விற்கு இணங்கியதான ONCOLOGY மருந்துகள் உற்பத்தி தொழிற்சாலையை அமைப்பதற்கு நன்கு நிறுவப்பட்ட புகழ்பெற்ற ஆர்வம் கொண்ட தரப்புகளிடம் இருந்து ஆர்வ வெளிப்பாட்டின் (EOI) மூலம் தொடர்புடைய தகவல்களை பெறும் நடைமுறையை SPMC மேற்கொண்டுள்ளது.

3. **தேவை**

மேல் குறிப்பிடப்பட்டவற்றிற்கு ஏற்ப, EU/ WHO/US GMP வழிகாட்டல்களுக்கு இணங்கியதாக ஆர்வமுடைய தரப்பினர் இதனை ஒத்த தொழிற்சாலைகளை நிறுவியதில் தமது கடந்த கால அனுபவத்தை சமர்ப்பிப்பதற்கு கோரப்படுவதோடு SPMC Lotus Pharma Zone இன் முன்மொழியப்பட்ட திட்டத்திற்காக தொழிற்சாலை வடிவமைப்பை சமர்ப்பிப்பதற்கும் ஆர்வமுடைய தரப்புகள் கோரப்படுகின்றனர். ஆர்வமுடைய தரப்பின் திறமையான ஆலோசகரின் வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையின் கீழ் உற்பத்தி மேம்பாடு மற்றும் பூர்வாங்க செயற்பாடு மேற்கொள்ளப்படும் என்பதோடு இணக்கம் எட்டப்பட்ட காலத்தைக் கொண்ட தொழில்நுட்ப பரிமாற்றம் ஒன்றுக்கு ஒப்புக்கொள்ளல் வேண்டும். தவிர ஆர்வமுடைய தரப்பினர், வில்லை மற்றும் மருந்துறை தொழிற்சாலை (வாய்வழி திட மாத்திரை/ பொது உற்பத்திகள்), எலும்பியல் மற்றும் நரம்பியல் பதித்தல்கள் உற்பத்தி தொழிற்சாலை, Oncology மருந்துகள் மற்றும் அது சார்ந்த பயன்பாடுகள் உற்பத்தி தொழிற்சாலை, Cardiac Stents உற்பத்தி தொழிற்சாலை, Intra Ocular Lenses உற்பத்தி தொழிற்சாலை, நிர்வாகப் பகுதி, மத்திய களஞ்சியசாலை, மருந்து ஆய்வு நிலையம் மற்றும் ஆய்வுகூடம், Blood bags Cannula, infusion sets மற்றும் Catheters உற்பத்தி தொழிற்சாலை, அறுவைச் சிகிச்சை கையுறைகள் உற்பத்தி தொழிற்சாலை, Disposable Syringes உற்பத்தி தொழிற்சாலை, எத்திலின் ஒக்சைடு தொழிற்சாலை, மருத்துவ ஒட்சிசன் தொழிற்சாலை, மாநாட்டு மற்றும் கல்வி நிலையம், விடுதிகள், கழிவுப்பொருட்களை சுத்திகரிக்கும் தொழிற்சாலை மற்றும் வெளியேற்றல் (வடிகால் அமைப்பு), விநியோக முறைமையுடன் நீர் சுத்திகரிப்பு மற்றும் சேமிப்பு ஆகியவை உட்பட தொழிற்சாலைக்கான தளவமைப்பை தயாரிப்பது மற்றும் ஒட்டுமொத்த வலையத்திற்கான தயாரிப்பு வடிவமைப்பை ஒருங்கிணைப்பதற்கு இணங்குதல் வேண்டும். (ஆர்வமுடைய தரப்பினர் முதன்மை திட்ட கருத்திட்டத்தின்படி உள்ளக வீதிகள், நீர் விநியோகம் மற்றும் வடிகாலமைப்பு முதலியவற்றுக்கான Google map image மற்றும் நிலப்பரப்பு வரைபடத்தை இணைப்பதற்கு கோரப்படுகின்றனர்.) www.spmclanka.lk என்ற SPMC இணையதளத்தில் SPMC Lotus Pharma Zone இன் முன்மொழியப்பட்ட இடத்தின் நிலஅளவீட்டு திட்டப்படத்தை பார்க்கவும்.

4. **விரிவான EOI இனை சமர்ப்பித்தல்**

ONCOLOGY மருந்துகள் உற்பத்தி தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு ஆர்வ வெளிப்பாட்டுக்கான அழைப்பு தொடர்பில் ஒரு விரிவான முன்மொழிவு மற்றும் தொடர்புடைய விபரங்களை 2021 ஜூன் 07 ஆம் திகதி மு.ப. 10.30 அல்லது அதற்கு முன்னர் தலைவர், இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம், இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவல எஸ்டேட், இரத்மலானை, இலங்கை என்ற முகவரிக்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் கைகளால் கொண்டுவந்து சேர்த்தல் அல்லது SPMC இற்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''ONCOLOGY மருந்துகள் உற்பத்தி தொழிற்சாலை நிறுவுவதற்கான EOI'' என்று குறிப்பிடுதல் வேண்டும். (தாமதிக்கும் EOI கள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது. மின்னஞ்சலில் அனுப்பப்படுபவை கவனத்தில் கொள்ளப்படாது.)

5. **சமர்ப்பிக்கப்பட வேண்டிய விபரங்கள்**

5.1 பொது தகவல்

- I. நிறுவனத்தின் விபரம்
- II. இதனை ஒத்த வசதியை மேம்படுத்திய திறன், (ONCOLOGY மருந்துகள் உற்பத்தி துறையில் அனுபவம் மற்றும் (ஆர்வமுடைய தரப்பின் குடியிருப்பு நாட்டுக்கு மேலதிகமாக) வேறு நாடுகளில் ONCOLOGY மருந்துகள் உற்பத்தி தொழிற்சாலைகளை நிறுவிய அனுபவம்.
- III. (தொடர்புடைய தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் முக்கிய முகாமைத்து ஆட்கள் உட்பட) தமது தொழில்நுட்ப தகைமைகளின் விபரங்களுடன் ஊழியர்களின் சுயவிபரம்
- IV. இருக்குமாயின் இலங்கையில் உள்ள உள்நாட்டு முகவரின் விபரம்.

5.2 நிதித் தகவல்

- I. கணக்காய்வு செய்யப்பட்ட நிதிய அறிக்கைகளுடன் சேர்த்து ஐந்து தொடர்ச்சியான வர்த்தக ஆண்டுகளுக்கான ஒட்டுமொத்த வர்த்தகப் புரள்வு அறிக்கைகள்
- II. கடந்த மூன்று ஆண்டுகளுக்கான நிலுவை மற்றும் எதிர்பாரா பொறுப்புகள் பற்றிய அறிக்கைகள்.

5.3 தொழில்நுட்ப தகவல்

- I. பயன் உட்பட ஒட்டுமொத்த வசதிக்காக முன்மொழியப்பட்ட தளவமைப்பின் (பொது ஏற்பாடு) வரைவு (3D வடிவத்தில் வடிவமைக்கப்பட்ட தளவமைப்பு)
- II. சோதனை ஓட்டம் மற்றும் வர்த்தக உற்பத்தி வரை திட்டத்தை செயற்படுத்தும் காலக்கெடு
- III. தொழிற்சாலையை ஒருங்கிணைப்பதற்கு கட்டிட முகாமைத்துவ அமைப்பு; ஆர்வமுடைய தரப்புகள் மாற்றங்கள் தொடர்பில் எந்த ஒரு மென்பொருளிலேனும் வழக்கமான இற்றைப்படுத்தல்களை வழங்கல் வேண்டும்.
- IV. முன்மொழியப்பட்ட தயாரித்தல், திறன், தேவைப்படும் (தொழிற்சாலை காரணி மற்றும் செயல்திறன், உற்பத்தி நாடு, தயாரிப்பு மற்றும் வடிவம், உத்தரவாதம்) உட்பட ஆய்வுகூட உபகரணம் மற்றும் கருவிகள், பயன்படும் உபகரணங்களின் விரிவான உற்பத்தி பட்டியல்
- V. முன்மொழியப்பட்ட பொதியிடும் பொருட்களின் விபரம் மற்றும் அதற்கான காரணம்
- VI. உற்பத்தி செயற்பாட்டு விளக்கப்படத்துடன் திறன் சமநிலையின் விவரணம்
- VII. உபகரணம், முறைமைகள் மற்றும் செயற்பாட்டுக்கான தகைமை மற்றும் மதிப்பீட்டுத் தேவை மற்றும் அதற்கு தேவையான காலம்.
- VIII. இலங்கையின் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபை (NMRA) மூலம் கோரப்பட்டவாறு உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் EU GMP வழிகாட்டல்களின்படி தேவையான ஆவணங்களுடன் முன்மொழியப்பட்ட தர முறைமைகள்
- IX. EU GMP, WHO GMP தேவைகளை உறுதி செய்வதாக உற்பத்தி வசதி இருத்தல் வேண்டும்.
- X. உள்நாட்டில் நடைமுறையில் உள்ள சுற்றாடல் பாதிப்பு மிதிப்பீட்டு ஒழுங்குமுறைகள் மற்றும் ஏனைய சட்டரீதியான கடப்பாடுகளுடன் இணங்கியதாக உற்பத்தி வசதி இருத்தல் வேண்டும்.
- XI. அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தரங்களை உறுதி செய்வதாக இறுதி தயாரிப்பு இருத்தல் வேண்டும்.
- XII. பின்வரும் ஒவ்வொரு உருப்படிகளினதும் விளக்கம்:-
    - நீர் சுத்திகரிப்பு ஆலை உட்பட நீர் விநியோகம் (SPMC மூலம் காணி வழங்கப்படும்)
    - கட்டிடங்கள்
    - உற்பத்தி உபகரணம், கிருமியழித்தல் மற்றும் பொதியிடல்
    - தர உத்தரவாதம், தரக்கட்டுப்பாட்டு உபகரணம்
    - பயன்பாட்டு உபகரணம்
    - களஞ்சிய வசதி மற்றும் தேவையான உபகரணம்
    - பாதுகாப்பு உபகரணம் மற்றும் வசதி
    - ஒளியூட்டல் உட்பட மின் உபகரணம்
    - குழாய் பதித்தல்
    - சுத்த அறை தேவை
    - பொறிமுறை, HVAC, மின் மற்றும் குழாய் பொருத்தல் வடிவமைப்பு
    - அலுவலக உபகரணம் மற்றும் ஏனைய துணை உபகரணங்கள்
    - சிற்றுண்டிச்சாலை வசதி
    - (பொதுவான ஆடைகள் மற்று துப்புரவு அறை ஆடைகளுக்கான) சலவை வசதி
    - கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்
    - நீர் சேமிப்பு வசதி
    - பசுமை கட்டிட தொழில்நுட்பம் மற்றும் தொடர்புடைய சான்றிதழை நிறுவுதல்

6. இந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து ஒவ்வொரு விபரங்கள் மற்றும் அனைத்து உருப்படிகளையும் EOI உள்ளடக்கி இருத்தல் வேண்டும்.

7. EOI இனை சமர்ப்பிக்கும் ஆர்வமுடைய தரப்புகள் 2021 மே 31 ஆம் திகதிக்குள் எந்த ஒரு மேலதிக விரங்களுக்கும் பின்வருமாறு தொடர்புகொள்ளவும்.

**தொலைபேசி இலக்கம் - +94 11 2637574, +94 11 2635353**
**தொலைநகல் - +94 11 2634771**
**மின்னஞ்சல் - chairman@spmclanka.lk**

**டொக்டர் உத்பல இந்திரவன்ச**
**தலைவர்**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் - இலங்கை**

---

SPMC

அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்

இலங்கையில் ஔடத உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சின் கீழானது

# ஆர்வ வெளிப்பாட்டுக்கான அழைப்பு (EOI)

## இலங்கையில் வாய்வழி திட மாத்திரை வடிவங்கள் (பொதுவான மருந்துகள்) உற்பத்தி தொழிற்சாலை ஒன்றை அமைத்தல்

## (TO SET UP AN ORAL SOLID DOSAGE FORMS (GENERAL DRUGS) MANUFACTURING PLANT IN SRI LANKA)

1 **பின்னணி**

இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனமானது (SPMC) உள்நாட்டு தேவைகளை சிறந்த முறையில் வழங்குவதற்கு அரசாங்கத்திற்கு அத்தியாவசிய மருந்து உற்பத்திகளை தயாரிப்பதற்காக, 1957 இன் கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1987 இல் நிறுவப்பட்ட இலங்கையில் உள்ள அரசுக்கு சொந்தமான மிகப்பெரிய மருந்து உற்பத்தி நிறுவனமாகும். இலங்கையில் வாய்வழி திட மாத்திரை வடிவங்கள் (பொதுவான மருந்துகள்) உற்பத்தி தொழிற்சாலை ஒன்றை நிறுவுவது நீண்ட காலத் தேவையாக கருதப்படுவதோடு அது நாட்டிற்கு முதன்மையான தேவையாக SPMC மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இலங்கையின் 20 மில்லியனுக்கு மேற்பட்ட மக்களின் சுகாதார பராமரிப்பு தேவைக்காக வாய்வழி திட மாத்திரை வடிவங்களை (பொதுவான மருந்துகள்) இறக்குமதி செய்வதற்கு கணிசமான அந்நியச் செலாவணியை இலங்கை செலவிடுகிறது.

2. **நோக்கம்**

இலங்கையில் வாய்வழி திட மாத்திரை வடிவங்கள் (பொதுவான மருந்துகள்) உற்பத்தி தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு SPMC மேலுள்ளவாறு திட்டமிட்டிருப்பதோடு இது தொடர்பில் பொருத்தமான மற்றும் EU/ WHO/US GMP விற்கு இணங்கியதான வாய்வழி திட மாத்திரை வடிவங்கள் (பொதுவான மருந்துகள்) உற்பத்தி தொழிற்சாலையை அமைப்பதற்கு நன்கு நிறுவப்பட்ட புகழ்பெற்ற ஆர்வம் கொண்ட தரப்புகளிடம் இருந்து ஆர்வ வெளிப்பாட்டின் (நுழுஐ) மூலம் தொடர்புடைய தகவல்களை பெறும் நடைமுறையை SPMC மேற்கொண்டுள்ளது.

3. **தேவை**

மேல் குறிப்பிடப்பட்டவற்றிற்கு ஏற்ப, US/EU/WHO GMP வழிகாட்டல்களுக்கு இணங்கியதாக ஆர்வமுடைய தரப்பினர் இதனை ஒத்த தொழிற்சாலைகளை நிறுவியதில் தமது கடந்த கால அனுபவத்தை சமர்ப்பிப்பதற்கு கோரப்படுவதோடு SPMC Lotus Pharma Zone இன் முன்மொழியப்பட்ட திட்டத்திற்காக தொழிற்சாலை வடிவமைப்பை சமர்ப்பிப்பதற்கும் ஆர்வமுடைய தரப்புகள் கோரப்படுகின்றனர். ஆர்வமுடைய தரப்பின் திறமையான ஆலோசகரின் வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையின் கீழ் உற்பத்தி மேம்பாடு மற்றும் பூர்வாங்க செயற்பாடு மேற்கொள்ளப்படும் என்பதோடு இணக்கம் எட்டப்பட்ட காலத்தைக் கொண்ட தொழில்நுட்ப பரிமாற்றம் ஒன்றுக்கு ஒப்புக்கொள்ளல் வேண்டும். தவிர ஆர்வமுடைய தரப்பினர், வில்லை மற்றும் மருந்துறை தொழிற்சாலை (வாய்வழி திட மாத்திரை/ பொது உற்பத்திகள்), எலும்பியல் மற்றும் நரம்பியல் பதித்தல்கள் உற்பத்தி தொழிற்சாலை, Oncology மருந்துகள் மற்றும் அது சார்ந்த பயன்பாடுகள் உற்பத்தி தொழிற்சாலை, Cardiac Stents உற்பத்தி தொழிற்சாலை, Intra Ocular Lenses உற்பத்தி தொழிற்சாலை, நிர்வாகப் பகுதி, மத்திய களஞ்சியசாலை, மருந்து ஆய்வு நிலையம் மற்றும் ஆய்வுகூடம், Blood bags Cannula, infusion sets மற்றும் Catheters உற்பத்தி தொழிற்சாலை, அறுவைச் சிகிச்சை கையுறைகள் உற்பத்தி தொழிற்சாலை, Disposable Syringes உற்பத்தி தொழிற்சாலை, எத்திலின் ஒக்சைடு தொழிற்சாலை, மருத்துவ ஒட்சிசன் தொழிற்சாலை, மாநாட்டு மற்றும் கல்வி நிலையம், விடுதிகள், கழிவுப்பொருட்களை சுத்திகரிக்கும் தொழிற்சாலை மற்றும் வெளியேற்றல் (வடிகால் அமைப்பு), விநியோக முறைமையுடன் நீர் சுத்திகரிப்பு மற்றும் சேமிப்பு ஆகியவை உட்பட தொழிற்சாலைக்கான தளவமைப்பை தயாரிப்பது மற்றும் ஒட்டுமொத்த வலையத்திற்கான தயாரிப்பு வடிவமைப்பை ஒருங்கிணைப்பதற்கு இணங்குதல் வேண்டும். (ஆர்வமுடைய தரப்பினர் முதன்மை திட்ட கருத்திட்டத்தின்படி உள்ளக வீதிகள், நீர் விநியோகம் மற்றும் வடிகாலமைப்பு முதலியவற்றுக்கான Google map image மற்றும் நிலப்பரப்பு வரைபடத்தை இணைப்பதற்கு கோரப்படுகின்றனர்.) www.spmclanka.lk என்ற SPMC இணையதளத்தில் SPMC Lotus Pharma Zone இன் முன்மொழியப்பட்ட இடத்தின் நிலஅளவீட்டு திட்டப்படத்தை பார்க்கவும்.

4. **விரிவான EOI இனை சமர்ப்பித்தல்**

வாய்வழி திட மாத்திரை வடிவங்கள் (பொதுவான மருந்துகள்) உற்பத்தி தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு ஆர்வ வெளிப்பாட்டுக்கான அழைப்பு தொடர்பில் ஒரு விரிவான முன்மொழிவு மற்றும் தொடர்புடைய விபரங்களை 2021 ஜூன் 07ஆம் திகதி மு.ப. 10.30 அல்லது அதற்கு முன்னர் தலைவர், இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம், இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவல எஸ்டேட், இரத்மலானை, இலங்கை என்ற முகவரிக்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் கைகளால் கொண்டுவந்து சேர்த்தல் அல்லது SPMC இற்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வாய்வழி திட மாத்திரை வடிவங்கள் (பொதுவான மருந்துகள்) உற்பத்தி தொழிற்சாலை நிறுவுவதற்கான EOI" என்று குறிப்பிடுதல் வேண்டும். (தாமதிக்கும் EOI கள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது. மின்னஞ்சலில் அனுப்பப்படுபவை கவனத்தில் கொள்ளப்படாது.)

5 **சமர்ப்பிக்கப்பட வேண்டிய விபரங்கள்**

**5.1 பொது தகவல்**

- I. நிறுவனத்தின் விபரம்
- II. இதனை ஒத்த வசதியை மேம்படுத்திய திறன், (வாய்வழி திட மாத்திரை வடிவங்கள் (பொதுவான மருந்துகள்) உற்பத்தி துறையில் அனுபவம் மற்றும் (ஆர்வமுடைய தரப்பின் குடியிருப்பு நாட்டுக்கு மேலதிகமாக) வேறு நாடுகளில் வாய்வழி திட மாத்திரை வடிவங்கள் (பொதுவான மருந்துகள்) உற்பத்தி தொழிற்சாலைகளை நிறுவிய அனுபவம்.
- III. (தொடர்புடைய தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் முக்கிய முகாமைத்துவ ஆட்கள் உட்பட) தமது தொழில்நுட்ப தகைமைகளின் விபரங்களுடன் ஊழியர்களின் சுயவிபரம்
- IV. இருக்குமாயின் இலங்கையில் உள்ள உள்நாட்டு முகவரின் விபரம்.

**5.2 நிதித் தகவல்**

- I. கணக்காய்வு செய்யப்பட்ட நிதிய அறிக்கைகளுடன் சேர்த்து ஐந்து தொடர்ச்சியான வர்த்தக ஆண்டுகளுக்கான ஒட்டுமொத்த வர்த்தகப் புரள்வு அறிக்கைகள்
- II. கடந்த மூன்று ஆண்டுகளுக்கான நிலுவை மற்றும் எதிர்பாரா பொறுப்புகள் பற்றிய அறிக்கைகள்.

**5.3 தொழில்நுட்ப தகவல்**

- I. பயன் உட்பட ஒட்டுமொத்த வசதிக்காக முன்மொழியப்பட்ட தளவமைப்பின் (பொது ஏற்பாடு) வரைவு (3D வடிவத்தில் வடிவமைக்கப்பட்ட தளவமைப்பு)
- II. சோதனை ஓட்டம் மற்றும் வர்த்தக உற்பத்தி வரை திட்டத்தை செயற்படுத்தும் காலக்கெடு
- III. தொழிற்சாலையை ஒருங்கிணைப்பதற்கு கட்டிட முகாமைத்துவ அமைப்பு ஆர்வமுடைய தரப்புகள் மாற்றங்கள் தொடர்பில் எந்த ஒரு மென்பொருளிலேனும் வழக்கமான இற்றைப்படுத்தல்களை வழங்கல் வேண்டும்.
- IV. முன்மொழியப்பட்ட தயாரித்தல், திறன், தேவைப்படும் (தொழிற்சாலை காரணி மற்றும் செயல்திறன், உற்பத்தி நாடு, தயாரிப்பு மற்றும் வடிவம், உத்தரவாதம்) உட்பட ஆய்வுகூட உபகரணம் மற்றும் கருவிகள், பயன்படும் உபகரணங்களின் விரிவான உற்பத்தி பட்டியல்
- V. முன்மொழியப்பட்ட பொதியிடும் பொருட்களின் விபரம் மற்றும் அதற்கான காரணம்
- VI. உற்பத்தி செயற்பாட்டு விளக்கப்படத்துடன் திறன் சமநிலையின் விவரணம்
- VII. உபகரணம், முறைமைகள் மற்றும் செயற்பாட்டுக்கான தகைமை மற்றும் மதிப்பீட்டுத் தேவை மற்றும் அதற்கு தேவையான காலம்.
- VII. இலங்கையின் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபை (NMRA) மூலம் கோரப்பட்டவாறு உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் EU GMP வழிகாட்டல்களின்படி தேவையான ஆவணங்களுடன் முன்மொழியப்பட்ட தர முறைமைகள்
- IX. EU GMP, WHO GMP தேவைகளை உறுதி செய்வதாக உற்பத்தி வசதி இருத்தல் வேண்டும்.
- X. உள்நாட்டில் நடைமுறையில் உள்ள சுற்றாடல் பாதிப்பு மதிப்பீட்டு ஒழுங்குமுறைகள் மற்றும் ஏனைய சட்டரீதியான கடப்பாடுகளுடன் இணங்கியதாக உற்பத்தி வசதி இருத்தல் வேண்டும்.
- XI. அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தரங்களை உறுதி செய்வதாக இறுதி தயாரிப்பு இருத்தல் வேண்டும்.
- XII. பின்வரும் ஒவ்வொரு உருப்படிகளினதும் விளக்கம்:-
    - நீர் சுத்திகரிப்பு ஆலை உட்பட நீர் விநியோகம் (SPMC மூலம் காணி வழங்கப்படும்)
    - கட்டிடங்கள்
    - உற்பத்தி உபகரணம், கிருமியழித்தல் மற்றும் பொதியிடல்
    - தர உத்தரவாதம், தரக்கட்டுப்பாட்டு உபகரணம்
    - பயன்பாட்டு உபகரணம்
    - களஞ்சிய வசதி மற்றும் தேவையான உபகரணம்
    - பாதுகாப்பு உபகரணம் மற்றும் வசதி
    - ஒளியூட்டல் உட்பட மின் உபகரணம்
    - குழாய் பதித்தல்
    - சுத்த அறை தேவை
    - பொறிமுறை, HVAC, மின் மற்றும் குழாய் பொருத்தல் வடிவமைப்பு
    - அலுவலக உபகரணம் மற்றும் ஏனைய துணை உபகரணங்கள்
    - சிற்றுண்டிச்சாலை வசதி
    - (பொதுவான ஆடைகள் மற்று துப்புரவு அறை ஆடைகளுக்கான) சலவை வசதி
    - கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்
    - நீர் சேமிப்பு வசதி
    - பசுமை கட்டிட தொழில்நுட்பம் மற்றும் தொடர்புடைய சான்றிதழை நிறுவுதல்

6. இந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து ஒவ்வொரு விபரங்கள் மற்றும் அனைத்து உருப்படிகளையும் EOI உள்ளடக்கி இருத்தல் வேண்டும்.

7. EOI இனை சமர்ப்பிக்கும் ஆர்வமுடைய தரப்புகள் 2021 மே 31 ஆம் திகதிக்குள் எந்த ஒரு மேலதிக விரங்களுக்கும் பின்வருமாறு தொடர்புகொள்ளவும்.

**தொலைபேசி இலக்கம் - +94 11 2637574, +94 11 2635353**
**தொலைநகல் - +94 11 2634771**
**மின்னஞ்சல் - chairman@spmclanka.lk**

**டொக்டர் உத்பல இந்திரவன்ச,**
**தலைவர்,**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் - இலங்கை.**

SPMC

அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்

இலங்கையில் ஔடத உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சின் கீழானது

# ஆர்வ வெளிப்பாட்டுக்கான அழைப்பு (EOI)

## இலங்கையில் எலும்பியல் மற்றும் நரம்பியல் பதித்தல்கள் உற்பத்தி தொழிற்சாலை ஒன்றை அமைத்தல்

## (TO SET UP AN ORTHOPEDIC AND NEUROSURGICAL IMPLANTS MANUFACTURING PLANT IN SRI LANKA)

**1. பின்னணி**

இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனமானது (SPMC) உள்நாட்டு தேவைகளை சிறந்த முறையில் வழங்குவதற்கு அரசாங்கத்திற்கு அத்தியாவசிய மருந்து உற்பத்திகளை தயாரிப்பதற்காக, 1957 இன் கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1987 இல் நிறுவப்பட்ட இலங்கையில் உள்ள அரசுக்கு சொந்தமான மிகப்பெரிய மருந்து உற்பத்தி நிறுவனமாகும். இலங்கையில் எலும்பியல் மற்றும் நரம்பியல் பதித்தல்கள் உற்பத்தி தொழிற்சாலை ஒன்றை நிறுவுவது நீண்ட காலத் தேவையாக கருதப்படுவதோடு அது நாட்டிற்கு முதன்மையான தேவையாக SPMC மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இலங்கையின் 20 மில்லியனுக்கு மேற்பட்ட மக்களின் சுகாதார பராமரிப்பு தேவைக்காக எலும்பியல் மற்றும் நரம்பியல் பதித்தல்களை இறக்குமதி செய்வதற்கு கணிசமான அந்நியச் செலாவணியை இலங்கை செலவிடுகிறது.

**2. நோக்கம்**

இலங்கையில் எலும்பியல் மற்றும் நரம்பியல் பதித்தல்கள் உற்பத்தி தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு SPMC மேலுள்ளவாறு திட்டமிட்டிருப்பதோடு இது தொடர்பில் பொருத்தமான மற்றும் EU/ WHO/US GMP விற்கு இணங்கியதான எலும்பியல் மற்றும் நரம்பியல் பதித்தல்கள் உற்பத்தி தொழிற்சாலையை அமைப்பதற்கு நன்கு நிறுவப்பட்ட புகழ்பெற்ற ஆர்வம் கொண்ட தரப்புகளிடம் இருந்து ஆர்வ வெளிப்பாட்டின் (EOI) மூலம் தொடர்புடைய தகவல்களை பெறும் நடைமுறையை SPMC மேற்கொண்டுள்ளது.

**3. தேவை**

மேல் குறிப்பிடப்பட்டவற்றிற்கு ஏற்ப, EU/ WHO/US GMP வழிகாட்டல்களுக்கு இணங்கியதாக ஆர்வமுடைய தரப்பினர் இதனை ஒத்த தொழிற்சாலைகளை நிறுவியதில் தமது கடந்த கால அனுபவத்தை சமர்ப்பிப்பதற்கு கோரப்படுவதோடு SPMC Lotus Pharma Zone இன் முன்மொழியப்பட்ட திட்டத்திற்காக தொழிற்சாலை வடிவமைப்பை சமர்ப்பிப்பதற்கும் ஆர்வமுடைய தரப்புகள் கோரப்படுகின்றனர். ஆர்வமுடைய தரப்பின் திறமையான ஆலோசகரின் வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையின் கீழ் உற்பத்தி மேம்பாடு மற்றும் பூர்வாங்க செயற்பாடு மேற்கொள்ளப்படும் என்பதோடு இணக்கம் எட்டப்பட்ட காலத்தைக் கொண்ட தொழில்நுட்ப பரிமாற்றம் ஒன்றுக்கு ஒப்புக்கொள்ளல் வேண்டும். தவிர ஆர்வமுடைய தரப்பினர், வில்லை மற்றும் மருந்துறை தொழிற்சாலை (வாய்வழி திட மாத்திரை/ பொது உற்பத்திகள்), எலும்பியல் மற்றும் நரம்பியல் பதித்தல்கள் உற்பத்தி தொழிற்சாலை, Oncology மருந்துகள் மற்றும் அது சார்ந்த பயன்பாடுகள் உற்பத்தி தொழிற்சாலை, Cardiac Stents உற்பத்தி தொழிற்சாலை, Intra Ocular Lenses உற்பத்தி தொழிற்சாலை, நிர்வாகப் பகுதி, மத்திய களஞ்சியசாலை, மருந்து ஆய்வு நிலையம் மற்றும் ஆய்வுகூடம், Blood bags Cannula, infusion sets மற்றும் Catheters உற்பத்தி தொழிற்சாலை, அறுவைச் சிகிச்சை கையுறைகள் உற்பத்தி தொழிற்சாலை, Disposable Syringes உற்பத்தி தொழிற்சாலை, எத்திலின் ஒக்சைடு தொழிற்சாலை, மருத்துவ ஒட்சிசன் தொழிற்சாலை, மாநாட்டு மற்றும் கல்வி நிலையம், விடுதிகள், கழிவுப்பொருட்களை சுத்திகரிக்கும் தொழிற்சாலை மற்றும் வெளியேற்றல் (வடிகால் அமைப்பு), விநியோக முறைமையுடன் நீர் சுத்திகரிப்பு மற்றும் சேமிப்பு ஆகியவை உட்பட தொழிற்சாலைக்கான தளவமைப்பை தயாரிப்பது மற்றும் ஒட்டுமொத்த வலையத்திற்கான தயாரிப்பு வடிவமைப்பை ஒருங்கிணைப்பதற்கு இணங்குதல் வேண்டும். (ஆர்வமுடைய தரப்பினர் முதன்மை திட்ட கருத்திட்டத்தின்படி உள்ளக வீதிகள், நீர் விநியோகம் மற்றும் வடிகாலமைப்பு முதலியவற்றுக்கான Google map image மற்றும் நிலப்பரப்பு வரைபடத்தை இணைப்பதற்கு கோரப்படுகின்றனர்.) www.spmclanka.lk என்ற SPMC இணையத்தளத்தில் SPMC Lotus Pharma Zone இன் முன்மொழியப்பட்ட இடத்தின் நிலஅளவீட்டு திட்டப்படத்தை பார்க்கவும்.

**4. விரிவான EOI இனை சமர்ப்பித்தல்**

எலும்பியல் மற்றும் நரம்பியல் பதித்தல்கள் உற்பத்தி தொழிற்சாலையை நிறுவுவதற்கான ஆர்வ வெளிப்பாட்டுக்கான அழைப்பு தொடர்பில் ஒரு விரிவான முன்மொழிவு மற்றும் தொடர்புடைய விபரங்களை 2021 ஜூன் 07 ஆம் திகதி மு.ப. 10.30 அல்லது அதற்கு முன்னர் தலைவர், இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம், இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவல எஸ்டேட், இரத்மலானை, இலங்கை என்ற முகவரிக்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் கைகளால் கொண்டுவந்து சேர்த்தல் அல்லது SPMC இற்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘‘எலும்பியல் மற்றும் நரம்பியல் பதித்தல்கள் உற்பத்தி தொழிற்சாலை நிறுவுவதற்கான EOI’’ என்று குறிப்பிடுதல் வேண்டும். (தாமதிக்கும் EOI கள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது. மின்னஞ்சலில் அனுப்பப்படுபவை கவனத்தில் கொள்ளப்படாது.)

**5. சமர்ப்பிக்கப்பட வேண்டிய விபரங்கள்**

**5.1 பொது தகவல்**

I. நிறுவனத்தின் விபரம்

II. இதனை ஒத்த வசதியை மேம்படுத்திய திறன், (எலும்பியல் மற்றும் நரம்பியல் பதித்தல்கள் உற்பத்தி துறையில் அனுபவம் மற்றும் (ஆர்வமுடைய தரப்பின் குடியிருப்பு நாட்டுக்கு மேலதிகமாக) வேறு நாடுகளில் எலும்பியல் மற்றும் நரம்பியல் பதித்தல்கள் உற்பத்தி தொழிற்சாலைகளை நிறுவிய அனுபவம்.

III. (தொடர்புடைய தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் முக்கிய முகாமைத்துவ ஆட்கள் உட்பட) தமது தொழில்நுட்ப தகைமைகளின் விபரங்களுடன் ஊழியர்களின் சுயவிபரம்

IV. இருக்குமாயின் இலங்கையில் உள்ள உள்நாட்டு முகவரின் விபரம்.

**5.2 நிதித் தகவல்**

I. கணக்காய்வு செய்யப்பட்ட நிதிய அறிக்கைகளுடன் சேர்த்து ஐந்து தொடர்ச்சியான வர்த்தக ஆண்டுகளுக்கான ஒட்டுமொத்த வர்த்தகப் புரள்வு அறிக்கைகள்

II. கடந்த மூன்று ஆண்டுகளுக்கான நிலுவை மற்றும் எதிர்பாரா பொறுப்புகள் பற்றிய அறிக்கைகள்.

**5.3 தொழில்நுட்ப தகவல்**

I. பயன் உட்பட ஒட்டுமொத்த வசதிக்காக முன்மொழியப்பட்ட தளவமைப்பின் (பொது ஏற்பாடு) வரைவு (3D வடிவத்தில் வடிவமைக்கப்பட்ட தளவமைப்பு)

II. சோதனை ஓட்டம் மற்றும் வர்த்தக உற்பத்தி வரை திட்டத்தை செயற்படுத்தும் காலக்கெடு

III. தொழிற்சாலையை ஒருங்கிணைப்பதற்கு கட்டிட முகாமைத்துவ அமைப்பு; ஆர்வமுடைய தரப்புகள் மாற்றங்கள் தொடர்பில் எந்த ஒரு மென்பொருளிலேனும் வழக்கமான இற்றைப்படுத்தல்களை வழங்கல் வேண்டும்.

IV. முன்மொழியப்பட்ட தயாரித்தல், திறன், தேவைப்படும் (தொழிற்சாலை காரணி மற்றும் செயல்திறன், உற்பத்தி நாடு, தயாரிப்பு மற்றும் வடிவம், உத்தரவாதம்) உட்பட ஆய்வுகூட உபகரணம் மற்றும் கருவிகள், பயன்படும் உபகரணங்களின் விரிவான உற்பத்தி பட்டியல்

V. முன்மொழியப்பட்ட பொதியிடும் பொருட்களின் விபரம் மற்றும் அதற்கான காரணம்

VI. உற்பத்தி செயற்பாட்டு விளக்கப்படத்துடன் திறன் சமநிலையின் விவரணம்

VII. உபகரணம், முறைமைகள் மற்றும் செயற்பாட்டுக்கான தகைமை மற்றும் மதிப்பீட்டுத் தேவை மற்றும் அதற்கு தேவையான காலம்.

VIII. இலங்கையின் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபை (NMRA) மூலம் கோரப்பட்டவாறு உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் EU GMP வழிகாட்டல்களின்படி தேவையான ஆவணங்களுடன் முன்மொழியப்பட்ட தர முறைமைகள்

IX. EU GMP, WHO GMP தேவைகளை உறுதி செய்வதாக உற்பத்தி வசதி இருத்தல் வேண்டும்.

X. உள்நாட்டில் நடைமுறையில் உள்ள சுற்றாடல் பாதிப்பு மதிப்பீட்டு ஒழுங்குமுறைகள் மற்றும் ஏனைய சட்டரீதியான கடப்பாடுகளுடன் இணங்கியதாக உற்பத்தி வசதி இருத்தல் வேண்டும்.

XI. அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தரங்களை உறுதி செய்வதாக இறுதி தயாரிப்பு இருத்தல் வேண்டும்.

XII. பின்வரும் ஒவ்வொரு உருப்படிகளினதும் விளக்கம்:-

- நீர் சுத்திகரிப்பு ஆலை உட்பட நீர் விநியோகம் (SPMC மூலம் காணி வழங்கப்படும்)
- கட்டிடங்கள்
- உற்பத்தி உபகரணம், கிருமியழித்தல் மற்றும் பொதியிடல்
- தர உத்தரவாதம், தரக்கட்டுப்பாட்டு உபகரணம்
- பயன்பாட்டு உபகரணம்
- களஞ்சிய வசதி மற்றும் தேவையான உபகரணம்
- பாதுகாப்பு உபகரணம் மற்றும் வசதி
- ஒளியூட்டல் உட்பட மின் உபகரணம்
- குழாய் பதித்தல்
- சுத்த அறை தேவை
- பொறிமுறை, HVAC, மின் மற்றும் குழாய் பொருத்தல் வடிவமைப்பு
- அலுவலக உபகரணம் மற்றும் ஏனைய துணை உபகரணங்கள்
- சிற்றுண்டிச்சாலை வசதி
- (பொதுவான ஆடைகள் மற்று துப்புரவு அறை ஆடைகளுக்கான) சலவை வசதி
- கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்
- நீர் சேமிப்பு வசதி
- பசுமை கட்டிட தொழில்நுட்பம் மற்றும் தொடர்புடைய சான்றிதழை நிறுவுதல்

6. இந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து ஒவ்வொரு விபரங்கள் மற்றும் அனைத்து உருப்படிகளையும் EOI உள்ளடக்கி இருத்தல் வேண்டும்.

7. EOI இனை சமர்ப்பிக்கும் ஆர்வமுடைய தரப்புகள் 2021 மே 31 ஆம் திகதிக்குள் எந்த ஒரு மேலதிக விரங்களுக்கும் பின்வருமாறும் தொடர்புகொள்ளவும்.

**தொலைபேசி இலக்கம் - +94 11 2637574, +94 11 2635353**
**தொலைநகல் - +94 11 2634771**
**மின்னஞ்சல் - chairman@spmclanka.lk**

**டொக்டர் உத்பல இந்திரவன்ச**
**தலைவர்**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் - இலங்கை**

---

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## மோட்டார் வாகனங்கள்

### 117 வேன்கள் விற்பனைக்கு

612319 Toyota ஹைஏஸ் செல் மொடல் ஹைரூப் சுப்பர் லோன் வேன் விற்பனைக்கு 17 இலட்சம் 075 2652582, 077 0591335 034642

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

கம்பெனிக்கு உரித்தான மோட்டார் வாகனம் (BIKE) உடனடி விற்பனைக்கு உண்டு. YAMAHA CRUX - 106CC, YEAR 2006. மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும். 0712738917. 033162

## வர்த்தகம்

### 209 வியாபார ஸ்தலம் வாடகைக்கு/ குத்தகைக்கு

180 இற்கு மேற்பட்ட அரச நிறுவனங்கள் உள்ள பத்தரமுல்ல நகரில் 500 ச.அடி வர்த்தக அல்லது அலுவலகத்திற்காக குத்தகைக்கு உண்டு. தொடர்பு 071 7001066 033147

## வேலைவாய்ப்பு

### 315 வெற்றிடங்கள் கல்வி

காலியில் உள்ள ஆங்கில மொழிமூல தனியார் பாடசாலைக்கு ஆசிரியர்கள் தேவை. விஞ்ஞானம், சுகாதாரம் மற்றும் சிங்களம் O/ L வரை கற்பிப்பதற்காக A/ L விஞ்ஞானத்தில் தகைமையுடையோர் மற்றும் ஆங்கிலத்தில் சுமாரான அறிவு உடையோர் விண்ணப்பிக்கலாம். 0 7 71545284/ 0 7 72945268. 031779

### 316 வெற்றிடங்கள் ஆடை தயாரிப்பு/ புடவைகள்

தங்கொட்டுவையில் அமைந்துள்ள துணி உற்பத்தித் தொழிற்சாலைக்கு ஆண்/ பெண் ஊழியர்கள் தேவை. ஒரு நாள் சம்பளம் ரூ. 1 200/ முதல் ரூ. 1500/ மாதாந்தம் ரூ. 50,0 00 வழங்கப்படும். இலவச தங்குமிட வசதியுடன் உணவு கொடுப்பனவு வழங்கப்படும். நேரில் வரவும். இல. 08, கைத்தொழில் பேட்டை, தங்கொட்டுவ. தொடர்புகளுக்கு. 077 222994 7/ 077 2884959 034847

வத்தளையில் அமைந்துள்ள எமது துணி உற்பத்தித் தொழிற்சாலைக்கு ஆண்/ பெண் ஊழியர்கள் தேவை. ஒரு நாள் சம்பளம் ரூ. 1200/ முதல் ரூ. 1500/ மாதாந்தம் ரூ. 50, 000 வரை வழங்கப்படும். இலவச தங்குமிட வசதியுடன் சகாய விலையில் மூன்று நேரமும் உணவும் வழங்கப்படும் நேரில் வரவும். இல. 18, வெளியமுன வீதி, ஹேகித்த, வத்தளை . தொடர்புகளுக்கு. 076 6200300 034849

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

பேராதனை மருத்துவ இல்லத்திற்கு சிறு குழந்தையை கவனித்துக்கொண்டு வீட்டு வேலைக்கு உதவுவதற்கு பெண் தேவை. சம்பளம் திறமையின் அடிப்படையில். 077 4805164 033819

வீட்டில் தங்கி வேலை செய்வதற்கு வீட்டுப் பணிப்பெண்கள் தேவை. வயது 35 55 இடையில் சம்பளம் 35,000/ மட்டும் மேல் மாகாணம் விரும்பத்தக்கது. 0777531070, 0777 172440 034147

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

கொழும்பு முதல்தர உணவு உற்பத்தி நிறுவனத்திற்கு பீஸா (Pizza) தயாரிப்புக்கு அனுபவமுள்ள கோக்கி தேவை. ரூ. சம்பளம் பேசித் தீர்க்கலாம். அழைப்பு தொ.பே. இல. 0777779406/ 011 2582925 033343

திவுலப்பிட்டிய மொத்த விற்பனை நிலையத்திற்கு ஆண் ஊழியர் உடன் தேவை. வயது 18 25 இடையில். 0761944664/ 0715133050 034303

போல்கோடாவில் உள்ள ஒரு வில்லாவில் இரண்டு ஆட்கள் வேலைக்கு தேவை. 1. சமையல்காரர் (ஆண்) 2. வீட்டு வேலைக்காரர் (ஆண்) நேர்முக தேர்வில் பங்குகொள்ள உங்கள் தகவல்களை கீழுள்ள குறிப்புகளுக்கு அனுப்பவும். devin.gooneward ena@gmail.com 0773815625 033846

ஹோமாகம, பனாகொட (டெம்பிள்பேர்க் கைத்தொழில் வலயம்) உற்பத்திக் கம்பனிக்கு உற்பத்தி பிரிவு ஊழியர்கள். வயது 18 30, தங்குமிடம் இல்லை. நல்ல சம்பளம் மற்றும் ஊக்குவிப்புக்கள். 0778869803/ asifplastic508@gmail.com 034152

07 1 86 53 77 8 நட்சத்திர ஹோட்டல் இற்கு சிவில் உடையில் பாது காப்பு அதிகாரிகள் உடனடியாக சேர்த்துக் கொள்ளல். உணவு இலவசம். கொழும்பு. 071 865 3780 அலுவலகம் 0718653781, 07 63155331 034468

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

அவிசாவளை எஹலிய கொட 50 ஏக்கர் மட்டில் காணியில் கொழுந்து பறித்தல்/ பால்வெட்டுதல் மற்றும் உடன் தொடர்புகொள்ள அறிவுள்ள 04 குடும்பங்கள் தேவை. தங்கியிருப்பதற்கு தோட்ட வீடு இலவசம். (நீர்/ மின்சாரம்) அரசின் சகல கொடுப்பனவுகள் 07 நாட்கள் வேலை செய்யக்கூடிய மேலதிக கொடுப்பனவுகளுடன் தொடர்பு 0 714283882/ 077 7779406 033345

### 325 தொழில்துறை பொது

கொழும்பில் அமைந்துள்ள எண்ணெய் நிரப்பு நிலையத்திற்கு பயிற்சிபெற்ற/ பெறாத பொம்பர்கள் தேவை. வாரத்தில் 04 வேலை நாட்கள் மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுடன். சகல சான்றிதழ்களினதும் மூலம் பிரதியுடன் வார நாட்களில் மு.ப. 10.00 பி . ப. 3.00 இற்கு இடையில் நேரில் விசாரிக்கவும். சிபெட்கோ நிரப்பு நிலையம். இல. 1 26, நீர்கொழும்பு வீதி, பேலியகொடை. 034155

டீ பெக்ஸ் (தனியார்) நிறுவனத்திற்கு உடனடியாக கையுதவியாட்கள் (Tea Boys) தேவை. இல. 68, W.A. சில்வா மாவத்த, கொழும்பு06. தொடர்பு 07773111 10 033369

### 327 வேலை தேவை

காலியிலுள்ள ஓர் 28 வயது ஆணுக்கு சாரதி வேலை தேவை. பாரமற்ற வாகனங்களில் ஐந்து வருட அனுபவம். சாரதி வேலைக்காக சவூதி அரேபிய லைசன்ஸ் உண்டு. அழையுங்கள் 0761812354. 031782

சாரதி வேலை தேவை. நாரஹேன்பிட்ட 40 வயது ஆண் இலகு வாகனம் செலுத்தி 10 வருட அனுபவம். மற்றும் குவைட் சாரதி அனுமதிப் பத்திரத்துடன் 0761203052 034335

## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

கொழும்பு13 கொட்டாஞ்சேனையில் வீடு விற்பனைக்கு. 15 மில்லியன். தரகர் வேண்டாம். தொடர் 076 6836651 034536

திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05, 19 பேர்ச் காணி விற்பனைக்கு. கொள்வனவாளர்கள் மட்டும் அழையுங்கள். 0761203052. 032466

### 672 வீடு சொத்து வாடகைக்கு/குத்தகைக்கு தேவை

நுவரெலியா நகரத்திலிருந்து 10 km ற்குள் பயிர் செய்கைக்கு உகந்த 1/2 ஏக்கர், 2 ஏக்கர் வரையிலான காணி குத்தகைக்கு தேவை. 0760623855 034803

வாரமஞ்சரி திருமண சேவைகள்

## மணமகன்

வயது 52 முஸ்லிம் தொழில் பென்சிகடை திருமணம் ஆகாத மணமகள் தேவை. முஸ்லிம் அல்லது தமிழ் வேறு மதத்தவர்களும் விரும்பினால் தொடர்பு கொள்ளலாம். குழந்தைகள் இல்லாத விவாகரத்துப் பெற்றவர்களும் கவனத்தில் கொள்ளப்படும். 0555733259 G162740

**Repeat Your Ad For Better Offers**

**The Housewives' companion Classifieds on Daily News**



## அன்னையர் தினம்:

# அன்னையர் அந்திமம் விடுதிகளில் முடியலாமா?



சிவகுமார் திவியா

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பதும், தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை" என்பதும் ஆன்றோர் வாக்கு. தாய் என்பவள் மனிதர்களுக்கு மட்டுமன்றி சகல ஜீவராசிகளுக்கும் முக்கியமான வள். அவளின் அன்பை நாம் விலை கொடுத்து வாங்கி விட முடியாது. அந்த அன்புக்கு ஈடாக உலகில் எதுவும் கிடையாது. நாம் இந்த உலகில் தோன்றக் காரணமாக இருப்பவள் நம் அம்மா. நமக்கு உடலையும் உயிரையும் கொடுத்தது மட்டுமின்றி இளமையிலிருந்தே நம்மை தாலாட்டி, சீராட்டி, பாராட்டி வளர்த்து ஆளாக்குவதில் அம்மாவின் பங்கினை வேறு எவரும் செய்ய இயலாது.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது தமிழில் வழங்கப்படும் முதுமொழி. அம்மாவிற்கு நாம் நன்றி உடையவர்களாக இருக்க வேண்டும். அன்னையை நாம் தெய்வமாகக் கருதி போற்றி வணங்க வேண்டும். நமது அன்னையின் மூலமாகவே இந்த உலகில் நாம் நமது தந்தை மற்றும் பிற உறவுகளை அறிகிறோம். உலகில் எதற்கும் ஈடு இணையற்றது அன்னையின் அன்பு தான். அனைவருக்கும், அன்னைதான் முதல் தெய்வம். நம்மை உலகுக்கு அடையாளம் காட்டியவர் அன்னை மட்டுமே. வயதான காலத்திலும் அவர்களை அன்போடு நடத்த வேண்டும். ஆனால் இன்று பெற்றோர் அன்பு, சகோதர பாசம் உறவுத்தொடர்புகள் எல்லாம் குறைந்து வருகிறது. 'வீட்டின் பெயரோ அன்னை இல்லம் அன்னை இருப்பதோ முதியோர் இல்லம்.' பல இடங்களில் இன்றைய நிலை இது தான். இந்த நிலை மாறவேண்டும் மாற்றவேண்டும்.

தாய்மை என்பது உன்னதமானது. வீடு என்பது மண்ணாலும் கற்களாலும் ஆனது. அதுபோல் ஒரு குடும்பம் என்பது அன்பாலும் பாசத்தாலும் ஆனது. அந்தப்பாசப்பிணைப்பு இன்று கொஞ்சம் கொஞ்சமாக மனித மனங்களிலிருந்து கழன்று கொண்டிருக்கிறதோ என்கின்ற ஐயப்பாடு தோன்றுகிறது. மாதா, பிதா, குரு, தெய்வம் என்று தாயை முதலிடத்தில் வைத்தவர்கள் நம் முன்னோர்கள். இயந்திர உலகில், பெற்றோல் போடாத இயந்திர மனிதர்களாய் தம் தேவைகளை தேடி, மனிதர்கள் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். பல பெற்றோர், முதியோர் இல்லத்தில் தான் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்களிடம், "ஏன் முதியோர் இல்லத்தில் வசிக்கிறீர்கள்' என்று கேட்டபோது.. "எங்கள் பிள்ளைகளுக்கு பாரமாக இருக்க விரும்பவில்லை; அதனால் முதியோர் இல்லத்திற்கு வந்து விட்டோம்' என்கிறார்கள். தங்கள் பிள்ளைகள், சரியாக கவனிக்க வில்லையென்றாலும், பிள்ளைகளை விட்டுக்கொடுக்காமல் பேசுகின்றனர். ஒரு தாய், பிள்ளைகளிடம் எதிர்பார்ப்பதெல்லாம் அன்பும், அரவணைப்பும் தான். ஒவ்வொரு பிள்ளையும் தன் தாயை புரிந்து, முதியோர் இல்லத்திற்கு அனுப்பாமல், அன்புகாட்டினால் ஒவ்வொரு நாளும் அன்னையர் தினம் தான். உதிரம் கொடுத்து, உயிர் கொடுத்த அன்னையை, முதியோர் இல்லங்களுக்கு அனுப்பாத பிள்ளைகளாக இருப்போம். வருங்காலத்தில் முதியோர் இல்லங்கள் இல்லாத சமுதாயத்தை உருவாக்கிட உதவவேண்டும் பெண் ஒருவனால் மனைவியாகப் பார்க்கப்படுகிறாள். ஆனால் அவள் எப்போதும் தாயாகவே போற்றப்படுகிறாள். பெண் என்பவள் நம் கண்களுக்குத் தரிசனம் தரும் தெய்வம். அவள்தன் முழுவாழ்க்கையையும் தாய்மைக்கே அர்ப்பணிக்கிறாள்'

"பூ அரும்பாகி, மலராகி, கனியாய் கனிவதுபோல், பெண்களுக்கும் வாழ்வில் பெண்மை, தாய்மை, இறைமை என் மூன்று நிலைகள் உண்டு. பெண்மைக்குள் தாய்மை மலர்ந்தால் இறைமை தானாய் மலரும். மலையில் உள்ள கல்லை யாரும் மதித்து வணங்குவதில்லை. அது சிற்பியின் கைபட்டு சிலையாகும்போது அதற்கு ஒரு மரியாதை பிறக்கிறது. அந்த சிலை கோவிலின் கருவறையில் வைக்கப்படும்போது தொழுகைக்குரிய தெய்வமாகிறது. கன்னிப் பெண் ஒரு கல்லைப் போன்றவள். இல்லற வாழ்க்கையில் அவள் சிற்பமாக செதுக்கப்படுகிறாள். தாயாகும்போது குடும்பக்கோவிலில் கருவறைக்குள் அவள் கடவுளாக்கப்படுகிறாள்.

உலகத்தின் எந்த இடத்திலும் எங்கேயும் கெட்ட தாய் இல்லை. "தாயிற்சிறந்த கோவிலுமில்லை"".. என்ற வரிகள் தாய்மையின் புனிதத்துவம், தாய்மையின் பெருமை, தாய்மையின் தியாகம் போன்றவற்றை எடுத்துக்கூறத்தக்க வரிகளாகும். இந்த உலகில் தாய்க்கு ஈடாக ஒப்பிட எதுவுமே இல்லை. ஒரு பெண்ணானவள் மகளாக, சகோதரியாக, தாயாக, தாரமாக, தோழியாக வீட்டிலுள்ளோரைப் பக்குவப்படுத்தும் பாட்டியாக, அனுபவங்களின் அரவணைப்பில் வழி நடத்திச்செல்லும் ஆசானாக இப்படி தன் வாழ்நாளில் எத்தனையோ பாத்திரங்களில் வலம் வந்தாலும் 'அன்னை' என்ற பாத்திரம்தான் மிக உன்னதமான இடத்தை வகிக்கிறது. தாய்மை என்பது ஓர் உன்னதமான உணர்வு.

அத்தகைய தாயைப் போற்றவே மே மாதத்தின் இரண்டாவது ஞாயிறு அன்னையர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. 'அன்னையர் தினம் ' Mother's Day உலகெங்கும் கொண்டாடக் காரணமாக இருந்த பின்னணி பற்றி நாம் ஒரு சிறிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

அன்னையருக்கு மரியாதை செலுத்தும் சம்பிரதாயம் புராதன காலத்திலே தொடங்கி விட்டதாக வரலாறு சான்று பகருகின்றது. பண்டைய கால மனிதர்களால் அன்னையர் புராணங்கள் கதையாக வழங்கப்பட்டு வந்தன. இதில் முக்கியமாக பெண் கடவுளான சைபீல் வணங்கப்பட்டாள்.

20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நவீன காலத்தில் உலகளாவியரீதியில் அன்னையர் தினம் கொண்டாடுவதற்கான சந்தர்ப்பம் உருவான வரலாற்றின் பின்னணி பின்வருமாறு அமைந்திருந்தது.

'ஜார்விஸ்' என்ற பெண் சமூக சேவகி அமெரிக்காவின் மேற்கு வேர்ஜினியா மாநிலத்தில் கிராப்டன் (GRAFTON) என்ற கிராமத்தில் வாழ்ந்து வந்தார். அக்காலத்தில் யுத்த களத்தில் அமெரிக்க வீரர்கள் பலியாயினர். அவர்களின் குடும்பங்களும் சிதைந்து சீரழிந்து நாலாபக்கமும் சிதறிப்போயினர். பிரிந்த குடும்பங்கள் ஒன்று சேரவும், அவர்களின் நல்வாழ்க்கைக்கும், சமாதானத்திற்கும் தன் இறுதி மூச்சுவரை அயராது பாடுபட்டு சமூக சேவகியாகவே வாழ்ந்து 1904ல் Jarvis மறைந்தார்.

இவரின் மகள் அனா ஜார்விஸ் Anna Jarvis முதன்முதலாக தனது அன்னையின் நினைவாக உள்ளூரில் உள்ள மெதடிஸ்த தேவாலயத்தில் 1908ம் ஆண்டு மே மாதத்தின் ஒரு ஞாயிற்றுக் கிழமை சிறப்பு வழிபாடு ஒன்றை நடத்தினார். தனது அன்னையைப் பாராட்டி சீராட்டி அன்னையர் தினம் கொண்டாடிய முதல் பெண் என்ற பெருமையையும் இவர் பெறுகிறார்.

சமூக நலனில் அக்கறை கொண்ட ஜார்விஸ் ஏதாவது ஒரு நாளையாவது எல்லோரும் தங்களது தாயை அவர் உயிரோடு இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி அவளது தியாகத்தையும் தங்களுக்கு அவள் செய்த ஈடு இணையற்ற பணியையும் நினைத்து அவளை கௌரவிக்க வேண்டும் என்று விரும்பினார்.

இதைத் தொடர்ந்து அனா ஜார்விஸ் Anna Jarvis 1913ம் ஆண்டில் தன் பணி நிமித்தம் பென்சில்வேனியா மாநிலத்தில் பிலடெல்பியாவில் குடியேறினார். தாயார் விட்டுச்சென்ற சமூக சேவையை மகள் ஜார்விஸ் தன் தனிப் பெரும் கடமையாகக் கருதித் தொடர்ந்தார். கஷ்டப்படுகிற, வாழ்க்கையில் இன்னலும், சோதனைகளும் ஒருசேரத் தாங்கி மனம் வெந்து, நொந்து சமூகத்தில் ஓரங்கட்டப்பட்டவர்களுக்கான அமைப்பில் தன்னை இணைத்துக் கொண்டார்.

எல்லோர் இல்லங்களிலும் அன்றையதினம் மகிழ்ச்சி ததும்ப வேண்டும் என்று எண்ணினார். தம் எண்ணத்தை பென்சில்வேனியா மாநில அரசுக்குத் தெரிவித்தார். அரசும் அவர் கருத்தை ஏற்று 1913ம் ஆண்டு முதல் அன்னையர் தினம் என அங்கீகரித்து அறிவித்தது. ஆகவே அன்பை அள்ளி அள்ளி கொடுக்கும் வற்றாத அமுத சுரபியாக வாழ்ந்து கொண்டிருக்கும் எமது அம்மாவின் அன்புக்கு மாற்று இல்லை. எத்தனை வயதானாலும் ஆயுள் முழுவதும் அம்மாவின் அன்பு மாறாது, குறையாது. அம்மாக்களுக்கு அன்னையர்தின வாழ்த்துக்கள்.

# பேராசிரியர் சிவலிங்கராஜாவின் அறியப்படாத சில பக்கங்கள்

இன்று அவர் 76 ஆவது ஆண்டை நிறைவு செய்கிறார். 1976ஆம் அண்டு என நினக்கிறேன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பித்தகாலம். அங்கு தமிழ்த் துறை ஆரம்பித்த போது பேராசிரியர் கைலாசபதி பல்கலைக்கழகத் தலைவராக இருந்தார்.

பரமேஸ்வராக் கல்லூரியே அன்றைய பல்கலைக் கழகம். கலைப்பீடத்தில் ஓரிரு துறைகள்தான் இருந்தன.

அதில் ஒன்று தமிழ்த்துறை

தமிழ்த் துறையின் பொறுப்பு இணைப்பாளராக பேராசிரியர் சண்முகதாஸ் நியமிக்கப்பட்டிருந்தார்

யோகேஸ்வரி ஐயாத்துரையும் சித்திரலேகா மௌனகுருவும் உதவி விரிவுரையாளர்களாக இருந்தார்கள்.

அதில் முதல் தமிழ்ச்சிறப்பு மாணவர்கள் பின்னாளில் பேராசிரியரான நாகேஸ்வரனும் இன்று பிரான்சில் வதியும் சுமத்ரி சுந்தரும் ஆவர்.

இரண்டாம் தொகுதி தமிழ் சிறப்பு மாணவர்களாகச் சிலர் வந்து சேர்ந்தனர் அவர்களுள் ஒருவர்தான் நமது பேராசிரியர் சிவலிங்கராஜா.

சற்று வயது சென்ற பின்னர் பல்கலைக்கழகம் வந்தமையினால் அவர்களுள் வயதில் மிக மூத்த மாணவராயிருந்தார்.

சிவலிங்கராஜா தனது விரிவுரையாளரான சித்திரலேகாவுக்கும் வயதில் மூத்தவர்.

அவ்வகுப்பில் சரஸ்வதி, கண்ணம்மா, பின்னாளில் கிழக்குப்பல்கலைக்கழக பேராசிரியரான அம்மன்கிளி ஆகியோர் படித்ததாக ஞாபகம். தன் உடன் பயின்ற மாணவி சரஸ்வதியை அவர் காதலித்துக் கடிமணம் புரிந்துகொண்டார்.

அப்போது நான் பாடசாலை ஒன்றில் ஆசிரியராகக் கடமை புரிந்து கொண்டிருந்தேன்.

வளாகத் தலைவரான பேராசிரியர் கைலாசபதி என்னை அங்கு ஒரு கூத்தினை மாணவர்க்கு பழக்கிவிடுமாறு கேட்க நான் அவர்களுக்குப் பழக்கிய கூத்துதான் போர்க்களம்.

அதில் தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் சண்முகதாஸ்,

உதவி நூலகரான சிவனேசச்செல்வன். இன்று பேராசிரியராயிருக்கும் சூசை ஆகியோர் பங்குகொண்டனர்,

நானும் அதில் முக்கிய பாத்திரமேற்றேன்.

அக் கூத்தில் எடுத்துரைஞராகத் தோன்றி ஆடி அசைந்து பாடி நடித்தார் நமது பேராசிரியர் சிவலிங்கராஜா.

1976ஆம் ஆண்டில் ஓர் இரவு நேரம் யாழ். பல்கலைக்கழக திறந்த வெளி அரங்கில் இக்கூத்து அவ்வூர்ப் பொதுமக்கள் பார்க்க அரங்கேறியது.

சிவலிங்கராஜாவின் மேடை நடிப்பையும் ஒப்பனையுடன் அவர் அன்று மாணவப் பருவத்தில் மேடையில் தோன்றியதையும் பாடியதையும் நடித்ததையும் இப்போது நினைத்துப் பார்க்கிறேன். அந்தப்படம் சுனாமியில் தொலைந்து போனது என் துரதிஸ்டம்.



சிவலிங்கராஜா என்னுடன் மிக நெருக்கமான காலம் அது.

அப்போது நாம் பலாலி வீதியில் அர்ஜுனாஸ் இல்லத்தில் வாடகைக்குக் குடியிருந்தோம்.

அது ஒரு பெரிய வீடு.

திருநெல்வேலியோ எமக்குப் புதிது.

மாணவர்கள் அடிக்கடி வீடு வருவர். மெல்ல மெல்ல திருநெல்வேலி மக்களிற் சிலர் எமக்கு நெருக்கமாகினர்.

திருநெல்வேலிக்காரர்களான தேவன் மாஸ்டர், குழந்தை சண்முகலிங்கம் நெருக்கமாகினர்.

அர்ஜுனாஸ் இல்லம் பல கலைஞரும் எழுத்தாளரும் அறிஞரும் வந்து சென்ற வீடு.

முன் வீட்டில்தான் காற்சட்டை போட்ட மாணவனாக ஆறுதிருமுகனையும் அன்று கண்டேன்.

சம்பந்தரின் வாழைப்பழக்கடையும் இருந்தது.

சம்பந்தர் ஈழத்துச் சிறுகதையின் மூலவருள் ஒருவர்.

சம்பந்தர் இலக்கிய விருது எனக்கு பின்னால் அளிக்கப்பட்டமை இன்னொரு கதை.

அந்த வீடு உரிமையாளருக்குத் தேவைப்பட்டது.

நான் அந்த அர்ஜுனாஸ் வீடு மாறியபோது ஒரு மாட்டு வண்டியில் என் வீட்டுசாமான்களை ஏற்றி தலையில் தலைப்பாகை கட்டிக்கொண்டு ஒரு வெயில் பொழுதில் சாரனை மடித்துக்கட்டியபடி வீட்டுச் சாமான்களுடன் இன்னொரு வீட்டுக்கு அந்த மாட்டு வண்டியின் பின் சிவலிங்கராஜா நடந்து சென்ற அந்தக் காட்சி பசுமையாக ஞாபகம் வருகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் ஒரு கிராமத்தானாக அதே பேச்சுமொழி நடைஉடை பாவனை அதே கிராமச் சண்டித்தனத்துடன் வாழ்ந்தவர் சிவலிங்கராஜா.

எனது யாழ்ப்பாண வாழ்வில் எமது குடும்பத்தில் மிக நெருக்கமான ஒருவரும் ஆனார்.

சேர் என என்னை அவர் அழைத்தாலும் அவர் எனக்கு ஒரு தம்பிபோலத்தான்.

தம்பி இல்லாக்குறை தீர்த்தவர் அவர்.

என்மகன் சித்தார்த்தன் அவரின் மார்மேலும் தோழ் மேலும் வளார்ந்தவன்.

அவனுக்கு இவர் சிவலிங்கராஜா மாமாதான்.

சித்துரஊ என்றுதான் என் மகனை அவர் அழைப்பார்.

அதில் ஓர் நெருக்கமான உறவு புலப்படும்.

சிவலிங்கராஜா வாலிபப் பருவத்தில் தமிழ்க்காங்கிரஸ் காரர் சிவசிதம்பரத்தின் ஆணுக்கத்தொண்டர். அவருக்காகப்பல தேர்தல் மேடைகளில் பேசியவர் சிறந்த பேச்சாளர். பேச்சுக்கலையை காங்கிரஸ் கட்சித் தேர்தல் மேடைகளில் பயின்றவர்.

பண்டிதர் வீரகத்தியிடம் முறையாக மரபுப்படி இலக்கண இலக்கியம் பயின்றவர். இலக்கணத்தில் அடிப்படைப் பாண்டித்தியத்துடன்தான் அவர் பல்கலைக்கழகம் வந்தார்.

அது அவருக்கு ஓர் பெரும் பலம்.

அடுத்த வருடம் 1977 இல் மஹாகவியின் புதியதொரு வீடு நாடகத்தை யாழ் பல்கலைக்கழகத்தில் இந்து மன்றத்திற்காகப் பழக்க ஆரம்பித்தேன்,

அப்போது மாணவரான சிவலிங்கராஜா பல்கலைக்கழக இந்து மன்றச் செயலாளராக இருந்தார். இந்து மன்ற நிதிக்காகப் போடப்பட்ட நாடகம் அது.

அதில்தான் முதன் முதலில் சிதம்பரநாதன் நடிகராக அறிமுகமாகின்றார்.

குழப்படிகார சிதம்பர நாதனை நாடகத்திற்கு இழுத்து வந்தவர்களுள் ஒருவர் இந்தச் சிவலிங்கராஜா.

பாலசுகுமாரும் அறிமுகமாகின்றார். அப்போது அவர் அங்கு மாணவர் .

அந்நாடகம் இராமநாதன் மண்டபத்தில் மேடையேறியபோது நான் சிவலிங்கராஜாவிடம்.

"இது புது வகை நாடகமானமையினாலும் நடிப்பவர்கள் மாணவர்கள் ஆனமையினாலும் மாணவர் சத்தம் போடக்கூடும் குழப்பக்கூடும்' எனக் கூறி இருந்தேன்.

"கவலைப்படாமல் ஆரம்பியுங்கள் சேர்" என்றார்.

அதற்கு ஒரு உத்தி வைத்திருக்கிறேன் "நான் பார்த்துகொள்கிறேன் சேர்" என்றார்.

நாடகம் ஆரம்பமாகியது.

அது ஓர் புதுவகை நாடகம் மாணவர்க்கு அது புதிது, மெல்ல மெல்ல சபையில் சத்தம் ஒரு சல சலப்பு எழுந்தது. அந்த இருட்டிற்குள் சத்தம் எழுந்த திசை நோக்கிசென்ற சிவலிங்கராஜா குழப்படி மாணவர்களைப் பிடித்து விட்டார்.

"பெரும் உழைப்பில் உருவான இதனைக் குழப்பக்கூடாது. நாடகம் பிடிக்கவிட்டால் வெளியே போங்கள் மீறிச் சத்தமிட்டால் இதோபார் இடுப்பில் வில்லுக்கத்தி செருகி வைத்திருக்கிறேன் குத்திவிடுவேன்"

என வெருட்டிப் பயமுறுத்தியிருக்கிறார்'அவரது சண்டியன் தோரணை குழப்ப வந்த மாணவர்களை அடக்கி விட்டது.

நாடகம் எந்த சத்தமும் இன்றி நடந்தேறியது.

இது அன்றைய சிவலிங்கராஜா. இது கிராமத்தானுக்குரிய நேர்மை துணிவுக்குணம்.

பின்னால் சிவலிங்கராஜா விரிவுரையாளரானார், உயர்ந்தார், பேராசிரியரானார், தமிழ்த்துறைத் தலைவரானார், பல்கலைக் கழகப்பேரவை உறுப்பினரானார், இரத்தினம் இன்ஸ்டிடியூட் பணிப்பாளரானார்.

பல நிறுவனங்களின் ஆலோசனை சபைகளில் அங்கத்தவரானார்.

யாழ்ப்பாணப் புலைமையின் ஓர் அடையாளமுமானார்.

அவை பின்னைய கதைகள் நான் சொன்ன இக்கதை முன்னைய கதை.

சிவலிங்கராஜா பேராசிரியர்களான கைலாசபதி, சிவத்தம்பி, வித்தியானந்தன், சண்முகதாஸ், சித்திரலேகா, மௌனகுரு ஆகியோரின் மிக விருப்பிற்குரிய மாணவன்,

அவரது
பண்பு,
எளிமை
உண்மை
நேர்மை
அயராத உழைப்பு

என்பனவே அவர்கள் இவர்மீது விருப்புகொள்ளக் காரணங்களாகும்

19 ஆம் நூறாண்டு யாழ்ப்பாணத் தமிழ்ப்புலமையைத் தோண்டி எடுக்கும்படி கைலாசபதி அவரைக் கேட்டிருந்தார்,

வழிப்படுத்தியுமிருந்தார்,

கைலாசபதியின் அக்கனவை நிறைவேற்றியவர் சிவலிங்கராஜா.

சிவலிங்கராஜாவின் சில நூல்கள் இதற்குச்சான்று.

யாழ்ப்பாணத்தில் மிக பெரியவர்களாக கருதப்பட்ட அறியப்பட்ட பல பெரியவர்களது மறுபக்கங்களைச் சிவலிங்ராஜா சுவையாக கூறுவார்.

விரல் நுனியில் ஆதாரங்களுடன் வைத்திருப்பார். அவை நாம் ஒரு போதும் அறியாதவை. அவை அவர் தனது தேடலில் பெற்றவை.

யாழ்ப்பாணச் சமூக அமைப்பின் நெளிவு சுழிவுகளை பலம் பலஹீனங்களை மிகத் துல்லியமாக அறிந்தவர்களுள் ஒருவர் சிவலிங்கராஜா.

அவ்வகையில் எனக்கு சிவலிங்கராஜா யாழ்ப்பாணச்சமூகத்தின் இன்னொரு பக்கத்தின் வாழ்வு முறைகளை பண்பாட்டை தனது நாவல்கள் மூலம் அறிமுகம் செய்த நாவலாசிரியர் டானியலை நினைவூட்டுவார்.

ஒரு சமூகத்திற்கு,

ஒரு இனக்குழுமத்திற்கு ஏன் ஒரு மனிதருக்குகூட இரண்டு பக்கங்கள் உண்டு.

இந்த இரண்டு பக்கங்களையும் தனது விரல் நுனியில் வைத்திருப்பவர் சிவலிங்கராஜா.

அவரது மனைவியார் சரஸ்வதி அவருக்குக்கிடைத்த பெரும் சொத்து.

சிவலிங்கராஜாவின் இருமகன்களும் டாக்டர்மார்.

இரண்டு மருமக்கள் மாரும் டாக்டர்மார்தான்.

மொத்தமாக அவர் குடும்பத்தில் நான்கு வைத்தியர்கள்.

எப்படிச்சுகம் என்று கேட்டால் சிவலிங்கராஜா.

"நான்கு வைத்தியரும் இனிமேல் நம்புதற்கில்லை" என சிரித்தபடி கூறுவார்.

நகைசுவை அவர் உரையாடலில் பிணைந்து வரும்.

அவரது பேரன் சேயவன் மஹா சுட்டி.

எனது பெரும் விசிறி.

இராவணேசன் நாடகம் டிவிடி கொப்பியை திருப்பித் திருப்பி போட்டுப்பார்த்து அந்நாடகம் அவனுக்கு அத்துபடி,

இராவணனாக ஆடுவான் பாடுவான் .

அருமையான ஒருபேரன் அவருக்கு அவரது பேத்தியும் அவ்வாறே.

பேரன் பேத்தியுடன் பொழுதைக் கழிப்பது சிவலிங்கராஜாவுக்குப் பெரும் ஆனந்தம் அயராத உழைப்பு

தேடல்

வாசிப்பு

அர்ப்பணிப்பு பெரியோரைபணிதல், நன்றி மறவாமை

இவை சிவலிங்கராஜாவிடம் இன்றைய தலைமுறை கற்க வேண்டியவை.

அவர் இன்று 76 ஆவது வயதை அடைகிறார், அவரை நாம் வாழ்த்தி மகிழ்வோம்.

இளம் தலைமுறை வணங்கி மகிழ்வார்களாக.

பேராசிரியர்
சின்னையா மௌனகுரு

## திருத்தப்பட்ட கேள்விக்கான அழைப்பு

### கொழும்பு தேசிய நூதனசாலையின் தரை அலங்காரத்தை மேம்படுத்துதல் கட்டம் I மற்றும் IV

**ஒப்பந்த இலக்கம் : PD/NMD/LINM/2021/001**

01. இது மேற்படி ஒப்பந்தம் சம்பந்தமாக 2021 ஏப்ரல் 18ம் திகதி சிலுமின, தினகரன் மற்றும் சன்டேஒப்சர்வர் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்விகோரலுடன் சம்பந்தப்பட்டது.

02. மேற்படி கேள்வி கோரல் அறிவித்தலில் கீழ்க்காணும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.
   - கேள்வி திறக்கப்படும்/ கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி - 2021 மே 21 பி.ப. 2.00 வரை நீடிக்கப்படுகின்றது.
   - கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம் 2021 மே 20ம் திகதி பி.ப. 3.00 வரை நீடிக்கப்படுகின்றது.

03. முன்னைய கேள்வி கோரல் அறிவித்தலில் குறிப்பிடப்படும் சகல ஏனைய விதிகள் மற்றும் நிபந்தனைகள் மாற்றமின்றி காணப்படும்.

04. இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-07, ஸ்ரீமத்மார்கஸ் பெர்னாண்டோ மாவத்த, இல. 53இல் அமைந்துள்ள தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் பெற்றுக்கொள்ள முடிவதுடன், 2021 மே 20 வரை அலுவலக நாட்களில் மு.ப. 10.00 முதல் பி.ப. 3.00 வரை அவ் முகவரியில் இலவசமாக கேள்வி ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

இது பற்றிய மேலதிக அறிவுரைகளுக்கு கீழுள்ள தொலைபேசி இலக்கங்களை அழையுங்கள்.

(கை.தொ.இல: 071-14485524 - 071-8744179 - 0702597190)

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய நூதனசாலைகள் திணைக்களம்,**
**இல. 53, ஸ்ரீமத்மார்கஸ் பெர்னான்டோ மாவத்தை, கொழும்பு-07.**
**தொலைபேசி - 011-2695366**
**பெக்ஸ் - 011-2692092**



தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்கும் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு விஜிபி குழுமத்தின் தலைவர் டாக்டர் வி.ஜி.சந்தோசம் நேரில் சந்தித்து வாழ்த்தினார். அருகில் விஜிபி நிறுவன இயக்குநர் விஜிபி ரவிதாஸ், முதன்மை இயக்குநர் விஜிபி ராஜாதாஸ் உடன் உள்ளனர்.



மனோ கணேசன் எம்பி தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியின் புதிய கொழும்பு மாநகரசபை உறுப்பினராக சிவரஞ்சன் ஆறுமுகம் உடையார் நியமனமானார்.

## புதிய அரசியல் கலாசாரத்தை... (2ம் பக்கத் தொடர்)

கமல்ஹாசனின் ஆகிருதிக்கு, நேரடி அரசியலில் ஈடுபட்டிருக்காத மற்றும் பா.ஜ.க. வேட்பாளரான வானதி சீனிவாசனிடம் அவர் தோற்றுப் போனது அவமானகரமான தோல்வியாக அமைந்துவிட்ட போதிலும் கமல் மூலையில் பதுங்காமல் ஸ்டாலினை நேரிடையாகச் சந்தித்து வாழ்த்தியதோடு முதல்வராக பதவியேற்ற சமயத்திலும் வந்திருந்து வாழ்த்தியதை மற்றொரு முன்னுதாரணமாகக் குறிப்பிடலாம். பதவியேற்றபின் நடைபெற்ற தேனீர் விருந்துபசாரத்தில் முன்னாள் துணை முதல்வர் பன்னீர் செல்வம் கலந்து கொண்டிருந்தார். அவர் முன்வரிசையில் அமர வைக்கப்பட்டிருந்ததோடு பின்னர் நடைபெற்ற தேனீர் விருந்தில் ஆளுநர் பன்வாரிலால், ஸ்டாலின், முன்னாள் சபாநாயகர் ஆகியோர் அமர்ந்திருந்த மேசையில் பன்னீர் செல்வமும் அமர்ந்திருந்ததைக் காணமுடிந்தது.

2016இல் ஜெயலலிதா பதவியேற்றபோது அந்நிகழ்வுக்கு வந்திருந்த ஸ்டாலினை நான்காவது வரிசையில் சாமானியரோடு அமரவைக்கப்பட்டதையும், அந்நிகழ்வு முடிவுற்றதும் ஸ்டாலின் எழுந்து சென்று விட்டதையும் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறோம். கலைஞர் எப்போது அம்மையார் என்றே ஜெயலலிதாவை விளிப்பார். ஆனால் ஜெயலலிதாவோ கருணாநிதி என ஒற்றை வசனத்திலேயே விளிப்பது வழக்கம். மங்கிப்போன இந்த அரசியல் பண்பாடு இப்போது மீட்கப்பட்டிருக்கிறது.

பதவியேற்பின் போது அனைவரும் 'உளமாற' என்று கூறியே பதவியேற்றனர். ஜெயலலிதா காலத்தில் நாவலர் நெடுஞ்செழியன் மட்டுமே பதவியேற்கும்போது 'மனச்சாட்சிப்படி' பதவியேற்பதாகக் கூறி பதவியேற்றார். ஏனைய அனைவரும் 'ஆண்டவன் மீது ஆணையிட்டே பதவிப் பிரமாணம் செய்தனர்.

தி.மு.க.வுக்கு 'ரவுடிக் கட்சி' என்றும் நில அபகரிப்பாளர்கள் என்றும் ஊழல் பேர்வழிகள் என்றும் ஒரு அவப்பெயர் உள்ளது. 1971 76 கலைஞர் ஆட்சிக்காலத்தில் கலைஞர் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு சர்க்காரியா கமிஷன் விசாரணையும் நடைபெற்றது. அந்தக் கறை கலைஞரை கடைசி வரைத் துரத்தி வந்தது. ஊழல்களின் சக்கரவர்த்தினியாக ஜெயலலிதா திகழ்ந்ததோடு ஒரு தீர்க்கப்பட்ட குற்றவாளியாக அவர் மரணித்தபோதும் அவரை ஒரு 'உத்தமி அம்மா'வாகவே வெற்றிகரமாக உருவகப்படுத்திவந்திருக்கிறார்கள். இது இப் பிராந்தியத்தில் மட்டுமே நடக்கக் கூடிய ஒரு விசித்திரம். இந்துக்கள் அல்லது தமிழர்கள் பல்தெய்வ வழிபாட்டு முறைக்கு பழக்கப்பட்டிருப்பதால்தான் தமிழகத்தில் ஜெயலலிதா 'தெய்வ'மாக முடிகிறதோ, தெரியவில்லை.

தமிழகத்தில் காணப்படும் பிரச்சினைகளை ஸ்டாலின் தீர்க்கட்டும். அந்நாட்டுக்கு வெளியே இருந்து அவதானிக்கும் எமக்கு மிக முக்கியமாகத் திகழ்வது, தி.மு.க தன் இழந்த பெயரை அல்லது தன் மீதான கறையை அகற்றிக் கொள்ள வேண்டும் என்பதே. அ.தி.மு.க. தனது திராவிட முகத்தை ஜெயலலிதா காலத்திலேயே இழந்து விட்டதோடு கடந்த மூன்று வருடங்களில் பா.ஜ.க.வுக்கு விலை போய்விட்டது. எனவே இப்போதிருக்கும் தி.மு.க மட்டுமே ஓரளவுக்கேனும் திராவிட பாரம்பரியங்களை பேணும், மற்றும் திராவிட, முற்போக்கு சிந்தனை சார்ந்த கட்சிகளை அரவணைத்துச் செல்லக்கூடிய கட்சியாகத் திகழ்கிறது. ஆனால் ரவுடிக் கட்சி, நில அபகரிப்பு கட்சி என்ற பெயர்களில் இருந்து அக் கட்சி விடுபட்டாக வேண்டும்.

கலைஞரும் ஜெயலலிதாவும் இல்லாத இச்சூழலில் ஸ்டாலின் புது அரசியல் நாகரிகத்தை கட்டமைப்பதற்கான சுதந்திரத்தைக் கொண்டிருக்கிறார். இஸ்லாத்தில் ஒட்டகத்தை கட்டி வை என்றொரு உவமானம் உண்டு. ஒட்டகம் எஜமானுக்கு மிக நெருக்கமான மிருகமாக இருக்கலாம். ஆனாலும் அதைக் கட்டிவைக்க வேண்டும். இல்லையேல் அயல்வீட்டுக்காரன் பயிரை மேய்ந்து விடும். இதை முதல்வர் ஸ்டாலின் புரிந்து கொண்டு ஆட்சி செய்வாரானால், அடுத்த தேர்தலிலும் அவர்தான் முதல்வர் என்பதை சொல்லி, தினகரன் சார்பாக வாழ்த்துகிறோம்.

## அரச ஈட்டு முதலீட்டு வங்கி (SMIB)

## தொழில் வாய்ப்புக்கள்

அரச ஈட்டு முதலீட்டு வங்கி, தேசத்தின் முதன்மையான வீடமைப்பு வங்கியாக, அதிக அளவிலான வாடிக்கையாளர் திருப்தி மற்றும் பரந்துபட்ட பல்வேறு வகையான சேவைகளை வழங்குவதற்கு வங்கியின் செயற்பாட்டை மறுசீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. எனவே பல்வேறுபட்ட தலைமைத்துவ பண்புகளினை வெளிப்படுத்தியுள்ளவர்களிடமிருந்து பின்வரும் பதவிக்கான பொருத்தமான தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் வர்த்தக இலக்குகளினை அடையப் பெறுவதற்கு முழுமையான அர்ப்பணிப்பினை வழங்கும் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றோம்.

### பொது முகாமையாளர் - பிரதான நிறைவேற்று அதிகாரி

**தகைமைகள்**

அ) வங்கியியல், வியாபாரம், கணக்கியல்/ நிதியியல் மற்றும் சட்டம் என்பவற்றில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சிறப்பு பட்டம்

***அல்லது***

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் ஒரு இணை அங்கத்தவர்

***அல்லது***

ஒரு சட்டத்தரணி

ஆ) மற்றும் வங்கியியல், முகாமைத்துவம், வணிகம், சட்டம், பொருளாதாரத் துறையில் முதுகலை மாணி பட்டம் (Master's Degree)

தொழில்சார் வங்கியியல் நிறுவனம் ஒன்றில் அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

**அனுபவம்**

அ) ஒரு சிரேஷ்ட முகாமைத்துவப் பதவியில் ஆகக் குறைந்தது 15 வருடங்கள் நிறைவேற்று தரத்தில் அனுபவம் பெற்றிருத்தல் அத்தோடு அதில் ஆகக் குறைந்தது ஐந்து வருடங்கள் வங்கியொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிதியியல் நிறுவனம் ஒன்றில் அனுபவம் இருக்க வேண்டும்.

ஆ) உள்நாட்டு வங்கியியல், வீடமைப்பு மற்றும் விவசாயக் கடன் திட்டங்களில் சிறந்த அறிவையும் மற்றும் உத்தியோகபூர்வ மொழியில் வேலை அனுபவம் மற்றும் கணனி அறிவையும் விண்ணப்பதாரிகள் பெற்றிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரி பணிப்பாளர் சபையின் வழிகாட்டல் மற்றும் பணிப்புரைகளின் கீழ் வங்கியின் நாளாந்த வியாபாரம்/ நிருவாகச் செயற்பாடுகள் என்பவற்றை பிரதானமாக இயக்குகின்ற சக்தியாக பின்வரும் விசேட தலைமைத்துவத் திறன்களைக் கொண்டிருக்க வேண்டும்.

பிரச்சினைகளைத் தீர்த்தல்

தீர்மானம் எடுத்தல்

குழு நிர்மாணம் மற்றும் முகாமை

**சம்பளம்**

**சம்பள அளவுத்திட்டம்:** மாதத்துக்கு ரூ. 307,305 -10,660 x 12 - 435,225 அத்தோடு வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் உள்ளடங்கும். வயது: 50 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (ஒரு அரச துறை நிறுவனத்தில் ஏற்கனவே சேவையாற்றுகின்ற நபருக்கு வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது)

### பிரதிப் பொது முகாமையாளர் - மனித வள அபிவிருத்தி மற்றும் முகாமை

**தகைமைகள்**

பலகலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து மனித வள முகாமையில் பட்டம். மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மனித வள முகாமை நிறுவனம் ஒன்றிலிருந்து முழுமையான துறைசார் அங்கத்துவம்.

***அல்லது***

மனித வள முகாமையில் முதுகலைப் (Master's Degree) பட்டத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து முகாமை அல்லது சட்டத்துறையில் பட்டம் பெற்றிருத்தல். அனுபவம் உரிய துறையில் 15 வருட அனுபவம், இதில் சிரேஷ்ட முகாமை மட்டத்தில் குறைந்தபட்சம் 05 ஆண்டுகள் ஒரு வங்கி அல்லது அதற்கு சமமான நிறுவனம் ஒன்றில் அனுபவம் பெற்றிருத்தல்.

**சம்பளம்**

**சம்பள அளவுத்திட்டம் :** மாதத்துக்கு ரூ. 196,570 - 6,895 x 12 - 279,310 அத்தோடு வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் உள்ளடங்கும்.

**வயது :** 50 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (ஒரு அரச துறை நிறுவனத்தில் ஏற்கனவே சேவையாற்றுகின்ற நபருக்கு வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது) பொது நிபந்தனைகள் தேர்ந்தெடுக்கும் முறை - வங்கியின் ஆட்சேர்ப்புக் கொள்கை மற்றும் நடைமுறைப்படி

விண்ணப்பங்களை கோருதல். நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்தல்

**ஏனைய அனுகூலங்கள்**

- ஊழியர் சேமலாப நிதியத்துக்கு தொழில் தருனரினால் 15% மற்றும் ஊழியரினால் 10% பங்களிப்புச் செய்யப்படும். ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு வங்கி பங்களிப்புச் செய்யும்.
- இரண்டு மாத மொத்தச் சம்பளம் வருடாந்த மேலதிகக் கொடுப்பனவாக (Bonus)வழங்கப்படும்.
- சேவையில் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் சலுகை விகிதங்களின் அடிப்படையில் வீடமைப்புக் கடன்கள் வழங்கப்படும்.
- வங்கியின் மருத்துவத் திட்டத்தின் கீழான அனுகூலங்கள்.
- பயன்படுத்தப்படாத மருத்துவ விடுமுறைக்கு கொடுப்பனவு வழங்குதல்

**விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதி - 24.05.2021**

**விண்ணப்பிக்கும் முறை**

ஆர்வமுள்ள தகைமையினைக் கொண்ட விண்ணப்பதாரர்கள், தங்களின் சுய விபரம், கல்வி/ தொழில் தகைமைகளின் சான்றிதழ்கள், உறவினர்களல்லாத இரு தொழில்வாண்மையாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் என்பவற்றினை கீழ்க் குறிப்பிடப்படுகின்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கின்ற பதவியின் பெயரை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். அனைத்து விண்ணப்பங்களினதும் கண்டிப்பான இரகசியம் பேணப்படும் என்பதோடு மேலும் ஏதேனும் முறையிலான ஆதரவு நாடுதல் தகுதியற்றதாக கருதப்படும். இந்த ஆட்சேர்ப்புக்காக தெரிவுசெய்தலைத் தீர்மானித்தல், பிற்போடுதல் அல்லது ஆட்சேர்ப்பை இரத்துச் செய்தல் அல்லது ஏதேனும் ஏனைய நடவடிக்கையை மேற்கொள்ளல் மற்றும்/ அல்லது இந்த ஆட்சேர்ப்புக்கான தகுதிவிதிகளை மாற்றுதல் என்பவற்றைத் தீர்மானிப்பதற்கான உரிமையை வங்கி தக்கவைத்துக் கொள்கின்றது. பணிப்பாளர் சபையின் தீர்மானம் இறுதியானதாகவும் மற்றும் முடிவானதாகவும் இருக்கும்.

விண்ணப்பங்கள் careers@smib.lk என்ற மின்னஞ்சல் ஊடாக மாத்திரம் அனுப்பப்பட வேண்டும்.

**பொது முகாமையாளர் /CEO,**
**அரச ஈட்டு முதலீட்டு வங்கி,**
**இல. 269, காலி வீதி, கொழும்பு-03.**

## இலங்கை தரைப்படை

## கேள்வி அறிவித்தல்

1. 2021 ஆண்டின் இரண்டாம் அரை ஆண்டிற்குள் (2021.07.01 முதல் 2021.12.31 வரை) இலங்கை தரைப்படைக்குத் தேவையான கீழ்க்காணும் பொருட்கள் நிலையான விலையின் கீழ் கொள்வனவு செய்வதற்காக ஸ்ரீ ஜயவத்தனபுர, கொழும்பில் அமைந்துள்ள தரைப்படை தலைமையகத்தின் தரைப்படை கேள்விச் சபை (பெறுகை) குழுவின் தலைவரால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | கேள்வியின் பெறுமதி |
|---|---|---|---|
| 01 | பொ.சே.ப.ச./04/2021/100 (284) | சீமெந்து | 45 மில்லியன் |
| 02 | பொ.சே.ப.ச./04/2021/100 (285) | முருக்கிய உருக்கு மற்றும் மென் உருக்கு | 41 மில்லியன் |
| 03 | பொ.சே.ப.ச./04/2021/100 (286) | சீலிங் மின் விசிரி | 16 மில்லியன் |
| 04 | பொ.சே.ப.ச./04/2021/100 (287) | மின் கம்பி | 40 மில்லியன் |
| 05 | பொ.சே.ப.ச./04/2021/100 (288) | எஸ்பெஸ்டஸ் ரூபிங் சீட் | 15 மில்லியன் |
| 06 | பொ.சே.ப.ச./04/2021/100 (289) | சின்க் எலுமினியம் ரூபிங்சீட் | 40 மில்லியன் |
| 07 | பொ.சே.ப.ச./04/2021/100 (290) | ஜீ.ஐ. நெளிந்த தகடு | 16 மில்லியன் |
| 08 | பொ.சே.ப.ச./04/2021/100 (291) | இறக்குமதி செய்யப்பட்ட பலகை | 30 மில்லியன் |
| 09 | பொ.சே.ப.ச./04/2021/100 (292) | உள்ளூர் பலகை | 23 மில்லியன் |
| 10 | பொ.சே.ப.ச./04/2021/100 (293) | ஒட்டுப்பலகை | 51 மில்லியன் |
| 11 | பொ.சே.ப.ச./04/2021/100 (294) | ஜீ.ஐ. பைப் | 42 மில்லியன் |
| 12 | பொ.சே.ப.ச./04/2021/100 (295) | பிவிசி பைப் பிவிசி துணைப்பாகங்கள் | 18 மில்லியன் |
| 13 | பொ.சே.ப.ச./04/2021/100 (296) | நீர்த்தாங்கி | 10 மில்லியன் |
| 14 | பொ.சே.ப.ச./04/2021/100 (297) | தீந்தை | 29 மில்லியன் |
| 15 | பொ.சே.ப.ச./04/2021/100 (298) | கட்டிடப் பொருட்கள் (ஆற்று மணல்) | 44 மில்லியன் |
| 16 | பொ.சே.ப.ச./04/2021/100 (299) | கட்டிடப் பொருட்கள் (மெட்டல்/கருங்கல்) | 43 மில்லியன் |
| 17 | பொ.சே.ப.ச./04/2021/100 (300) | மின்சார உருப்படி/மின் சுவிட்ச் | 08 மில்லியன் |
| 18 | பொ.சே.ப.ச./04/2021/100 (301) | அலுமினியம் துணைப் பாகங்கள் (Aluminium Bar Powder Coated/ Aluminium Bar Natural) | 32 மில்லியன் |
| 19 | பொ.சே.ப.ச./04/2021/100 (302) | டைல் (Floor Tile/Wall Tile) | 43 மில்லியன் |
| 20 | பொ.சே.ப.ச./04/2021/100 (303) | துப்புற வேற்பாட்டு துணைப்பாகங்கள் (Commode, Wash basins)/ (Cromium Plated Piller Tap, Cromium Plated Bip Tap) | 32 மில்லியன் |
| 21 | பொ.சே.ப.ச./04/2021/100 (304) | இரும்பு ('C' Purlin Angle Iron, MS Plate) | 41 மில்லியன் |
| 22 | பொ.சே.ப.ச./04/2021/100 (305) | கட்டிடப் பொருட்கள் (Wire Nails, Brass But Hingers, Paint Brush, Sand Paper) | 25 மில்லியன் |
| 23 | பொ.சே.ப.ச./04/2021/100 (306) | கருவிகள் மற்றும் உபகரணங்கள் | 07 மில்லியன் |

2. மேற்படி வழங்கல்கள் சார்பாக விநியோகிக்கப்படும் பெறுகை ஆவணங்கள் பொறியியல் சேவைப் பணிப்பாளர் சபை, தரைப்படை தலைமையகம் ஸ்ரீ ஜயவத்தனபுரம், கொழும்பு என்ற முகவரிக்கு 2021.05.10 முதல் 2021.06.08 வரை வாரத்தின் வேலை நாட்களில் 0900 மணி முதல் 1600 மணி வரையான காலததிற்குள் நேரில் பெற்றுக் கொள்ளக் கூடியதுடன் (தரைப்படைத் தலைமையக கட்டிடத்தின் இல. 07இல் மூன்றாம் மாடியில் பொறியியல் சேவை பணிப்பாளர் சபையின் பிரிவிலிருந்து) மேற்படி சகல கேள்விகளையும் 2021.06.10ம் திகதி 1000 மணிக்கு தரைப்படை முகாம் செலிங்கோ கட்டிடம், இல. 167/30, அவிசாவளை வீதி, ஒருகொடவத்த முகவரியில் திறக்கப்படும். அவ் ஆவணங்களை வேண்டும் வழங்குநர்கள் இவ்விடயங்களை வழங்குவதை உறுதி செய்வதற்கு உள்ள சான்றுகள், நிறுவன பதிவுச் சான்றிதழின் பிரதியை மற்றும் கடந்த 06 மாதம் நிறுவன வங்கி கணக்கு கூற்றுகளின் பிரதியொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் இவ்வழங்கல் சார்பாக முன்வரும் வழங்குநர்கள் அரச பாதுகாப்பு அமைச்சின் வழங்கல் பட்டியலில் பதிவு செய்து இருப்பின் அவர்கள் அரச பாதுகாப்பு அமைச்சினால் விநியோகிக்கப்படும் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை சமர்ப்பித்தல் மாத்திரம் போதுமானது.

3. இக் கேள்வி பற்றிய ஆர்வமுள்ள மற்றும் தரப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்யும் சகல வழங்குநர்களாலும் கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்வதற்கு முன் கேள்விகள் பெறுமதியின் அடிப்படையில் ஒரு கேள்விப் பத்திரத்திற்காக (10 மில்லியன் முதல் 50 மில்லின் வரை ரூ. 3500.00 மற்றும் 50 மில்லியன் முதல் 100 மில்லியன் வரை ரூ. 12,500.00) மீளளிக்கப்படாத தொகையை பணிப்பாளர் நிதி அலுவலகம், தரைப்படை தலைமையகம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு) இற்கு கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கு முன் கொடுப்பனவுகளை மேற்கொண்டு அப்பற்றுச்சீட்டை பொறியியல் சேவை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்:**

அ. பொறியியல் சேவை பணிப்பாளர் சபையின் கொள்வனவு செய்யும் பிரிவு - தொலைபேசி இலக்கம் - 011 2339317

ஆ. உபகரண மாஸ்டர் ஜெனரல் கிளையின் பெறுகைப் பிரிவு - தொலைபேசி இலக்கம் 011 2431301

இ. பொறியியல் சேவை பணிப்பாளர் சபையின் பெக்ஸ் இலக்கம் 011-2435143

**தரைப்படைத் தளபதி,**
**தரைப்படை தலைமையகம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு.**

## அச்சத்தின் மத்தியில்... (08ஆம் பக்கத் தொடர்)

மலையடிவாரத்தில் அமைந்துள்ள இத்தோட்டத்தில் மிகவும் சக்தி வாய்ந்த அம்மன் ஆலயம் ஒன்றும் கற்குகைக்குள் அமைந்துள்ளது. நீண்ட வர லாற்று சிறப்புமிக்க இந்த தோட்டத்தில் 150 குடும்பங்கள் வாழ்ந்துவந்தன. தற்போது தற்போது 60 குடும்பங்களே காணப்படுகின்றன.

ஹந்தான மலைத்தொடரின் அடிவாரத்தில் காடு சார்ந்ததாக இக்குடியிருப்புகள் அமைந்துள்ளன. இக்காட்டில் நூற்றுக்கணக்கான பலாமரங்கள் இருந்தன. உணவுப் பொருட்கள் தட்டுபாடான பஞ்சகாலத்தில் பல பகுதிகளில் இருந்தும் பலாக்காய் பறிக்க இந்த அப்பர் டுனாலி தோட்டத்திற்கு வந்து பலாக்காய் பறித்துச் சென்று தமது பசியை போக்கிக்கொண்டனர். இவற்றுக்கு மேலாக இங்குள்ள தேயிலை மலைகளில் பலா, மா மரங்கள் நிறைந்து காணப்பட்டன.

இங்குள்ள 7 தோட்டப்பிரிவுகளில் உள்ளவர்களுக்கு பெரியம்மை நோய் ஏற்பட்டால் அவர்களை தனிமைப்படுத்தும் நிலையம் இருந்தது. இவ்விடத்தை பச்சை பங்களா என்றே அழைத்தனர். அம்மை நோயால் கொத்துக்கொத்தாக மக்கள் இறந்த காலப்பகுதியில் நோய்த்தொற்று ஏற்படுவதைத் தடுக்க ஆங்கிலேயர் இவ்வாறான தனிமைப்படுத்தும் நிலையங்களை அமைத்திருந்தனர்.

கண்டி நகருக்கும் இத்தோட்டத்திற்கும் இடையிலுள்ள வான்வழித் தொலைவு இரண்டு கிலோ மீற்றர் மட்டுமே. முன்னர் கண்டி நகரில் மலையைக் குடைந்து சுரங்கப்பாதை ஒன்றை அமைத்து கண்டி நகரில் இருந்து கலஹா, நில்லம்ம, புப்புரஸ்ச, டெல்டா, புஸ்சலாவ ஊடாக நுவரெலியாவுக்கான புதிய பாதை அமைக்க திட்டமிடப்பட்டிருந்தது. முன்னாள் பிரதமர் தி.மு. ஜயரட்ன இந்த மாபெரும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்க இருந்தார். ஆனால் திட்டம் இடையில் கைவிடப்பட்டுவிட்டது. இங்கு சுரங்கப்பாதை அமைத்து புதிய பாதை அமைக்கப் பட்டிருந்தால் இப்பகுதி அபிவிருத்தியடைந்திருக்கும். அப்பகுதி மக்களுக்கு தொழில் வாய்ப்பும் கிடைத்திருக்கும்.

நூல் விமர்சனம்

# குன்றிலிருந்து கோட்டைக்கு

கடந்த காலத்தில் நிர்வாகக் கடமையை இலங்கையில் மேற்கொண்ட சிலர், தமது அனுபவங்களுக்கு எழுத்து வடிவம் கொடுத்துள்ளனர். இவர்கள் யாவரும் ஆங்கிலத்திலேயே தமது அனுபவங்களை எழுதியுள்ளனர். இலங்கையில் தமிழர் மாத்திரமல்ல, தமிழ் பேசும் பல முஸ்லிம்களும் பரிபாலனத்துறையில் பணியாற்றியுள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது. இருந்தபோதும், இதுவரை எவரும் தமது அனுபவங்களைத் தமிழ் மொழியில் பதிவு செய்யாமை ஒரு குறைபாடாகவே இருந்து வந்துள்ளது.

இக்குறையை நிவர்த்தி செய்கின்றது, இலங்கை அரசாங்கத்தில் பல பொறுப்பான பதவிகளை வகித்த எம். வாமதேவன் எழுதிய 'குன்றத்திலிருந்து கோட்டைக்கு' என்ற அவரின் சுயசரிதை.

பிரித்தானியாவில் தனது முதுமாணிப் படிப்பை மேற்கொண்டதுடன், பல சர்வதேச அரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்த நூலாசிரியர், ஆங்கில மொழியில் புலமை வாய்ந்தவர். இருப்பினும், இவர் தனது அனுபவங்கள், சகல மட்டத்தைச் சார்ந்த தமிழ் பேசும் வாசகர்களுக்குப் பயன் தர வேண்டுமென்ற நோக்கில் எடுத்த இம்முயற்சி போற்றப்பட வேண்டியதொன்றாகும்.

மலையகத்துடன் பிணைப்பு :

நூலாசிரியர் தனது வாழ்க்கையின் பெரும்பாலான காலத்தைச் செலவிட்ட திட்டமிடல் மற்றும் நிர்வாகம் முதலிய விடயங்களுக்கு மாத்திரம் நூலின் பக்கங்களை மட்டுப்படுத்தவில்லை. முக்கியமாக, தனது வாழ்வின் அடித்தளமாக அமைந்த, மலையக மக்களின் வரலாற்றையும் அவர்களின் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களையும் இந்த ஆக்கத்தில் எடுத்துக்கூறத் தவறவில்லை.

மலையக மக்களின் பிரஜா உரிமை, வாக்குரிமை என்பன பறிக்கப்பட்ட செயல்கள் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றைத் தொடர்ந்து இலங்கை இந்தியத் தலைவர்களிடையே செய்யப்பட்ட ஒப்பந்தங்களைப் பற்றிய விபரங்களையும் இந்த ஆக்கத்தில் காணலாம். பிற்காலத்தில் தென்னிந்தியாவில் நூலாசிரியர் மேற்கொண்ட ஆய்வுகள் மலையக மக்களுக்கு ஆட்சியாளர் இழைத்த இன்னல்களை ஆவணப்படுத்தும் முயற்சியாகவே வாசகர் இப்பின்னணியில் நோக்குவர்.

ஹைலன்ஸ் கல்லூரியில் பயிலும்போது தன்னை வழிநடத்திய ஆசிரியரின் பெயர்ப் பட்டியல் ஒன்றை நூலில் வாமதேவன் தந்துள்ளார். எனினும், இவர்களில் இருவருக்கு நூலாசிரியர் முக்கிய இடம் கொடுத்துள்ளார்.

ஒருவர் இவருக்க ஏழாம் வகுப்பில் குடியியல் கற்பிக்க வந்த ஆசிரியர் இர. சிவலிங்கம்.


முதல் நாளே சிவலிங்கம் வகுப்பில் அரசியல் தொடர்பாகக் கேட்ட கேள்விகளுக்குச் சிறுவன் வாமதேவன் வழங்கிய பதில்கள் அவரை வியக்க வைத்தன. இக் கேள்விகளுக்குத் தான் சரியான பதில்களை வழங்கிய இரகசியத்தை நூலாசிரியர் வாசகருடன் பகிர்ந்து கொள்கின்றார். அத்துடன் மாணவப் பருவத்தில் தனது பொது அறிவை விரிவடையச் செய்வதில் தாத்தாவின் பங்களிப்பையும் பதிவு செய்துள்ளார்.

ஹைலன்ஸ் கல்லூரியில் அப்போது ஆசிரியராகப் பணிபுரிந்த இலக்கியவாதி எஸ். திருச்செந்தூரன் பற்றியும் நூலில் குறிப்பிட்டுள்ளது.

திருச்செந்தூரன் மூலம் இலக்கியத்தைப் பொறுத்தமட்டில், திராவிட இயக்கச் சஞ்சிகைகளுக்கு அப்பால் ஓர் உலகம் இருப்பதை மாணவர் தெரிந்து கொண்டனர் என்கிறார் நூலாசிரியர். இதன் பின்பே அங்கு பயின்ற மாணவர்கள், பேராசிரியர் மு. வரதராசன் முதலியோரின் ஆக்கங்களில் நாட்டம் செலுத்தினர். மாணவப் பருவத்தில் விளையாட்டிலும் இலக்கியத்திலும் ஆர்வம் காட்டினார். மாணவப் பருவத்தில் அன்று வாமதேவன் எழுதிய சிறுகதைகள் வீரகேசரி உட்படப் பல பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டன.

வாமதேவன் 1965 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானார். இங்கு பொருளியல் இவருக்குச் சிறப்புப் பாடமாக அமைந்தது. இக்காலப்பகுதியில் பேராசிரியர் ஏ.ஜே. வில்சன் பொருளியலின் ஓர் அங்கமாகக் கருதப்பட்ட அரசியல் தொடர்பான விரிவுரைகளை வழங்கிய போது பெற்ற அனுபவத்தை வாமதேவன் நூலில் விபரமாகத் தந்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவனாக இருந்த காலத்திலேயே நூலாசிரியர் மனித உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றைக் கண்டித்துக் குரல் எழுப்பியவர். 1968ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சி வடக்கில் ஏற்பாடு செய்த சாதி ஒழிப்பு மாநாட்டில் கலந்து கொண்டார். அங்கு காங்கேசன்துறையில் தோழர் சண்முகதாசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றியதுடன், அதனைத் தொடர்ந்து நடந்த ஊர்வலத்திலும் பங்கு பற்றினார்.




இந்நூலை வாசிப்பவர்களுக்கு வாழ்க்கையில் பல விடயங்களை நூலாசிரியர் சாதிப்பதற்கு இவரது விடாமுயற்சியும், பிரச்சினைகளை ஒரு தத்துவக்கண் கொண்டு அணுகும் மனநிலையுமே முக்கியக் காரணிகள் என்பது புலப்படும்.

பல்கலைக்கழகத்தில் 1966ஆம் ஆண்டு இவர் மாணவனாக இருந்தபோது இவரது ஊரான பெரகலையில் ஏற்பட்ட மண்சரிவு பற்றிய செய்திகளுக்கு அன்று ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்தன. இதன்போது வாமதேவனுடைய தந்தையும் மூன்று சகோதரிகளும் உயிரிழந்தனர். அங்கிருந்தவர்களில் தாய் மாத்திரமே தப்பியிருந்தார்.

தந்தை உட்பட ஏனைய குடும்ப அங்கத்தினர் மறைந்த நிலையில் தாயின் நலன்களைக் கவனிப்பது தனது கடமை என்ற எண்ணம் இவரது இதயத்தில் குடிகொண்டது. இச்சோக நிகழ்வைத் தொடர்ந்து தனது வாழ்க்கையைத் தாயை மையமாக வைத்தே திட்டமிட்டார்.

1983ஆம் ஆண்டுக் கலவரத்தினால் வாமதேவன் பாதிக்கப்பட்டிருந்த காலத்தில் இவருக்கு பிரிட்டிஷ் கயானாவில், தகமை அடிப்படையில், பல சலுகைகளுடன் வேலையொன்று கிடைத்தது. இச்சலுகைகள், போக்குவரத்து உட்பட, முழுக்குடும்பத்திற்கும் வழங்கப்படுமென வாக்குறுதி வழங்கப்பட்டது. ஆனால் இச்சலுகைகள் தனது தாயாரை உள்ளடக்காதபடியால், நூலாசிரியர் அந்த வேலையை நிராகரித்தார். அதற்குப் பதிலாக, முழுக்குடும்பத்துடன் ஆய்வு மேற்கொள்ளும்பொருட்டு, தாயையும் அழைத்துக்கொண்டு தென்னிந்தியா சென்று மூன்று ஆண்டுகள் அங்கு வாழ்ந்தார்.

1983ஆம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தின்போது, புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தனது வீடு, காடையர்களால் தீக்கிரையாக்கப்பட்டபோதும் ஏற்பட்ட இழப்பை வாமதேவன் ஒரு தத்துவக் கண்ணோட்டத்திலேயே நோக்கினார். அத்துடன், பேராசிரியர் கைலாசபதி காலமாவதற்கு, சில ஆண்டுகளுக்கு, முன்னர் தனக்கு எழுதிய கடிதமொன்றும் கலவரத்தின்போது தீக்கிரையாக்கப்பட்டதென்பதையும் வாமதேவன் சுயசரிதையில் மிகுந்த வேதனையுடன் பதிவு செய்துள்ளார்.

அரசாங்க சேவையில், நிர்வாகத்துறையில் ஓர் அதிகாரி எட்டக்கூடிய அதி உயரத்தை எட்டியவர் நூலாசிரியர். இந்த நீண்ட பயணத்தின்போது நிகழ்ந்த மறக்க முடியாத பல சம்பவங்களை இவர் நூலில் பதிவு செய்துள்ளார்.



**பகவதாஸ் ஸ்ரீஸ்கந்ததாஸ்**




தினகரன் வாரமஞ்சரி
BUDGET adz It suits your budget

**Eicher Model 20.16**



சிறந்த 20 அடி கன்டெய்னர் பொடி உள்ள நிறுவனத்திற்கு சொந்தமான தேயிலை போக்குவரத்துக்கு மட்டும் பயன்படுத்தப்பட்ட அய்சர் (Eicher) வகை லொரி விற்பனைக்கு. ஆரம்ப பதிவு 2005 ஜுலை. புதிய பெயின்ட். தொலைபேசி:

071 680 53 91 / 075 0 281 665

**மாதிவெல**

10.5 பேர்ச் 2 காணித் துண்டுகள்



ஒரு பேர்ச் ரூ. 1.925 மில்லியன் (பேசித் தீர்க்கலாம்)


கிம்புளாவெல சந்தியிலிருந்து 900 மீற்றர் மட்டுமே. ஜப்பான் நட்புறவு பாலத்திற்கு 1. கி.மீ.

071 7 500 060 / 071 7 731 731

டி பொன்சேகா பாதை ஸ்ரீ டிக்மன்ஸ் வீதிக்கு அப்பால்

**கொழும்பு - 05.**

15.5 பேர்ச்சில் (4300 ச.அடி) சுதந்திரமான இரு மாடி பங்களா, போதுமானளவு வாகன நிறுத்துமிடம் மற்றும் திறந்த இடப்பரப்பு, ஏறக்குறைய 3300 ச.அடி. கட்டுமான பிரதேசம். முழுமையான ஓடு பதிக்கப்பட்டது. டி பொன்சேகா பாதை, டிக்மன்ஸ் வீதிக்கு அப்பால், கொழும்பு-05.



விசாலமான பாதை, முகப்பு 70-80 அடி. வங்கிகள், கூட்டுரு அலுவலகம், தகவல் தொழில்நுட்ப கம்பனி, மருத்துவ கிளினிக், உயர்ந்த வசதிகளையுடைய ரெஸ்டூரண்ட்கள், மனதிற்கிசைந்த காட்சி-வெறுமையாகவுள்ளது.

தயவு செய்து தரகர்கள் தேவையில்லை

0777 315 005

**வியாபாரத்திற்கான ஆதனம**

தரைமாடி ஏறக்குறைய 2200 ச.அடி TG ஜயவர்தன மாவத்தை கிறீன் பாத்திற்கு அப்பால், சினமன் ரெட் மற்றும் லிபர்டி ப பிளாசாவிற்கு இடையில்.

பெரிய ஹோல், எம்டி அறை, 4-5 கார்கள் நிறுத்துமிடம், கூட்டுரு அலுவலகத்திற்கு உகந்தது, IT Co .. etc.,



CELINE - 077 7 315 005

# மட்டக்களப்பின் நீர்ப்பாசன அபிவிருத்திக்கு கைகொடுக்கும் முந்தானையாறும் கிரான்புல் அணைக்கட்டும்

எஸ்.எஸ்.தவபாலன்
புளியந்தீவு குறூப்நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் நெற்செய்கைக்கும், மாற்றுப் பயிர்ச் செய்கைக்கும் போதிய அளவு நீர்ப்பாசனத்தை வழங்குவதற்கு மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி பாயும் முந்தானையாறு பாரியளவிலான நீரைவழங்கி வருகிறது. இதனை மறித்துக்கட்டி உயர்மட்டத்திலுள்ள விவசாய நிலங்களுக்குநீர்ப்பாசனத்தை வழங்குவதற்காகவே அணைக்கட்டுக்கள் கட்டப்பட்டு வந்துள்ளன. இவ்வழக்கம் மட்டக்களப்பு மாவட்டத்தில் 18ம் நூற்றாண்டிலிருந்தே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதென மட்டக்களப்பு மாவட்ட நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி என். நாகரெத்தினம் தெரிவிக்கிறார்.

மட்டக்களப்பு மாவட்டம் விவசாயத்திற்கும், விளைச்சலுக்கும் பெயர்பெற்றது. அவற்றிலிருந்து தங்களை மென்மேலும் வளமாக்கிக்கொள்ள வேண்டும் என அம்மாவட்ட விவசாயிகள் விரும்புகிறார்கள்.

விவசாயம் விரிவடைய வேண்டுமாயின் நீர்வளமும் நிலவளமும் பிரதானமாக இருக்க வேண்டும். நீர்வளத்தைப் பொறுத்தவரையில் அதனை மேலும் பெருக்கிக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது.

இதற்காக றம்புக்கன் ஓயா,மகா ஓயா, கல் ஒடையாறு என்ற பெயர்கொண்ட 3 ஆறுகள் மட்டக்களப்பு மாவட்டத்தை நோக்கிப் பாய்கின்றன. இவைகளினூடாக உறுகாமம், கித்துகாள், தம்பிட்டிய, வெலிக்காகண்டிய, என்ற 4 குளங்கள் நீரைப்பெறுகின்றன. முன்பு குறிப்பிட்ட ஆறுகள் மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்குப்புற எல்லையிலுள்ள மகா ஓயா கிராமத்தருகே ஒன்று சேருகின்றன அப்படிச் சேர்ந்த பிறகு அதனை நம்மவர்கள் முந்தானையாறு என அழைத்து வரலாயினர். முந்தானையாறும் மற்ற ஆறுகளைப்போல மட்டக்களப்பு மாவட்டத்திற்குள் பாய்ந்து இறுதியாக மட்டக்களப்பு வாவியோடு சங்கமிக்கிறது.



உறுகாமம் கிராமத்தில் 1982ம் ஆண்டில் முந்தானையாற்றின் வலப்பக்கத்தில் உறுகாமம்குளம் கட்டப்பட்டது இப்போது அதற்கு வயது 38ஆகும். இதற்கு இடப்பக்கத்தில் கித்தூள் குளம் அமைந்திருக்கிறது. இவ்விரு குளங்களும் முந்தானையாற்றிலிருந்தே நீரைப் பெறுகின்றன. இவற்றின் வடிச்சல் அல்லது மேலதிக நீர் மீண்டும் முந்தானையாற்றிலே வந்து விழுகின்றன

முந்தானையாறு பாயந்து செல்லும் வழியில் விவசாயிகள் அதனை மண்கட்டுக்களால் மறித்து தங்களது விவசாய நிலங்களுக்கு நீரைப்பாய்ச்சி விவசாயம் செய்து வரலாயினர். இப்படியான அணைக்கட்டுக்களும், மறிப்புக்களும் 10 தொடக்கம் 15 வரையில் இருந்தன அவற்றுள் பிரதானமானது மாவடி ஓடை அணைக்கட்டாகும்.

இது உறுகாமம் குளத்திற்கு 8.4 கிலோ மீற்றர் கீழ்ப்பாக தூரத்தில் அமையப் பெற்றிருக்கிறது. இதற்குக் கீழ்ப்பகுதியிலும் பல அணைக்கட்டுக்கள் இருந்து வந்திருக்கின்றன. மாவடி ஒடை அணைக்கட்டு 2010 ஆம் ஆண்டில் உறுதியாக கட்டப்பட்டுவிட்டது. இது மட்டக்களப்பு மாவட்ட நீர்ப்பாசன அபிவிருத்தியில் ஒரு "மைல்கல்" எனலாம்

அவற்றுள் பிரதானமானது. கிராம் புல்சேனை மண் அணைக்கட்டாகும். இம் மண் அணைக்கட்டு ஏராளமான மண்ணைக் கொண்டு கட்டப்படுவதாகும். இது வருடாவருடம் கட்டப்படுவதும் அது பின்பு வெள்ளத்தால் உடைப்பெடுப்பதுவும் ஒரு சாதாரண நிகழ்வாகிவிட்டது. ஒரு தடவை அதனை கட்டுவதற்கு 2 மி. ரூபா செலவாகிறது என தெரிவிக்கப்படுகிறது

இதனால் விவசாயிகள் மன உழைச்சலுக்கு உள்ளாகியிருந்தார்கள். ஒரு வகையில் அவர்கள் மண்கட்டை கட்டுவதற்கு தங்களின் உடல் உழைப்பை கொடுக்க வேண்டியிருப்பது, அடுத்தது அவர்களின் கால நேரம் வீணாவது. அதற்கு அடுத்தாற்போல அவர்களது நிதியும் இவைகளோடு சேர்ந்து வீண் விரயமாவது. இதனால் மனமுடைந்த விவசாயிகள் இவ் அணைக்கட்டை நிரந்தரமாக கட்டித்தரவேண்டும் என அரசுக்கு வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

இந்த அணைக்கட்டை மண்ணால் கட்டும்பணி இன்றோ நேற்றோ ஏற்பட்டதல்ல இது 1800ம் ஆண்டுகளிலிருந்தே நடைபெற்று வந்திருப்பதாக வரலாற்றுக் குறிப்புகள் காட்டுகின்றன.

இதன் பிற்பாடு இந்த அணைக்கட்டை உறுதியாக நிரந்தரமாக கட்ட வேண்டும் என்ற நிலைக்கு இப்பகுதி விவசாயிகள் முடிவெடுத்து முயற்சிகளை மேற்கொண்டு வரலாயினர். அவர்களது எண்ணம் இந்த நிமிடம்வரை நிறைவேறவில்லை. ஆனாலும் வருடாவருடம் அவ் அணைக்கட்டு மண்ணால் கட்டப்பட்டுக் கொண்டுவருகிறது. அதேபோல ஒவ்வொரு வருடமும் எற்படும் வெள்ளம் அதை உடைத்துக் கொண்டு போகிறது. இது ஒரு துரதிர்ஷ்டமாகவே பார்க்கப்படுகிறது.



அதன்பாரிய பொறுப்பை மத்திய அரசின் நீர்ப்பாசன திணைக்களம் தாங்கிக் கொண்டிருக்கிறது. விசாலமான ஒரு ஆற்றை மறித்து அதனூடாக பாய்ந்துவரும் நீரை கால்வாய்களினூடாக ஆற்று மட்டத்தின் உயரத்திற்கு மேல் இருக்கின்ற காணிகளுக்கு நீர்ப்பாசனம் வழங்கக் கூடியதாக மாற்றியமைப்பதென்பது ஒரு இலகுவான காரியமல்ல. இதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த ஆய்வுகள் அணைக்கட்டு கட்டப்படும் இடத்தை தேர்ந்தெடுத்தல், அந்த இடத்தின் ஆழமான பகுதியில் மலைப்பாறைகள் இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்தல். ஆகிய அம்சங்களைக் கொண்டதாக இருக்கின்றன.

இவைகளே இத்திட்டத்தின் ஆரம்பப் புள்ளியாகும். இத்தேர்வுக்காக அணைக்கட்டு கட்டுப்படும் இடத்தில் கருங்கற்பாறைப் படுகைகள் வரும்வரை தோண்டப்படும். இலகுவில் சிதைவடையும் கற்பாறைகள் பொருத்தமில்லாதவை. இதற்கு உறுதியான கற்பாறைகளே தேவை. அவற்றை கண்டுபிடிக்க நிலத்தை மிகவும் ஆழமாக தோண்டி அதில் உறுதியான கற்பாறைகளைத் தேர்ந்தெடுத்து அவைகளை துளைத்து இரும்புக் கட்டிகளை அதனுள் புகுத்தி அங்கிருந்தே கொங்கிறீற் தூண்கள் எழுப்பப்படவேண்டும்.

இவ்வாறு செய்யும்போது பாய்ந்து வருகின்ற ஆறு மறிக்கப்படுவதால் அணைக்கட்டுக்கு பாரிய அமுக்கம் ஒன்று ஏற்படுவது தவிர்க்க முடியாது. இவ்வாறு பாரிய நீரோட்டம் இரண்டு வகையான தாக்கத்தை ஏற்படுத்துமென நீர்ப்பாசன எந்திரிகள் தெரிவிக்கின்றனர். ஒருவகையில் அணைக்கட் உடைக்கப்பார்க்கும், அடுத்தாக அணைக்கட்டின் இருபக்கத்திலுமுள்ள கரையை உடைத்துக் கொண்டு பீறிட்டு பாயப்பார்க்கும். அணைக்கட்டை நாடி வருகின்ற நீர் தேங்கிநின்று நிலமட்டத்திற்கு மேல் உயர்ந்த பின்பே அது நிலங்களுக்கு பாயும். ஆகையால் நில மட்டத்திற்கு மேலாக அதிக உயரத்திற்கு அணைக்கட்டை கட்டவேண்டியிருக்கம்.

இதே நேரத்தில் முந்தானை ஆறு மறிக்கப்படுவதால் அணைக்கட்டில் நீர் தேங்கி நிற்கப்போகிறது இதனால் அணைக்கட்டின் இரு மருங்கும் கரைந்து போகும் அல்லது உடைப்பெடுக்கப்பார்க்கும் இதற்காக அணைக்கட்டின் இருமருங்கும் ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கு "கபியன் கட்டு" கட்டப்பட வேண்டும். கபியன் கட்டென்பது இரும்பால் தயாரிக்கப்பட்ட வலைக்குள் பாறைக்கற்களைக் கொண்டு அடுக்கி கட்டப்படுவதாகும்.

அடுத்ததாக முந்தானையாறு தாங்கி வருகின்ற அவ்வளவு பெருவாரியான நீரை திசை திருப்பி ஒழுங்கு படுத்தி வயல் நிலங்களுக்கு அனுப்பக் கூடியதாக நீரை திசை திருப்பும் றெகுலேற்றர் இருக்க வேண்டும் அதேபோல அவ்வளவு நீரையும் தாங்கிச் செல்லும் வாய்க்காலும் விசாலம் கொண்டதாக இருக்க வேண்டும்.

இவ் அணைக்கட்டு அதிகமான நீர் தேவையானபோது தடுத்து நிறுத்துவதற்கும் நீர் தேவையற்றபோது திறந்து விடுவதற்கும் ஏற்றவகையில் நீரை ஒழுங்குபடுத்துவதற்கான கேற்றுக்களும் பொருத்தப்பட வேண்டும்

இங்கு போடப்பட வேண்டியிருக்கும் கிராம்புல் அணைக்கட்டின் நீளம் 116.4 மீற்றராகும். இதன் உச்சப்பகுதி 14.5 மீற் அகலம் கொண்டதாக இருக்கும். இதில் 3.75 மீ. அகலம் கொண்ட பகுதி வீதிப் போக்குவரத்துக்காக ஒதுக்கப்படும். இதனோடு 3.6 மீ. அகலமும், 6 மீ. உயரமும் கொண்ட 17 ஆரை வடிவம் கொண்ட கேற்றுக்கள் பொருத்தப்படும். இக்கேற்றுக்களே தண்ணீரை திறப்பதற்கும். தடுப்பதற்கும் பாவிக்கப் படப் போகிறது. இக்கட்டினூடாக 1312 கன அடி நீர் திறக்கப்படவிருக்கிறது என கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த அணைக்கட் கட்டை உறுதியாக கட்டிமுடிக்க வேண்டும் என்ற முயற்சியில் அரசும், விவசாயிகளும் சளைத்துப்போகவில்லை. அதே நேரத்தில் விவசாயச் செய்கையும் பாதிப்பின்றி நடந்து வந்திருக்கின்றது. அதற்காக மண்ணைக்கொண்டு வருடாவருடம், இடைவிடாது, அணைக்கட்டுக்கள் கட்டப்படுவதும் அவை மாரிகாலத்தில் வெள்ளத்தால் அள்ளுண்டு போவதும் நடந்த வண்ணம் இருக்கின்றது.

அரசு இதனை கட்டி முடிக்க வேண்டும் என்று அர்ப்பணிப்போடு செயற்பட்டு வந்தபோதிலும் அவ்முயற்சிகள் ஏழு தடவைகள் தோல்வியில் முடிந்துள்ளன. அப்படி இருந்த போதிலும் ஒவ்வொரு தடவையிலும் அரசாங்கம் தான் விட்ட தொழில்நுட்ப ரீதியான தவறுகளை இனம் கண்டுள்ளது எனலாம். தவறுகள் நேரலாம் அதே தவறுகளை மீண்டுமொரு தடவை விடக் கூடாதென்பதே அதிலிருந்து கிடைக்கும் படிப்பினையாகும்.

இவ்வாறான தவறுகள் 1800ம் ஆண்டில் தொடங்கி 1957 ஆம், 1975 ஆம்,1979 ஆம் 1984 ஆம், 2002 ஆம், 2004 ஆம் ஆண்டுகள் வரை நீண்டு சென்றிருக்கின்றது. இவ் அணைக்கட்டு வெள்ளத்தால் அள்ளுண்டு போனபிறகு அங்கு எஞ்சி நிற்கும் கட்டட இடிபாடுகள் இவற்றுக்கு சான்று பகர்கின்றன.

இப்போது அந்த அணைக்கட்டு தவறுகள் இன்றிய திடமான அணைக்கட்டாக உருவாக்க வேண்டும். இந்த அணைக்கட்டு இன்னுமொரு சேவையையும் வழங்க இருக்கிறது. அதாவது முந்தானையாற்றில் இரு மருங்கிலும் இருக்கின்ற நூற்றுக்கணக்காண கிராமங்களை இணைப்பதற்கான பாதையை ஏற்படுத்தி கொடுக்கப் போகிறது. முந்தனையாற்றை கடக்க முடியாமல் ஈரலைக்குளம், சின்னாலம் குளம், பெருவெளி, சின்னாவெளி ஆகிய கிராமத்து மக்கள் கஷ்டப்பட்டு வருகிறார்கள். ஒரு சிறிய தூரத்தை கடப்பதற்காக அப்பகுதி மக்கள் நீண்ட தூரம் வேறுபாதையால் 11 கி. மீ. தூரம் சுற்றி வரவேண்டியிருந்தது. இவ் அணைக்கட்டு நிறைவேறியதும் அதனூடாக அவர்கள் பயணிக்கலாம்.

இப்படியாக பல்வேறு நன்மைகளை வழங்கப்போகும் இந்த கிராம்புல் சேனை அணைக்கட்டு மட்டக்களப்பு மாவடத்திற்கு நீர்வளம் நெல்வளம், சிறுதானிய உற்பத்தி, நன்னீர் மீன் உற்பத்தி ஆகிய வளங்களை அள்ளிச் சொரிவதோடு. அப்பகுதி மக்களின் போக்குவரத்தையும் இலகுவாக்கும். இதனை எமது அரசு எப்படியாவது கட்டித்தரவேண்டும் என்பது இப்பகுதி மக்களின் உருக்கமான வேண்டுகோள். சில வெளிநாட்டு நிதியுதவியினூடான நீர்ப்பாசன திட்டங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தை வந்து சேர்ந்துள்ளன.

அவைகளுக்குள் இத்திட்டத்தை உள்வாங்குவது அரசுக்கு முடியாத காரிமல்ல என இப்பகுதி மக்கள் கருதகின்றனர்.



## தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம்...

(10ஆம் பக்கத் தொடர்)

இவ்வாறு ஆண்டுதோறும் 500 இளைஞர் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சியினை வெற்றிகரமாக வழங்கி அவர்களை எதிர்காலத்திற்கு தயார்படுத்துவது எமது நோக்கமாகும். இதன் மூலம் அவர்களின் நிரந்தர வருமானத்திற்கு வழிவகைகள் ஏற்படுகின்றன.

**கே: தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையத்தில் கற்பிக்கப்படும் பாடநெறிகள் என்னென்ன?**

மோட்டார் வாகனம் பழுதுபார்த்தல், இயந்திரவியல், மின்னிணைப்பாளர், தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியல், காய்ச்சி இணைத்தல் (வேல்டிங்), அலுமினிய வேலை, மோட்டார் சைக்கிள் பழுது பார்த்தல், தச்சு வேலை, ஆடை தயாரித்தல், ஹோட்டல் அறை பராமரிப்பு, உணவு பரிமாறல், முன்பள்ளி ஆசிரியர், அழகுக் கலை மற்றும் சிகை அலங்காரம், படவரைஞர், முச்சக்கர வண்டி திருத்துநர், வானொலி தொலைக்காட்சி பழுது பார்த்தல், தாதியர் பயிற்சி போன்ற பாடநெறிகள் இங்கு அனுபவம் வாய்ந்த போதானாசிரியர்களால் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**கே: தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் கற்கை நெறியை பூர்த்திசெய்து பெறும் சான்றிதழ் மூலம் தொழில்வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள இயலுமா? வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புகளையும் பெற முடியுமா?**

இங்கு கற்கை நெறிக்காக உள்வாங்கப்பட்டவுடன் இலங்கை வங்கியினூடாக ஒவ்வொரு மாணவனுக்கும் வங்கி கணக்கு திறக்கப்பட்டு ஏடிஎம் காட்டும் வழங்கப்படுகின்றன. இம் மாணவர்கள் கற்கை நெறியை முழுமையாக பூர்த்தி செய்து சான்றிதழை பெற்றவுடன் அபிவிருத்தி வங்கி கடன் என்ற பெயரில் இலங்கை வங்கியினூடாக ரூபா 5 இலட்சம் ஒரு மாணவனுக்கு வழங்கப்படுகின்றது. மேலும் தோட்ட உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சினூடாக ரூபா 2 இலட்சம் கடன் தொகை வழங்கப்படும். அதுமட்டுமல்லாமல் ரூபா 75 ஆயிரம் பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்படும். ஒவ்வொரு துறைக்கும் பொருத்தமான உபகரணங்கள் வழங்கப்படும். இச்சலுகைகளை பெற்றுக்கொண்டு தனது சொந்தக்காலில் நின்று சுயதொழிலில் ஈடுபட முடியும்.

**கே: தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் பெருந்தோட்ட பகுதிகளைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் அதிகளவில் பயன்பெறுகின்றனரா?**

கடந்த 20 வருடங்களாக ஹட்டனில் இயங்கி வருகின்ற இந்த தொழிற்பயிற்சி நிலையத்தில் ஏறத்தாழ 3000 மாணவர்கள் பயிற்சி பெற்று சென்றுள்ளனர். இங்கு பயிற்சி பெற்ற பலர் இலங்கையில் பல இடங்களில் வேலை செய்கின்றனர். வெளிநாடுகளிலும் தொழில் புரிகின்றனர். இங்கிருந்து பயிற்சி பெற்று வெளிநாடுகளில் தொழில் புரியும் பல இளைஞர்கள் என்னோடு தொடர்பில் உள்ளனர். எனினும் இத்தொழிற்பயிற்சி நிலையத்தினூடாக என்னென்ன நன்மைகளை பெற்றுக்கொள்ளலாம் என்பதனை மக்களுக்கு அவ்வப்போது தெளிவுபடுத்த வேண்டியிருக்கிறது. காலி, தெரணியகல போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் இதுதொடர்பாக அறியாதுள்ளனர். அதில் நியாயம் இருக்கிறது. ஆனால் ஹட்டன், கொட்டக்கலை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் இதுபற்றி பற்றி தெரியாதுள்ளனர் என்பதுதான் விசித்திரம்! எனவே இதன் நன்மைகளை கொஞ்சம் கொஞ்சமாக மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். அதற்கு ஊடகவியலாளர்களின் பங்கு அதிகமாக இருக்கின்றது.

மேலும் நுவரெலியா மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் அதிபர்களோடு தொடர்பை ஏற்படுத்தியிருக்கின்றோம். பாடசாலைகளில் நடைபெறும் பாடசாலை அபிவிருத்தி சங்க கூட்டத்தின்போது நான் அங்கு சென்று பாடசாலை மாணவர்களுக்கும் அவர்களின் பெற்றோருக்கும் இது தொடர்பாக பூரண விளக்கமளிக்க இருக்கின்றேன். மேலும் 6 மாதத்தில் அல்லது 1 வருடத்தில் பாடநெறிகளை முடித்து சான்றிதழை பெறுபவர்கள் இங்கேயே வேறு பாடநெறிகளை தொடர்ந்தும் பயில அனுமதியுள்ளது. இதன் மூலம் வெவ்வேறான தொழிற்பயிற்சிகளைப் பெறமுடியும். எனவே எமது பிரதேசத்தில் இவ்வாறு இலவசமாக பல சலுகைகளையும் கற்கை நெறிகளையும் வழங்கும் ஒரு அரசாங்க தொழிற்பயிற்சி நிறுவனத்தை எம்மவர்கள் மென்மேலும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

**கே: பெருந்தோட்டப் பகுதிகளைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் தோட்டத் தொழிலாளியாக வருதற்கான வாய்ப்புகள் இனிமேல் இல்லை. அப்படியென்றால் அவர்களுக்கான அடுத்தகட்ட நகர்வு என்ன? அவர்களுக்கான அடித்தளம் என்ன?**

இங்கு கற்கை நெறியை பயின்று பயிற்சி பெற்ற பலர் தாங்கள் பயிற்சிபெற்ற துறைகளில் தொழில் செய்யாமல் ஹோட்டல்களிலும், புடவை கடைகளிலும், வேறு இடங்களிலும் தொழில் புரிகின்றனர். இந்நிலை மாறவேண்டும். தான் கற்று பயிற்சிபெற்ற துறையில் தன்னை வளர்த்துக்கொண்டு பிரகாசிக்க வேண்டும். இவ்வளவு காலமும் ஒரு துறையை நன்கு கற்று அதில் பயிற்சியும் பெற்றதில் என்ன பலன் இருக்கின்றது! எனவே இளைஞர் யுவதிகளே, நன்கு சிந்தியுங்கள்! நீங்கள் பயிற்சி பெற்ற துறையில் நீங்களே உங்களை நன்கு வளர்த்துக் கொள்ளுங்கள். உங்களின் நிரந்தர வருமானத்திற்கு வழிவகைகளை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.

இங்கு நன்கு பயிற்சியை பெறுவோர் எவருக்கும் அடிபணியாது சொந்தமாக ஒரு தொழிலை ஆரம்பித்து வருமானம் ஈட்டலாம். அதற்கான சிறந்த வழிகாட்டல்களை இந்நிறுவனம் வழங்குகின்றது. 48 பிரஜா சக்தி நிலையங்களில் தற்போது 44 இயங்குகின்றன. பிரஜா சக்தி நிறுவனத்துடன் ஒரு ஒப்பந்தம் செய்திருக்கின்றோம். அது அமைச்சினால் மாணவர்களுக்கு கடன் உதவி மற்றும் உபகரணங்கள் வழங்குவது தொடர்பான ஒப்பந்தம். மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உபகரணங்கள் முறையாக பயன்படுத்தப்படுகின்றனவா இல்லையா என்பது பற்றி 3 மாதத்திற்கு ஒருமுறை நாம் சென்று அவதானிக்க இருக்கின்றோம். உபகரணங்கள் பயன்படுத்தப்படவில்லை என்றால் ஒப்பந்தத்தின்படி அதனை மீள ஒப்படைக்க வேண்டும். சட்டத்திட்டங்களை உரிய முறையில் பயன்படுத்தும்போது பல மாற்றங்களை உருவாக்க முடியும். எமது நோக்கம் எதிர்காலத்தில் எமது இளைஞர், யுவதிகள் அனைவரும் ஏதோவொரு துறையில் பிரகாசிக்க வேண்டும் என்பதே. எனவே இளைஞர் யுவதிகள் கற்கை நெறிகளை நிறைவு செய்து சிறந்த பயிற்சியை பெற்று தனது சொந்த கால்களில் நிற்கும் காலம் மிகவிரைவில் உண்டு என்பதில் ஐயமில்லை.

## செம்பனை செய்கைக்கான...

(08ஆம் பக்கத் தொடர்)

இதுகுறித்து குடியிருப்பாளர்கள் தெரணியகலை பொலிஸ் நிலையத்திலும் பிரதேச செயலாளரிடமும் முறையிட்டனர். இதனையடுத்து அவ்விடத்திற்கு நேரில்வந்த அதிகாரிகள் தோட்ட நிர்வாகத்தின் செயற்பாடு சட்டத்திற்கு முரணானது என தெரிவித்து நடப்பட்டிருந்த முள்ளுத் தேங்காய் கன்றுகளை உடனடியாக அப்புறப்படுத்தம்படி கோரியபோதிலும் அவை அப்புறப்படுத்தப்படாமையால் பிரச்சினை நீதிமன்றம் வரை சென்றது. உரிய வழக்கின் தீர்ப்பு கிடைக்கும் வரை காத்திருக்க வேண்டிய நிலைக்கு மக்கள் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

செம்பனை செய்கையால் நிலத்தடி நீர் அற்றுப்போவதுடன் வளமான மண் வளமற்று வரண்ட மண்ணாக மாறுகிறது. பாம்புகள் மற்றும் விஷ ஜந்துக்கள் உருவாகும் வாய்ப்பு உள்ளது. சுற்றாடல் பாதிப்புக்குள்ளாவதுடன் தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்பு குறைவடைகிறது.

இதேவேளை கேகாலை, இரத்தினபுரி, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் செம்பனை செய்கைக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். விடயம் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதன் பயனாக செம்பனை செய்கையை மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டது.

எனினும் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் புதிய தலைவர் பாலித்த புளுமுல்ல இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போது, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் வேண்டுகோளின் பேரிலேயே பெருந்தோட்டங்கள் செம்பனை பயர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் செம்பனை செய்கை மேற்கொள்ளப்பட்டதால் பாம் ஒயில் இறக்குமதிக்கு அரசினால் செலவிடப்பட்ட இலட்சக்கணக்கான ரூபாவை மீதப்படுத்தக் கூடியதாக இருந்ததாகவும் எனவே மீண்டும் செம்பனை செய்கைக்கான அனுமதியை கோரவுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

எனவே தோட்டத் தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்கள் அவற்றுக்கிடையே உள்ள போட்டாப் போட்டிகளை ஒருபுறம் வைத்துவிட்டு தொழிலாளர்களின் நலனில் அக்கறை செலுத்தி இனிவரும் காலங்களிலாவது செயற்பட வேண்டும். பெருந்தோட்டங்களில் செம்பனை செய்வதற்கான தடை தொடரப்பட வேண்டும். நாட்டின் நீர்வளமும் நிலவளமும் பாதிக்கப்படுவதை அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து தடுத்து நிறுத்த வேண்டும். செம்பனை செய்கைக்கான தடை தொடர வேண்டும்.



# வாகனங்கள் விற்பனைக்கு

### KADAWATHA VEHICLE YARD

**THREE WHEEL**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| AAA-67XX | AAM-77XX | AAV-10XX | ABE-63XX | QL-73XX | QR-25XX | QZ-02XX | YO-69XX |
| AAC-63XX | AAM-79XX | AAV-56XX | ABJ-33XX | QM-29XX | QT-66XX | QZ-52XX | YP-08XX |
| AAE-30XX | AAN-91XX | AAV-68XX | ABK-45XX | QM-76XX | QT-86XX | QZ-76XX | YP-40XX |
| AAE-55XX | AAO-54XX | AAW-71XX | ABK-57XX | QM-98XX | QT-93XX | QZ-86XX | YP-80XX |
| AAF-16XX | AAO-80XX | AAW-87XX | ABL-76XX | QN-15XX | QT-96XX | YA-08XX | YQ-37XX |
| AAF-19XX | AAP-54XX | AAX-10XX | JW-86XX | QN-24XX | QV-02XX | YA-32XX | YS-00XX |
| AAF-64XX | AAP-96XX | AAX-49XX | JY-46XX | QN-43XX | QV-39XX | YA-49XX | YS-47XX |
| AAF-71XX | AAQ-08XX | AAX-65XX | JY-89XX | QN-46XX | QW-20XX | YE-91XX | YS-69XX |
| AAI-13XX | AAQ-10XX | AAY-52XX | QE-00XX | QN-65XX | QW-52XX | YF-17XX | YS-90XX |
| AAJ-47XX | AAQ-36XX | AAY-90XX | QE-56XX | QN-94XX | QW-59XX | YH-09XX | YU-16XX |
| AAJ-47XX | AAR-66XX | ABA-68XX | QE-92XX | QO-16XX | QW-69XX | YH-27XX | YU-83XX |
| AAJ-70XX | AAS-01XX | ABB-06XX | QF-45XX | QO-50XX | QW-69XX | YJ-39XX | YV-64XX |
| AAK-57XX | AAS-33XX | ABB-42XX | QH-31XX | QO-53XX | QW-83XX | YK-00XX | YW-86XX |
| AAK-77XX | AAS-70XX | ABC-09XX | QJ-81XX | QO-86XX | QX-04XX | YK-46XX | YW-87XX |
| AAK-91XX | AAS-99XX | ABD-30XX | QJ-99XX | QP-05XX | QX-26XX | YK-50XX | |
| AAL-51XX | AAT-21XX | ABD-54XX | QK-57XX | QQ-50XX | QX-31XX | YM-16XX | |
| AAL-62XX | AAU-57XX | ABD-68XX | QK-65XX | QR-21XX | QX-90XX | YO-49XX | |

**OTHER VEHICLES**

| VEHICLE NO | MODEL | MAKE | VEHICLE NO | MODEL | MAKE |
|---|---|---|---|---|---|
| CAT-77XX | TATA | NANO | BIG-62XX | TVS | MOTOR CYCLE |
| CAF-15XX | TATA | NANO | BII-96XX | TVS | MOTOR CYCLE |
| CAI-86XX | TATA | NANO | BIJ-97XX | TVS | MOTOR CYCLE |
| KQ-55XX | TATA | NANO | BIM-20XX | YAMAHA | MOTOR CYCLE |
| KU-76XX | TATA | NANO | BIO-98XX | TVS | MOTOR CYCLE |
| BHW-28XX | SUZUKI | MOTOR CYCLE | BIW-29XX | TVS | MOTOR CYCLE |
| BIC-38XX | HERO | MOTOR CYCLE | | | |

### HORANA VEHICLE YARD

**THREE WHEEL**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| AAA-86XX | AAJ-90XX | AAV-67XX | QF-93XX | QN-78XX | QS-66XX | QX-97XX | YP-86XX |
| AAB-79XX | AAM-00XX | AAX-69XX | QJ-50XX | QN-89XX | QS-80XX | QZ-74XX | YP-92XX |
| AAD-48XX | AAM-25XX | AAY-64XX | QJ-72XX | QN-97XX | QU-93XX | YE-08XX | YV-48XX |
| AAG-35XX | AAN-21XX | ABC-59XX | QL-03XX | QO-89XX | QV-04XX | YJ-63XX | YW-63XX |
| AAH-51XX | AAO-09XX | ABE-61XX | QL-11XX | QP-12XX | QV-07XX | YJ-84XX | YY-80XX |
| AAH-94XX | AAO-75XX | ABI-43XX | QL-13XX | QP-40XX | QV-54XX | YK-06XX | YZ-75XX |
| AAI-64XX | AAP-40XX | ABU-81XX | QL-76XX | QP-44XX | QV-79XX | YP-25XX | YZ-91XX |
| AAI-79XX | AAS-81XX | JZ-14XX | QM-88XX | QP-53XX | QV-94XX | YP-25XX | |
| AAJ-71XX | AAV-22XX | QB-43XX | QN-40XX | QR-22XX | QX-42XX | YP-43XX | |

**OTHER VEHICLES**

| VEHICLE NO | MODEL | MAKE | VEHICLE NO | MODEL | MAKE |
|---|---|---|---|---|---|
| DAC-81XX | MAHINDRA | SINGLE CAB | BIB-84XX | HONDA | MOTOR CYCLE |
| 42 SRI 04XX | ISUZU | MOTOR LORRY | BIE-43XX | HERO | MOTOR CYCLE |
| LB-18XX | Mitsubishi | MOTOR LORRY | BIV-82XX | TVS | MOTOR CYCLE |
| BHC-70XX | HERO | MOTOR CYCLE | BIW-63XX | TVS | MOTOR CYCLE |
| BHN-96XX | APACHE | MOTOR CYCLE | BIY-65XX | BAJAJ | MOTOR CYCLE |
| BIB-45XX | HONDA | MOTOR CYCLE | 14 SRI 62XX | TOYOTA | MOTOR CAR |

### NITTAMBUWA VEHICLE YARD

**THREE WHEEL**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| AAA-58XX | AAP-15XX | AAY-78XX | QF-31XX | QN-69XX | QX-29XX | YB-97XX | YX-40XX |
| AAD-63XX | AAP-59XX | ABA-01XX | QG-89XX | QN-96XX | QX-64XX | YI-28XX | YY-12XX |
| AAD-89XX | AAQ-16XX | ABC-09XX | QH-99XX | QS-01XX | QX-78XX | YJ-03XX | YY-27XX |
| AAD-90XX | AAQ-51XX | ABD-15XX | QI-63XX | QS-30XX | QX-96XX | YK-57XX | YY-60XX |
| AAF-01XX | AAQ-95XX | ABD-37XX | QJ-56XX | QS-40XX | QZ-75XX | YP-33XX | YY-66XX |
| AAF-26XX | AAR-34XX | ABD-78XX | QJ-60XX | QT-03XX | QZ-84XX | YQ-47XX | YZ-12XX |
| AAG-63XX | AAT-53XX | ABI-82XX | QL-30XX | QT-06XX | YA-35XX | YT-43XX | YZ-43XX |
| AAG-64XX | AAW-03XX | ABP-98XX | QL-56XX | QT-18XX | YA-54XX | YV-33XX | |
| AAI-43XX | AAW-25XX | JX-77XX | QL-58XX | QT-38XX | YA-66XX | YW-07XX | |
| AAJ-25XX | AAW-63XX | QA-31XX | QM-13XX | QU-07XX | YA-74XX | YW-21XX | |
| AAL-97XX | AAW-67XX | QE-31XX | QM-80XX | QW-74XX | YB-69XX | YW-90XX | |
| AAN-92XX | AAX-66XX | QE-86XX | QN-20XX | QW-84XX | YB-97XX | YX-31XX | |

**OTHER VEHICLES**

| VEHICLE NO | MODEL | MAKE | VEHICLE NO | MODEL | MAKE |
|---|---|---|---|---|---|
| LL-09XX | FAW | MOTOR LORRY | BIU-65XX | YAMAHA | MOTOR CYCLE |
| LY-99XX | RENAULT | MOTOR LORRY | DAC-18XX | MAHINDRA | MINI TRUCK |
| BGX-07XX | SALUTO | MOTOR CYCLE | DAD-61XX | MAHINDRA | MINI TRUCK |
| BIB-78XX | HONDA | MOTOR CYCLE | PW-07XX | TATA | MINI TRUCK |
| BIE-29XX | TVS | MOTOR CYCLE | RD-86XX | MAHINDRA | TRACTOR |
| BIF-85XX | HERO | MOTOR CYCLE | RF-19XX | MAHINDRA | TRACTOR |
| BIG-18XX | YAMAHA | MOTOR CYCLE | | | |

### ANURADHAPURA VEHICLE YARD

**THREE WHEEL**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| AAC-75XX | ABN-31XX | QC-67XX | QK-92XX | QS-76XX | QX-17XX | YJ-56XX | YW-44XX |
| AAD-07XX | ABO-73XX | QI-43XX | QM-18XX | QT-53XX | QX-34XX | YO-14XX | YW-78XX |
| AAU-19XX | ABO-75XX | QJ-87XX | QO-14XX | QW-41XX | QZ-96XX | YP-41XX | YY-00XX |
| AAU-39XX | HJ-47XX | QK-18XX | QR-11XX | QW-91XX | YI-13XX | YW-07XX | YY-09XX |
| ABH-09XX | PZ-02XX | | | | | | |

**OTHER VEHICLES**

| VEHICLE NO | MODEL | MAKE | VEHICLE NO | MODEL | MAKE |
|---|---|---|---|---|---|
| PV-55XX | MAHINDRA | MINI TRUCK | BIE-18XX | TVS | MOTOR CYCLE |
| GR-73XX | TOYOTA | MOTOR LORRY | BIE-62XX | HERO | MOTOR CYCLE |
| BFJ-61XX | HERO | MOTOR CYCLE | BII-14XX | HERO | MOTOR CYCLE |
| BGB-64XX | HUNK | MOTOR CYCLE | BIL-06XX | TVS | MOTOR CYCLE |
| BGR-86XX | WEGO | MOTOR CYCLE | BIL-06XX | TVS | MOTOR CYCLE |
| BHS-60XX | TVS | MOTOR CYCLE | BIM-34XX | TVS | MOTOR CYCLE |
| BHX-19XX | HERO | MOTOR CYCLE | BIM-70XX | HERO | MOTOR CYCLE |
| BHZ-09XX | BAJAJ | MOTOR CYCLE | BIM-81XX | TVS | MOTOR CYCLE |
| BIC-01XX | TVS | MOTOR CYCLE | BIM-91XX | TVS | MOTOR CYCLE |
| BIC-39XX | HERO | MOTOR CYCLE | BIN-43XX | BAJAJ | MOTOR CYCLE |
| BIC-66XX | YAMAHA | MOTOR CYCLE | RE-02XX | MAHINDRA | TRACTOR |
| BID-63XX | HONDA | MOTOR CYCLE | RE-77XX | SONALIKA | TRACTOR |
| BID-88XX | TVS | MOTOR CYCLE | | | |

வாகனபரி சோதனை

**Kadawatha Vehicle Yard -** No. 125/F, Ragama Road, Kadawatha.
**Horana Vehicle Yard -** No. 166, Aguruwathota Road, Horana.
**Anuradhapura Vehicle Yard -** Chanal 05, Rathmale, Shrawasthipura.
**Nittambuwa Vehicle Yard -** No.655, Jayasuriya Mawatha, Nittambuwa.

மேற்படி வாகனங்கள் எதிர்வரும் 2021 மே 10 ஆம் 11 ஆம் 12 ஆம் 13 ஆம் திகதிகளில் மு:ப 09.00 முதல் பி:ப 4.00 வரை பார்வையிடலாம். (கேள்வி 2021 மே 13 ஆம் திகதி பி:ப: 4.00 க்கு முடிவடையும்)

மீள்செலுத்தப்படாத 250 ரூபாவைச் செலுத்திய பின்னர், மஹர, நிட்டம்புவ, ஹொரண மற்றும் அனுராதபுர ஊனுடீ கிளைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பதாரிகள் வாகனங்களை அந்த நேரத்தில் காணப்படும் நிலையிலேயே ஏற்றுக் கொள்ள வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் தொலைபேசி மூலம் அறிவிக்கப்படுவார்கள். அறிவிக்கப்பட்டு 07 நாட்களுக்குள் வாகனத்தின் முழுக் கட்டணத்தையும் செலுத்திக் கொண்டு செல்ல வேண்டும். மேலும் வாகனங்களில் நிலுவையாக உள்ள அரசாங்க வரி மற்றும் வருமான வரி என்பவற்றை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

** The company decision of the tender will be final*

**CITIZENS DEVELOPMENT BUSINESS FINANCE PLC**
No. 125/F, Ragama Road, Kadawatha.
Tel: 0112 920 665 / 0112 925 044 / 034- 22 66 244 / 025-205 26 32



**மருந்தாக்கல்களின் உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சு**

SPMC

## இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (SPMC)

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## சர்வதேச போட்டி ரீதியான விலை கோரல் - (ICB)

**கேள்வி இல: SPMC/02/2021 - 2021 ஜூன் 22ஆம் திகதி மூடப்படும்.**

## மருந்தாக்கல் மூலப்பொருட்களுக்கான பெறுகை

1. இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11இல் இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழுவின் தவிசாளர் அவர்களால் 2021 ஜூன் 22ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை மருந்தாக்கல் மூலப்பொருட்களை வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | பொருள் | அளவு (KG) | மீள் செலுத்தப்படாத கேள்விக் கட்டணம் (இல. ரூபா) |
|---|---|---|---|
| 1 | Amoxicillin Trihydrate BP(Compacted) | 18,000 | 15,000.00 |
| 2 | Ascorbic Acid BP | 5,000 | 2,000.00 |
| 3 | Atorvastatin Calcium IP | 1,000 | 7,000.00 |
| 4 | Carbamazepine BP | 2,000 | 6,000.00 |
| 5 | Cetirizine Dihydrochloride BP | 200 | 500.00 |
| 6 | Cimetidine (Type A) USP | 1,000 | 1,500.00 |
| 7 | Ciprofloxacin Hydrochloride USP/ NF | 1,500 | 2,000.00 |
| 8 | Clopidogrel Bisulphate USP | 2,000 | 6,000.00 |
| 9 | Cloxacillin Sodium BP | 9,000 | 10,000.00 |
| 10 | Clarithromycin USP | 500 | 4,000.00 |
| 11 | Diclofenac Sodium USP | 3,000 | 2,500.00 |
| 12 | Domperidone Maleate BP | 1,000 | 3,000.00 |
| 13 | Enalapril Maleate USP | 150 | 1,500.00 |
| 14 | Famotidine USP | 1,500 | 4,000.00 |
| 15 | Flucloxacillin Sodium BP | 18,000 | 25,000.00 |
| 16 | Frusemide BP | 1,500 | 3,500.00 |
| 17 | Gliclazide BP | 8,000 | 30,000.00 |
| 18 | Indometacin BP | 200 | 500.00 |
| 19 | Losartan Potassium BP | 6,000 | 16,000.00 |
| 20 | Metformin Hydrochloride BP | 27,000 | 4,000.00 |
| 21 | Nicotinamide BP | 600 | 500.00 |
| 22 | Phenoxymethylpenicillin Potassium (Compacted) BP | 2,000 | 3,000.00 |
| 23 | Prednisolone BP | 350 | 7,000.00 |
| 24 | Propranolol Hydrochloride BP | 300 | 500.00 |
| 25 | Pyridoxine Hydrochloride BP | 50 | 500.00 |
| 26 | Riboflavin BP | 75 | 500.00 |
| 27 | Salbutamol Sulphate BP | 100 | 1,000.00 |
| 28 | Sulfamethoxazole BP | 2,000 | 1,500.00 |
| 29 | Spironolactone USP | 300 | 3,000.00 |
| 30 | Thiamine Hydrochloride BP | 125 | 500.00 |
| 31 | Trifluoperazine Hydrochloride BP | 50 | 2,000.00 |
| 32 | Trimethoprim **BP** | 400 | 500.00 |
| 33 | Verapamil Hydrochloride BP | 350 | 1,500.00 |
| 34 | Calcium Sulphate Dihydrate BP | 500 | 500.00 |
| 35 | Di Basic Calcium Phosphate (Dihydrate) USP | 4,000 | 500.00 |
| 36 | Cetyl Alcohol BP/USP/ USNF | 100 | 500.00 |
| 37 | Colloidal Silicon Dioxide USP/USNF | 540 | 1,000.00 |
| 38 | Crospovidone BP | 1,000 | 500.00 |
| 39 | DC Lactose (Lactose Anhydrous USNF/ USP) | 12,000 | 3,000.00 |
| 40 | Hydroxypropyl Cellulose-L JP | 500 | 1,500.00 |
| 41 | Hydroxypropyl methylcellulose -Pthalate | 500 | 1,000.00 |
| 42 | Hydroxypropyl methylcellulose (Hypromellose) USP | 2,000 | 1,000.00 |
| 43 | Lactose Monohydrate BP /USP (200Mesh) | 50,000 | 3,500.00 |
| 44 | Magnesium Stearate BP | 2,000 | 500.00 |
| 45 | Maize Starch BP/ USNF | 54,000 | 2,500.00 |
| 46 | Microcrystalline Cellulose USNF/ BP | 9,000 | 1,000.00 |
| 47 | Micro crystalline Cellulose USNF/ PH EUR/JP (PH 200 LM) | 4,500 | 1,000.00 |
| 48 | Polyethylene glycol USP/ NF | 150 | 500.00 |
| 49 | Povidone K-30 (Polyvinyl Pyrrolidone K-30) USP/ BP | 1,500 | 500.00 |
| 50 | Pre-gelatinized Maize Starch | 2,500 | 500.00 |
| 51 | Purified Talc BP | 7,500 | 500.00 |
| 52 | Saccharin Sodium BP | 150 | 500.00 |
| 53 | Sodium Bicarbonate BP | 100 | 500.00 |
| 54 | Sodium Citrate BP | 100 | 500.00 |
| 55 | Sodium Starch Glycolate BP/USNF | 5,000 | 1,500.00 |
| 56 | Stearic Acid (D- grade) BP | 500 | 500.00 |
| 57 | Tartaric Acid BP/ USNF | 150 | 500.00 |
| 58 | Titanium Dioxide BP | 500 | 500.00 |

2. முழுத் தொகுதியொன்றில் தயாரிக்கப்பட்ட முத்திரையிடப்பட்ட மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளிலான விலைமனுக்களை வெவ்வேறாக ''தவிசாளர் பெறுகைக் குழு, இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம், இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவல எஸ்டேட், இரத்மலானை இலங்கை'' எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11, இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தரை தளத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
3. கீழ்க்காணும் ஆவணங்களை ஒப்படைப்பதன் மூலம் 2021 மே 10ஆம் திகதி முதல் 2021 ஜூன் 22ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணி இடையே மேலே கூறப்பட்ட முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பெறலாம்.

இலங்கை இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11இல் அமைந்த அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் - திட்டமிடல் மற்றும் கொள்வனவு அவர்களுக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பித்தல்.

மீள் செலுத்தப்படாத மேல்கூறப்பட்ட கேள்விக் கட்டணத்தை அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் கணக்குப் பிரிவிற்கு செலுத்தல்

4. விலைமனுக்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் உடன்பாடுகளினால் நிர்வகிக்கப்படுவதுடன் கேள்விதாரர் சார்பில் விலைமனுதாரர் ஒரு முகவரை, உப முகவரை, பிரதிநிதியை, நியமிக்கப்பட்டவரை அமர்த்துவதாயின் பொது ஒப்பந்தச் சட்டத்தின் (PCA) 10ஆம் பிரிவின் பிரகாரம் அவ்வாறான பொது ஒப்பந்தத்துக்காக தன்னைப் பதிவு செய்துகொள்ள வேண்டியதுடன் கேள்வியின் எத்தருணத்திலும் கொடுக்கல் வாங்கல்களின் போது செல்லுபடியாகும் அவ்வாறான பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.
5. விலைமனுக்கள் ஏற்கப்படும் நேரம் முடிவந்தவுடன் இரத்மலானை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன் அத்தருணத்தில் சமுகந்தர விலைமனுதாரர் அல்லது அவரது அங்கீகாரம் வழங்கப்பட்ட முகவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.
6. விலைமனு ஆவணங்களை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. மேலதிக தகவல்களை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் பிரதிப் பொது முகாமையாளர் - திட்டமிடல் மற்றும் பெறுகைகள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல.: 2623298)

''விலைக்கோரல் தகவல்கள்'' தொடர்பான விபரங்களை எமது இணையத்தளத்தில் பார்வையிடலாம். (www.spmclanka.lk)

வெளிநாட்டு முதன்மையாளர்கள் விலைமனு ஆவணங்களை எமது இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம். (உள்நாட்டு முகவர்களால் பிரதிநிதித்துவம் செய்யப்படாதவர்கள், அத்தகைய விலைக்கோரல்களுக்கு மேற்குறிப்பிடப்பட்ட விலைமனு ஆவணத்திற்கான கட்டணங்களை நிகரான ஐ.அமெரிக்க டொலர் பெறுமதி/பெறுமதிகளில் வங்கி வரைவாக விலைமனு ஆவணங்களுடன் இணைத்தல் வேண்டும்.)

**தலைவர் - பெறுகைக் குழு,**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவல எஸ்டேட், இரத்மலானை,**
**இலங்கை.**

**தொலைபேசி இல. : (00)94-11-2635353/(00)94-11-2637574/(00)-94-11-2623298**
**மின்னஞ்சல் : spmclanka@sltnet.lk**
**இணையத்தளம் : www.spmclanka.lk**
**தொலைநகல் இல. : (00) 94-11-2634771, 2626621**

## றைகம் சமுதாய அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

குமார வெல்கம ஆகிய நான், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் றைகம் சமுதாய அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் எனப்படும் சட்டமூலமொன்றை பாராளுமன்றத்தில் அறிமுகஞ்செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த மன்றத்தை கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.

1. **மனைசார் கைத்தொழில் மற்றும் சுயதொழில் வாய்ப்புகளுக்கான திட்டங்களை தயாரித்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் நெறிப்படுத்தல்**
2. **வீதி அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் திட்டங்கள் மருத்துவமனைகள், சனசமூக நிலையங்கள் நிர்மாணித்தல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைபடுத்தல்**
3. **சிறுவர், பெண்கள், அனாதைகளினதும் பயனுக்காக மனைசார் நலனோம்பல் செயற்பாடுகளை மேம்படுத்தலும் தெருவோரக் குழந்தைகளை அரவணைத்தலும்,**

**பிறவும்**


**குமார வெல்கம**
**பாராளுமன்ற உறுப்பினர்**

**இலவச வேலை வாய்ப்புகள்**

இலங்கையின் பிரசித்தி பெற்ற பல நிறுவனங்களுக்கு வயது 18 - 45 வயதிற்கு இடைப்பட்ட ஆண்/ பெண் இருபாலாரும் தற்போது இணைத்துக் கொள்ள.
* அதிகூடிய ஊதியம்
* சுகாதார முறைகளுக்கு ஏற்ப சேர்த்துக் கொள்ளப்படும்.

**தொடர்புகளுக்கு**
(T) சந்திரன் - 071-2822944
(S) சுதேஸ் - 070-3951776

BE BETTER INFORMED!
Dinamina Daily News Thinakaran
News you can trust now free on your mobile phone.
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT
LAKE HOUSE



OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## கைத்தொழில் அமைச்சு

# அமைச்சிற்குச் சொந்தமான வாகனங்களுக்கான முழுமையான காப்புறுதியை பெற்றுக்கொள்வதற்கான கேள்வி கோரல்

01. கொழும்பு 03, காலி வீதி, இல. 73/1, எனும் முகவரியில் அமைந்துள்ள கைத்தொழில் அமைச்சிற்குச் சொந்தமான வாகனங்களுக்கு 2021-06-06ஆம் திகதி முதல் 2022-06-05ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கான முழுமையான காப்புறுதியை பெற்றுக் கொள்வதற்காக 2021-05-28ஆம் திகதி பி.ப. 2.00 வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. இதன் பிரகாரம் வாகனங்களுக்கு முழுமையான காப்புறுதியை வழங்குவது சம்பந்தமான கேள்விப் பத்திரங்களை அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை) 2021-05-10ஆம் திகதி முதல் 2021-05-25ஆம் திகதி வரை ரூ. 1,000/- (மீளளிக்கப்படாத) தொகையை அமைச்சின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

03. கேள்வி விண்ணப்பத்துடன் அமைச்சு செயலாளரின் பெயரில் பெற்றுக்கொண்ட ரூ. 50,000/- பெறுமதியான கேள்விப் பிணையொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும். (இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி மூலம் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரியின் (மாதிரிப்பத்திரம் - இ) அடிப்படையில் இக்கேள்விப் பிணையைச் சமர்ப்பித்தல் வேண்டும்) இல்லையெனில் இக் கேள்விப் பிணையின் பொருட்டு அமைச்சின் காசாளரிடம் 'செயலாளர் - கைத்தொழில் அமைச்சு' பெயரில் பெற்றுக்கொண்ட ரூ. 50,000/- (மீளளிக்கப்படும்) தொகையை வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் விலைமனுக்களை 2021-05-28ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புமாறு தயவுடன் அறியத்தருகிறேன்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு – II,**
**கைத்தொழில் அமைச்சு,**
**இல. 73/1, காலி வீதி,**
**கொழும்பு - 03**

04. ஒவ்வொரு நிறுவனத்தினாலும் சமர்ப்பிக்கப்படுகின்ற கேள்வி ஆவணங்கள் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிடப்பட்டு இரு பிரதிகளாக தயாரித்து வேறு வேறு கடித உறைகளில் இட்டு அவற்றை ஒரே உறையில் உள்ளடக்கி சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி ஆவணங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'அமைச்சு வாகனங்களுக்கான முழுமையான காப்புறுதிக்கான விலைமனுக்கள் (MI/FIN/32/03/10)' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

05. இது தொடர்பான கேள்விக்கு முன்னரான கலந்துரையாடல் ஒன்று 2021-05-17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அமைச்சில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

06. மேலும், 05 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்காக இயைபுடைய 1987 இல 03 எனும் பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

07. தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**கைத்தொழில் அமைச்சு,**
**இல. 73/1, காலி வீதி,**
**கொழும்பு - 03.**

**மேலதிக விபரங்களுக்கான தொலைபேசி இல. 0112327053/0112347392**

**2021-05-09ஆம் திகதி**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**பாதுகாப்பு அமைச்சு**

## அக்குரேகொடவிலுள்ள பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத் தொகுதியின் 01ஆம் மற்றும் 02ஆம் தொகுதிகளுக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (INFORMATION COMMUNICATION TECHNOLOGY SYSTEM (ICTS)) முறைமையை வடிவமைத்தல், வழங்கல் மற்றும் நிறுவுதலுக்கான விலைமனு

## Contract No.: DHQC/ICT/1&2/2021

01. வெட் வரியின்றி 480 மில்லியன் இலங்கை ரூபாவில் மதிப்பீடு செய்யப்பட்டதும் கீழே விபரிக்கப்பட்டதும் பத்தரமுல்ல, பெலவத்த, அக்குரேகொட வீதியில் உத்தேசிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு தலைமையக கட்டிட தொகுதியின் 01ஆம் மற்றும் 2ஆம் தொகுதிகளுக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICTS) முறைமையை வடிவமைத்தல், வழங்கல் மற்றும் நிறுவுதலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பாதுகாப்பு அமைச்சின் சார்பாக பாதுகாப்பு அமைச்சின் அமைச்சுப் பெறுகைக் குழுத் (**MPC)** தலைவர் முத்திரையிடப்பட்ட போட்டி ரீதியிலான விலைமனுக்களை இப்பொழுதுஅழைக்கின்றார். இந்த வேலையில் அக்குரேகொடவிலுள்ள பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத் தொகுதியின் 01ஆம் மற்றும் 2ஆம் தொகுதிகளுக்கு Local Area Network Switches (LANS), Network Operating Center (NOC), CCTV IP Surveillance System (CCTV/IPSS), Door Access Control System (DACS),Network switches for IP Television System (IPTVS) and Network switches of Master Clock System (MCS) என்பவற்றை வழங்குதல், நிறுவுதல், உள்ளமைவுகள் மற்றும் பராமரிப்புகள் ஆகியவை உள்ளடங்குகின்றன.

02. நிர்மாணக் காலப்பகுதியானது 300 நாட்களாகும்.

03. விலைக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

04. ஒப்பந்தத்தைப் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்காக, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலுக்கு உள்வாங்கப்படாதவராக இருத்தல் வேண்டும். விலைமனுதாரர்கள் விஷேடத் தன்மையாக நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் மின்னியல் மற்றும் பொறிமுறை சேவைகளுக்கு EM1 தரத்தின் கீழ் உப-விஷேடத் தன்மையாக Telecommunication and Information Technology Systems, Security Systems and Pipe Music Systems (ELV) என்பவற்றுக்கு பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

05. ஒப்பந்த வழங்கலை பெறும் தகைமைக்கான ஆகக் குறைந்த தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு:

| | தகைமைகள் | ஆகக் குறைந்த தகைமைத் தேவைப்பாடுகள் |
|---|---|---|
| (i) | கடந்த 10 வருடங்களில் ஏதாவதொரு ஐந்து வருடங்களில் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாண வேலைகளின் வருடாந்த சராசரி நிதிப்புரள்வு (2010 முதல் 2019) | வருடமொன்றிற்கு 500 மில்லியன் இலங்கை ரூபா. (2010/2011, 2011/2012, 2012/2013, 2013/2014, 2014/2015, 2015/2016, 2016/2017, 2017/2018, 2018/2019, 2019/2020 வருடங்களுக்கான சான்றுபடுத்திய கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளை விலைமனுக்களுடன் வழங்குதல் வேண்டும்) |
| (ii) | கடந்த 10 வருடங்களில் வடிவமைப்பு, வழங்கல் மற்றும் நிறுவுதலில் அனுபவம் (2010, 2011, 2012, 2013 மற்றும் 2014, 2015, 2016, 2017, 2018 மற்றும் 2019) | கடந்த 10 வருடங்களில் ஆகக் குறைந்தது 3 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முறைமையை முறைமைகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அவ்வாறான முறைமைகளுள் ஒன்றின் ஆகக் குறைந்த பெறுமதி 120 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு குறையாததாகவிருத்தல் வேண்டும். தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முறைமை சான்றுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (iii) | ஏனைய ஒப்பந்த ரீதியிலான கடப்பாடுகளுக்கு ஒதுக்கிய பின்னர், திரவச் சொத்துக்கள் மற்றும்/ அல்லது கடன் வசதிகளுக்கான ஆகக் குறைந்த தொகை மற்றும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் பிரத்தியேகமாக மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு முற்பணம். | 160 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும். சான்றுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். |

06. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை இலங்கை, பத்தரமுல்ல, பெலவத்த, அக்குரேகொட வீதி, பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத்தொகுதி செயற்றிட்டம், செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையின் பணிப்பாளரிடமிருந்து அல்லது pmudhqc@gmail.com மூலம் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2021-05-10ஆம் திகதி முதல் 2021.06.06ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மேலேயுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

07. 2021-05-10ஆம் திகதி முதல் 2021.06.06ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 40,000.00 இலங்கை ரூபாவை (நாற்பதாயிரம் இலங்கை ரூபா) செலுத்திய பின்னர், இலங்கை, கொழும்பு-03, பாலதக்ஷ மாவத்தை, 15/5ஆம் இலக்கத்திலுள்ள பாதுகாப்பு அமைச்சின் கணக்காளர் (பெறுகைகள்) அவர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் (I மற்றும் III பிரிவின் பாகம் 1A இன்றி) முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை கொழும்பு-03, பாலதக்ஷ மாவத்தை, 15/5ஆம் இலக்கத்திலுள்ள பாதுகாப்பு அமைச்சின் (தரைத் தளம்) பிரதான கணக்காளர் அலுவலகம், அமைச்சுப் பெறுகைக் குழு, பிரதான கணக்காளரின் பெயரில் வங்கி வரைவாக அல்லது ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

08. பத்தரமுல்ல, பெலவத்த, அக்குரேகொட வீதி, பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத்தொகுதி செயற்றிட்டம், செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையில் 2021-05-17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும் மற்றும் அதே நாளில் விலைக்கோரலுக்கான கூட்டம் முடிந்த பின் தள விஜயம் மேற்கொள்ளப்படும்.

09. விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு 2021.06.07ஆம் திகதியன்று மு.ப. 11.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பின்வரும் முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைமனு பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் உடன் திறக்கப்படும்.

10. விலைமனுக்கள் 2021.10.03ஆம் திகதி வரையும் (விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 119 நாட்கள்) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

11. 2021.10.31ஆம் திகதி வரையும் (விலைமனுக்களை திறந்த பின்னர் 147 நாட்கள்) செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் நிபந்தனையற்றதும் இலகுவாக ரொக்கப் பணத்தில் மாற்றக்கூடியதுமாகவும், இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றிலிருந்து நான்கு தசம் எட்டு மில்லியன் இலங்கை ரூபா (4,800,000.00 இல. ரூபா) பெறுமதியான விலைமனுப் பிணை முறி அனைத்து விலைமனுக்களுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையின் பயனாளி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆவார்.

12. விலைமனு ஆவணங்களுடன் (இயைபானால்) 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் பதிவு செய்தல் சான்றிதழை சமர்ப்பிக்குமாறு விலைமனுதாரர்கள் திடமாக அறிவுறுத்தப்படுகின்றனர்.

13. விலைமனுக்களை திறப்பதற்கு ஆகக் குறைந்தது மூன்று (3) வேலை நாட்களுக்கு முன்னராக விலைமனுக்களின் திறத்தலில் பங்குபற்றும் பிரத்தியேக நபரின் பெயர் மற்றும் தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டின் இலக்கத்தை பாதுகாப்பு அமைச்சின் பிரதான கணக்காளருக்கு எழுத்து மூலமாக அறிவிக்கும்படி விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு:
**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு (MPC),**
**பிரதான நிதி அதிகாரி (I),**
**பிரதான கணக்காளர் அலுவலகம் (தரை தளம்),**
**பாதுகாப்பு அமைச்சு,**
**இல.: 15/ 5, பாலதக்ஷ மாவத்தை,**
**கொழும்பு-03,**
**இலங்கை.**

**தொலைபேசி: 0094-077-3766601**
**தொலைநகல்: 0094-011-2390720**

**சுகாதாரம், போஷணை மற்றும் சுதேசமருத்துவ அமைச்சு**
**இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்** SPMC

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

# Supply, Installation and Commissioning of 01 Nos. of Brand New Blister Packing Machine and Providing Training

**BID REF.: SPMC/PD/02/2021 – CLOSING ON 11.06.2021**

1. 2021 ஜூன் 11ஆம் திகதி பி.ப. 2 மணி வரையும் இலங்கை, இரத்மலான, கந்தவள தோட்டம், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11 ஆம் இலக்கத்திலுள்ள அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபன பெறுகைக் குழு தலைவரினால் Supply, Installation and Commissioning of 01 Nos. of Brand New Blister Packing Machine with related Training இற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பெற்றுக் கொள்ளப்படும்.
2.

| உருப்படி | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் |
|---|---|
| 01. Supply, Installation and Commissioning of 01 Nos. of Brand New Blister Packing Machine and providing Training | 7,500 ரூ. |

3. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் முழுமையான விலைமனுக்கோரல் ஆவணங்களில் நகல் பிரதி மற்றும் மூலப் பிரதியென இரு பிரதிகளில் தனித்தனியாக தயாரிக்கப்பட்டு பதிவுத்தபாலில் தலைவர், பெறுகைக் குழு, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவள தோட்டம், இரத்மலான, இலங்கை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது இலங்கை, இரத்மலான, கந்தவள தோட்டம், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11 ஆம் இலக்கத்திலுள்ள அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபன தரை மாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
4. பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து 2021.05.10 ஆம் திகதியிலிருந்து 2021.06.10 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மேலேயுள்ள முகவரியிலிருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.
   - இலங்கை, இரத்மலான, கந்தவள தோட்டம், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11 ஆம் இலக்கத்திலுள்ள அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபன திட்டமிடல் மற்றும் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளருக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தல்.
   - அமஉகூ இன் கணக்கிடல் பிரிவிற்கு ரொக்கப் பணத்தில் மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை செலுத்துதல்.
5. விலைமனுக்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளினால் நிர்வகிக்கப்படுவதனால் விலைமனுதாரர் அவரது சார்பாக முகவரொருவரை, உபமுகவரொருவரை, பிரதிநிதியொருவரை, பெயர் குறிப்பிடப்படுபவரொருவரை அமர்த்துவதாயின் அப்படியான பொது ஒப்பந்தத்தின் போது பொது ஒப்பந்த சட்ட 10 ஆம் பிரிவிற்கமைவாக பதிவு செய்த பின்னர் அவ்வாறான செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழை இக்கேள்வி தொடர்பான எந்தவொரு கொடுக்கல் வாங்கல் வேளையிலும் அல்லது கேள்வியின் எக்கட்டத்தின் எந்தவொரு நடவடிக்கையின் போதும் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. 2021 மே 25 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதுடன், விலைமனுதாரரானவர் விலைமனுவைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் Blister Packing Machine தொடர்பான விழிப்புணர்வை பெறுவதற்காக அதே நாளில் அமைவிடங்களுக்கு வருகைதந்து அவற்றை பரீட்சித்தல் வேண்டும்.
7. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் இரத்மலான அமஉகூ இல் திறக்கப்படுவதுடன் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.
8. விலைமனுக்கோரல் ஆவணங்களை அமஉகூ இல் இலவசமாக பரீட்சிக்கலாம்.
9. மேலதிக தகவலை 0112637574 என்ற தொலைபேசி எண்ணினூடாக அமஉகூ பொறியியலுக்கான பிரதி பொது முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

www.spmclanka.lk என்ற எமது இணையதளத்திலிருந்து விலைமனுக்களின் விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல.: 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை:**
**கந்தவள தோட்டம்,**
**இரத்மலான,**
**இலங்கை.**

**தொலைபேசி** : (00) 94-11-2635353/(00) 94-11-2637574/ (00) 94-11-2623298
**மின்னஞ்சல்** : spmclanka@sltnet.lk
**இணையதளம்** : www.spmclanka.lk

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT, WE HAVE IT
Sunday Observer adz Auto Focus



Magazine Issued with Sunday Observer
THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz
- Auto Focus



Hot Line 011 2 429 369 011 2 429 368
E-mail adzsuo@gmail.com

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 321

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| 06 | | | 07 | | 08 |
| 09 | 10 | 11 | 12 | | 13 |
| | | 14 | 15 | | 16 |
| 17 | 18 | | | 19 | 20 |
| 21 | | 22 | 23 | 24 | 25 |

பெயர் ..............................
வகுப்பு ..............................
பாடசாலை பெயர் ..............................
பாடசாலை முகவரி ..............................
..............................
.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் / பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(01) நாடுகளுக்கிடையிலான போக்குவரத்தையும், உள்நாட்டில் தூரப் போக்குவரத்தையும் இலகுவாக்கிய போக்குவரத்து சாதனம்.
(09) பாவ காரியங்களிலில் ஈடுபடாத, சாதுவான நபரை இவ்வாறு குறிப்பிடலாம்.
(14) தென்னை, பனை, ஈச்சை போன்றவற்றின் இலை. (தலைகீழான சொல்)
(17) முக்கனியில் மக்களால் அதிகம் உண்ணப்படுவது.
(19) பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்ற இடம். (தலைகீழான சொல்)
(22) அகந்தை, செருக்கு என்றெல்லாம் கூறலாம்.

**மேலிருந்து கீழ்**

(01) மலையில் இருந்து வீழ்கின்ற நீரூற்று. (தலைகீழான சொல்)
(04) செவிகளால் உணரப்படும் இனிய இசை போன்று, கண்களால் ரசிக்கப்படுகின்ற கலைப் படைப்பு இது. (தலைகீழான சொல்)
(05) இது பிரதானமானதொரு தோல் வாத்திய இசைக் கருவி. இசை நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்படுவது.
(11) எமது ஆன்றோர் அக்காலத்தில் நிலப் பிரதேசங்களை வகுத்து வைத்தனர். இது மணல் சார்ந்த பிரதேசம்.
(17) பாலூட்டிகள் மற்றும் நகருயிரி வகை பிராணிகளில் பெரும்பாலானவற்றில் காணக்கூடிய உடல் அவயம்.
(19) உழுந்து, பருப்பு போன்றன கொண்டு, எண்ணெயில் பொரித்து எடுக்கப்படும் சுவையான தின்பண்டம். (தலைகீழான சொல்.

**போட்டி இல. 321**
**சிறுவர் உலகம்**
**தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல.834.**
**கொழும்பு**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 320

### விடைகள்

**இடமிருந்து வலம்**

*01. செவ்வாய் 8. மீன் 10. பானம் 14. பாலம்*
*17. திகை 19. கவி 21. கடை 23. கோன்*
*25. அணை*

**மேலிருந்து கீழ்**

*01. செவி 03. வாகனம் 05. புன்னகை 10. பாலகன்*
*14. பாவி 17. அகதி*

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 319

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**த. ஹர்ஷாயினி,**
*தரம் 11, மட்/மகாஜனக்கல்லூரி,*
*அரசடி,*
*மட்டக்களப்பு.*

**இரண்டாம் பரிசு**
***ஸீனத் தஹானி சாட்,***
*தரம் 09 பி,*
*பதியுதீன் மகளிர் கல்லூரி,*
*டி.எஸ். சேனநாயக்க வீதி,*
*கண்டி.*

**மூன்றாம் பரிசு**
**கோ. விபுதரன்,**
*தரம் 07 பி, தி/கலைமகள் வித்தியாலயம்,*
*அன்புவழிபுரம்,*
*திருகோணமலை.*

### பாராட்டு பெறுவோர்


***1. எஸ். சவிலக் ஷனா,***
*தரம் 09 ஏ,*
*பது/ தமிழ் மகளிர் மகா வித்தியாலயம்,*
*பதுளை.*

***2. தி. யாதவி,***
*தரம் 08, யா/உடுவில் மகளிர் கல்லூரி,*
*உடுவில்,*
*சுன்னாகம்.*

***3. எம்.எஸ்.எம். சிபாக்,***
*தரம் 06, க/தெல்/ஹிஜ்ரார மு.வி,*
*திகன, ரஜவெல்ல.*

***4. கோ. ஜெரிஷ்,***
*தரம் 03 ஏ, கார்மல் பற்றிமா தேசிய பாடசாலை,*
*கல்முனை.*

***5. ஆமினா அக்ரம்,***
*தரம் 05 ஜி,*
*கிரிசன்ட் சர்வதேச பாடசாலை,*
*முஹாந்திரம் வீதி,*
*மாத்தளை.*



குறளமுதம் :

**தூங்குக தூங்கிச் செயற்பால; தூங்கற்க**
**தூங்காது செய்யும் வினை.**

***தெளிவுரை :*** *காலந்தாழ்த்திச் செய்யத் தக்கவற்றைக் காலந்தாழ்த்தியே செய்ய வேண்டும். காலந்தாழ்த்தாமல் விரைந்து செய்ய வேண்டிய செயல்களைச் செய்யக் காலம் தாழ்த்தக்கூடாது.*

## நமது கையில் நமது வாழ்வு

சின்னஞ் சிறுவர் நாங்கள் நாளை
செகத்தை ஆள வேண்டும்
வல்லமைகள் பெற்று – நல்ல
வாழ்வை அமைக்க வேண்டும்.

அன்பும் பண்பு கல்வி – எமக்கு
அணி கலனாய் வேண்டும்
அனை வரோடும் ஒன்றாய்
வாழப் பழக வேண்டும்.

ஏழை பணக் காரர்
என்ற மனப் பாங்கு
எம்மி டத்தி லிருந்து
அகன்று செல்ல வேண்டும்.

சாதி இன பேதம் எம்மை
சகதி யிலே வீழ்த்தும்
வேதனைகள் செய்யும் இந்த
வேற்றுமைகள் ஒழிப்போம்

எமதுழைப்பில் என்றும் நாங்கள்
வாழப் பழக வேண்டும்
இல்லை யென்ற சொல்லை – எங்கும்
இல்லை ஆக்க வேண்டும்..!

**ஷெல்லிதாசன்**
திருகோணமலை.

## இவ்வார சிறுமி




யஷோதரன் -கிருஷாந்தி
வத்தளை.

## சூயஸ் கால்வாய்



ஓங்கி வளர்ந்த உலோக மலையைப் போல சூயஸ் கால்வாயின் குறுக்கே சிக்கியிருந்த எவர் கிவன் கப்பலையும் அதனால் ஏற்பட்ட இழப்புகளை மட்டுமே இந்த உலகம் அறியும். ஆனால் சூயஸ் கால்வாய் கட்டப்பட்ட காலத்தில் இருந்து அது நிகழ்த்திய ஒவ்வொரு சம்பவமும் வரலாற்றை ஸ்தம்பிக்க வைக்க கூடியவையாகவே இருந்திருக்கின்றன.

ஒன்றும் அறியாத சிறு பிள்ளையை போல ஓடிக் கொண்டிருக்கும் இந்த நீரோடை, 20 லட்சத்துக்கும் அதிகமான உயிர்களை தின்று செரித்திருக்கிறது என்று சொன்னால் நம்ப முடிகிறதா....? ஆம். உலகின் பிற வரலாறுகளைப் போல சூயஸ் கால்வாயின் கதையும் ரத்தத்தில் தோய்ந்தது தான்.

தேவையே கண்டுபிடிப்புகளின் தாய் என்கிறார் தத்துவஞானி பிளாட்டோ. சூயஸ் கால்வாய் தோற்றத்துக்கும் ஒரு தேவை இருந்தது. ஐரோப்பியா ஆசியா கண்டங்களுக்கிடையே வணிகம் செழித்திருந்த காலம் அது. ஒரு தேவதூதனை போல பாரங்களை சுமந்த படி கடலின் வடக்கிற்கும் தெற்கிற்கும் கப்பல்கள் மிதந்து கொண்டே இருந்தன. ஆனால் இந்த பயணம் சுமூகமானதாக இல்லை. ஆசியாவில் இருந்து கிளம்பிய கப்பல்கள் நேரடியான வழித்தடம் இல்லாததால் ஆப்பிரிக்க கண்டம் முழுவதையும் சுற்றி, சோர்வுற்ற பிறகுதான் ஐரோப்பிய எல்லைகளை அடைய முடிந்தது. இந்த சுற்றுப்பாதையின் காரணமாக கப்பல் நிறுவனங்களுக்கு நேரம், எரிபொருள் என எண்ணற்ற இழப்புகள் ஏற்பட்டன.

இப்படி நெடுங்காலமாக கப்பல்கள் தலையை சுற்றி மூக்கை தொட்டுக் கொண்டிருப்பதை கவனித்தது எகிப்தை சேர்ந்த சூயஸ் என்ற நிறுவனம். ஐரோப்பா ஆசியா இடையே உள்ள ஒரு சிறு நிலப்பரப்புதான் கடல்வழி பயணத்திற்கு சுமையாக உள்ளது என்பதை அது உணர்ந்தது. அந்த நிலத்தின் ஊடாக கால்வாய் கட்டுவதன் மூலம் கப்பல்களின் பயண நேரத்தை கணிசமாக குறைக்க முடியும் என்று கணக்கு போட்டது. அதன் படி 163 கிலோ மீட்டர் தூரத்திற்கு நிலத்தை தோண்டி கால்வாய் அமைப்பது என செயல் திட்டம் வகுத்து 1859 ம் ஆண்டு அதற்கான பணியை தொடங்கியது சூயஸ்.

இத்தனை தொழில் நுட்பங்கள் வளர்ந்து விட்ட காலத்திலேயே எவர் கிவன் கப்பலை மீட்க ஒரு வார காலம் போராட வேண்டியுள்ளது எனில் 160 ஆண்டுகளுக்கு முன்பு என்ன தொழில் நுட்பம் இருந்திருக்கும் என்பது எகிப்திய கடவுளுக்கே வெளிச்சம். வேலை என்ற பெயரில் லட்சக்கணக்கான ஆப்பிரிக்க கருப்பின மக்கள், பிரமிடு தேசத்திற்கு அடிமைகளாக இழுத்து வரப்பட்டனர். கட்டுமானத்தை விரைந்து முடிக்க இரவு, பகல் பாரது அடித்து துன்புறுத்தி அவர்களின் உழைப்பும் உயிரும் சுரண்டப்பட்டது.

10 ஆண்டுகள் நடைபெற்ற இப்பணி 15 லட்சம் உயிர்களை காவு வாங்கியதாக நிறுவுகின்றன ஆய்வுகள். மனித உரிமைகள் படுகொலை செய்யப்படுவதாக எதிர்ப்புகள் வலுத்த நிலையில், அதிகார மையங்களின் தயவில் 1869 ம் ஆண்டு சூயஸ் கால்வாயை வெற்றிகரமாக திறந்தது சூயஸ். 23 மீட்டர் ஆழமும், 254 அடி அகலத்துடன் 193 கிலோ மீற்றர் நீண்டிருக்கும் இக்கால்வாயை கடக்க 11 மணி முதல் 12 மணி நேரம் ஆகும். இது ஆபிரிக்க கண்டத்தை சுற்றிச் செல்ல ஆகும் பயண நேரத்தை விட ஒரு மடங்கு குறைவு. மேலும் 19000 கிலோ மீற்றராக இருந்த ஐரோப்பியா ஆசியா கடற்பயண தூரம், 11000 கிலோ மீற்றராக குறைந்தது. எரிபொருளாக்காக மட்டுமே ஏராளமான செலவு செய்து கொண்டிருந்த நாடுகள் இந்த கால்வாயை கடவுளின் கொடையாகவே பார்த்தன.

சூயஸ் கால்வாயைச் சூழ்ந்திருந்த ஒரு அரசியல் நெருக்கடி 1956ம் ஆண்டு தொடங்கியது. அப்போது எகிப்தின் அதிபராக இருந்த கமால் அப்தெல் நாசீர், சூயஸ் கால்வாயை தேசியமயமாக்கி டீரான் நீரிணையை மூடினார்.

இதனால் பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் எகிப்தின் மீது படையெடுத்தன. ஐ.நாவின் தலையீட்டுக்குப் பிறகு மூன்று நாட்டு படைகளும் விலகிக் கொண்டன. கால்வாய் வர்த்தகக் கப்பலுக்கான பாதையைக் கொடுத்தது.

இஸ்ரேல் மற்றும் எகிப்துக்கு இடையே நடைபெற்ற ஆறு நாள் போரின்போது எகிப்திய அதிகாரிகளால் சூயஸ் கால்வாய் 1967ம் ஆண்டு மூடப்பட்டது. இக் கால்வாயின் வழியாக ஒவ்வொரு மணி நேரமும் 400 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான சரக்குப் போக்குவரத்து நடைபெறுகிறது.

சர்வதேச வர்த்தகத்தில் 12 சதவிகித வர்த்தகம் இப்பாதை வழியாகவே நடக்கிறது. எண்ணெயைத் தவிர உடைகள், கார் உதிரிப்பாகங்கள் என பல உற்பத்திப் பொருட்களும் இப்பாதை வழியாகவே கொண்டு செல்லப்படுகிறது.





பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலய மாணவத் தலைவர் பயிற்சியாளர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி. பவானி தலைமையில் நடைபெற்றது. நிகழ்வின் சிறப்பு அதிதிகளாக இப்பாடசாலையில் கல்வி பயின்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டப் பீடத்திற்கு தெரிவாகி, அங்கு முதல் தரத்தில் சித்தி பெற்ற சட்டத்தரணி செந்தமிழ்செல்வன் மதுஷிதா, சட்டத்தரணி செல்வகுமார் பிரசாந்தினி ஆகியோர் கலந்து கொண்டு மாணவிகளுக்கு சின்னங்களை சூட்டினர். இந்நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர் உட்பட ஆசிரியைகளும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள். (தகவலும் படங்களும் : பசறை ஆ. புவியரசன்)

## மாணவர் கழக அனுமதி

மாணவர் பெயர் ..............................
பிறந்த திகதி ..............................
வகுப்பு ..............................
பாடசாலை ..............................
..............................

..............................
வகுப்பாசிரியர் கையொப்பம்


**வர்ணப் புகைப்படம்**

**மாணவர் கழகம்**
**சிறுவர் உலகம்**
**தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல.834 கொழும்பு.**






**ஆயிஷா நஆ பியாஸ்,**
தரம் 03,
ஐடியல் இந்தியன் பாடசாலை,
டோஹா கட்டார்.



**யோ. இளம்பரிதி,**
தரம் 04,
வ/றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம்,
வத்தளை.



**ரவீந்திரன் சபரீசன்,**
தரம் 04,
மட்/பட்/குருமண்வெளி கனிஷ்ட வித்தியாலயம்,
குருமண்வெளி.



**யோ. கவிஷா,**
தரம் 01,
வ/ றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம்,
வத்தளை.

மஞ்சரி விளையாட்டு

# கால்பந்து அணி வீரர்கள் மாற்றங்களுடன் மீண்டும் பயிற்சி முகாமில் பங்கேற்பு



திருகோணமலை குறூப் நிருபர்

இலங்கை கால்பந்து அணியின் ஐந்தாம் கட்டத்திற்குரிய வதிவிடப்பயிற்சி முகாம், (06) பெத்தகானயில் உள்ள தேசிய கால்பந்து பயிற்சி முகாமில் ஆரம்பித்தது.

இந்த வதிவிடப்பயிற்சி முகாமிற்கு, இலங்கை தேசிய கால்பந்து அணியினுடைய 23 பேர் அடங்கிய குழாம் தெரிவு செய்யப்பட்டிருப்பதோடு, தெரிவு செய்யப்பட்டிருக்கும் கால்பந்துக் குழாம் உயிர் பாதுகாப்பு வலயத்தினுள் (Bio Bubble), 2022ஆம் ஆண்டுக்கான பிபா உலகக் கிண்ணத் தகுதிகாண் போட்டிகளுக்காகவும், ஆசிய கிண்ண தகுதிகாண் சுற்றுக்காகவும் தயார்படுத்தல்களை மேற்கொள்கின்றது.

இந்த வதிவிடப் பயிற்சிகளுக்காக தெரிவு செய்யப்பட்ட 23 வீரர்கள் மற்றும் 8 போட்டி உத்தியோகத்தர்கள் என அனைவரும் PCR மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளுக்கு முகம் கொடுத்திருந்ததோடு, அதில் என்டிஜன் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் எவருக்கும் கொவிட்19 தொற்று ஏற்பட்டிருக்கவில்லை என்பது கண்டறியப்பட்டிருக்கின்றது. எனினும், இலங்கை கால்பந்து சம்மேளனம் (FFSL) வீரர்கள் மற்றும் போட்டி உத்தியோகத்தர்கள் தொடர்பான PCR முடிவுகளுக்காக காத்திருக்கின்றது.

இந்த 23 பேர் அடங்கிய இலங்கை கால்பந்து குழாமில் இலங்கைக்கான இரட்டைப் பிராஜவுரிமை விதிமுறைகளைப் பூர்த்தி செய்த மேர்வின் ஹமில்டன், ரீப் பீரிஸ் மற்றும் டிலோன் டி சில்வா ஆகியோர் இணைக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்த வீரர்களுடன் சேர்த்து இலங்கை கால்பந்து அணியின் முன்னாள் தலைவரான மொஹமட் பசால், டக்சன் பியுஸ்லஸ் ஆகியோரும் பயிற்சிகளுக்காக உள்வாங்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்தப் பயிற்சிக் குழாத்தில் சபீர் ரசூனியா மற்றும் மொஹமட் ரிப்கான் போன்ற வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை என்பது சுட்டிக்காட்ட வேண்டிய விடயமாக அமைகின்றது.

### இலங்கை கால்பந்து அணி

சுஜான் பெரோ (அப் கண்ட்ரி லயன்ஸ்), பிரபாத் ருவன் அனுரசிறி (ப்ளூ ஈகிள்ஸ்), தனுஷ்க ராஜபக்ஷ (நியூ யங்ஸ்), ஹர்ஷ பெர்னாந்து (ப்ளூ ஈகிள்ஸ்), சுனில் ரோஷன் அபுஹாமி (டிபன்டர்ஸ்), ரீப் செபாஸ்டியன் பீரிஸ், சமோத் டில்ஷான் (கொழும்பு), ஷரித்த ரத்நாயக்க (கொழும்பு), டக்சன் பியுஸ்லஸ் (TC விளையாட்டுக் கழகம்), சதுரங்க மதுஷன் (அப் கண்ட்ரி லயன்ஸ்), மேர்வின் ஹமில்டன் , ஷலன சமிர (கொழும்பு), ஜுட் சுமன் (ரினௌன்), மொஹமட் முஸ்தாக் (அப் கண்ட்ரி லயன்ஸ்), மொஹமட் பசால் (ப்ளூ ஸ்டார்), சர்வான் ஜோஹர் (கொழும்பு), கவிந்து இஷான் (அப் கண்ட்ரி லயன்ஸ்), டில்லோன் டி சில்வா (QPR), அஹமட் வீசீம் ராசிக் (அப் கண்ட்ரி லயன்ஸ்), மொஹமட் ஆகிப் (கொழும்பு), அசிகுர் ரகுமான் (டிபன்டர்ஸ்), மொஹமட் ஹஸ்மீர் (சீ ஹோக்ஸ்), சுபுன் தனஞய விஜேசிங்க (ரெட் ஸ்டார்ஸ்))

### மேலதிக வீரர்கள்

ரிப்கான் ஹொமட் (டிபன்டர்ஸ்), ரிஸ்கான் பைசர் (ஜாவா லேன்), மஹேந்திரன் டினேஷ் (பொலிஸ்), தரிந்து தனுஷ்க (நியூ யங்ஸ்), சபீர் ரசூனியா (கொழும்பு), மதுஷன் பெர்னாந்து (ப்ளூ ஈகிள்ஸ்)

# கொரோனா வேகப்பந்தில் கிளீன் போல்ட் ஆன IPL

## தொடர் பாதியில் நிறுத்தம்



வீரர்களுக்கு கொரோனா வேகமாக பரவ, ஐ.பி.எல்., தொடர் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது. வெளிநாட்டு வீரர்கள் பாதுகாப்பாக நாடு திரும்ப ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இந்தியாவில் ஐ.பி.எல்., தொடரின் 14வது சீசன் கடந்த ஏப். 9ல் துவங்கியது. இதுவரை 29 போட்டிகள் நடந்தன. இரண்டாவது கட்ட போட்டிகள் நடந்த நிலையில்,கொல்கத்தா அணியின்தமிழக வீரர் வருண் சக்ரவர்த்தி, சந்தீப் வாரியார் என இருவருக்கு கொரோனா இருப்பது உறுதியானது. இதனால் பெங்களூரு–கொல்கத்தா மோத இருந்த போட்டி ரத்து செய்யப்பட்டது. சென்னை பாதிப்பு டில்லியில் உள்ள சென்னை அணியின் பந்துவீச்சு பயிற்சியாளர் பாலாஜி, பஸ் உதவியாளக்கும்('கிளீனர்')பாதிப்பு ஏற்பட்டது. சென்னை வீரர்கள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டனர். இதையடுத்து ஐதராபாத் அணிக்கு எதிராக மோத வேண்டிய ஆட்டமும் ஒத்திவைக்கப்பட்டது. இன்னும் இருவர் நேற்று ஐதராபாத் அணியின் சகா, டில்லி 'சீனியர்' சுழற்பந்து வீச்சாளர் அமித் மிஸ்ராவுக்கும் கொரோனா இருப்பது உறுதியானது. தவிர வெளிநாட்டு வீரர்கள் தொடர்ந்து போட்டிகளில் பங்கேற்க தயங்கியதாகவும் கூறப்பட்டது. இதுகுறித்து இந்திய கிரிக்கெட் போர்டு (பி.சி.சி.ஐ.,) ஐ.பி.எல்., கட்டுப்பாட்டுக்குழு சார்பில் ஆலோசிக்கப்பட்டது. பின் வெளியான அறிக்கை: ஐ.பி.எல்., தொடரில் பங்கேற்கும் வீரர்கள், பயிற்சியாளர், பணியாளர்களின் பாதுகாப்பு விஷயத்தில் பி.சி.சி.ஐ., சமரசம் செய்து கொள்ள விரும்பவில்லை. அணி உரிமையாளர்கள் உட்பட அனைவரது உடல்நலனையும் கருத்தில் கொண்டு, 14வது ஐ.பி.எல்., சீசனை காலவரையின்றி ஒத்திவைக்கிறோம். இந்த கடினமான காலத்தில் இந்திய மக்களிடம் சில நல்லெண்ணங்களையும், மகிழ்ச்சியையும் கொண்டு வர முயற்சித்தோம். எப்படி இருப்பினும் தொடரை பாதியில் நிறுத்துவது கட்டாயமாகி விட்டது. அனைவரும் தங்கள் குடும்பத்தினரை சந்திக்கவுள்ளனர். இத்தொடரில் பங்கேற்ற அனைவரையும் பாதுகாப்பான முறையில் வீடுகளுக்கு அனுப்பி வைக்க, பி.சி.சி.ஐ., அதிகாரத்துக்கு உட்பட்ட அனைத்து முயற்சிகளையும் செய்கிறது.

### ரூ. 2,500 கோடி

ஐ.பி.எல்., தொடர் 14வது சீசனில் மொத்தம் 52 நாளில் 60 போட்டிகள் நடக்க இருந்தன. இதில் 29 போட்டிகள் தான் முடிந்தன. நேரடி ஒளிபரப்புக்கு போட்டி ஒன்றுக்கு ரூ. 54.5 கோடி, ஸ்டார் நிறுவனம் தருகிறது. இதன் படி 29 போட்டிக்கு ரூ. 1,580 கோடி மட்டும் கிடைக்கும். தொடரை பாதியில் நிறுத்தியதால் மீதமுள்ள போட்டிகளுக்கு ரூ. 1,690 கோடி வரை இழப்பு ஏற்படும். ஸ்பான்சர் வகையில் ரூ. 500 கோடி என ஒட்டுமொத்தமாக ரூ. 2,200 கோடி முதல் ரூ. 2,500 கோடி வரை பி.சி.சி.ஐ.,க்கு இழப்பு ஏற்படும்.

### எட்டு வீரர்கள்

முதன் முதலில் டில்லி வீரர் அக்சர் படேலுக்கு கொரோனா ஏற்பட்டது. அடுத்து கொல்கத்தாவின் நிதிஷ் ராணா, பெங்களூரு அணியின் தேவ்தத் படிக்கல், டேனியல் சாம்ஸ் பாதிக்கப்பட்டனர். இவர்கள் அனைவருக்கும் ஐ.பி.எல்., தொடர் துவங்கும் முன் பாதிப்பு ஏற்பட்டது. கொரோனா பாதுகாப்பு வளையத்தில் இருந்தவர்களில் முதலில் கோல்கட்டாவின் வருண் சக்ரவர்த்தி, சந்தீப் பாதிக்கப்பட்டனர். சென்னை அணியின் பவுலிங் பயிற்சியாளர் பாலாஜி, பஸ் 'கிளீனர்' ஒருவர், ஐதராபாத் அணி விக்கெட் கீப்பர் சகா, டில்லி அணி சுழற்பந்து வீச்சாளர் அமித் மிஸ்ரா என பட்டியல் நீண்டதால், தொடர் பாதியில் நிறுத்தப்பட்டது.



### சென்னை பயிற்சியாளருக்கு கொரோனா

சென்னை அணியின் பேட்டிங் பயிற்சியாளராக அவுஸ்திரேலிய முன்னாள் வீரர் மைக்கேல் ஹசி உள்ளார். ஏற்கனவே அணியின் பவுலிங் பயிற்சியாளர் பாலாஜி, பஸ் கிளீனருக்கு கொரோனா ஏற்பட்ட நிலையில் ஹசிக்கும், முதல்கட்ட சோதனையில் பாதிப்பு உறுதியானது.

### நிறுத்தப்பட்டது ஏன்

வீரர்களை கண்காணிக்க பொருத்தப்பட்ட ஜி.பி.எஸ்., கருவியில் தவறு நேர்ந்தது, கொரோனா பாதுகாப்பு வளையம் அமைப்பதற்கு ஏற்ப சரியான ஓட்டல்களை, சரியான நேரத்தில் கண்டறிய முடியாதது, மைதானம், ஓட்டல் பணியாளர்கள் தனிமைப்படுத்திக் கொள்ளாதது, போட்டிக்காக வேறு இடங்களுக்கு பயணம் செய்தது உட்பட பல காரணங்களால் வீரர்களுக்கு பாதிப்பு ஏற்பட, வேறு வழியில்லாத நிலையில் தொடர் நிறுத்தப்பட்டது.

### மீண்டும் எப்போது?

இங்கிலாந்து செல்லவுள்ள இந்திய அணி, நியூசிலாந்துக்கு எதிராக உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் பைனல் (ஜூன் 18–22, சவுத்தாம்ப்டன்), இங்கிலாந்துக்கு எதிராக ஐந்து டெஸ்ட் மற்றும் ஒருநாள், 'டுவென்டி–20' தொடரில் பங்கேற்கிறது. பின் செப்டம்பரில் எவ்வித போட்டிகளும் இல்லை. இந்த நேரத்தில் ஐ.பி.எல்., தொடரின் 14வது சீசனில், மீதமுள்ள 31 போட்டிகளை நடத்த பி.சி.சி.ஐ., திட்டமிட்டுள்ளது. கடைசி முயற்சி வீரர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டதால், மீதமுள்ள அனைத்து போட்டிகளையும் மும்பையின் வான்கடே, பிரபோர்ன், டி.ஒய்.பாட்டீல் மைதானத்தில் நடத்தலாம் என பி.சி.சி.ஐ., திட்டமிட்டது. ஆனால் புதியதாக சகா, அமித் மிஸ்ரா என பல வீரர்களுக்கு கொரோனா ஏற்பட, இந்த திட்டம் கைவிடப்பட்டது.



### மூன்றாவது சோதனையில்...

ஐதராபாத் அணி விக்கெட் கீப்பர் சகா, இவருக்கு லேசான காய்ச்சல் ஏற்பட்டது. இருப்பினும் சக வீரர்களுடன் இணைந்து பயிற்சியில் ஈடுபட்டார். சோதனையில் 'நெகட்டிவ்' என வந்தது. தொடர்ந்து காய்ச்சல் இருக்க, உடனடியாக தனிமைப்படுத்தப்பட்டார். இவரிடம் நடந்த மூன்றாவது கட்ட சோதனையில் கொரோனா உறுதியானது.

### மாலைத்தீவில் ஆஸி, வீரர்கள்

ஐ.பி.எல்., தொடரில் ஸ்மித், ஸ்டாய்னிஸ், மேக்ஸ்வெல், வார்னர், பயிற்சியாளர்கள் பாண்டிங், மைக்கேல் ஹசி உட்பட சுமார் 40 அவுஸ்திரேலியர்கள் உள்ளனர். இந்தியாவில் இருந்து விமானங்கள் தரையிறங்க மே 15 வரை அவுஸ்திரேலியா அரசு தடை விதித்துள்ளது. இதனால் அவுஸ்திரேலிய வீரர்கள் நாடு திரும்ப முடியாது. இவர்களுக்கு எவ்வித சலுகையும் காட்டப்படாது என திட்டவட்டமாக தெரிவித்தது ஆஸ்திரேலிய அரசு. இதனால் ஸ்மித், கம்மின்ஸ், மேக்ஸ்வெல், பாண்டிங் உள்ளிட்டோர் மாலத்தீவு சென்று தற்காலிகமாக தங்க முடிவு செய்துள்ளனர். அச்சம் தந்த மிஸ்ரா கடந்த ஏப். 27ல் பெங்களூருவுக்கு எதிரான போட்டியின் போது பந்து வீசிய டில்லி வீரர் அமித் மிஸ்ரா, தவறுதலாக பந்தை பளபளபாக்க எச்சில் பயன்படுத்தினார். இதை பார்த்த அம்பயர், அவரை எச்சரித்து, பந்தை சுத்தப்படுத்தி தந்தார். தற்போது அமித் மிஸ்ராவுக்கு கொரோனா ஏற்பட்டது, கூடுதல் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.




இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மே மாதம் 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.



# மஞ்சரி களஞ்சியம்

தினகரன் வாரமஞ்சரி



## வாழ்வாதாரமா சேதாரமா 177



தமிழ்க் கவி பேசுகின்றார்

# குற்றங்கள் மட்டுமல்ல நோய்களையும் பெருக்கும் போதை

வாழ்க்கை பெரிய வட்டமாகி நிற்கிறது. போர் நடந்த காலத்திலும் இன்றும் எந்த பாதிப்பும் இல்லாமல் மக்களிடம் பரவியுள்ள நோய் போதை போதை போதையேதான். மதுபான விற்பனை நிலையங்கள் மூடப்பட்டால் மட்டுமே மக்கள் மகிழ்ச்சியாக வாழ முடியும் என்பது பொய். வடிகட்டின பொய்.

எமது மண்ணில் மட்டுமல்ல, எந்த நாட்டிலும் இதுதான் நடக்கிறது. கொடிய நோய் கொரனா. அதன்காரணமாக ஊரடங்கு போடப்பட்ட தமிழ்நாட்டில்கூட இடையில் தடை நீக்கப்பட்ட போது, உணவுக்கடைகளில் இல்லாத அளவுக்கு மதுபானக் கடைகளில் மக்கள் முண்டியடித்துக் கொண்டிருந்தனர். கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு வியாபாரம் நடந்ததாம்.

அது மட்டுமல்ல அந்தக்கடைகளில் நெருக்கியடித்துக் கொண்டிருக்கும் மக்களிடையே எந்த நோய் பயமும் இல்லை. அவர்கள் தமது பொருளை வாங்குவது ஒன்றே குறியாக நின்றனர். இலங்கையில் அவ்வப்போது மதுபானக்கடைகள் மூடப்படத்தான் செய்கிறது. ஆனால் என்ன? சாதாரணமாக குடிமக்கள் முதல் நாளே தமக்கான பொருளை வாங்கி வைத்துக் கொள்வார்கள். இன்னும் சொல்லப்போனால் எமது கிராமங்கள் பட்டினங்கள் என அங்கிங்கெனாதபடி எங்கும் பரவலாக மறைவான மதுபான விற்பனை நிலையங்கள் தமது விற்பனையை நடாத்தி மக்களை மகிழ்வித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு குடியானவன், குடிகாரன் நிரந்தரமாக குடிப்பவன் தன்னிடமுள்ள பணத்திற்கேற்ப போதையேற்றிக் கொள்கிறான். அப்படி அவன் குடிக்க மது வாங்கும் போது அவனது போதை மீறியிருப்பதை கடைக்காரர் அவதானிக்கிறார். என்றாலும், மேலும் மேலும் ஊற்றிக் கொடுக்கிறார் அவரது குறிக்கோள் மதுவை விற்பது மட்டுமே. குடித்தவர் போதையேறி அங்கேயே விழுந்து விட்டால் கூட கடையை மூடும்போது அவரை இழுத்து வெளியே போட்டுவிட்டுப் போகிறார் கடைக்காரர். மனிதாபிமானம் அங்கே கிடையாது.

உங்களுக்கு தெரியுமா மதுபான விற்பனை என்பது வேதகாலத்திற்கு முன்பே நடந்திருக்கிறது. எனினும் மௌரியர்காலத்தில் மதுபான மேற்பார்வையாளர் என்றொருவர் நியமிக்கப்பட்டார். தனிப்பட்டோரின் மதுபானச்சாலைகளையும் மது வடிக்கும் இடங்களையும் கண்காணித்தார். மதுக்கடை வைத்திருப்போர் போதுமான தளபாடங்களை வைத்திருக்கவேண்டும் எனவும் மது அருந்துபவர் அளவுகடந்து மதுவருந்துவதை தடுக்க வேண்டும் எனவும், மது அருந்துபவர் வெறி மயக்கி ஏதும் நட்டத்துக்கு ஆளாவாராயின் கடைக்காரர் அவருக்கேற்பட்ட நட்டத்தை ஈடு செய்ய வேண்டும் எனவும் தண்டம் இறுக்க வேண்டும் எனவும் கட்டளை இருந்ததாம். மது பானக்கடைகளுக்கு அப்பால் வெளியே மதுவருந்துதல் தடை. மதுக்கடைகளிலேயே குற்றவாளிகள் கூடுவதால் மதுபானச்சாலைகளில் அரச காவலர்களின் நடமாட்டமும் இருக்கும். ஒற்றர்களும் இருப்பர். ஆக. அன்றும் இன்றும் மதுவருந்துதல் தீய பழக்கம் ஆயினும் அதனை முற்றாக நிறுத்துவது முடியாது என்பதும் நிரூபிக்கப்பட்ட உண்மையாகும்.



இவ்வளவு கடுமையான மதுபானச் சட்டங்கள் போர் நடந்த காலத்திலும் நடைமுறையில் இருந்ததா? என்றால், ஆம் எந்த மாற்றமும் குறைபாடும் இல்லாமல் இருந்தது. கள்ளிறக்கும் தொழில் மிக விரிவாக நடாத்தப்பட்டு தென்னங்கள்ளிலிருந்து சாராயம் வடிக்கும் வேலைகளும் மிக திறமையான தொழிலாளர்களால் நடத்தப்பட்டு மதுபானத்துக்கு எந்த தட்டுப்படும் ஏற்படாமல் காத்து வந்தனர். மண்ணெண்ணையிலிருந்து பெற்றோலுக்கு நிகரான வடி வாகனங்களுக்கு எரிபொருளாக தயாரிக்கப்பட்டது போலவே, கள்ளிலிருந்து தயாரிக்கப்பட்ட சாராயம் மிகவும் கேள்வி மிகுந்ததாக இருந்தது.

பல்லாயிரக்கணக்கான போராளிகள் மது அருந்துவதில்லை. சில ஆயிரம் மக்கள் படையணியினர்(எல்லைப்படை) தமது கடமை நேரத்தில் மதுவருந்துவதில்லை. மது பானக்கடைக்குள் படுத்திருந்தாலும் மதுவை அருந்துவதில்லை. மதுபான உற்பத்தி மதுபான விநியோகம் எல்லாவற்றிலும் போராளிகள் பங்கு கொண்டனர் ஆனால் குடிப்பதில்லை.

இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டுக்குப்பின் போராளிகள் படிப்படியாக இந்த மண்ணில் மக்களோடு மக்களாக வாழத் தொடங்கிய பின் மிகச்சில போராளிகள் நிரம்பக் குடித்துவிட்டு அம்பலத்தில் படுத்திருந்ததை கண்டபோது நான் வியந்தேன். எப்படி முடிந்தது இவர்களால் இந்த மதுபானம் மீதான காதலை மனதுள் வைத்துக் கொண்டே போராட முடிந்தது. தொண்ணூறுகளின் முற்பகுதியில் அல்லது இந்தியப்படை இருந்தபோது என நினைக்கிறேன். போராளிகளில் ஒரு கல்லுளிமங்கன் எனக்கூறக்கூடிய பேராளி இருந்தான். ஓ! "கல்லுளிமங்கன்" என்பது பெயரல்ல. இந்தியாவில் இன்றும் புழக்கத்திலுள்ள கலைஞர்கள். இவர்கள் தெருவில் ஆட்டம் பாட்டுகளை நடாத்தி பணம் சேர்ப்பார்கள். இதில் ஒரு கலைஞன் தன்னைத்தானே சாட்டையால் அடித்து மக்களின் மனதை உருக்கி பணம் சேர்ப்பார். இவர்களுக்கு வலி தெரிவதில்லை. அதனால் இவர்களை கல்லுளிமங்கன் என்பார்கள். அப்படிப்பட்டவன் இவன். இவனுக்கு அச்சம் வலி இரண்டும் கிடையாது. பல களங்களில் சாதனை படைத்த வீரன். ஒருநாள் தன் தோழனிடம் வந்து சொன்னான், "மச்சான் நான் துண்டு குடுக்கப்போறன்" என்று துண்டு எனப்படுவது விலகல் கடிதம். இயக்கத்திலிருந்து விலக விரும்புவோர் இப்படி தான் விலகப்போவதை ஒரு துண்டுக்கடதாசியில் எழுதிக் கொடுப்பதையே 'துண்டு'கொடுத்தல் என்பர். அப்படி துண்டு கொடுத்தபின் அவர் சில சம்பிரதாயங்களின்பின் இயக்கத்திலிருந்து விலக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்படுவார்.

"துண்டு குடுக்கப்போறன் என்று நீயா சொல்லுறாய் என்ன மச்சான் உயிரில ஆசை வந்திட்டுதா?" என்று கேட்டான் இவன்.

" இல்லை மச்சான் எனக்கு ஒரு ஆசை வந்திட்டுது அடக்க முடியேல்ல அதுதான்"

"ஆசையோ?"

" ஓம் மச்சான், முட்டியோட கள்ளக் கொண்டுபோய் அண்ணாக்கா குடிச்சிட்டு ரயில் ரோட்டில படுக்கோணும் போல இருக்கடா"

இந்தப் போராளிதான் கசிப்பு குடித்து விட்டு வருவோரை அடித்து நொருக்கி ரயில் ரோட்டில் கடும் வெய்யிலில் படுக்க வைப்பவன். (அப்போது வன்னிக்கு ரயில் ஓடுவதில்லை.) நானே கண்டிருக்கிறேன். அவனது உள்ளத்தின் இந்த மாற்றம் அவனுக்கு ஏற்பட்ட விதியா? அவன் விடுவிக்கப்பட்டு பின் பின்னாளில் தேங்காய் மூடைகட்டி வியாபாரம் செய்து பிழைப்பு நடாத்தினான். மதுவா? கொக்கா பத்துப் பேர் ஏவல் செய்ய, பஜீரோவில் வலம் வர வேண்டியவன். என்று அவனுடைய நண்பன் அலுத்துக் கொண்டான்.

மதுபற்றி கி ஆ பெ விசுவநாதன் ஒரு கதை சொல்வார். ஒரு வழிப்போக்கன் தனிவழி போனான். அவனை வனத்தில் ஒரு பெண் வழிமறித்துக் கொண்டாள். அவள் கையில் ஒரு குழந்தையும் இருந்தது. அவள் சொன்னாள், 'இவ்வழியே நீ செல்ல வேண்டுமெனில் என்னைக் கூடுவாயாக'. என்றாள். சே இப்படி தன்னடக்கமற்ற பெண்ணைக் கூடுவது பாவம் அது முடியாது என்றான். 'அப்படியாயின் இந்தக்குழந்தையை கொன்றுவிட்டுப் போ.' என்றாள். 'முடியாது அதனால் சிசுகத்தி தோசம் ஏற்படும் ஒன்றுமறியாத குழந்தையை நான் கொல்ல மாட்டேன்' என்றான் அவள் கையிலிருந்த கள்ளு நிரம்பிய முட்டியை கொடுத்து. பரவாயில்லை. இதைக் குடித்துவிட்டுப்போ" என்றாள். அவன் தனக்குள் சிந்தித்தான் குழந்தையை கொல்லாமல் இவளையும் கூடாமல் எனக்கு மட்டுமே தீமை தரக்கூடிய மதுவை அருந்துவது சரியே என நினைத்தவன் மதுவை வாங்கி மடமடவெனக் குடித்து முடித்தான். மதுவை அருந்திய போதையில் அந்தப்பெண்ணை வன்மையாக இழுத்து கூடினான். இதைக் கண்ட குழந்தை அலறி அழவே அவன் அந்தக்குழந்தையைக் கொன்றுபோட்டான். அட சரிதான் போதை இப்படித்தான் இதனால் குற்றங்கள் மட்டுமல்ல நோய்களும் பெருகிவருகிறது.

# நினைவின் தாழ்வாரங்கள்

– நபீல்



## மிதி வண்டி

தூசியின் படலம் விரிந்திருந்த அப்பகலில் வீட்டில் இயல்பாய் கிடக்கும் பொருள்களிலிருந்து சற்றே வேறுபட்டிருப்பதே அந்த நடை வண்டிதான்; ஒரு சிறு பறவையின் உயிரதிர்வு அதற்குள் நிகழ்ந்து கொண்டிருப்பதாகவே உணர்ந்தேன்; ஓடாவிச் சின்னப்பா தன் கைப்படச் செய்து தந்த நடை வண்டிதான் என் முதல் வாகனம்; மூலையோர மண் குடத்தின் பாசி படர்ந்த அதன் அடிப்பாகத்தில் வண்டியைக் கொண்டு சேர்த்து மோதி உடைத்திருக்கிறேன்; அவ்வப்போது வேறு சிறுவர்கள் என் வண்டியைச் சீண்டும்போது உரக்கக் கத்துவேன்; வாசலில் வண்டியைத் தள்ளித் திரிகின்ற பொழுதில் பக்கவாட்டுக் குந்திச் செடியில் வண்ணத்துப் பூச்சியொன்றைக் கண்டால் பிறகு வண்டியை நிறுத்தி விட்டு மிகுந்த ஜாக்கிரதையுடன் இரு விரல்களை அதன் சிறகை நோக்கி நகர்த்த அது அரவம் அறிந்து திடுமெனப் பறப்பதை வியந்து பார்த்திருப்பேன்..

உடையற்ற மேலுடம்பில் முதுகுப் பரப்பெங்கும் சிறு மணற்துகள்கள் ஒட்டிக் கிடந்தன; நைந்த தலையணையில் நிறமுற்றிருந்த பூக்களனைத்திலும் தலையில் குதப்பித் தடவிய தேங்காய் எண்ணெய் வழிந்து கறுப்பாய் விரவியிருந்தது; என்னையறியாது அதில் முகம் பதியுமாறு படுத்திருந்தேன்; இன்று பின்னேரம் நண்பர்கள் கூடிவிடுவார்கள்; நான்தான் பஸ் கிளினர்; முடிச்சுக் கயிறை விரித்து முடிந்து நீள் வளையமாக ஒருவர் முன்னும் மற்றவர் பின்னாலுமாகக் கயிற்றை இடுப்பில் போட்டுக் கொண்டு, முன்னுள்ளவர் ட்ரைவர் போல் கையைச் சுழற்றிச் சுழற்றி ஓடுவார்; நான் பின்னால் இழுபட்டுக் கொண்டு ஓடுவேன்; இடையில் பிரயாணிகள்போல் கை காட்டி ஏறிக் கொள்வார்கள்; ராகமற்ற விசிலோசையுடன் நான் கயிற்றை இழுத்து மணி அடிப்பேன்; பஸ் இரைந்தபடி இறக்கத்தில் நிற்கும்; அழுக்குச் சீருடையுடன் ஒழுங்கற்ற முடி பொங்கக் காற்றில் மிதப்போம்..


எங்கள் வீட்டுக்கும் மாமி வீட்டுக்கும் இடையில் கிளிசரியாக் கம்பு வேலிதான் இருக்கும்; வேலிக்கு இந்தப் பக்கம் நின்று கொண்டே மாமாவின் சைக்கிள் இருப்பதைப் பார்க்க முடியும்; அங்கங்கே நிறங்கள் உதிர்ந்து துரு படரத் தொடங்கியிருக்கும்; அந்தக் காலத்து ரலே சைக்கிள்; எப்படியோ அதனைப் பாதுகாத்து வைத்திருக்கிறார்; என்றாலும் அதன் ரிம் கம்பிகள் கறுக்காமல் நல்ல வெள்ளை வெளேறென்று பளிச்சென்று தெரிந்தது; அது எழுப்பும் கரகர ஒலியைக் காற்றில் சிதற விட்டபடி பயணிப்பதில் அவருக்கு ஒரு தனிச் சுகம்தான்; ஒழுங்கு செய்து பதியப்பட்ட ஓர் இசைத்தட்டைப்போல ஒரே சுருதியில் தப்பாத தாளத்துடன் கசிந்து ஒழுகும்; அவர் வயிறு பெருத்த தொழு தொழுவென்ற கட்டை உருவம்; ஏறி அமர்ந்தாரென்றால் அவர் சைக்கிள் சீற் பின் புறச்ச சதைகளுக்குள்ளே ஒளித்துக் கொள்ளும்; போதாக் குறைக்குத் தெறி சீற் போட்டிருப்பார்..

சைக்கிள் சார்த்தி வைத்திருக்கும் இடம் பார்த்து மெல்லத் தள்ளிக் கொண்டு பாதையில் வைத்து கவட்டுக்குள் கால் போட்டு ஊன்றி மிதிப்பேன்; "சரார்.." என்ற சத்தத்துடன் சைக்கிள் நகரும்; அது கேட்டு மாமா வீதிக்கு ஓடி வருவார்; நான் அவ்விடமே சுற்றிக் கொண்டிருப்பேன்; அந்நேரம் பார்த்து மாமியும் ஒரு வயதுக் குழந்தைக்குச் சோறு ஊட்டிக் கொண்டிருப்பார்; அந்தக் குழந்தை சாப்பிடாமல் அழுதுக்கிட்டே இருக்கும்; மாமியின் கையிலிருந்த சோறு அப்பப்ப தட்டுப்படும்; அப்போதெல்லாம் எனக்குள் பொங்கி வரும் சிரிப்பைக் கொடுப்புக்குள் அடக்கிக் கொண்டு மாமியைப் பார்ப்பேன்; அவர் சிரிக்காமல் "ஒழுக்காச் சாப்பிடு இல்லன்னா இந்தச் சைக்கிள் புடிச்சிட்டுப் போயிடும்.." அப்படிச் சொல்லித்தான் சோறு ஊட்டுவார்; ஒவ்வொரு சுற்றுக்கும் நறநறவென்று பெருவில் சத்தம் எழும்போதும் குழந்தை அழுவதை நிறுத்திவிட்டு மாமி ஊட்டும் சோற்றைச் சாப்பிட ஆரம்பிக்கும்; பின் சைக்கிள் குறித்த எந்தவொரு பேச்சுகளும் இல்லாது நின்றிருப்பார்; என் பாட்டுக்குச் சுற்றிச் சுழன்றடித்துக் கொண்டுபோய் அவர்கள் வாசலில் நிற்கும் மல்லிகை மரத்தில் சாய்த்துவிட்டு வருவேன்.. வீட்டுக்குத் தென் புறத்தில் வருடத்துக்கு ஒரு தடவையோ இரு தடவையோ கிணற்றுக்குள் சைக்கிளோடும் சர்க்கஸ் வந்துபோகும்; அவற்றுக்கு எங்கள் வீட்டிலிருந்து மின்சாரம் எடுப்பார்கள்; கிராமபோன் தட்டின் பாடல்கள் அங்கே என்னைக் கவர்ந்திழுக்கும்; வேகமாக ஓடி ஓர் நெருங்கி முள்ளை உள்ளங்காலில் வாங்கிக் கொண்டதுதான் மிச்சம்; இருப்பினும் கூட முள்குத்திய இடத்தை முள் களைந்து தடவிக் கொடுத்து விட்டு சுற்றும் முற்றும் பார்க்கையில் சைக்கிளோட்டம் காண நிறையப்பேர் அரள்வார்கள்.. குன்றா வளத்துடன் வடை கேக் வாழைப்பழம் ஐட்டங்களுடன் பதமான டீ யும் கிடைக்கும் கெய்ரோ ஹோட்டலின் முன்னே செல்லும் பொலிஸ் வீதியில்தான் தாஹிராஸ் சைக்கிள் கடை திறந்திருக்கும்; வாப்பாவோடு கல்முனைக்குப் போனால் அங்கு எழிலாக அடுக்கப்பட்டிருக்கும் சைக்கிள்களை வைத்த கண் மூடாது ரசித்து நின்றிருப்பேன்; ஹம்பர், றோட் மாஸ்டர், ஆசியா பைக், ஈஸ்ட்ரன், ஏவோன் என முதல் அணியில் வீற்றிருக்கும்; அதில் ஒரு வகையான வாசம் எழும் அதன் நுகர்ச்சியில் மூச்சுக் காற்றை மேலும் உள்வாங்கி விடுவேன்; பக்கத்தில் சாந்தி றேடியோ ஹவுஸ், எந்நேரமும் அங்கே, "ஆசையுள்ள மாப்பிள்ளைக்குத் தூது செல்ல யாருமில்லை..", "மயிலே மயிலே உன் தோகை எங்கே..", எனப் பாடல்களை ஒலிக்க விட்டிருப்பார்கள்...

முதலாம் வகுப்பில் சேருகையில் பள்ளிக்கு வெளியே இலவ மரத்தடியில் ஐஸ் விற்கும் மிதி வண்டிகள் வரிசையாக நின்றிருக்கும்; காலை மாலை இடைவேளைகளில் இடையிடையே "பாபு பாபு பாபு.." என்று ஓசையெழுப்பும் ஹோர்ண் குழல் அதன் ஹெண்டிலில் நீண்டு தெரியும்; அதே மரத்தின் பக்கத்தில் அந்நேரம் சாவல் நெய்னாரின் தேநீர் கடை இருந்தது; எப்போதும் ஈ மொய்ப்பதைப்போல் வெகு ஜோராக அவர் தேநீருக்கு நாவை அடிமைப்படுத்தி வைத்திருந்த ஆட்கள் குவிந்திருப்பர்; தேநீர் போடும் சாவல் காக்காவை உள்ளூர நான் மிகவும் நேசித்தேன்; ஏனென்றால் அவர் ஒரு தீவிர கமல்ஹாசன் ரசிகர்; வாழ்வே மாயம் பாடலில் வரும் "பிறந்தாலும் பாலை ஊற்றுவார் (இங்கே இறந்தாலும் பாலை ஊற்றுவார்).." என்றபடி டீயை உயர்த்தி, மீண்டும் பணித்து விடும்போது, "நாடகம் விடும் நேரம் தான் (உச்சக் காட்சி நடக்குதம்மா) .." என்ற அடிகளை அச்சொட்டாகப் பாடுவார்; அவருக்கும் ஏதும் காதல் தோல்வியோ தெரியவில்லை,; கமல் மீது கொண்ட பற்றில் அவரின் வித விதமான புகைப்படங்களைக் கடை முழுவதும் ஒட்டி வைத்திருந்தார்; இவரிடம் ஒருமுறை அட்டைக்கேக் வாங்க வந்தபோது சைக்கிளை அவர் கடையின் வலப்புறம் கிடந்த மரக் குற்றியில் நிறுத்தி விட்டு உள்ளே போய் விட்டேன்; திரும்பும்போது அது காணாமல் போயிருந்தது; இளம் பச்சை நிற பிளேயின் பிஜன் பறக்கும் புறாச் சைக்கிள்; விரல்களால் ஒவ்வொரு ரூபாயாகக் கிள்ளிக் கிள்ளி உண்டியலில் போட்டுச் சேமித்த எழுநூற்று ஐம்பது ரூபாய் பணத்தில் வாங்கியது; எந்த ஊருக்குச் சென்றாலும் யாரைக் கண்டாலும் என் சைக்கிளின் அடையாளங்களை உடனுக்குடன் தெரிவித்து விடுவேன்; என் மனதிலிருந்த அந்தச் சுந்தர மிதி வண்டி மாறாத முகத்துடன் சிரிப்பதுபோல் இப்போதுமுள்ளது.. வட்டாணைக் காக்கா மிதி வண்டிக்குப் போட்டிருந்த ஸ்டாண்டை காலால் தள்ளி விட்டேன்; அது "டங்" கென்று பாய்ந்து மண்ணையும் கெல்லிக் குதறி எழுந்தது; கோபா கெரியல் அதன் இரு புறங்களிலும் சிறிய சிக்னல் "பல்ப்"கள், மில்லர் பிராண்ட் டைனமோ, ஹெட் லைட்டில் மஞ்சள் கைலேஞ்சு கட்டி, இருக்கைக் கிடை பாருக்கு பச்சை நிற வயர் சுற்றி வெள்ளிக் கிளிப்பும் அணிவித்திருப்பார்; முதலில் ஹேர்கியூலர்ஸ் வைத்திருந்ததாகவும் பின்னர் ரஜ், மினிஸ்டர், வீ எஸ் ஏ மார்க்குகளுக்கு மாறியதாகவும் பெருமையாகச் சொல்லுவார்; பிரேக்கை அமர்த்தும்போது "ஹம்.." எனும் சத்தத்துடன்தான் சைக்கிள் நிற்கும்; அதனை ஹப்பிரேக் என்பார்கள்; வருடா வருடம் அதற்கு லைசன் எடுக்க வேண்டும்; ஆண்டு பொறிக்கப்பட்ட ஒரு தகடு அது; சைக்கிளின் முன் பிரேக் கீழ் கட்டையின்மேலே பொருத்தியிருப்பார்; இவர் நெடுநெடுவென ஒட்டகம்மா திரி நெட்டை உருவம்; சீற்றில் பின்புறம் மாறி இருந்து முன் ஹெண்டில் பிடியில், கைகளை வளைத்துப் பிடித்து மிதிப்பார்; சைக்கிள் முன்னே நகரும்; ஆள் பின்னே பார்க்க அமர்ந்து பஞ்சு மெத்தையில் தவழ்வதுபோல் வலம் வருவார்..

அக்காலத்தில் தம்பி லெவ்வைப்போடி, குதிரைக் காரர், பணிக்கர் குடும்பம் என வாழ்ந்ததுபோல் கொடி கட்டி வாழ்ந்த அவர்களுக்குப் பெயர் "சைக்கிள் காரர்" மரபுவழிச் சொத்தாய் அமைந்த ஒரு பழைய ஓரியல் சைக்கிளை இரண்டு தலைமுறையாகப் பேணிப் பாவித்ததாகத் தாத்தா சொல்லக் கேட்டிருக்கிறேன்; திருமணத்தின்போது உடுப்புப் பெட்டியை அதில் வைத்துக் கொண்டு வந்ததாக வாப்பம்மா ஒரு மிடறுத் தேநீரை உறிஞ்சி உள்ளே இறக்கிக் கொண்டு சொல்லுவார்; அதற்குப் பழுது ஏதும் நேர்ந்து விட்டால் புளியந்தீவுக்குச் சென்று திருத்துனரை அழைத்துவர வேண்டுமாம்; சைக்கிள் வருகிறது என்றால் பார்க்கும் சனம் கூடி விடுமாம்; சைக்கிள் ஓட்டி வருபவர் ஒரு சிறிய புன்னகையை உதிர்ப்பாராம் அவளவுதான்; இவர்கள் உச்சி குளிர்ந்து போவார்களாம்.

# கொரோனாத் தொற்றும் இரத்தத்தில் ஒட்சிசன் அளவு குறைவும்



டாக்டர்
அனுசந்தன் சிவப்பிரகாசம்

தொற்றுநோயான COVID19 க்கு உலகம் விழித்தபோது, பரவலாக அறிவிக்கப்பட்ட அறிகுறிகள் வழக்கமான காய்ச்சல், சளி மற்றும் இருமலைப் பிரதிபலிக்கும் என்றும், கடுமையான சந்தர்ப்பங்களில், இது நிமோனியா, மூச்சுத் திணறல் என அதிகரிக்கக்கூடும் என்றும் அடிக்கடி சுட்டிக் காட்டப்பட்டது .

இது உலகம் முழுவதும் பரவத் தொடங்கியபோதும், மருத்துவ வல்லுநர்கள் வயிற்றுப்போக்கு , வாசனை இழப்பு, சுவை, சிறிய இரத்த நாளங்களில் உறைதல் போன்ற பல்வேறு அறிகுறிகளைக் காணத் தொடங்கினர். அடிக்கடி கை கழுவுதல், வீட்டுக்குள் தங்கியிருத்தல், சமூக தூரத்தை பராமரித்தல் ஆகியவையும் இருந்தபோதிலும், இந்த கடுமையான தொற்று நோய்த்தொற்றுக்கு ஓய்வு கிடைக்கவில்லை.



COVID19 அறிகுறிகளின் நீண்ட பட்டியலில் இரத்தத்தில் மிகக் குறைந்த அளவு ஒட்சிசன் இருப்பதும் ஒரு காரணியாக கண்டறியப்பட்டுள்ளது. உலகெங்கிலும் உள்ள மருத்துவ வல்லுநர்கள் இதனால் குழப்பமடைகிறார்கள்.

எனவே மகிழ்ச்சியான ஹைபோக்ஸியா என்ன? ஹைபோக்ஸியா இரத்தத்தில் மிகக் குறைந்த ஒட்சிசன் குறிக்கிறது. ஆரோக்கியமான நபரின் இரத்த ஓட்டத்தில் சாதாரண ஒட்சிசன் செறிவு 95% க்கும் அதிகமாக உள்ளது, ஆனால் COVID19 நோயாளிகள் 40% க்கும் குறைவான ஆபத்தான சரிவுகளைக் காட்டுகின்றனர்.

சிறுநீரகங்கள், மூளை, இதயம் போன்ற முக்கிய உடல் உறுப்புகளின் உடனடி தோல்விக்கான ஹைபோக்ஸியா ஒரு எச்சரிக்கை சமிக்ஞையாகும் மற்றும் பொதுவாக முக்கிய மூச்சுத் திணறலுடன் இருக்கும், மகிழ்ச்சியான ஹைபோக்ஸியா அத்தகைய வெளிப்படையான வெளிப்புற அறிகுறிகளைத் தூண்டாது. இதன் விளைவாக, நோயின் ஆரம்ப கட்டங்களில், COVID19 நோயாளி, வெளியில், சரியாகவும் "மகிழ்ச்சியாகவும்" இருப்பதாகத் தெரிகிறது. கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்ட நோயாளிகளில் ஒட்சிசன் அளவு ஏன் குறைகிறது? நுரையீரலில் உள்ள சிறிய இரத்த நாளங்களின் சிக்கலான வலையமைப்பில் நிகழும் உறைதல், அல்லது இன்னும் எளிமையாக, பரவலான உறைதல், என்பன பெரும்பான்மையான ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்களால், மகிழ்ச்சியான ஹைபோக்ஸியாவின் முதன்மைக் காரணியாகக் கருதப்படுகிறது .

இதன் பின்னணியில் உள்ள காரணி, உடலில் ஏற்படும் அழற்சி எதிர்விளைவாகும், இது பெரும்பாலும் SARSCoV2 நோய்த்தொற்றால் தூண்டப்பட்டு, அதன் பின்னர் COVID19 இன் தொடக்கமாகும். இது, செல்லுலார் புரத எதிர்வினைகளைத் தூண்டுகிறது, அவை இரத்தக் கட்டிகளை உருவாக்குகின்றன மற்றும் நுரையீரலில் உள்ள செல்கள் மற்றும் திசுக்கள் போதுமான ஆக்ஸிஜன் விநியோகத்தைப் பெறுவதைத் தடுக்கின்றன. துடிப்பு ஆக்சிமீட்டருடன் சரிபார்க்கிறது. ஒரு துடிப்பு ஆக்சிமீட்டர் எதற்காக பயன்படுத்தப்படுகிறது?ஒரு துடிப்பு ஆக்சிமீட்டர் என்பது ஒரு சிறிய, சிறிய கேஜெட் ஆகும், இது அமைப்பில் உள்ள ஆக்ஸிஜன் அளவை அளவிடும். இது ஒரு ஆக்கிரமிப்பு அல்லாத நுட்பமாகும், இது இரத்த ஒட்சிசன் செறிவு மற்றும் இதய துடிப்பு ஆகியவற்றை விரைவாகப் பெற பயன்படுகிறது.

இது விரல் நுனியில் உறுதியாக ஒட்டப்பட்டுள்ளது மற்றும் அந்த பகுதி வழியாக பாயும் இரத்தத்திலிருந்து இரண்டு அலைநீளங்களை வலியின்றி பகுப்பாய்வு செய்கிறது ஒன்று இரத்த ஓட்டத்தில் ஒட்சிசன் அளவை தீர்மானிக்கிறது, மற்றொன்று துடிப்பு வீதத்தை அளவிடுகிறது, அதாவது இதய துடிப்பு எவ்வளவு வேகமாக இருக்கும்.

கொரோனா இறுதியில் மிகவும் முற்றிய நிலையில் உள்ள நுரையீரலை சேதப்படுத்தாமல் மூச்சு பாதிக்கும் ஒரு தொற்றும் நோய். ஆக்சிமீட்டர், COVID19 இன் ஆரம்ப கட்டத்தில் வீழ்ச்சியடைந்த இரத்த ஒட்சிசன் செறிவுகளைக் கண்டறிய உதவும், வியாதி மிகவும் கடுமையான வடிவங்களில் வெளிப்படுவதற்கு முன்பே. இது வைரஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக தனிமைப்படுத்தப் படுவதற்கும் உடனடி மருத்துவ சேவையை வழங்குவதற்கும் உதவுகிறது, அத்துடன் சமூகத்தில் COVID19 பரவுவதை கணிசமாகக் கட்டுப்படுத்துகிறது.

தற்போது, இந்தியாவில் COVID19 நிலைமை தீவிரமடைந் து வருகிறது, தினமும் 3 லட்சத்துக்கும் அதிகமானோர் நேர்மறை சோதனை செய்கிறார்கள். நோய்த்தொற்றுகள் வேகமாக அதிகரித்து இளைஞர்கள் உட்பட 20 வயதிற்குட்பட்டவர்கள், 30 களில் COVID19 னால் பாதிக்கப்படுகின்றனர். 90 சதவிகிதத்திற்கும் குறைவான இரத்த ஒட்சிசன் அளவு குறைவாகக் கருதப்பட்டாலும், 80 சதவிகிதம் அல்லது அதற்கும் குறைவாக கொண்ட இளைஞர்கள் இருமல், காய்ச்சல் போன்ற COVID19 இன் பொதுவான அறிகுறிகளை வெளிப்படுத்துவதில்லை மற்றும் சுவாசத்தில் எந்த சவால்களும் இல்லை. இருப்பினும், இது நுரையீரலின் செயலிழப்புக்கான கடுமையான அறிகுறியாகும், இது உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டும் மற்றும் தொழில்முறை மருத்துவ பராமரிப்பு தேவைப்படுகிறது.

இருமல், தொண்டை வலி, காய்ச்சல், தலைவலி போன்ற COVID19 இன் சிறிய அறிகுறிகளை மட்டுமே சித்தரிக்கும் போது, எந்தவிதமான சுவாச சிரமமும் இல்லாமல், ஒரு துடிப்பு ஆக்சிமீட்டரைப் பயன்படுத்தி இரத்த ஒட்சிசன் அளவை தொடர்ந்து அளவிட அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், உதடுகளின் நிறம் இயற்கையான நிறத்தில் இருந்து நீல நிறமாக மாறுகிறது, அதே நேரத்தில் தோல் நிறமாற்றம் சிவப்பு / ஊதா நிறத்தில் தோன்றும். மகிழ்ச்சியான ஹைபோக்ஸியாவின் இந்த எச்சரிக்கை அறிகுறிகளைக் கவனிப்பது ஒரு மருத்துவமனை அமைப்பில் உடனடி சிகிச்சையை உறுதிசெய்கிறது,

# 'Aluth Avurudu' Recipe Challenge 2021 இனை வெற்றிகரமாக நிறைவு செய்த Pelwatte Dairy

Pelwatte Dairy Industries, தமது நுகர்வோரின் இல்லங்களுக்கு உற்சாகத்தை அள்ளி வழங்கும், பருவகால சமூக ஊடக சவாலான 'Pelwatte Aluth Avurudu Recipe Challenge' ஐ வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. இந்த சவாலானது Facebook மற்றும் Instagram இல் முன்னெடுக்கப்பட்டதுடன், Pelwatte இன் பரந்த தயாரிப்பு வகைகளை உபயோகித்து தயாரிக்கப்பட்ட பருவகாலத்தின் சுவையான உணவுகளின் புகைப்படங்களையும், உணவு தயாரிப்பு செய்முறையையும் பகிர்ந்துகொள்ளுமாறு நுகர்வோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. 2021 ஏப்ரல் 1 முதல் 20 வரை முன்னெடுக்கப்பட்ட இந்த சவாலில் 100க்கும் மேற்பட்ட பருவகால சுவையான தின்பண்டங்கள், உணவுகள் மற்றும் குடிபானங்களின் செய்முறைகள் பெருமகிழ்ச்சியுடன் பதிவு செய்யப்பட்டுள்ளன.



பங்கேற்பாளர்கள் இந்த அறிவிப்பு தொடர்பான பதிவின் கருத்துகள் பிரிவில் தங்களது சுவையான உணவு வகை மற்றும் அதன் செய்முறையை பதிவதன் மூலமோ, அதை நேரடியாக பக்கத்திற்கு அனுப்புவதன் மூலமாகவோ அல்லது அவர்களின் வோலில் பதிவதுடன் பக்கத்தையும் ஹேஸ்டேக்கையும் குறிப்பிடுவதன் மூலமோ சவாலில் பங்கேற்க முடிந்தது. அனைவரும் #pelwatte recipe2021 என்ற ஹேஸ்டெக்கின் ஊடாக அனைத்து உணவு செய்முறையையும் பார்வையிட முடியும். இந்த சவாலானது புத்தாண்டு பருவகாலத்தின் அழகை வெளிப்படுத்தும் வாய்ப்பாக அமைந்ததுடன், வீடுகளில் சிறப்பாக சமையல் மேற்கொள்பவர்களை வெளிச்சம் போட்டுக் காட்டியது மட்டுமன்றி நல்ல உறவுமுறை மற்றும் தொடர்புகளையும் ஏற்படுத்தியது. மேலும் உணவு, தயாரிப்பு மற்றும் அதன் காட்சிப்படுத்தல் தொடர்பான அவர்களின் சொந்த ஆக்கபூர்வமான யோசனைகளையும் வெளிக்கொண்டு வந்தது.

புத்தாண்டு என்பது நல்ல வாழ்த்துக்கள் நிறைந்த சூழல், சௌபாக்கிய எண்ணங்கள், புதுப்பிக்கப்பட்ட உறவுகளின் தருணங்கள், குடும்பம் மற்றும் நண்பர்களுடான நாட்கள், பழையவற்றை ஞாபகமூட்டும் உணவு மற்றும் இனிப்புகள் ஆகியவற்றினைக் கொண்ட காலப்பகுதியாகும் இந்த தொற்றுநோய் நிலைமையானது ஒன்று கூடுவதையும், நேரடித் தொடர்புகளையும் சவாலுக்குட்படுத்திய போதிலும் இந்த பருவகாலத்தின் ஊக்கம் மாறவில்லை.

# UnionPay இன்டர்நஷனல் உடன் கைகோர்க்கும் mCash




SLTMOBITEL இன் புரட்சிகரமான மொபைல் பணக் கட்டமைப்பான mCash, நாட்டின் இலத்திரனியல் கொடுப்பனவு கட்டமைப்பை மாற்றியமைக்கும் வகையில், UnionPay இன்டர்நஷனல் உடன் கைகோர்த்துள்ளது. இதனூடாக SLTMOBITEL இலங்கையில் டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல்கள் செயற்படுத்தலை மேலும் மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த இணைந்த நடவடிக்கையினூடாக, mCash மற்றும் UnionPay இன்டர்நஷனலின் பயன்பாட்டை மேம்படுத்தும் என்பதுடன், நாடு முழுவதையும் சேர்ந்த mCash வாடிக்கையாளர்கள் மற்றும் mCash விற்பனையகங்களுக்கு நவீன தொழில்நுட்ப மேம்படுத்தல்களை ஏற்படுத்திக் கொடுக்கும்.

மேலும், இந்தப் பங்காண்மையினூடாக, UnionPay இன்டர்நஷனலின் சேவைகளை 25000க்கும் அதிகமான mCash வலையமைப்புக்கு வழங்கி, அவர்களின் டிஜிட்டல் ஆற்றல்களுக்கு வலுச்சேர்த்து வாடிக்கையாளர்களுக்கு உயர் தரம் வாய்ந்த அணுகல் வசதிகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட சௌகரியத்தை வழங்கக்கூடியதாக அமைந்துள்ளது.

முன்னணி மொபைல் பணக் கட்டமைப்பான mCash, உலகத் தரம் வாய்ந்த டிஜிட்டல் சேவைகளை பெற்றுக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளதுடன், அதற்காக தந்திரோபாய பங்காண்மைகளை ஏற்படுத்திய வண்ணமுள்ளது. இதனூடாக பணப் பாவனை குறைந்த டிஜிட்டல் உள்ளடக்கமான இலங்கையை கட்டியெழுப்புவதற்கு தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளது.

பல்வேறு துறைகளைச் சேர்ந்த முன்னணி கூட்டாண்மை நிறுவனங்களுடன் mCash பணியாற்றி, வேகமான, பாதுகாப்பான மற்றும் வினைத்திறன் மிக்க மொபைல் நிதிச் சேவைகளை வழங்குகின்றது. மேலும், mCash ஊடாக பண வைப்புகள், மீளப் பெறுகைகள், பணத்தை அனுப்புதல் மற்றும் பெற்றுக் கொள்ளல், கட்டணப் பட்டியல் மற்றும் கல்வியக கொடுப்பனவுகள், சொப்பிங், Lanka QR கொடுப்பனவுகள், ஒன்லைன் கொடுப்பனவுகள், நலன்புரி கொடுப்பனவுகள், டிஜிட்டல் நிலையான ஆணைகள் மற்றும் துரித B2B வியாபாரத் தீர்வுகள் போன்ற பரந்தளவு தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

# SLT-MOBITEL மற்றும் Epic டெக்னொலஜி இணைந்து 'Helaviru' வியாபார பரிமாற்ற சந்தைப்பகுதி அறிமுகம்

SLTMOBITEL மற்றும் Epic டெக்னொலஜி குரூப் ஆகியன இணைந்து Helaviru: விவசாய உற்பத்திகள் மற்றும் பண்டங்கள் வியாபார பரிமாற்றம்" எனும் cloudஅடிப்படையிலான டிஜிட்டல் சந்தைப்பகுதியை அறிமுகம் செய்துள்ளன.

இதனூடாக, இலங்கையின் பரந்தளவு பங்காளர்கள் மத்தியில் விவசாய உற்பத்திகள் மற்றும் பண்டங்களை வரையறைகளின்றி வியாபாரப் பரிமாற்றத்தை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

விவசாயிகள் மற்றும் செய்கையாளர்களுக்கு தமது உற்பத்திகளை உரிய காலத்தில் சாதாரண விலையில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விற்பனை செய்வதற்கான வசதியை 'Helaviru' வழங்கும். இதனூடாக சந்தைப்பகுதிகளை நாடிச் செல்ல வேண்டிய தேவைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய சிக்கல்கள் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளன.

டெக்னொலஜி குரூப் இனால் வடிவமைக்கப்பட்டு, SLTMOBITEL இனால் வலுவூட்டப்படும் 'Helaviru'ஒரு cloud அடிப்படையிலான உட்கட்டமைப்பு சந்தைப்பகுதியாக அமைந்திருப்பதுடன், SLT இன் நவீன வசதிகள் படைத்த டேட்டா சென்ரறில் நிறுவப்பட்டுள்ளது.




இரு நிறுவனங்களின் இணைந்த வர்த்தக முயற்சியாக செயற்படும். LAUGFS சுப்பர்மார்கெட்ஸ் (பிரைவட்) லிமிடெட் மற்றும் சொஃப்ட்லொஜிக் ஹோல்டிங்ஸ் பிஎல்சி ஆகியன 'Helaviru' செயற்திட்டத்தின் தந்திரோபாய பங்காளர்களாக இணைந்துள்ளன.

'Helaviru' ஐ ஊக்குவிப்பதில் இந்த இரு நிறுவனங்களும் தமது ஆதரவை வழங்கி, இலங்கையிலுள்ள விவசாயத் துறைசார்ந்தவர்கள் மத்தியில் புகழ்பெறச் செய்யும் என்பதுடன், பரஸ்பர அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நாட்டின் பரந்தளவு பங்காளர்களை இந்தக் கட்டமைப்பை பயன்படுத்துமாறு ஊக்குவிக்கும்.

ஸ்ரீ லங்கா ரெலிகொம் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனெவிரட்ன உரையாற்றுகையில், "தொன்று தொட்டு இலங்கை மக்களின் அடையாளமாக விவசாயம் திகழ்வதுடன், எமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவும் அமைந்துள்ளது.

# 2020 வருடாந்த அறிக்கையை டிஜிட்டல் முறையில் வெளியிட்டுள்ள DFCC வங்கி

DFCC வங்கி 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கைக்கு முதன்முதலாக டிஜிட்டல் முறையைத் தேர்ந்தெடுத்து,புதிய இயல்புக்கு ஏற்ற வகையில் தன்னைமாற்றி, 2025 ஆம் ஆண்டுக்குள் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட மற்றும் டிஜிட்டல் முறையில் இயக்கப்படுகின்ற வங்கியாக மாறும் இலக்கை விரைவு படுத்தியுள்ளது.




பங்குதாரர்களுக்கு விரிவான HTML வடிவிலான வருடாந்த அறிக்கைக்கான இணைப்பை அனுப்புவது பல நன்மைகளைக் கொண்டுள்ளது. அவற்றில் முக்கியமானது அச்சிடுதல், இறுவட்டு உற்பத்தி மற்றும் தபால் செலவுகளைச் சேமிப்பது ஆகியன காணப்படுவதுடன், எங்கள் காபன் அடிச்சுவட்டைக் குறைப்பதற்கும் இது வழிகோலுவதுடன், HTML வடிவிலான வருடாந்த அறிக்கையை வெளியிட்ட உடனேயே பங்குதாரர்களின் கரங்களில் கிட்டச் செய்கின்றது.

வாடிக்கையாளர் மையப்படுத்தல் மற்றும் டிஜிட்டலுக்கு முதலிடம் என்ற அணுகுமுறை எங்கள் Vision 2025 மூலோபாயத்தின் அடிப்படையாகும் என்று DFCC வங்கியின் தலைமை நிர்வாக அதிகாரி லக்ஷ்மன் சில்வா குறிப்பிட்டார். எ ங்கள் வலுவான பெறுபேறுகளுக்கும், 2020 ஆம் ஆண்டில் மாற்றம் கண்டசூழ்நிலைக்கு ஏற்ப விரைவாக மாற்றியமைக்கும் வங்கியின் திறனுக்கும் அவை முக்கிய பங்களிப்பாளர்களாக காணப்படுகின்றன.

எமது டிஜிட்டல் தளங்கள் வழியாக தொலைதூர வாடிக்கையாளர்களை ஏற்று, அவர்களை உள்வாங்கிக்கொள்ள தயாராக உள்ளோம்.

இதைவிட, சுற்றுச்சூழல்மீது பொறுப்புணர்வுள்ள நமது வெளித்தோற்றத்தைப் பொறுத்தவரை, கழிவிலிருந்து எரிசக்தியைப் பிறப்பித்தல், நீர், காற்று மற்றும் சூரிய எரிசக்தித்திட்டங்கள் உள்ளிட்ட பசுமை மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நாங்கள் தொடர்ந்து அனைவரின் கடன் வழங்குபவர்களாக இருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

## பிளாஸ்ரிக் கழிவுகளை குறைக்க இணையும்

# காகில்ஸ், யுனிலீவர்

நாட்டில் பிளாஸ்ரிக் கழிவுகளை நிர்வகிப்பது தொடர்பில் சிக்கல் நிலை தோன்றியுள்ள நிலையில், முன்னணி கூட்டாண்மை நிறுவனங்களான காகில்ஸ் மற்றும் யுனிலீவர் போன்ற நிறுவனங்கள் இணைந்து நிலைபேறான பிளாஸ்ரிக் கழிவு முகாமைத்துவ கட்டமைப்பொன்றை கொழும்பிலுள்ள ஒன்பது காகில்ஸ் புட் சிட்டி விற்பனை நிலையங்களில் ஏற்படுத்தியுள்ளன. இரு நிறுவனங்களும் தம்வசம் கொண்டுள்ள பரந்தளவு வளங்கள் மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றைப் பயன்படுத்தி நிறுவப்பட்டுள்ள இந்தக் கட்டமைப்பினூடாக பிளாஸ்ரிக் கழிவுகளை சேகரிப்பது மற்றும் விநியோகிப்பது முதல் வகைப்படுத்துவது மற்றும் மீள்சுழற்சிக்குட்படுத்துவது போன்ற சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.



நாடு முழுவதிலுமுள்ள ஏனைய காகில்ஸ் புட் சிட்டி விற்பனை நிலையங்களிலும் இந்தத் திட்டத்தை அறிமுகம் செய்ய நிறுவனங்கள் எதிர்பார்த்துள்ளன. நாட்டில் பிளாஸ்ரிக் வெளியீட்டைக் குறைக்கும் யுனிலீவர் நிறுவனத்தின் நிகழ்ச்சி நிரலின் ஒரு அங்கமாக இந்தத் திட்டம் அமைந்துள்ளது.

மேலும், இலங்கைக்கு நிலைபேறான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது எனும் காகில்ஸ் நிறுவனத்தின் நோக்கத்துக்கமையவும் அமைந்துள்ளது.

ஒவ்வொரு பகுதியிலும் அடையாளமிடப்பட்ட பிளாஸ்ரிக் கழிவுகளை இடும் பகுதிகள் நிறுவப்படும் என்பதுடன், இதில் கடுமையான பிளாஸ்ரிக்கள் (போத்தல்கள், டப்கள், கோப்பைகள்) அல்லது இலகுவான பிளாஸ்ரிக்கள் (பொலிதீன் பைகள், மேலுறைகள்) போன்றவற்றை வாடிக்கையாளர்கள் சௌகரியமான முறையில் இட முடியும். இவ்வாறு திரட்டப்படும் பிளாஸ்ரிக் கழிவுகள் வாராந்த அடிப்படையில் பெறப்பட்டு, பிரிப்புக்காக வகைப்படுத்தல் பகுதியொன்றுக்கு அனுப்பி வைக்கப்படும்.

இதனைத் தொடர்ந்து மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய சகல பிளாஸ்ரிக் கழிவுகளும் மீள்சுழற்சி நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதுடன், மீள்சுழற்சி செய்ய முடியாத பிளாஸ்ரிக்கள் கழிவிலிருந்துவலு மீட்சி நிலையங்களுக்கு (wastetoenergy recovery centres) அனுப்பி வைக்கப்படும். இந்தப் பணிகள் அனைத்தும் முறையாக கண்காணிக்கப்படும் என்பதுடன், பிளாஸ்ரிக் கழிவுகள் சூழலுக்கு பாதுகாப்பான முறையில் அழிக்கப்படுவதை உறுதி செய்யும்.

# ஃபெயார்ஃபஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடெட் புதிய பிரதம நிறைவேற்று அதிகாரியாக சந்தீப் கோபால்



இலங்கையர்களின் ஆழமான ஆர்வ மனப்பாங்கின் பிரகாரம் நிறுவப்பட்டுள்ள ஃபெயார்ஃபஸ்ட் இன்சூரன்ஸ், உலகத் தரம் வாய்ந்த சேவை நியமங்களைப் பின்பற்றுவதுடன், தமது புதிய பிரதம நிறைவேற்று அதிகாரியாக சந்தீப் கோபாலை நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது.

2021 மே மாதம் 1ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதுடன், Fairfax குழுமத்தினுள் ஆலோசகராக பதவி உயர்வு பெற்றுச் செல்லும் கலாநிதி. சஞ்ஜீவ் ஜா இடமிருந்து பொறுப்புகளை ஏற்றுள்ளார். ஒரு வருடத்துக்கு முன்னதாக பிரதம தந்திரோபாய அதிகாரியாக ஃபெயார்ஃபஸ்ட் உடன் இணைந்து கொண்டது முதல், புதிய முன்மொழிவுகளை கட்டியெழுப்புவதில் சர்வதேச நியமங்களை பின்பற்றுவது, வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்குவது மற்றும் ஊழியர் ஈடுபாடு போன்றவற்றில் நிறுவனத்தின் நீண்ட கால தந்திரோபாயத்தை கட்டியெழுப்ப சந்தீப் கோபால் பங்களிப்பு வழங்கியுள்ளார். ஐக்கிய இராஜ்ஜியம், ஹொங் கொங் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் Barclays, RSA, Allied World மற்றும் Swiss Re ஆகிய சர்வதேச பல்தேசிய நிறுவனங்களில் பணியாற்றிய சர்வதேச அனுபவத்தை சந்தீப் தம்வசம் கொண்டுள்ளார்.

தமது பணிக்காலத்தில் பல்வேறு நிறுவனங்களின் மறுசீரமைப்பு பணிகளை இவர் முன்னெடுத்துள்ளதுடன், தந்திரோபாயம், பொது முகாமைத்துவம், வாடிக்கையாளர் உறவு முகாமைத்துவம், இடர் முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய பிரிவுகளில் அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

இலங்கையிலுள்ள சிறந்த பொதுக் காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றாக அமைந்துள்ள ஃபெயார்ஃபஸ்ட், தனிநபர்கள், வர்த்தகங்கள் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்களுக்கு தனது பரந்த கிளை வலையமைப்பினூடாகவும், பங்காளர்கள் மற்றும் சந்தையிலுள்ள முன்னணி முகவர்களினூடாகவும் உறுதியான ஊழியர்களினூடாகவும் சேவைகளை வழங்கி வருகின்றது.

# சிங்கப்பூரில் உள்ள புகழ்பெற்ற James Cook பல்கலைக்கழகத்துடன் கைகோர்க்கும் SLTC





புதுமையான , தொழில்நுட்ப உந்துதல் மற்றும் ஆராய்ச்சி அடிப்படையிலான கல்வியில் இலங்கையின் முன்னோடியான இலங்கை தொ ழில்நுட்ப பல்கலைக்கழகம் (SL TC) அண்மையில் அவுஸ்திரேலி யாவின் புகழ் பெற்ற ஜேம்ஸ்குக் பல்கலைக்கழகத்தின் (JCU) சிங்கப்பூர் வளாகத்துடன் கூட்டிணைந்துள்ளது. இப்புதிய முயற்சியின் கீழ், சுற்றுலா, விருந்தோம்பல் மற்றும் நிகழ்வுகள் துறையில் உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட JCU இன் இளங்கலை பட்டத்தை பெற விரும்பும் இலங்கை மாணவர்களுக்கான பாதைகளை SLTC உருவாக்கியுள்ளது.

சுற்றுலா, விருந்தோம்பல் மற்றும் நிகழ்வுகள், பயணங்கள் மற்றும் சுற்றுலா முகாமைத்துவம் (Tourism, Hospitality and Events, Travel and Tourism Management) ஆகிய துறைகளில் இரட்டை பட்டங்களைப் பெறுவதற்கான வாய்ப்புகளை இக்கூட்டாண்மை வழங்குவதுடன், அவர்களின் பட்டப் படிப்பின் கடைசி இரண்டு வருடங்களை சிங்கப்பூரில் தொடர வழியேற்படுகின்றது.

SLTC யில் முதல் இரண்டு ஆண்டுகள் முடித்த பின்னர் அல்லது JCU பட்டத்திற்காக SLTC யில் ஒரு வருடம் படித்து ஏனைய 2 வருடங்களை இவ்வாறு சிங்கப்பூரில் தொடர முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன், சர்வதேச அனுபவத்தைப் பெறுவதற்காக சிங்கப்பூரில் ஒரு சில பாடங்களைக் கற்க SLTC மாணவர்களுக்கு மற்றொரு தெரிவும் வழங்கப்படுகிறது.

இப்புதிய கூட்டாண்மை குறித்து கருத்து தெரிவித்த, SLTC இன் ஸ்தாபத் தலைவர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி, ரஞ்சித் ரூபசிங்க, "James Cook பல்கலைக்கழகம் ஆனது, ஒரு பெறுமதிமிக்க உயர்மட்ட பல்கலைக்கழகமாகும், அவர்களது இலங்கைக்கான பங்காளர்களாக ஆகியுள்ளமை தொடர்பில் நாங்கள் பெருமிதமடைகிறோம். உயர் கல்வியின் அடிப்படையில், தங்கள் சொந்த நாட்டிலேயே நியாயமான மற்றும் மலிவான கட்டணத்தில் உலகத்தினால் வழங்கக் கூடியவற்றில் மிகச் சிறந்ததை, இலங்கையின் எதிர்காலத்திற்காக வழங்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் இதுவே SLTC இன் ஆரம்பத்தில் இருந்தான நோக்காக அமைந்துள்ளது." என்றார்.




### மேஷம்

ரிஷப ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கின்றார். உங்கள் ராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர், சுக்கிரன். தனஸ்தானத்தில் தானாதிபதியாக சுக்கிரன் சஞ்சரிக்கும் பொழுது, பணப்புழக்கம் அதிகரிக்கும். பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை உயரும். வழக்குகள் சாதகமாகும். வாகன யோகம் உண்டு. இழப்புக்களை ஈடுசெய்ய புதிய வாய்ப்புக்கள் வந்து சேரும்.

### ரிஷபம்

ரிஷப ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கின்றார். உங்கள் ராசிநாதனாகவும்,6ஆம் இடத்திற்கு அதிபதியாக வும் விளங்குபவர்,சுக்கிரன். எனவே ஆரோக்கியத் தொல்லை அகலும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரும். நிகழ்காலத்தேவை ஒன்றன்பின் ஒன்றாக நடைபெறும். துணிந்து சில முடிவுகளை எடுத்து, தொழில் வளர்ச்சி அதிகரிக்க வழி காண்பீர்கள்.

### மிதுனம்

ரிஷப ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கின்றார். உங்கள் ராசிக்கு 5,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக் கிரன். 12ம் இடத்தில் சஞ்சரிப்பதால் விரயஸ்தானம் பலப்படுகின்றது. எனவே சுபவிரயங்கள் அதிகரிக் கும். துணிந்து சில முடிவுகளை எடுப்பீர்கள். இட மாற்றம், வீடு மாற்றம் எதிர்பார்த்தபடியே அமையும். வாழ்க்கைத்தேவை பூர்த்தியாவதில் இருந்த பிரச் சினை குறையும்.

### கடகம்

ரிஷப ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கின்றார். உங்கள் ராசிக்கு லாபஸ்தானாதிபதியான சுக்கிரன்,லாப ஸ் தானத்திற்கு வரும்பொழுது, பொருளாதார பற்றாக் குறை அகலும். புதிய பாதை புலப்படும். வெளிநாட் டிலிருந்து எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். புதிய வாகனம் வாங்க ஆர்வம் காட்டுவீர்கள். சவாலான சில காரியங்களை முடித்து பாராட்டு பெறுவீர்கள்.

### சிம்மம்

ரிஷப ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கின்றார். இக்கா லத்தில் "புத சுக்ர யோகம்" செயல்பட போகின்றது. எனவே தொழில் எதிர்பார்த்ததைவிட கூடுதல் லாபம் கிடைக்கும். கிளைத்தொழில் தொடங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பயணங்களால் பலன் உண்டு. வீட்டுத்தேவைக்கான அத்தியாவசிய மற்றும் ஆடம் பர பொருட்களை வாங்கும் முயற்சி கைகூடும்.

### கன்னி

ரிஷப ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கின்றார். இக்கா லம் ஒரு பொற்காலமாகும். ராசிநாதன் புதனோடு, தனபாக்கியாதிபதி சுக்கிரன் இணைவதால்"புத சுக்ர யோகம்"உருவாகின்றது. எனவே பொருளாதாரநிலை உயரும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். வீட்டை விரிவு செய்து கட்டும் முயற்சி கைகூடும்.

### துலாம்

ரிஷப ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கின்றார். ராசிநா தன் அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் பொழுது, அனைத்து விஷயங்களிலும் கூடுதல் கவனம் தேவை. பெண்வ ழிப் பிரச்சினைகள் தலைதூக்கலாம். தொழிலில் சில இழப்புக்களை சந்திக்க வேண்டியிருக்கும். இடமாற் றம், வீடு மாற்றம் ஏற்படலாம். கடன் சுமையின் கார ணமாக சிலர் வாங்கிய சொத்துக்களை விற்க நேரிட லாம்.

### விருச்சிகம்

ரிஷப ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கின்றார். அங்கு புதனோடு இணைந்து புத சுக்ர யோகத்தை உருவாக் குவதால் பொருளாதார நிலை உயரும். தொழில் சூடு பிடிக்கும். நண்பர்கள் நல்ல தகவல்களை தருவார்கள். வெளிநாட்டிலிருந்து அனுகூலமான தகவல்கள் வந்து சேரும். புதிய வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும்.

### தனுசு

ரிஷப ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கின்றார். அங்குள்ள புதனோடு இணைந்து புத சுக்ர யோகத்தை உருவாக் குகின்றார். வீட்டிக்கு தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் எதிர்பாராத ஊதியஉயர்வு கிடைக்கும். மனதில் உற்சா கமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.

### மகரம்

ரிஷப ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கின்றார். இக் காலம் ஒரு பொற்காலமாகும். பஞ்சமாதிபதி பஞ்சம ஸ்தானத்திற்கு வரும் பொழுது நெஞ்சம் மகிழும் சம் பவங்கள் நிறையவே நடைபெறும். குறிப்பாக பெண் பிள்ளைகளின் திருமணத்தை முன்னிட்டு சீர்வரிசைப் பொருட்களை வாங்குவீர்கள். தொழில் வளர்ச்சிக்கு தேவையான முதலீடுகள் வந்து சேரும்.

### கும்பம்

ரிஷப ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கின்றார். இக் காலம் ஒரு பொற்காலமாகும். இனிய சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். பொது வாழ்வில் இருப் பவர்களுக்கு புதிய பொறுப்புக்கள் தேடி வரலாம். ஆடை,ஆபரண சேர்க்கை உண்டு . புதிய வாகனங் கள் வாங்கும் யோகம் உண்டு. தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் சுயதொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டு வர்.

### மீனம்

ரிஷப ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கின்றார். உங்கள் ராசிநாதன் குருவிற்கு சுக்கிரன் பகை கிரகமாவார். எனவே அவர் மூன்றாம் இடத்துக்கு வரும் இந் நேரத் தில் முன்னேற்ற பாதையில் இடையூறு வரலாம். சகோதரர்களுக்கு இடையே கருத்துவேறுபாடுகள் ஏற்படலாம். சிலர் செய்த குற்றங்களுக்கு நீங்கள் குற் றவாளியாக ஆளாக நேரிடும்.

# அர்ப்பணிப்போடு பணியாற்றிய பத்திரிகையாளன் கே. ஜி. மகாதேவா..!

பத்திரிகைத் துறையிலே ஊடகத்துறையிலே பணியாற்றுபவர்கள் பலர் அர்ப்பணிப்புடன் பணியாற்றுகிறார்கள் என்பர்.

நெருடல்கள் நெருக்கடிகள், பரபரப்புகள், பதற்றங்கள், சிலவேளை பயமுறுத்தல்கள் மத்தியிலும் அவர்கள் பணியாற்ற வேண்டிய நிலைமைகள் ஏற்படுவதுண்டு..!

உண்மைகளை யதார்த்தப் பார்வையோடு வெளிக்கொணரும்போது அவை வரலாற்றுப் பதிவுகளாகின்றன.

அரசியல், சமூக, பொருளாதார, கலாசார நடைமுறைப் பிரச்சினைகளைத் துல்லியமாகச் சுட்டிக்காட்டுவதற்கு ஊடகங்கள் நம்பிக்கைய ளிப்பனவாக இருத்தல் வேண்டும்.

அந்த வகையில் ஊடகத்துறையில் அர்ப் பணிப்புடன் பணிபுரிந்த பலரை யான் அறிவேன்.

அவர்களில் ஒருவராக கே. ஜி. மகாதேவாவை யும் குறிப்பிடலாம்.

இவர் பத்திரிகைத்துறையில் அரைநூற்றாண் டுக்கு மேலாக அர்ப்பணிப்பு டன் பணியாற்றியவர்.



1940 ம் ஆண்டு மட்டக் களப்பில் பிறந்த மகாதேவா மட்டக்களப்பு அரசினர் கல்லூரி, யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரி ஆகிய வற்றில் உயர்தரக் கல்வி யைப் பெற்றார்.




இவரது முதல்படைப்பு 1951 ம் ஆண்டு 'ஈழகேச ரி'யில் மாணவர் பகுதியில் பிரசுரமாகியது. அப்போது இவரது வயது பதினொன்று.

ஈழகேசரியில் தொடர்ந்து குட்டிக்கதைகளையும், சிறு செய்திகளையும் மாணவர் பகுதிக்கு எழுதிவந்தார்.

'வீரகேசரி'க்கும் கட்டுரை கள் எழுதத் தொடங்கினார்.

இவர் தனது எழுத்து முயற்சிகளுக்குச் சிறிய தந்தை வித்துவான் வி. சி. கந்தையா ஆதர்சமாக விளங்கினார் எனக் கூறுவார்.

1958 ம் ஆண்டளவில் மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த 'தமிழகம்' வாரப் பத்திரிகையில், மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செ. இராசதுரையுடன் இணைந்து பணியாற்றினார்.

1961 ம் ஆண்டு இருபத்தியொரு வயதில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'ஈழநாடு' பத்திரிகையில் இணைந்துகொண்டார்.

1967 ம் ஆண்டு முதல் 1972 ம் ஆண்டு வரை கண்டியில் ரா. மு. நாகலிங்கம் வெளி யிட்ட 'செய்தி' வாரப் பத்திரிகையில் ஆசிரியரா கப் பணியாற்றினார்.

இப்பத்திரிகை அன்று இலக்கியவாதிகள் பலரின் கருத்துகளுக்குக் களமாக அமைந்தது.

'செய்தி' பத்திரிகை நிறுத்தப்பட்டதும் மீண்டும் 'ஈழநாடு' பத்திரிகை ஆசிரிய பீடத்தில் இணைந் துகொண்டார்.

ஈழநாட்டில் செய்தி ஆசிரியரானார். மனதில் பட்டுத்தெறித்த விடயங்களைக் கட்டுரைகளாக வும், பத்தி எழுத்துகளாகவும் வழங்கினார்.

தமிழகம் செல்லும்போதெல்லாம் அரசியல் தலைவர்கள், கலை இலக்கியப் பிரமுகர்களைப் பேட்டிகண்டு ஈழநாட்டில் தொடராக எழுதினார்.

வீரகேசரி, தினகரன், தினபதி பத்திரிகைகளுக் கும் அவற்றை வழங்கினார்..

1976 ம் ஆண்டு தமிழகத்தில் திமுக ஆட்சி கலைக்கப்பட்ட நிலையில், முதல்வர் பதவி இழந்த கலைஞர் கருணாநிதியைப் பேட்டி கண்டு எழுதினார்.

கலைஞரைப் பேட்டிகண்ட மறுநாள் கவியரசு கண்ணதாசனையும் பேட்டிகண்டு எழுதினார்.

'சிலம்புச் செல்வர்' மா. பொ. சி., 'தினத்தந்தி' அதிபர் சிவந்தி ஆதித்தனார் மற்றும் பல பிரமு கர்களையும் பேட்டிகண்டு எழுதியுள்ளார்.

போர் நெருக்கடி மிகுந்த காலத்தில் துணி வோடும், துடிப்போடும் செய்தி ஆசிரியராகப் பணிபுரிந்தவர்.

இவர் ஈழநாட்டில் தொடர்ந்து எழுதிவந்த 'இப்ப டியும் நடக்கிறது' பத்தி எழுத்து வாசகர்களைப் பெரிதும் கவர்ந்தது.

மகாதேவா எழுதிய பத்தி எழுத்தொன்று இன்றும் எனக்கு ஞாபகத்தி லுண்டு.

'இரசிகமணி' கனகசெந்தி நாதன் நோய்வாய்ப்பட்டிருந் தவேளை எழுத்தாளர் கே. டானியல் அவரைப் பார்க்கப் போகும்போது என்னையும் அழைத்துச் சென்றார்.

இரசிகமணி எழுந்து நடமாடமுடியாத நிலையில் படுக்கையில் இருந்தார்.

அவரது நிலையைப் பார்த்த டானியல் பெரிதும் கவலைப்பட்டார் கண்கலங் கினார்.

திரும்பிவந்த டானியல் தனது தொழிலகத்தில் ஒரு சக்கரநாற்காலி (வீல் செயர்) செய்து இரசிகமணி வீட்டிற்கு அனுப்பிவைத்தார்.

இந்த விடயம் எனக்குத் தெரியாது. வேறு யாருக்குமே தெரியாது.

மகாதேவா இரசிகமணியைப் பார்க்கப் போனபோது அவர் 'வீல் செயரில்' வீட்டிற்குள் மெல்ல நடமாடினார்.

''டானியல் என்ர கருத்துக ளோடு ஒத்த கருத்துடையவர் அல்ல. அவன் மனிதாபி மானி மனிதன். அவன்ர புண்ணியத்தில நான் கொஞ்சம் நடமாட முடியுது." என்று இரசிகமணி கண்க லங்கிவாறு மகாதேவாவுக் குக் கூறியுள்ளார்.

இதனை அவர் 'இப்படி யும் நடக்கிறது' பகுதியில், 'வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியாது ' என்ற மாதிரி, டானியல் எழுத்தாளன் என்றவகை யில் மனிதாபிமானமிக்க ஓர் உதவியை இரசிகமணிக்குச் செய்துள்ளார் எனப் பதிவு செய்துள்ளார்.

இந்தப் பத்தி எழுத்தைப் பார்த்துத்தான் நானும் டானியல் வழங்கிய இந்த உதவியை அறிந்துகொண்டேன்.

1981 ம் ஆண்டு பத்திரிகைக் காரியாலயம் தீக்கிரையானபோது மயிரிழையில் இவர் உயிர் தப்பினார்.

1989 ம் ஆண்டு காரியாலயம் குண்டுத் தாக் குதலுக்கு இலக்காகிய போதும் அவ்வாறே உயிர் பிழைத்தார்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்ட காலத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்கா வழங்கிய பேட்டியொன்று ஈழநாட்டில் பிரசுரமா கியிருந்தது.

இந்தப் பேட்டி சில கருத்துப் பிழைகளுடன் மொழிபெயர்க்கப்பட்டு, இலங்கை ரூபவாகினி யில் மூன்று மொழிகளிலும் ஒளிபரப்பாகியது.

இச்செய்தி குறித்து ஜனாதிபதி யே. ஆர். ஜய வர்த்தனாவிடம் சிறிமாவோ பண்டாரநாயக்கா புகார் செய்தார்.

ஈழநாட்டுக்கு வழங்கிய பேட்டியெனக் குறிப்பி டப்பட்டதால் அதன் செய்தி ஆசிரியர் மகாதேவா விசாரணைக்காக விமானப்படை விமானத்தில் கொழும்புக்கு அழைத்துச்செல்லப்பட்டார்.

ஈழநாட்டில் பிரசுரமான பேட்டிக்கும், ரூபவா கினியில் ஒளிபரப்பாகிய மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட பேட்டிக்கும் இடையில் காணப்பட்ட கருத்துப்பிழைகளை விபரமாகச் சிறிமாவோவி டம் மகாதேவா சுட்டிக்காட்டியபின், அவர் புகாரை வாபஸ் வாங்கிக்கொண்டார்.

இத்தகைய பல சுவையான நிகழ்வுகளை, பத்திரிகைத்துறை அனுபவங்களை, தன் வாழ்க் கையில் மறக்கமுடியாத நினைவுகளை அவர் பதிவுசெய்துள்ளார். அவை யாவும் தொகுக்கப் பட்டு 'நினைவலைகள்' என்ற பெயரில் நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூல் 2004 ம் ஆண்டு சென்னையில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. ஆங்கிலத்தி லும் இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டு 2005 ல் வெளியிடப்பட்டது.

இந்நூல்களின் வெளியீடு கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலும் 2006 ம் ஆண்டு மூத்த பத்திரிகை யாளர் டேவிட் ராஜீ தலைமையில் நடைபெற் றது.

ஈழநாடு பத்திரிகையில் தொடர்ந்து இவர் எழு திவந்த 'இப்படியும் நடக்கிறது' என்ற பத்தியிலி ருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவை தொகுக்கப்பட்டு, 'கதையல்ல நிஜம்' என்ற புத்தகம் 2007 ம் ஆண்டு சென்னையில் வெளியிடப்பட்டது.

யுத்த நெருக்கடி தீவிரமாகியதைத் தொடர்ந்து, 1990 ம் ஆண்டுக்குப்பின் தமிழகத்திற்கு இடம் பெயர்ந்த மகாதேவா திருச்சி நகரில் வசித்துவந் தார்.

தமிழகத்தில் பத்திரிகையாளர்கள், கலை இலக்கியவாதிகளுடன் நெருங்கிப் பழகிய இவர், நூல்களை பதிப்பிக்கும் பணியிலும், ஈழத்து எழுத்தாளர்களைத் தமிழகப் பத்திரிகைகளுக்கு அறிமுகம் செய்வதிலும் ஈடுபட்டிருந்தார்.

இலங்கையில் 'தினக்குரல்' பத்திரிகைக்கும், 'ஞானம்' சஞ்சிகைக்கும் தமிழகச் செய்திகளை இலக்கியத் தகவல்களைத் தொடர்ந்து வழங்கிவந்தார்.




எவ்வேளையும் புன்னகை தவழும் முகத்துடன் காட்சிய ளிக்கும் மகாதேவா, தனது 76 வது வயதில் 2016 செப்டம்பர் 11 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையில் கால மானார்.

அவரது நினைவுகள் என் மனதில் நிலைத்துள்ளன.


2012 ம் ஆண்டு நாமக் கல்லில் நடைபெற்ற நாவ லாசிரியர் கு. சின்னப்பபாரதி இலக்கிய அறக்கட்டளை விழாவில் கலந்துகொண் டபோது, நீண்ட நாட்களுக் குப்பின் அவரைக் கண்டு நிறையப் பேசிக் கொண்டேன். இறுதியாக 2014 ம் ஆண்டு திருச்சி சென்றவேளை, நண்பர் மகாதேவா வைச் சந்தித்து நீண்ட நேரம் உரையாடியமை நினைவிலுண்டு. மட்டக்களப்பு, மலையகம், யாழ்ப்பாணம் ஆதியாம் இடங்களில் துணிவோ டும், துடிப்போடும் பத்திரிகையாளரா கப் பணியாற்றிய மகாதேவாவின் நாமமும் ஈழத்துத் தமிழ்ப் பத்திரி கைத்துறை வர லாற்றில் நிலைத்தி டும் எனலாம்..!



வி. ரி. இளங்கோவன்.

## காலவதியான டயர்களினால்

# அதிகரித்துள்ள ஆபத்து



இலங்கையில் டயர்களுக்கான சந்தை குறிப்பாக பயணிகள் கார் ரேடியல் அல்லது PCR பெரும்பாலும் இறக்குமதியில் தங்கியிருப்பதால் கடந்த இரண்டு வருடங்களாக தட்டுப்பாடு காணப்படுகிறது. உள்நாட்டு உற்பத்தியி னால் ஈடுசெய்ய முடியாதளவு ஏறத்தாழ 1 மில்லியனுக்கான வருடாந்த தேவை காணப்ப டும் நிலையில், கடந்த 2020ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட இறக்குமதித் தடையின் காரணமாக இத்துறை பெரிதும் பாதிக்கப்பட்டுள் ளது. உதாரணமாக, நாட்டின் பாரிய உற்பத்தியா ளரான CEAT வருடமொன்றுக்கு 500,000 உற் பத்திகளையே மேற்கொண்டுள்ளது. வேறெந்த தெரிவும் இல்லாமல் சந்தையை கைவிட்டுள் ளது. ஏற்றுமதி சந்தையை நோக்காகக் கொண்ட ஏனைய உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து டயர்களைப் பெற்றுக் கொள்வதே மிகவும் சாத்திய மாக தேர்வாக அமையும்.

இருந்தபோதும், ஒழுங்குமறைகள் மற்றும் கட் டுப்பாடுகள் வலுமையான தடைகள் என்பதை நிரூபித்துள்ளன. உதாரணமாக, ஏற்றுமதிக்காக தயாரிக்கப்படும் டயர்கள் உள்நாட்டுத் தொழில் களை ஊக்குவிப்பதற்காக வழங்கப்படும் சலுகை யாக, வரி விலக்கு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களைப் பயன்படுத்துகின்றன. இது உள்ளூர் சந்தையில் கவனம் செலுத்துபவர்களை விட முதலீட்டு ஊக்குவிப்புச் சபையுடன் இணைந்த தொழில்சாலைகளுக்கு போட்டித் தன்மையை வழங்குகின்றது. எந்தவொரு தரப்புக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் விலைப் பொறிமுறை யொன்று உருவாக்கப்பட்டால், இறக்குமதி கட்டுப்பா டுகள் தளர்த்தப்படும்வரை குறுகிய காலத்தில் டயர் தட்டுப்பாட்டைத் தணிக்க முடியும்.

பயணிகள் கார் டேடியல்கள் விரைவில் தேய்வ டைந்து விடுவதுடன், பாதிப்படைந்த டயர்கள் புதிய உட்கட்டமைப்பு போதுமானதாக இல்லையென்ப தால் அண்மைக் காலமாக டயருடன் தொடர்பான விபத்துக்கள் அதிகரித்துள்ளன. நாம் தற்பொ ழுது மேலும் பல அதிவேக நெடுஞ்சாலைகளைக் கொண்டிருக்கின்றோம், உதாரணமாக கட்டுநாயக்க முதல் மத்தளை வரை நீண்டதூரத்தைக் கூறமு டியும். அதிக வேகம் மற்றும் அதிகரிக்கப்பட்டுள்ள பயண நேரம் டயர்கள் மீதான அழுத்தத்தை அதிகரிப்பதுடன், அதிவேக நெடுஞ்சாலைகளின் மருங்குகளில் தேய்வடைந்த டயர்களுடன் வாக னங்கள் நிற்பதும், டயர்கள் வெடித்து கட்டுப்பாடி ழந்து நிற்பதும் அசாதாரணமான காட்சிகள் அல்ல. அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணித்த கார்கள் மற்றும் வர்த்தக ரீதியான வாகனங்களின் டயர்கள் வெடித்த பல சம்பவங்களை இந்தக் கட்டுரையாளர் கண்ணுற்றுள்ளார். தேய்ந்துபோன டயர்களுடன் செல்வது ஆபத்தானது என்பதை வாகன ஓட்டிகள் நன்கு அறிந்திருந்தாலும் பல நகரங்களில் பொருத் தமான டயர்கள் கிடைக்காத காரணத்தினால் இறுதி வரை அவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

மக்களுக்குப் பெரிதும் தெரியாத மற்றுமொரு விடயம் டயர்களுக்கு காணப்படும் காலவதியாகும் திகதி. டயர்கள் தினசரி நடைபாதையைத் தாக்கினா லும் அல்லது இருண்ட, குளிர்ந்த களஞ்சியத்தில் சேமித்து வைத்திருப்பதை கவனத்தில் கொள்ளா மையாலேயே டயர்கள் பழுதடைகின்றன. எனவே டயர்களுக்கு காலவதி திகதி உள்ளது. காலவதியா கும் திகதி டயர்களின் ஓரங்களில் நான்கு இலக் கங்களைக் கொண்டதாகவிருக்கும். முதல் இரண்டு இலக்கங்கள் உற்பத்தி செய்த வாரத்தையும், இறுதி இரண்டு இலக்கங்களும் உற்பத்தி வருடததையும் குறிக்கும். 2020ஆம் ஆண்டு நான்காவது வாரத் தில் உற்பத்தி செய்யப்பட்ட டயர் 0420 எனக் குறிப் பிடப்பட்டிருக்கும்.

ஒரு வருடத்துக்குக் குறைவான காலத்தைக் கொண்ட புதிய டயர்களைக் கொள்வனவு செய்வதே சிறந்த நடைமுறையாகும் என்பதுடன், இலங்கை யின் வெப்பமண்டல நிலைமைகள் காரணமாக உங்கள் டயர்களின் காலாவதி திகதியிலிருந்து ஆறு வருடங்களை அடைந்தவுடன் அவற்றை மாற்றுவது பற்றிக் கவனம் செலுத்துங்கள். இருந்தபோதும், விற்ப னைக்கு விளம்பரப்படுத்தப்பட்ட டயர்கள் 2017 அல்லது 2018 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டிருப் பதைக் காணக்கூடியதாவுள்ளது. அதாவது அவற் றின் வாழ்நாளில் பாதி ஏற்கனவே முடிந்துவிட்டா லும், பற்றாக்குறை காரணமாக மாற்றுவழி இன்றி அவற்றை பயனர்கள் கொள்வனவு செய்கின்ற னர். காலவதியாகாத டயர்களில் ஓடுவதன் ஊடாக சோகங்களை பகுதியளவில் தவிர்க்க முடியும், ஃபாஸ்ட் அன்ட் பியூரியன் நடிகர் போல் வோல்க ருக்கும் நிகழ்ததும் இதுவே. ஆறு வருடங்களின் பின்னர் டயர்கள் சிறப்பதானதாகக் காணப்பட்டா லும் ஆறு வருடங்களில் மாற்றுவதற்கு மறக்க வேண்டாம், சிதைவுகள் வெற்றுக் கண்களுக்குப் புலப்படாமல் போகலாம்!

‘இலங்கை டயர் சந்தை எதிர்வுகூறல் மற்றும் வாய்ப்புக்கள் 2021’என்ற TechSci ஆய்வு அறிக் கைக்கு அமைய இலங்கையின் டயர் சந்தை 2016 முதல் 2021 வரையில் CAGR 12.59% உயர்வடையும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. உயரும் இரு சக்கர வாகனம் மற்றும் முச்சக்கர வண்டி தேவை, ஆட்டோமொபைல் விரிவாக்கம் மற்றும் சாதகமான நிதிக் கொள்கைகள் ஆகியவற்றின் கார ணமாக சந்தையில் வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது: “நிலையான வணிகச் சூழல், சிறந்த பொருளாதார நிலைமைகள், குறைந்த வட்டியில் கடன்கள் கிடைப் பது மற்றும் நாட்டில் விகிதத்தில் மோட்டார்மயமாக் கல் ஆகியவற்றின் ஆதரவுடன் வாகனத் தொழில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் வளரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது, இது டயர்களுக்கான தேவையை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது”என அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

இங்குதான் அரசாங்கத்தின் ஆக்கபூர்வமான தலையீடு தேவைப்படலாம். இருப்பினும், வழக்க மாக, ஏற்றுமதிக்காக தயாரிக்கப்படும் டயர்கள் பற் றாக்குறையை நீக்குவதற்கும், குறுகிய காலத்தில் அதிக உயிரிழப்புகளைத் தடுப்பதற்கும் உள்ளூர் சந்தையைபூர்த்தி செய்யவில்லை என்றாலும், சில வழிமுறைகளை அறிமுகப்படுத்த முடியும், இதன் மூலம் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் டயர் களில் ஒரு சதவீதம் உள்ளூர் சந்தையில் நுழை யாமல் ஏற்கனவே சந்தையில் உள்ளவர்களை குலைத்தல் அல்லது ஊக்கப்படுத்துதல் என்பதற்கு மாற்றாக அவர்களின் சுமையை குறைக்க ஒரு வழிமுறையாகும். இது இறுதி பயனருக்கு ஒரு நன் மையாக இருக்கும், ஏனெனில் இறக்குமதிக்காக தயாரிக்கப்படும் டயர்கள் பொதுவாக உள்ளூர் மட் டுமல்ல, சர்வதேச தரங்களையும் நிபந்தனைகளை யும் பூர்த்தி செய்கின்றன. அசாதாரண சூழ்நிலை கள் அசாதாரண நடவடிக்கைகளுக்கு அழைப்பு விடுகின்றன. இதுபோன்ற நேரத்தில் இறக்குமதி இயல்பாக்கும் வரை, இது எதிர்காலத்தில் தெளிவா கத் தெரியவில்லை, பொதுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மேற்கூறியவை போன்ற சாத்தியக் கூறுகள் மற்றும் தெரிவுகளை அரசாங்கம் கவனத் தில் கொள்வது விவேகமானதாக இருக்கலாம்..

அஷ்ராக் வஹாப்




## கசப்பு

இவ்வாரத்து இலங்கைத் தமிழ் இதழ்கள் அனைத்திலும் இடம் பெற்றிருக்கக் கூடிய ஓர் அம்சம், தமிழக ஆட்சி மாற்ற அலசல், ஆய்வுக் கண்ணோட்டம், கழுகுப் பார்வை என்பன.

நானும் இதைவிட்டு கடந்து போக இயலாது. நானே ஏழு நாட்களுக்கு முன், இப்படிப் பதித்துள்ளேன்.

“இன்றைய தமிழகத்
தேர்தல் முடிவுகள்
கசக்குமா? இனிக்குமா?
இனிக்கும்!
ஆனாலும் கசக்கும்!
கிருமி ஒன்றினால்!”

இனிக்கும்' என்றது, தந்தையார் (கலைஞர் முத்துவேல் கருணாநிதி) வீற்றிருந்த அரியாசனத்தில் தனயன் (ஸ்டாலின்) வீற்றிருக்கும் கட்சி. அதுவும் 10 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழக ஆட்சிப் பொறுப்பு மீண்டும் தி.மு.க. கட்சியிடம். காட்சியை தமிழ்நாட்டவருடன் இணைந்து நாமும் காண்கிறோமே!

பலருக்கும் முன்னைய முதல்வர் ‘ஏனா பானா’ வோ (எடப்பாடி பழனிச்சாமி அல்லது இந்தியப் பிரதமரின் கட்சியான பாஜக வேட்பாளப் பிரமுகரோ வந்திருந்தால் இனித்திருக்காது. அது உள்ளங்கை நெல்லிக் கனியாக வெளிச்சம்.

ஆனால் ‘கசக்கும்’ எனப் போட்டிருப்பதும் சரியே, சரியே!

ஆகக் கூடுதலாக யாருக்குக் கசக்கும் என்றால் தமிழக மூத்தத் தமிழ் ஏடுகள் மூன்றுக்கும், ஓர் இளம் இதழுக்கும். இரண்டு ஆங்கிலத்துக்கும்!

இதைத் துணிவாகவே பதிக்கிறேன். அவற்றினிடமிருந்து எந்த எதிர்பார்ப்பும் எனக்கில்லை. எந்த வாய்ப்பும் வேண்டாம்!

‘தினத்தந்தி' தினமணி’ , ‘தினமலர்’ ஆகிய (03) மூத்தவைகளுடன் நேற்று முளைத்த தி இந்துவும் இணைவு! (தமிழ் இதழுக்கு ஆங்கிலம் கலந்த பெயர்).

‘உலகத்தின் நான்காவது தூண்’ என வர்ணிக்கப்படுகிற, மதிக்கப்படுகிற ஊடகங்கள், தனக்கு அள்ளி வீசப்பட்ட பல இலட்சக் கணக்கான பண நோட்டுகளுக்காக (இறுதி நேரத்தில், வாக்களிக்க ஓரிரு நாட்கள் இருக்கையில்) முதல் பக்கம் கொட்டை எழுத்துக்களில் தி.மு.க கட்சிக்கு எதிராக பொய்ச் செய்தி” ஒன்றைப் பிரசுரித்து அதன் தொடர்ச்சிக்கு மேலும் சில பக்கங்களை ஒதுக்கின.

## இந்தியப் பிரதமரின் கட்சியை (பா.ஜ.க) தோற்கடித்த இரு முதல்வர்கள்



குறிப்பிட்ட ஆறு இதழ்களும் “ஒரே தலைப்பில்” ஒரே செய்தியை ஈயடிச்சான் காப்பியாக பிரசுரித்தன.

ஞாயிறன்று காலை கோப்பி, தேநீருக்குப் பிறகு கையிலெடுத்த நீண்ட நாள் வாசகர்கள் படிக்கப் பிடிக்காமல் குப்பைக் கூடையில் கசக்கிப் போட்டார்கள். (இந்தச் செய்தியை, முன்னைய கசப்பு ஒன்றிலும் உங்களை விழுங்க வைத்திருக்கிறேன்).

இப்பொழுது இந்த ஊடகங்களின் நிலை என்ன? பயங்கர கசப்பே! ஆனால், இனிப்பது போல் ‘பாவ்லா’ பண்ணிக்கொண்டு, போட்டே தீர வேண்டும் என்பது போல் செய்திகள், படங்கள் தலையங்கங்கள் இனிப்பு, இனிப்பாக, கேவலம் கேவலம்.

ஆக என் எழுத்தில் ‘இனிக்கும். ஆனாலும் கசக்கும்’ என்று பதித்தது ரொம்பச் சரி!

மேலும், இது மற்றொரு விதத்திலும் புதிதாய் ஆட்சிக்கு வந்திருப்பவர்களுக்கும் பொருந்தும்.

காரணம் உலகையே ஆட்டிப் படைக்கும் கிருமியே.

கோரத் தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கும் கொரோனாவை கட்டுப் படுத்தத் தீவிர நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசர அவசியமாகிவிட்டது. முதல் அமைச்சராக 7ந் திகதி பொறுப்பேற்க இருந்த நிலையில், “என் வேளை இன்னும் வரவில்லை. என்று காத்திருக்காமல் 4ம் திகதியே அதிகாரிகளை அழைத்து கொரோனா வேகமாக பரவுவதை தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கலாம்? என்று தீவிரமாக ஆலோசனை நடத்தினார். அதிகாரிகள், “முழு ஊரடங்கை அமுல்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை. நீதிமன்றம் கூட அதைத்தான் வலியுறுத்துகிறது” என்று முழு ஊரடங்கை அமுல்படுத்துவதற்கான பரிந்துரைகளை கூறினர். ஆனால் பக்கத்து மலையாளக் கரையோரக் கேரளம் 16 ம் திகதி வரை முழு ஊரடங்கைப் பிறப்பித்து விட்டது. இந்த பத்தி எழுத்தை அச்சுக்கு அனுப்பும் வெள்ளிக்கிழமை காலை ஸ்டாலின் பதவியேற்ற மாலை விசேட அமைச்சரவை கூட்டம் கிருமியை விரட்டுவது எப்படி என்று, 25 ஆயிரத்தை தாண்டி விட்டது.

‘வெற்றி விழா’ என்று ஒரு பெரிய கொண்டாட்டமாக நடத்தாது, ஆளுநர் மாளிகையிலேயே ஒரு கூடாரம் அமைத்து இருநூறு முக்கியப் பிரபலங்களை மட்டும் அழைத்து மிகமிக எளிமையாக முதல்வர் பதவியை ஏற்றுக் கொண்டு விட்டார் கலைஞரின் மகன்.

சரி! பதவியேற்றதும் கொரோனா சுமை மட்டுமா? “கடன் சுமை” என்று மகா பயங்கரமாக இன்னொன்று!

மிகப் பரிதாபம் புது முதல்வரது நிலைமை!

இன்னொரு புறத்தில், அகில பாரத நாட்டையும் ஆண்டு கொண்டிருக்கிற பிரதமர் நரேந்திர மோடியால், தனது (பாஜக) கட்சி மூலம் நாலே நாலு பேரையே, தமிழ்நாட்டு சட்ட சபைக்கு அனுப்ப முடிந்திருக்கிறது.

அந்தப் பெரிய மனிதர் அந்தக் கவலையில் முதல்வருக்கு அன்புக் கரம் நீட்டி அரவணைத்து இடுக்கண்களைவாரா? அல்லது சில ‘ஷா மார்களின்” ஆலோசனைகளக் கேட்டு கசப்பு வில்லைகளை மட்டும் விஷேட விமானத்தில் அனுப்பி வைப்பாரா? ஓரிரு மாதங்கள் பொறுத்தே பூனை, குட்டி போடும்!

அப் பொழுது இனிப்புகள் கிடைத்தால் அள்ளி வழங்குவேன், அபிமானிகளுக்கு!

## இனிப்பு–1




பரந்த பாரதநாட்டில் பல மாநிலங்கள் உள்ளன. நமக்குத் தமிழ் மாநிலத் தமிழகத்துடன் மட்டுமே தொப்புள் கொடி உறவு. அந்தத் தமிழகமே சில காலங்களுக்கு முன்பு ஒரு பெண் முதலமைச்சரை இந்தியாவுக்கு சம்பாதித்துக் கொடுத்தது (ஜெயலலிதா).

அவருக்குப் பிறகு இந்தியாவில் யாராவது இருக்கிறாரா என்றால் மேலே படத்தில் உள்ளவர் தான்.

கால் முறிவோடு சக்கர வண்டியில் தேர்தல் பிரசாரம் செய்தவர்! (இந்த முறிவு எதிர்க்கட்சி வேட்பாளர் ஒருவரது ஆதரவாளரால் ஏற்படுத்தப்பட்டதாம்!)

அந்தக் காட்சிப் படம் மட்டுமல்ல, இன்றைக் ‘கசப்பு’ப் பகுதியில் தமிழக முதல்வருடன் காணப்படுபவரும் அவரே!

ஆனால் இருவருமே முதல்வர்களாகும் முன்பே சந்தித்த வேளையில் ‘கிளிக்’கானது’.

முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுக்கு என்ன தீர்க்கதரிசனம் பாருங்கள்?

‘மம்தா மாதரசியே, தாங்களே மூன்றாவது தடவையாகவும், வடக்கே, மேற்கு வங்க முதலமைச் சராவீர்கள். இப்ப போர்த்துக்கிறேன் புகழாடை!

பரிசளிக்கின்றேன் அய்யன்!”

வள்ளுவன் உருவச் சின்னத்தை...!” எனக் கௌரவப்படுத்துகிறார்.

இந்த மம்தா (பானர்ஜி) மாதாவை கொஞ்சம் கொஞ்சமே தெரியும் எம்மவர்களுக்கு என்று கருதுகிறேன். (பெயரளவில் மட்டும்!)

ஆனால் பின்னணி? ஒரு சில முக்கியத்தகவல்கள் மட்டும் பிரத்தியேகமாக.

வட இந்தியாவில் நாமெல்லாம் அறிந்திருக்கிற கல்கத்தா என்கிற கொல்கத்தா பகுதியை இரு தடவை ஆட்சி, செய்து விட்டு இப்போது 03 ஆவதாக அரியாசனத்தில். அவர் வெற்றி சாதாரண வெற்றியல்ல. பயங்கர வெற்றி.

பிரதமர் மோடியின் ‘பாஜக’ கட்சி அவர்தம் வலதுகரத்தின் தலைமையில் அவர் பெயர் 'ஷா' என்று முடியும். அவர் இயக்கிய “இந்துத்துவா” (இந்து மதம் மட்டுமே இந்தியாவுக்கு) பிரசாரம் மேற்கு வங்காளம், கொல்கத்தாப் பகுதி சிறுபான்மை மக்களிடம் பெரும் அச்சத்தை ஏற்படுத்திவிட்ட நிலையில் ‘பெண் சிங்கம்’ மம்தா சீறிப்பாய்ந்து 213 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளார்.

ஆட்சி அமைக்க மம்தா மாதாஜிக்குத் தேவைப்பட்டது 148 இடங்களே! கிடைத்ததோ 213. அவற்றில் 42 இடங்களை முஸ்லிம் வேட்பாளர்களைக் கொண்டு நிரப்பி ‘பச்சைக் கொடி’ பறக்கச் செய்தார்!

இது எப்படி இருக்கு? அதிலும் மாதாஜி ஒரு பிராமணப் பெண். அவருடைய சமூகம் அங்கே முஸ்லிம்கள் மீது படுமோசமான துவேசத்தை அள்ளிக் கொட்டுவது.

ஆயினும், அவரது பாடசாலை காலத்தில்அவர்ஒருபாடமாகஎடுத்துப்படித்தது இஸ்லாமிய நாகரிகமும் வரலாறும்! அவர் ஒருபன்னூல் ஆசிரியருங்கூட.

முன்பு சட்டசபையில் இருந்த போது எந்த ஊதியமும் பெற மறுத்தவர்.

நம்ப முடியாமல் இருக்கிறது!

“இந்தியாவின் மேற்கு வங்காளம் ஒற்றுமையின் இடம். அதை எந்தக் கொம்பனாலும் அசைக்க விடமாட்டேன்!” என தன் பதவியேற்பு விழாவில் முழக்கம் விட்டிருக்கிறார். அவருக்கு 66 அகவை! நீடு வாழட்டும் பெண் சிங்கம்!

நாமும் அப்படியொரு (பெண் சிங்கத்திற்கு ஏங்குவது குற்றமில்லையே! ஏங்குவோம்.

## இனிப்பு–2



முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் ஆட்சிகட்டிலில் அவரது முன்னோர் வளர்த்த தி.மு.கவிற்கு 125 இடம். கூட்டமைப்புடன் சேர்ந்ததால் 159. அதில் 3 இடங்களில் முஸ்லிம்களையே நிறுத்தி வெற்றி கண்டிருக்கிறார். அவர் எதிர்பார்த்தபடி பழம்பெரும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கிற்கு ஒரு இடம் கூட இல்லாமல் போனது.

ஆக மொத்தம் 07! தி.மு.க ஆட்சியில் கைகோர்ப்பு. படத்தைப் பார்த்து மேலும் விபரங்களை அறிக.

இவர்களில் சா.மு.நாஸர் பால் வளத்துறை அமைச்சர் கே.எஸ். மஸ்தான் சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழ் வளத்துறை அமைச்சர்.






## மனதில் கொண்ட ஆசைகளை மறந்து போய்விடு இனிய காதல் நினைவே போதும் பிரிந்து போய் விடு!

என்னதான் தேர்தல் பிரசார வேலைகளில் ஈடு பட்டிருந்தாலும்

அடிக்கடி காதலியை பார்ப்பதற்காக

அமைச்சர் வந்து போய்க் கொண்டுதான் இருந்தார்

அவர் வரும் போது,

மலர்விழி அசந்து தூங்கிக் கொண்டிப்பாள்.

அன்றும் அப்படித்தான்.

அவர் வந்த போது,

மலர்விழி தூங்கிக் கொண்டிருந்தாள்.

அவர் அறைக்குள் நுழைந்ததும் உள்ளே இருந்த டிரைவர் பியதாஸவின் மனைவி

அறைக்கதவைச் சாத்திக் கொண்டு வெளியே சென்று விட்டாள்.

மெல்ல நடந்து வந்த அமைச்சர்,

கட்டிலின் ஒரு மூலையில் அமர்ந்து கொண்டார்.

சிறிது நேரம் வரையில்,

அவள் முகத்தையே பார்த்த கொண்டிருந்தார்.

பிறகு,

அவள் கன்னத்தை வருடிக் கொடுத்தார்.

அதேநேரம்,

அலறியடித்துக் கொண்டு, எழுந்து அமர்ந்து கொண்டாள் மலர்விழி,

“பயப்படாதீங்க மலர் நான் அறிவழகன்!’

அவள் கையை அழுத்திப்பிடித்த படியே சொன்னார் அமைச்சர்!

அவள் மேனியெங்கும்,

வியர்வையினால் நனைந்து போயிருந்தது.

இப்போது,

அவளுக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கிக் கொண்டிருந்தது.

மேசைமேல் இருந்த தண்ணீர் போத்தலை எடுத்து,

அவளுக்கு தண்ணீரைப் பருக்கினார் அமைச்சர்.

விழிகள் அகன்ற படியே அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள் மலர்விழி.

அவள் இப்போது இருக்கும் நிலையைப் பார்த்ததும்,

அமைச்சரின் விழிகளில் நீர்த்துளிகள் நீந்தின.

விரைவில்,

இமைகளை மூடிமூடித்திறந்த அமைச்சர்.

கண்ணீர்த்துளிகளை மறைத்துக் கொள்வதற்கு முயற்சி செய்தார்.

“நீங்க பயப்படாம தூங்குங்க மலர்... நான் உங்க பக்கத்திலேயே தான் இருக்கிறேன்!”

அவள் தலையைத் தடவியபடியே உடைந்த குரலில் சொன்னார் அமைச்சர்.

அன்று

சொந்தபந்தங்களை எல்லாம் விட்டுவிட்டு,

தன்னுடன் வந்த மலர்விழி, இன்று படும் வேதனையை அவரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை!

தான் ஏதோ பெரிய பாவம் செய்து விட்டோம் என்று கூட அவருக்கு எண்ணத்தோன்றியது.

இந்தப் பெண் இன்று படும் துன்பங்களுக் கெல்லாம்

தான்தான் பொறுப்புக் கூற வேண்டும் என்ற ஓர் எண்ணம் கூட அவர் அடிமனதில் ஊர்ந்து சென்றது.

மாத்திரை ஒன்றை எடுத்துக் கொண்டு அறைக்குள் வந்த நர்ஸிடமிருந்து,

அந்த மாத்திரையையும் தண்ணீரையும் வாங்கிக் கொண்ட அமைச்சர், மலர்விழியைத் தூக்கி கட்டிலில் அமரவைத்துவிட்டு,

மாத்திரையை அவள் வாயில் போட்டுவிட்டு,

தண்ணீரையும் வாய்க்குள் ஊற்றினார்.

அதே நேரம் மலர்விழியின் விழிகளில் இருந்து கண்ணீர்த்துளிகள் வடிந்தோடியது

“அழாதீங்க மலர்... உங்களுக்கு எதுவுமே நடக்க நான் விடமாட்டேன் என்று சொல்லிய படியே கண்ணீர்துளிகளைத் துடைத்து விட்டார் அமைச்சர்.

பிறகு,

நெற்றியில் மெல்ல முத்தமிட்டார்.

அதே போல்,

பகல் சாப்பாட்டையும் அவளுக்கு ஊட்டி விட்டார் அமைச்சர்.

இறுதியில்,

அவளிடமிருந்து அமைச்சர் விடைபெற்றுச் செல்லும் போது,

அவர் வலதுகையைப் பற்றிக் கொண்டாள் மலர்விழி.

அவள் விழிமுழுதும்,

கண்ணீர்!

“அழாதீங்க மலர்... நாளைக்கும் உங்கள பார்க்க வருவேன். இன்னும் சொன்னா தினமும் பார்க்க வாரதுக்கு முயற்சி செய்றேன்...!”

அதேபோல்,

மலர்விழியைப் பார்க்க அவர் தினமும் வந்து போனார்.

இதனால்,

மலர்விழி விரைவில் குணமடைந்துவிட்டாள்.

ஏற்கனவே அவள் இருந்த வீட்டில் மலர்விழியை குடி வைப்பது அவ்வளவு பாதுகாப்பாக அமையாது என்பதை உணர்ந்து கொண்ட அமைச்சர்,

வேறு ஓர் இடத்தில் அவளை பாதுகாப்பாக வைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதில் ஈடுபட்டார்.

அதற்குக் காரணமும் இருந்தது.

தனது மாமனாரைப் போலவே தனது மனைவியும் மிகவும் மோசமானவள் என்பதும் அமைச்சருக்குத் தெரியும்.

அதேபோல,

இறுதிநேரத்தில்,

மலர்விழியைப் பற்றி அவரது மனைவி சொன்ன வார்த்தைகள்,

அவரது செவிகளில் ரீங்காரமிட்டுக் கொண்டே இருந்தது!

அவள் எப்படியும் சொன்னதை செய்து முடித்து விடுவாள் என்ற சந்தேகமும் அவருக்கு இருந்ததனால் தான்

இந்த ஏற்பாடுகளைச் செய்தார்!

நுவரெலியாவில்,

சங்கர் என்ற ஒரு நண்பர் இருந்தார்.

அமைச்சருக்கு அவர் மிகவும் வேண்டியவர்.

இரண்டு எஸ்ட்டேட்டுகளுக்கு சொந்தக்காரர் அவர்.

அவரும் அவருடைய மனைவியும்,

மூன்று வயது குழந்தையும் அங்கே இருந்தார்கள்.

அந்த இடம் தான் மலர்விழிக்கு பாதுகாப்பாக இருக்கும் என்று அவர் முடிவு செய்தார்.

இந்த முடிவின் படி சங்கருடன் பேசி,

தேர்தல் முடியும்வரையில் மலர்விழியை அங்கே வைப்பதற்கு அனுமதிக்கும் படி கேட்டுக் கொண்டார்.

அவள் அங்கே போகவேண்டிய இறுதிநாள் வந்ததும்,

‘இனி எப்போதுமே நாம் சந்திக்க மாட்டோம் என்பதைப் போல்,

அமைச்சரை அணைத்து

சிறு பிள்ளையைப் போல்,

விக்கி விக்கி அழுதாள்.

“அழாதீங்க மலர்... அவுங்க உங்களய நல்லா பாத்துப் பாங்க... தேர்தல் முடிந்ததும் பார்க்க வருவேன்... அதுக்கப்புறமா உங்களையும் என்னையும் எந்த சக்தியாலும் பிரிக்க முடியாது. அது வரைக்கும் பயப்படாம அங்க போய் இருங்க. வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் நான் உங்களுக்கு போன் பண்ணுறேன்...!”

சொல்லிவிட்டு,

அவள் உச்சந்தலையை மெல்லத்தடவிக் கொடுத்தார்!

இப்போது,

மலர்விழியின் முகத்தைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது!

இவ்வளவு நாளும்,

பௌர்ணமியாக இருந்த முகம்,

இப்போது,

அமாவாசையாக மாறியிருந்தது.

அவளை அழைத்துச் சென்று சங்கரிடம் ஒப்படைக்கும் பொறுப்பை,

தனது அந்தரங்க காரியதரிசியாக

நம்பிக்கைக்குப் பாத்திரமான டிரைவர் பியதாசவிடம் தான் ஒப்படைத்திருந்தார்.

ஆனாலும்,

இனி எப்போதுமே,

தான் அமைச்சரைப் பார்க்கப் போவதில்லை என்ற உண்மை தெரிந்திருந்தால்,

மலர்விழி,

நுவரேலியாவிற்குப் போயே இருக்க மாட்டாள்.

(தொடரும்)

பாதுகாப்பு அமைச்சு

# ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

## விலைமனுக்கோரல்

**ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் கேட்போர் கூடத்தின் கூரை மற்றும் கேட்வோர்க் அமைப்பின் கட்டுமானத்திற்கான விலைமனுக்கோரல்கள்**

**ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்**

**ஒப்பந்த இலக்கம் : KDU/PRO/RP&SERVICE/ 2701/2021**

01. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் சார்பாக திணைக்கள கொள்முதல் குழுவின் தலைவரினால் தகுதியான மனுதாரர்களிடமிருந்து **"ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் கேட்போர் கூடத்தின் கூரை மற்றும் கேட்வோர்க் அமைப்பின் கட்டுமானத்தின்"** வழங்கல்களுக்காக முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோருகின்றது. மனுக்கோரல் செயல்முறை சர்வதேச போட்டி மனுக்கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.

02. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மீளச்செலுத்தப்படாத ரூபா 12,500 கட்டணத்துடன் எழுத்து மூல விண்ணப்பத்தை 09.05.2021 ஆம் திகதி தொடக்கம் 10.06.2021 ஆம் திகதி வரை காரியாலய வேலை நாட்களில் மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரை இயக்குனர் தளாடம், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை, இலங்கையில் கையளிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

03. மனு ஆவணங்களை எவ்வித கட்டணச் செலுத்துகையும் இன்றி 10.05.2021 ஆம் திகதி தொடக்கம் 09.06.2021 ஆம் திகதி வரை காரியாலய வேலை நாட்களில் மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரை பரீட்சித்துக்கொள்ளலாம். (தொலைபேசி : 071-0219449 / 071-0219384, பெக்ஸ் : 011-2632430)

04. பூரணப்படுத்தப்பட்ட மனுக்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் மனுக்களை சேகரிப்பதற்காக இடப்பட்டுள்ள பெட்டியில் மனுக்கோரல் திகதி மற்றும் நேரம் முடிவதற்கு முன் இடவேண்டும் அல்லது குறித்த முகவரிக்கு கிடைக்க பெறுமாறு அனுப்பிவைக்க வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் மனுக்கள் நிராகரிக்கப்படும். மனுக்கோரல் நேரம் முடிவடைந்த உடனேயே மனுக்கள் திறக்கப்படும்.

05. மனுக்கள் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானையில் 10.06.2021 ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு திறக்கப்படும்.

06. ஆர்வமுள்ள மற்றும் தகுதியான மனுதாரர்கள் மேலதிக விபரங்களை இயக்குனர் தளாடம், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி : 011-2632430 / 0710219384, பெக்ஸ் : 011-2632430) மற்றும் www.kdu.ac.lk/ocls/- tender – notices இல் மனுக்கோரலுக்கான அழைப்பு பிரசுரிக்கப்பட்டுள்ளது.)

தலைவர்,
திணைக்கள வழங்கல் குழு,
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
இரத்மலானை.
இலங்கை.

## விலைமனுக்களுக்கான அழைப்பு

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

**சுகாதார அமைச்சு**

| | |
|---|---|
| திகதி | 2021 மே 09ஆம் திகதி |
| செயற்றிட்டத்தின் தலைப்பு மற்றும் கடன் இல. | **Loan 3727 SRI: Health System Enhancement Project** |
| ஒப்பந்த இல. மற்றும் பெறுகையின் தலைப்பு | **HSEP/PMU/PRO/G34/09/2021**<br>**Procurement of Next Generation Sequencing System** |
| விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி | 2021 ஜூன் 7ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னராக |

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்ட கிரயச் செலவிற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) நிதியிடலை பெற்றுள்ளதுடன் இந்த நிதியிடலின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் தகுதியுள்ள வள நாடுகளின் விலைமனுதாரர்களும் இதில் பங்குபற்றலாம்.
2. பின்வரும் பொருட்களின் பெறுகைக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை சுகாதார அமைச்சு (கொள்வனவாளர்) கோருகின்றது. பொருள் வகையின் சுருக்கமான விளக்கமொன்று கீழே வழங்கப்பட்டுள்ளது.

| பொதி இலக்கம் | பொருட்களின் சுருக்கமான விளக்கம் | எண்ணிக்கை |
|---|---|---|
| G 34 | Next Generation Sequencing System and Industrial Training to Technical staff on the use of the Equipment | 1 |

3. சித்திகரமான விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள ஒப்படைத்தல் மற்றும் பூர்த்தி செய்தலின் பிரகாரம் பொருட்களை குறிப்பிட்டுள்ள அமைவிடங்களில் ஒப்படைத்தல் வேண்டும் என்பதுடன் ஒப்பந்தத்தை கையொப்பமிடும் திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் விநியோகம், நிறுவல்கள் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் என்பன பூர்த்தி செய்தல் வேண்டும் என்பதுடன் செயற்படுத்திக் காண்பிப்பதற்கு முன் உபகரணங்களைப் பயன்படுத்துவது தொடர்பான தொழில்நுட்ப ஊழியர்களுக்கான அறிமுகப் பயிற்சியை ஒழுங்கு செய்தல் வேண்டும்.
4. திறந்த போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் (OCB) ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒற்றைக்கட்ட, தனி-உறை விலைமனுக்கோரல் நடைமுறையின் பிரகாரம் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விளக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளிலிருந்தும் விலைமனுதாரர் பங்குபற்றலாம். ஆசிய அபிவிருத்தி வங்கியின் தகுதித்தன்மை ஒழுங்குவிதிகள் மற்றும் நடைமுறைகள் விலைமனுக்கோரல் செயற்பாட்டை தனது ஆதிக்கத்தில் வைத்திருக்கும்.
5. பின்வரும் பிரதான தகைமைகளுடனான தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மாத்திரமே இந்த விலைமனுக்கோரலில் பங்குபற்றலாம் என்பதுடன் தகைமை தகவுத்திறனானது மேலும் முழுமையாக விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டுள்ளது.
   - பிரதான வழங்குநராக கடந்த 7 வருடங்களில் 40 மில்லியன் இலங்கை ரூபா பெறுமதியான ஆகக் குறைந்தது ஒரு மருத்துவ உபகரணங்கள் வழங்கும் ஒப்பந்தத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   - விலைமனு ஆவணத்தின் 6ஆம் பிரிவிலுள்ள (வழங்கல் அட்டவணை) வழங்கல் மற்றும் பூர்த்தியாக்கல் அட்டவணைக்கு ஏற்ப கொள்வனவாளருக்குத் தேவையான பொருட்களின் வகை, அளவு மற்றும் தொகைகளை வழங்க முடியும் என்பதை விலைமனுதாரர் அல்லது உற்பத்தியாளர் நிரூபித்தல் வேண்டும்.
   - ஆகக் குறைந்த சராசரி வருடாந்த புரள்வு – விலைமனுதாரரின் ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிர்மாணப் புரள்வானது நடைபெற்றுக் கொண்டிருக்கும் அல்லது கடந்த 3 வருடங்களில் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தக் கொடுப்பனவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   - முன்னைய நிதியியல் ஆற்றுகை –விலைமனுதாரரின் தற்போதைய நிதி நிலைமையை விபரப்படுத்துவதற்காக கடந்த மூன்று வருடங்களுக்கான (2017/2018, 2018/2019 மற்றும் 2019/2020) கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். குறைந்தபட்சம், கடந்த வருடத்திற்கான விலைமனுதாரரின் நிகர மதிப்பு மொத்த சொத்துக்களுக்கும் மொத்தக் கடன்களுக்கும் இடையிலான வேறுபாடு சாதகமாக இருக்க வேண்டும்.
6. மேலதிக தகவலைப் பெறுவதற்கும் விலைமனுக்கோரல் ஆவணங்களை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் இலவசமாக பரீட்சிப்பதற்கும் விலைமனுதாரர்கள் பின்வரும் வழிகளினூடாக தொடர்பு கொள்ளல் வேண்டும்.

   தலைவர் - செயற்றிட்ட பெறுகைக் குழு,
   சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம்,
   இல. 3 /19, கின்சி வீதி,
   கொழும்பு-08, இலங்கை.
   தொலைபேசி இலக்கம்: **+94 112 697 173**
   தொலைநகல்: **+94 112 697 163**
   மின்னஞ்சல்: **pmu@hsep.lk**
7. விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று 2021 மே 21ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மேலேயுள்ள முகவரியில் தொழில் வழங்குநரினால் நடாத்தப்படும். அனைத்து விலைமனுதாரர்களும் இந்த விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு சமுகமளிக்கும்படி திடமாக அறிவுறுத்தப்படுகின்றனர்.
8. ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்வதற்குத் தகுதியுள்ள விலைமனுதாரர்கள் 2021 ஜூன் 04ஆம் திகதியன்று பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன்னராக பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திய பின்னர், எழுத்து மூலமான கோரிக்கை/ விண்ணப்பமொன்றை மேலேயுள்ள முகவரிக்கு சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டத்திற்கு Procurement of Next Generation Sequencing System (G 34) முறைமை பெறுகைக்கான விலைமனுக்கோரல் ஆவணங்களை வழங்குமாறு விண்ணப்பித்தல் வேண்டும்.

| பெறுகையின் விபரம் | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|
| Next Generation Sequencing System | 17,000.00 இலங்கை ரூபா |

9. பணக்கொடுப்பனவு முறைமையானது வங்கி வரைவு அல்லது ''செயலாளர், சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு க/இ 7040309'' அல்லது ரொக்கப் பணத்தில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் அல்லது இலங்கை வங்கியின் 7040309 என்ற வங்கி கணக்கிலக்கத்திற்கு நேரடியாக வரவு வைத்தல் வேண்டும்.
10. விலைமனுக்கோரல் ஆவணமானது முறையே வெளிநாட்டு ஒப்படைத்தலுக்காக விமான சேவை மூலம் அல்லது தரை மார்க்கமாக அல்லது தூதஞ்சல் மூலமாக உள்ளூர் ஒப்படைத்தலுக்காக 8ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்திற்கு மேலதிக கட்டணமாக 100 அமெரிக்க டாலர்கள் மற்றும் 5000.00 இலங்கை ரூபாவில் செலுத்தலாம். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்பட மாட்டாது.
11. 2021 ஜூன் 7ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னராக மேலேயுள்ள 6ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறான முகவரிக்கு விலைமனுப்பிணையுடன் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுப்பிணையானது வங்கி உத்தரவாதப் பாங்கில் சமர்ப்பிக்கபடுமானால், ''செயற்றிட்ட பணிப்பாளர் - சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம்'' என்ற பெயரில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து விலைமனுக்கோரல் படிவங்களின் 4ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள உருமாதிரியை பாவித்து வழங்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
12. விலைமனுக்கள் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணையானது விலைமனுக்கள் திறக்கப்படும் திகதியிலிருந்து 118 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
13. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிந்தவுடன் உடனடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
14. விலைமனுக்களின் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பாக விலைமனுதாரர்களுக்கேற்படும் எந்தவொரு கிரயச் செலவு அல்லது செலவினங்களுக்கும் சுகாதார அமைச்சின் சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டமானது பொறுப்பேற்க மாட்டாது.

**தலைவர், செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம்,**
**இல. 3/19, கின்சி வீதி,**
**கொழும்பு-08, இலங்கை.**
**தொலைபேசி இலக்கம்:** +94 112 697 173 **தொலைநகல்: +94 112 697 163 மின்னஞ்சல்:** pmu@ hsep.lk

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**வர்த்தகரீதியிலான வெடிமருந்துகள் சுடுகலன்கள் மற்றும் தோட்டாக்கள் பெறுகை அலகிற்கு வர்த்தகரீதியிலான வெடிமருந்துகளின் பெறுகை**

**(CEFAP UNIT)**

**வெலிசர, இறாகம**

1. வர்த்தகரீதியிலான வெடிமருந்துகள் சுடுகலன்கள் மற்றும் தோட்டாக்கள் பெறுகை அலகிற்கு கீழே குறிப்பிட்டுள்ள ஒப்பந்த இலக்கத்தின் பெறுகைக்காக விலைமனுக்கோரல் ஆவணத்தின் III ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள தகைமைகளுக்கு அமைந்தொழுகும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

   Contract No.: CEFAP/PRT/08/2021 – Electric Detonator (9 Mtr) 500,000 Nos.
2. விலைமனுக்கோரல் சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஆர்வமுள்ள உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வழங்குநர்கள் மேலதிக தகவலை இறாகம, வெலிசர, வர்த்தகரீதியிலான வெடிமருந்துகள் சுடுகலன்கள் மற்றும் தோட்டாக்கள் பெறுகை அலகின் பெறுகை அலுவலரிடமிருந்து (தொலைபேசி: 011-2958227) அல்லது வர்த்தகரீதியிலான வெடிமருந்துகள் சுடுகலன்கள் மற்றும் தோட்டாக்கள் பெறுகை அலகின் பணிப்பாளரிடமிருந்து (தொலைபேசி: 011 2955514) பெற்றுக் கொள்ளலாம்.
4. 2021 மே 10 ஆம் திகதியிலிருந்து 2021 ஜூன் 28 ஆம் திகதி வரையும் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 4,500 ரூபாவை செலுத்திய பின்னர், வர்த்தகரீதியிலான வெடிமருந்துகள் சுடுகலன்கள் மற்றும் தோட்டாக்கள் பெறுகை அலகின் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.
5. அனைத்து விலைமனுக்களும் அவற்றை திறக்கும் திகதியிலிருந்து 150 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் நிபந்தனையற்ற விலைமனுபிணையமொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். உரித்தான விலைமனுப் பிணையமானது விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 180 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும்.
6. கொள்வனவிற்கான கட்டளை வழங்கப்பட்ட பின்னர், வரிகள் நீங்கலாக விலைமனுப் பெறுமதியின் 10% இற்கான நிபந்தனையற்ற செயற்பாட்டு பிணையமொன்றை விலைமனுதாரர் வழங்கல் வேண்டும்.
7. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2021 ஜூன் 22 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் கேள்விச் சபைத் தலைவர், இலங்கை கடற்படை தலைமையகம், பிளாக்ஸ்டாவ் தெரு (Flagstaff Street), கொழும்பு-01 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது கடற்படைத் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாமென்பதுடன் விலைமனுக்கள் மூடிய பின்னர் உடனடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர் முன்னிலையில் திறக்கப்படும்.
8. இந்த பெறுகை தொடர்பான மேலதிக விபரங்கள் **www.navy.lk** என்ற இலங்கை கடற்படை இணையதளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

**பணிப்பாளர்,**
**வர்த்தகரீதியிலான வெடிமருந்துகள் சுடுகலன்கள்**
**மற்றும் தோட்டாக்கள் பெறுகை அலகு,**
**அரசாங்க வெடிமருந்துகள் களஞ்சியசாலை,**
**வெலிசர, இறாகம.**

**சுகாதார அமைச்சு**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

தேசிய பாலியல் நோய்/எயிட்ஸ் தடுப்பு வேலைத் திட்டம் (GFATM)

## மருத்துவ ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகை

ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகைக்காக தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை GFATM இன் கீழ் தேசிய பாலியல் நோய்/ எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டத்தின் சார்பாக பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது பெற்றுக் கொள்வார்

| LOT | விபரம் | எண்ணிக்கை | மனுப் பிணை (LRK) | விலைமனு செல்லுபடியாகும் காலம் நாட்களில |
|---|---|---|---|---|
| LOT-01 | Water Bath | 9 | 13,500.00 | விலைமனு மூடப்படும் நாளில் இருந்து 90 நாட்கள் |
| LOT-02 | VDRL Shaker | 7 | 2,100.00 | |
| LOT-03 | Centrifuge | 3 | 7,500.00 | |
| LOT-04 | Electronic Balance | 10 | 10,000.00 | |
| LOT-05 | Multichannel Pipette 20-300 micro liter | 5 | 1,000.00 | |
| LOT-06 | Light Microscope | 9 | 22,500.00 | |
| LOT-07 | Dark Ground Microscope | 4 | 40,000.00 | |
| LOT-08 | Florescent Microscope | 1 | 30,000.00 | |
| LOT-09 | Incubator | 10 | 45,000.00 | |
| LOT-10 | -70c Freezer | 1 | 20,000.00 | |
| LOT-11 | Autoclave | 8 | 32,000.00 | |
| LOT-12 | Hot Air Oven | 11 | 16,500.00 | |
| LOT-13 | Refrigerator | 1 | 2,000.00 | |
| LOT-14 | Thermo Sensors | 30 | 1,200.00 | |
| LOt-15 | Culture Media Preparation Machine | 1 | 10,000.00 | |

1. விலைமனுக்கள் தேசிய போட்டி கேள்வி (NCB) இன் கீழ் நடத்தப்படும்.
2. எல்லா தொகுதிகளுக்கும் மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 2000/- செலுத்துவதன் பேரில் மற்றும் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு ஓர் எழுத்து மூல வேண்டுதலைச் சமர்ப்பிப்பதன் பேரில் மே 10ம் திகதி முதல் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரு தினங்களும் அடங்கலாக பொது விடுமுறைகள் தவிர்ந்த கொழும்பு -10, டி சேரம் பிளேஸ், இல. 29, சுகாதார அமைச்சு, தேசிய பாலியல் நோய்/ எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டத்திலிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
3. எல்லா விலைமனுக்களும் மூலப்பிரதியுடன் ஒரு பிரதியை சரியாகப் பூர்த்தி செய்து வெற்று கடித உறையில் இட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது 2021 மே 31ம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனு மூடப்படும் நேரம் அல்லது அதற்கு முன் கொழும்பு -10, டி சேரம் பிளேஸ், இல. 29, தேசிய பாலியல் நோய்/எயிட்ஸ் தடுப்பு வேலைத் திட்டம் நிர்வாக அதிகாரியின் (A/O) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்பிலிடல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "NSACP/GFATM/FR/2021/0008" என்று குறிப்பிடல் வேண்டும்.
4. கொழும்பு -10 ஸ்ரீ சங்கராஜ மாவத்த, இல. 26, மெடி ஹவுஸ் கட்டிடம், 7ஆம் மாடி, சுகாதார அமைச்சு GFATM-NSACP பெறுகை அலுவலரிடமிருந்து ஆர்வமுள்ள தகைமையான விலைமனுதாரர்களுக்கு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அலுவலக நேரங்களில் விலைமனு ஆவணங்களைப் பரிசீலிக்கலாம்.
5. விலைமனு திறக்கப்படும் வேளையில் கலந்து கொள்வதற்கு தேர்ந்தெடுக்கப்படும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்டவுடன் பகிரங்கமாகத் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**தேசிய பாலியல் நோய்/எயிட்ஸ் தடுப்பு வேலைத் திட்டம்,**
**தேசிய பாலியல் நோய்/எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டம்,**
**இல. 29, டி சேரம் பிளேஸ், கொழும்பு -10.**
**தொலைபேசி: 077-4540990/011-2667163**

நோன்பு பெருநாள் சிறப்பு சிறுகதை

# பெறுங்கை.... வெறுங்கை... தருங்கை... பெருங்கை...

ஆறில்லா ஊருக்கு அழகு பாழ். ஆனால்... அதனால்தான் இந்த ஊரின் அழகு பாழ்.

நாமல் உயன. மாஜி வயல். தற்போது சிற்றூர்.

நூற்றுஐம்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள், புறாக் கூடுகள் மாதிரி சின்னச் சின்னப் பலகை வீடுகள். கூடுதலானோர் கூலித்தொழில் செய்பவர்கள்.

பேலியகொட மீன் சந்தையைத் தாண்டித் தொடரும் கட்டுநாயக்க விமான நிலைய அதிவேக நெடுஞ்சாலையை அண்மித்த பகுதி. பாலத்தின் கீழ் ஓடிக்கொண்டிருக்கிறது களனி ஆறு. வருஷா வருஷம் தொடர்மழை வெள்ளத்தில் ஸ்ரீ சித்தார்த்த ம.வி.யில் இரண்டு வாரங்கள் தஞ்சமடைவார்கள்.

'இந்தக் காணி விற்பனைக்குண்டு' என்ற அறிவித்தல் பலகை சாய்ந்து கிடக்கும் சற்றே புல் படர்ந்த சேற்று நிலம்தான் சிறுவர்களின் விளையாட்டு மைதானம்.

ஆற்றங்கரையோரம் பெயர் தெரியாத பெரிய மரம் ஒன்று அதன் வேரில் அமர்ந்திருந்தார், புலவர் வெறுங்கையோன்.

அகங்காரம், சுயவிருப்பம்... அற்றவர்கள் சித்தர்கள்... சருகுகளுக்கு அவர்களை ஒப்பிடலாம். பலத்த காற்றினால் சருகுகள் குப்பை மேட்டுக்கும் சில வேளைகளில் சுத்தமான இடங்களுக்கும் அடித்துச் செல்லப்படுகின்றன. சித்தர்களின் வாழ்வும் இப்படித்தான்.

புலவர் வெறுங்கையோனும் சித்தர் மாதிரித்தான்... வழிப்போக்கனாய்த் திரிவார். பூமிக்கே பாரமானவர் போன்றே தெரிவார்.

'அழாதே சிரி! எல்லாமே விதி!' என்பார், இந்தக் கலாபூஷண வயதுக்காரர். மாலை நேரங்களில் சிறுவர்களுக்குக் கதைகள் கூறி மகிழ்விப்பார். பலருக்கு விதி விளங்கு.

இவருக்கு அது விதிவிலக்கு.

ஈற்றில் எது நிகழும்? நீங்கா தெது திகழும்?

காற்றில் அடைபட்ட கட்டைக்கு?

சில புகழும்... தாளாத் துயர்ப் பொழுதும் நாற்றப் புழுக்கூட்டுக் கென்ன புகழ்?... என்று,

வெண்பாவில் வேதாந்தம் பேசுவார்.

வாய் சிவக்க வெற்றிலை போட்டு வலம்வரும் இந்தத் தமிழ்ப் பித்தர் – சித்தர், நையாண்டிச் சிறார்கள் 'புலத்மாமே'

இளங் கை எப்போதும் இரத்தத்தில் கிடந்தால்...

இலங்கை எப்போது வெள்ளையாகும்...?

என்ற கவலைதான் அவருக்கு!

நான், நீயாய் நாமானால் பாழாவோம். நாமாவோம்; ஆளாவோம் என்று ஒற்றுமையை வலியுறுத்துவார்.

வாசிக்காத சமூகம்; நன்கு வசிக்காத சமூகம் என்பார். சிறுவர்கள் அறநெறியில் வாழ்வதற்குத் தூண்டுவார். பத்தில் ஒன்று தேறும் என்ற நம்பிக்கை.

நேர்மைதான் ஜெயிக்கும் என்பார்.

ஆஷிக், அஜீத், தருஸ, அஸீஸ், பிரவின், கவிஷ்கர், சந்தோஷ், ரோய், லக்ஷ் அன், ரிஸ்கான் என்று சிறுவர்கள் எல்லோரும் புலவரின் சிஷ்யர்களாயினர்.

சில 'அக்கினிக் குஞ்சு' களை இனங்கண்ட சந்தோஷம் அவருக்கு.

நாமல் உயனவில் கடைசியாக... சேற்று நீர் தேங்கிக் கிடக்கும் சகதி நிலத்தில் பெரிய கம்புகளால் மேடையமைக்கப்பட்டு அதன் மேல் பரண் போன்ற சிறு கூடு, இதுதான் மீன்விற்கிற காசிம் காக்காவின் வீடு, இதை யாராவது கட்டிக் கொடுத்தாலே போதும்...சொர்க்கம் போக வாய்ப்புக் கிடைக்கும்.

காசிம் காக்காக விபத்தாகி... வபாத்தாகி நான்கு வருடங்களாகின்றன. ஆஷிக், ரஸ்னா, மன்சூர், என்று மூன்று பிள்ளைகள் அவருக்கு. அவருடைய மரணத்திற்குப் பிறகு... அவருடைய மனைவி மர்ழியா... விற்கிறாள், விறகு.

வாழ்க்கைக் குருவிக்கு உழைப்புத்தானே சிறகு.

பாவம் மர்ழியா, கொரோனா என்று கொண்டு போனார்கள். அவள் தலைநோன்பிலிருந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றாள். இல்லாத ஏழைக்குத்தான் இழப்புகள் அதிகமாச்சு.

தராவீஹ் தொழுகைக்கும் போக முடியாத நாட்டின் சமகாலச் சூழ்நிலையில் இந்த வருஷத்து ரமழான் மாதத்தின் பர்ளான நோன்பை ஆர்வமாக நோற்றாலும் என்ன யாருக்கும் மனது ஒரு நிலையிலில்லை.

'அதுவும் நல்லதுதான்'

மறுநாள்

புலவர் வெறுங்கையோனிடம் வந்தான் ஆஷிக்.

நீண்ட நேரமாக யோசித்தார், புலவர்.

'மாணிக்கத்தைத் தேடிப்போய் இத அவருக்கிட்ட ஒப்படைப் பம்...'

அதற்கடுத்த நாள். சனிக்கிழமை.

சிலாபம் நோக்கிப் புறப்பட்டான் ஆஷிக், வெறுங்கையோனோடு.

வெறுங்கையோடு அல்ல; மாணிக்கத்தின் பணத்தோடு.

'ஆஷி, அம்மாக் கெப்படியிருப்ப?' கேட்டார், புலவர்.

'இன்னம் ஒம்பது நாளாவுமாம்...' சோகமாய்ச் சொன்னான்.

'அம்மாவ அன்பாப் பாத்துக்க அத மட்டுங் கண்டுபுடின்னாரு... பிறகென்ன...நீயும் கவிஞன் தான்னாரு..'

'நல்ல அப்பா'... என்றான் ஆஷிக்.

இருவரும் சிலாபத்தில் வந்திறங்கினார்கள்.

'இங்க எனக்குத் தெரிஞ்சவங்க இருக்கிறாங்க. அஷ்ரஃப் கான் சேர், சாதிகுல் அமீன் சேர்... ரொம்ப நல்லவங்க' என்றார், வெறுங்கையோன்.

'நீங்கதான் முழு சிலோனையும் சுத்தி வர்றவராச்சே...' என்றான், ஆஷிக்

'ஆஷி... வா டீ குடிச்சிட்டு நடப்பம்...'

'நீங்க குடிங்கய்யா... நான் நோம்பு'

குடுப்பம்னு அதயும் குறிச்சி வைச்சிருந்தன் காசோட... அந்த என்வலப்புத்தான் இது... வத்தளையில இருக்கிற மச்சானோட... எல்லா இடமும் தேடினன்..என் வலப் கெடய்க்கல... தம் பிக்கிட்டக் கெடய்ச்சி ருச்சி...'

'நீங்க இங்க...?' புலவர் கேட்டார்.

'பொஸ்ட பெக்டரீல ட்றைவராயிருக்கன்...' என்ற மாணிக்கம்,

விழி நீர் துடைத்துச் சொன்னான்.

'இவரு தங்கமான மனுஷன்...' என்று முதலாளியைக் காட்டினான்.

ஒரு மாணிக்கத்திற்குத்தான் ஒரு தங்கத்தைத் தெரியும்.



பெருநாள் என்ன கதியோ...? இதுவும் கடந்து போகும். நம்புவோம்.

நம்பிக்கைதான் வாழ்க்கை..

இப்படி, ஒன்றன் பின் ஒன்றாக ஒவ்வொன்றையும் யோசித்தபடி இஷாத் தொழுகையை முடித்து விட்டு, நடந்து வந்து கொண்டிருந்தான், காசிம் காக்காவின் மூத்தமகன், ஆஷிக். அடுத்த காலடியில் தட்டுப்பட்ட மஞ்சள் நிற சின்ன என்வலப்பைக் குனிந்து எடுத்தான்.

பிரித்துப் பார்த்தான்.

இரண்டு ஐயாயிரம் ரூபாய்த் தாள்கள்!

ஒரு காகிதத் துண்டும் உள்ளே இருந்தது.

அதில் மாணிக்கம் என்பவருடைய வீட்டு விலாசம் எழுதப் பட்டிருந்தது. சிலாபத்தைச் சேர்ந்தவர்.

'அடுத்தவர் சொத்துக்கு ஆசைப்படக் கூடாது'.

புலவர் வெறுங்கையோன் ஐயா சொன்னது ஞாபகம் வந்தது. வீட்டுக்கு வந்தான்.

கண்டெடுத்து வந்த காசு என்வலப்பைத் தங்கச்சி ரஸ்னாவிடம் காட்டினான், ஆஷிக்.

'வாணாம் நானா... ஊராவூட்டுக் காசி நமக்கு வாணாம்...

குடுத்திருங்க...' என்றாள், ரஸ்னா.

உம்மாவின் அதே குணம்!

'யார்ட பணம்?'

'அந்தத் துண்டில மாணிக்கம்னு இருக்கு...அவர்டயாத்தானிருக்கும்'

'தேடிப் போய்க் குடுங்க நானா'

'புலவர் ஐயாக்கிட்ட ஐடியாக் கேட்பம்...'

ணும்... சோகமாயிடும்' என்றார்.

'தாயப்பத்திக் கவித சொல்லுங்களே...' கேட்டான், ஆஷிக்.

'சொந்தம் பலநூறு சேர்ந்தாலும் தாயைப்போல்

வந்துவாய்க் காது வரம்' என்று புதுக்குறள் சொன்னார்.

அவர்கள் பயணித்துக் கொண்டிருந்த சிலாப பஸ் இப்போது

ஜா எல யைத் தாண்டிக் கொண்டிருந்தது.

'ஐயா, நீங்க எப்புடிக் கவித எழுதத் தொடங்கினீங்க...?'

'ஒருத்தரப் பத்தித் தெரிஞ்சுக்கணும்னா அவரோட ஒரு ராவு தங்கணுமாம்.... இல்லாட்டி... அவரோட நீண்ட பயணம் போவணுமாம்... சிலாபம் கிட்டத்தான். சரி சொல்றன் கேளு' என்று சொல்லத் தொடங்கினார், புலவர் வெறுங்கையோன்;

'என்னக் கவிஞனாக்கினதே எங்கே அப்பாதான். அவரு கண்ணதாசன்ட தத்துவப் பாட்டு ரசிகன். அந்தப் பாட்டெல்லாம் எழுதியெடுக்கச் சொல்லுவாறு. நானும் எழுதி எடுப்பேன். வரிவரியா விளக்கம் சொல்லுவாறு.. இப்படி ஒனக்கும் எழுத முடியும்னாரு... கவிதப் புத்தகங்கள் வாங்கித் தந்தாரு... பாரதியார்ட குயில்பாட்டப் பாடமாக்கச் சொன்னாரு...

மாங்கனி கண்ணதாசன், யூசுப் சுலைஹா –சாரண பாஸ்கரன், பாண்டியன் பரிசு பாரதி தாசன்... இதையெல்லாம் சத்தமாப் படிக்கச் சொன்னாரு... எல்லாங் கவித இல்ல... எல்லாருங் கவிஞரில்ல... கவிநயம்னு ஒண்ணு இருக்கு...

டீ குடித்து விட்டு, வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கினர்.

'இந்த எவனியூவான்னு பாருங்க ஐயா' ஆணி கழன்று மேலிருந்து கீழாகத் தொங்கிக் கொண்டிருந்த தெருப்பலகையைக் காட்டினான்.

'இது இல்ல ஆஷி... இன்னும் உள்ள போகணும் போல...'

தெருப் பெயர்கள் வாசித்துத் தொடர்ந்தார்கள்.

அரை மணி நேர அலைச்சலுக்குப் பிறகு... சரியான விலாசத்தைக் கண்டு பிடித்து விட்டார்கள்.

அது சிங்களவர் ஒருவருடைய பெரிய பங்களா.

ஆளுயர வெள்ளை மதிலோரமே நாலைந்து கார்கள் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தன.

பூட்டியிருந்த 'கேற்' –'மைக்' மீண்டும் கேட்டது: 'கவ்த?' வெறுங்கையோன் விபரம் சொன்னார்.

தானாகத் திறந்து கொண்டது கதவு. கதவா அது' ஹும்...

நாமல் உயனவில் நான்குவீடு கட்டலாம்.

கொச்சைத் தமிழில் அன்பாக அழைத்தார் முதலாளி; 'உள்ள வாங்கே'...

முதலில், தண்ணீரும், பழங்களும், குளிர்பானமும் பரிமாறினார்.

இப்போது – அவர் கூப்பிட்டதும் அவசர அவசரமாக ஓடிவந்தான் மாணிக்கம்.

'மெயாத்தமாய்' கிவ்வினார்.

'வத்தளையில ஒரு ஐயா இருக்கார். அவருக்கு ஒவ்வொரு மாசமும் 'பொஸ்' பத்தாயிரம் குடுப்பாரு... அன்னிக்கு என்ட அத்தைட மகனுக்கு என்ட விலாசத்தையும்

இவர்களது உரையாடல் முடிந்ததும், முதலாளி பேச ஆரம்பித்தார்.

'மம ஜினதாஸ' என்று சிங்களத்தில் தொடங்கியவர்... தமிழில் தொடர்ந்தார்; நான் பொரின்ல ஜப்பான்ல வேலை செஞ்ச நேரம். லங்கா வட்ட... வந்த... இரிக்கிற நேரங்தான்...

கொச்சிக்கடே பாலம லங்க... எக்ஸிடண்ட் உனா... அப்பதாங்... பழங் விக்கிற மோகன் மல்லித் தமாய்... எனய...ஹொஸ்லிடல் சேர்த்தது... என்னோட மூணு நா... ஹொஸ்பிடல் நிண்டது... ஹரீம... ஹொந்தாய்...அவனு... இப்ப கஷ்டத்துல... தெங்... அவுறுது விஸ் ஸக்கட்ட வெடி... நான்... எக்ஸிடண்ட்...ஆவினது...'

நாடென்ன மொழியென்ன உள்ளங்கள் உறவாட...?

ஏடென்ன எழுத்தென்ன எண்ணங்கள் பரிமாற? என்று

புலவரின் உதடுகள் மௌனமாய் உச்சரித்தது.

அன்று முதலாளி போட்ட விருந்தில் ஆச்சரியப்பட்டுப்போனார் புலவர் வெறுங்கை யோன். இறுதியாக முதலாளி ' தம்பி நீ நல்லா வருவே! ' என்று கூறி செக் புக்கில் அவர்களுக்குத் தெரியாமல் எழுதிக் கையெழுத்திட்டு தபாலுறையில் வைத்து ஆஷிக்கின் கையில் திணித்தார். அவர்களை வத்தளைக்கு தனது காரில் அனுப்பி வைத்தார்.

பொய். செத்துவிடும். அழியாதது மெய் அதனால்தான் 'மெய்' என்று உடம்புக்குப் பெயர் வந்தது.

மெய்யாக வாழ்வோர்தம் மெய் அழிந்தாலும் – அவர்கள் மெய்யாக வாழ்ந்தவர்கள் அதனால்... காலத்தால் அழியாத காவியமாணவர்கள் அவர்கள்.

அப்படியானவர்களும் இல்லை என்றால், மழையே பெய்யாது கொடுப்பவர்கள் கூடக் கூடக் கொரோனா குறையும்... குறையும், பொய்யும், களவும் கூடக் கூடத்தான் குறையாமல் இன்றும் கூடிக் கொண்டே போகிறது கொரோனா... இப்படியெல்லாம் 'ஏதேதோ' தனக்குள்ளே... சிந்தித்துக் கொண்டே வந்தார் வெறுங்கையோன். காரில்... முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த ஆஷிக்... அந்தச் 'செக்' கில் ஜினதாஸ முதலாளி எவ்வளவு எழுதியிருப்பார் என்ற கற்பனையில் மிதந்து கொண்டிருந்தான்.

'நேர்மைதான் ஜெயிக்கும்' என்று புலவர் ஐயா சொல்வது எவ்வளவு பெரிய உண்மை.

என்வலப்பை வீட்டுக்குப் போய்த்தான் திறந்து பார்க்கணும்...

என்று ஜினதாஸ முதலாளி... மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டற்கிணங்க... வந்தளைக்கு வந்து சேரும்வரை ஆஷிக், அந்த என்வலப்பைத் திறக்கவேயில்லை.

ஆனாலும்... அவனது உள்மனசு... பரபரத்தது.

'மாணிக்கமண்ணே...' செக்'ல சாதாரணமா எவ்வளோ இருக்கும்...?'

'பொஸ்ஸுக்குப் பெரிய மனசு... நிறையத்தான் குடுப்பாரு'..

கை என்வலப்பை உடனே பிரிக்கத் துடித்தது.

வத்தளையில் கார் வந்து நின்றது.

'ஐயா நீங்களே பிரிங்க...' என்று புலவரிடம் என்வலப்பைக் கொடுத்தான், ஆஷிக்.

பிரித்தார்!

'ஆஷி... ஒரு லட்சம்!'

'நான் சொன்னன்...' என்றான் மாணிக்கம்.

ஆஷிக்... மயக்கம் போட்டு விழாத குறை.

வெறுங்கையோன் சொன்னார்; 'நேர்மைதான் ஜெயிக்கும்..!...

'உம்மாவுக்கு...செலவழிக்கலாம்... பெருநாளைக்கு உடுப்பு

வாங்கலாம்... எல்லாத்துக்கும் உதவியாயிட்டுது...'அழுகையை அவனால் நிறுத்த முடியாமல் போயிற்று.

'ஜினதாஸ முதலாளி நல்லா இருக்கணும்...'

வினாடிக்கு வினாடி பிரார்த்தித்தான்.

'அவன் கொடுக்க நினைத்ததை யாராலும் தடுக்க முடியாது. அவன் தடுத்ததை யாராலும் கொடுக்க முடியாது' என்றார்.

வெறுங்கையோன்.

'ஆஷி... நீ முஸ்லிம். இந்த நோன்பு நேரம்... நீ செய்த நன்மை. உனக்குப் பெரிய நன்மையைத் தந்திருக்கு. ஒரு தமிழ்ச் சகோதரனைப் போய்ச் சேர வேண்டிய பணத்தைக் கொண்டு போய்க் கொடுத்தாய். அதற்குக் கூலியாக... ஒரு சிங்களச் சகோதரன் மூலம்... இறைவன் எவ்வளவு இரக்கம் காட்டியிருக்கின்றான்... பார்த்தாயா?' என்றார், புலவர் வெறுங்கையோன். 'கொடுத்து மகிழ்' என்று நீங்க சொல்றது...பெரிய விஷயம் ஐயா...' சிரித்தார். 'வெறுங்கை பெறுங்கை தருங்கை பெருங்கை" என்றார்.

ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து... ஒழுக்கமாக வாழ்ந்து... செல்வச் செழிப்புடன் ஒருவன் படிப்படியாக முன்னேறி வருகிற போது, வறுமையை ஒழிக்க வேண்டும் என்ற வைராக்கியம் பிறக்கிறது.


குடிசையில் வாடிய பேரர்கள் தான். ஒரு காலத்தில் பெரும் குபேரர்களாகின்றனர்.

மீன் விற்ற காசிம் காக்காவின் மகன் ஆஷிக் விண்மீன் சிரிக்கும் ஆகாயத்தில் விமானத்தில் பறக்கும் காலம் வெகு தூரத்திலில்லை...

புலவர் வெறுங்கையோன் போன்றவர்களால் ஊருக்கொரு...தலைவர்களை உருவாக்க முடியும்.

கிண்ணியா
அமீர் அலி ...

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல :43



திரு/திருமதி/செல்வி ...............................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ...............................................

...............................................

...............................................

...................... திகதி ...................... கையொப்பம்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :43

### கேள்விகள்

இடமிருந்து வலம்

1. பொறுப்பாளி.
5. பெண்.
7. ஆய்வுக்கு ஆதாரமாகத் திரட்டப்படும் தகவல்கள்.
8. காயத்திற்கு பயன்படுத்தப்படும் பசை மருந்து. (குழம்பியுள்ளது)
10. தமிழக சட்டசபை தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த நடிகை குழம்பிவிட்டார்.
12. இதுவும் ஒரு உணவுப் பொருள். (திரும்பியுள்ளது)
14. விரோத நிலை.
17. முற்காலப் பெண்கள் காலில் இதை அணிந்தார்கள்.
20. வனராஜா குழம்பிவிட்டார்.
22. கடைசி.
23. அடித்து ஒலி எழுப்பும் கருவி.
25. சுவடிக்கட்டு. (திரும்பியுள்ளது)
26. மைதானம். (குழம்பியுள்ளது)

மேலிருந்து கீழ்

1. துணி வகைகள்.
2. ஏழு நாட்கள் கொண்ட காலப்பகுதி.
3. உண்மை நிலைக்கு மாறானது. (குழம்பியுள்ளது)
4. முனிவர்.
6. தேங்காய் மட்டையிலிருந்து பெறப்படும் நார்.
9. ஓர் உறுப்பு.
11. சிறு தொல்லைக்குள்ளாக்கும் விளையாட்டுத்தனம். (குழம்பியுள்ளது)
13. நீர்நிலைகளின் அருகே காணப்படுவது.
14. பகிர்வு.
15. தலைமுடி. (தலைகீழ்)
16. பணி. (குழம்பியுள்ளது)
18. வீடு. (குழம்பியுள்ளது)
19. மர்மம்.
21. அரண்மனை போன்ற பெரும் கட்டடங்களின் மேற்தளம். (குழம்பியுள்ளது)
24. மன்மதனின் மனைவி.

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 42

### விடைகள்

**இடமிருந்து வலம்**

1. வெற்றி 4. கள் 5. குங்குமம் 7. கைது 9. பல 10. பண் 12. கும்மாளம் 14. சல்லி 16. பிரமுகர் 19. திருப்தி 21. தேள் 22. குதிரை 23. நோவு

**மேலிருந்து கீழ்**

1. வெக்கை 2. குறி 3. நகுலம் 4. கம்பம் 6. பங்கு 8. துயில் 11. மாண்பு 13. கள்ளம் 14. சமாதி 15. திப்பிலி 17. முதிரை 18. தேர்வு 20. குரு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 41

### பரிசுபெறுவோர்

முதலாம் பரிசு
**மல்லிகாதேவி பத்மநாதன்,**
டெமேரியா குறுப்,
முதலாம் பிரிவு,
பசறை.

இரண்டாம் பரிசு
**என். ஆதித்தன்,**
உடையார் வீதி,
மந்துவில் கிழக்கு,
கொடிகாமம்.

மூன்றாம் பரிசு
**எஸ். தவநாயகி,**
24/41, செல்வநாயகம் வீதி,
முதலாம் குறுக்குத்தெரு,
மட்டக்களப்பு.

### பாராட்டு பெறுவோர்

**1. வினோ மதிவதவி,**
இல. 54,ஏ,
அத்தனகொல்ல வீதி,
லுனுகலை.

**2. பர்கத் அஜ்வாத்,**
467/8, கலுகமுவ,
கெலிஓயா.

**3. எம்.இஸட்.எப். ஸப்பியா,**
61/1, தக்கியா வீதி,
தலபிட்டிய, காலி.

**4. கனகசபை நாகேந்திரன்,**
11/3/1, நெல்சன் பிளேஸ்,
வெள்ளவத்தை,
கொழும்பு 06.
மாவனல்லை.

**5. எம்.என். பாத்திமா ஹயா,**
337, மங்கெதர,
துல்ஹிரிய.

**6. T. நாகையா,**
200, பாடசாலை வீதி,
சேனைக்குடியிருப்பு 01,
கல்முனை.




# யாவரும் கேளீர்

பல்சுவை இலக்கியத் திரட்டு 40

தமிழறிஞர், டாக்டர் தி.ஞானசேகரன்

('யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது கணியன் பூங்குன்றனது வரிகள். இதில் கேளிர் என்பது உறவினர் எனப் பொருள்படும். இந்த உறவினருக்கு நான் தரும் பத்தி யாவரும் கேளீர்)


## ஈழத்து உருவகக் கதையின் பிதாமகர் சு.வே.



ஈழத்து உருவகக் கதையின் பிதாமகர் எனப் புகழ்பெற்ற சு. வேலுப்பிள்ளையின் ஜனனதினம் மே மாதம் 24ஆம் திகதியாகும். அவரை நினைவு கூருவதாக இப்பத்தி அமைகிறது.

யாழ்ப்பாணம் நாவற்குழியைச் சேர்ந்த சுப்பிரமணியம் தையல்நாயகி தம்பதிக்கு 24.05.1921இல் மகனாகப் பிறந்த சு.வேலுப்பிள்ளை ஒரு பயிற்றப்பட்ட தமிழாசிரியர். ஒரு தமிழ்ப் பண்டிதர். திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சிபெற்ற பின்னணி இவரைப் புத்திலக்கியப் படைப்பாளியாக உருவாக்கியது எனலாம். 1946முதல் 1981வரை ஆசிரியப் பணிபுரிந்த சு.வே., ஹற்றன், டிக்கோயா, சுன்னாகம், மானிப்பாய் ஆகிய இடங்களில் பணிபுரிந்து, தான் பெற்ற அனுபவங்களையே கருப்பொருள்களாகக் கொண்டு படைப்புகளை ஆக்கித் தந்துள்ளார்.

சு.வே. ஈழகேசரி இலக்கியப் பண்ணையில் முகிழ்ந்தவர். அவரது முதற் சிறுகதை 'கிடைக்காத பலன்' 1943இல் ஈழகேசரியில் வெளியானது. அவர் 11 சிறுகதைகளை ஈழகேசரியில் எழுதியுள்ளார். சு.வே.யின் சிறுகதைகள் 'மண்வாசனை' 'பாற்காவடி' ஆகிய மகுடங்களில் தொகுதிகளாக வெளிவந்துள்ளன.



சு.வே., சிறுகதை, உருவகக்கதை, கட்டுரை, நாடகம் ஆகிய இலக்கியத்துறைகளில் தடம் பதித்தவர். ஈழத்து உருவகக் கதைத் துறையின் பிதாமகர் இவரே. சு.வே.யின் உருவகக் கதைகள் ஈழகேசரி, மறுமலர்ச்சி, கலைச்செல்வி ஆகிய இதழ்களில் வெளிவந்துள்ளன. இவரது தேர்ந்தெடுக்கப்பட்ட உருவகக் கதைகள் தொகுப்பாக மணற்கோயில் என்ற மகுடத்தில் மித்ர வெளியீடாக 1999இல் வெளிவந்தது.

1965இல் இலங்கைக் கலைக்கழகம் நடத்திய நாடகப் போட்டியில் இவரது 'வஞ்சி' என்ற ஓரங்கநாடகம் முதற்பரிசு பெற்றது. அடுத்த ஆண்டில் 'எழிலரசி' என்று முழுநீள நாடகம் முதற்பரிசு பெற்றது. 1960இல் இலங்கை வானொலி நாடகப் போட்டியில் இவரின் 'மண்வாசனை' முதற்பரிசு பெற்றது. 1968இல் 'ஒருமை நெறித்தெய்வம்' என்ற நாடகம் பரிசு பெற்றது.

சு.வே. பல வானொலித் தொடர் நாடகங்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய, ஏட்டிலிருந்து (1964)16 வாரங்கள், கிராமராஜ்யம் (1964) 32 வாரங்கள், பொன்னாச்சிக் குளம் (1967–1968) 97 வாரங்கள், நவயுகம் (1969)12 வாரங்கள்; தொடராக ஒலிபரப்பாகி வானொலி இரசிகர்களை கேட்டுச் சுவைக்க வைத்த நாடகங்களாகும்.

இலங்கை வானொலியில் சு.வே. தொடர் உரைகளையும் நடத்தியுள்ளார். இலக்கிய இரசனை' (1965)32 வாரங்கள், 'திருக்குறட் சித்திரம்' (1968) 36 வாரங்கள், 'நாட்டுக்கு நல்லது' (1969) 24 வாரங்கள் என்பன இவரது வானொலி உரைச் சித்திரங்களாகும்.

சு.வே. எழுதிய சந்திரமதி, குகன் ஆகிய சிறுவர்கதைகள் ஈழகேசரி நா. பொன்னையா அவர்களால் வெளியிடப்பட்டன. இவை சு.வே.யின் சிறுவர் இலக்கியத்துக்கான பங்களிப்புகளாகும். சு.வே. கல்;வி வெளியீட்டுத் திணைக்களத்தில் கடமை ஆற்றிய வேளை மாணவர்களுக்கான பல பாடநூல்களையும் எழுதியுள்ளார்.

பிரமச்சாரியாகத் தவவாழ்வு வாழ்ந்த சு.வே, 2206 2007இல் அமரரானார். அவர் பதித்த இலக்கியத் தடம் ஈழத்து இலக்கியத்திற்கு அணிசேர்க்க வல்லது.

## தி. ஞானசேகரன் எழுதிய புன்னைநகர் மான்மியம் வரலாற்று நூல்

யாழ்ப்பாணத்திலுள்ள புன்னாலைக்கட்டுவன் என்ற கிராமத்தின் வரலாற்றுச் சிறப்புகளை இந்நூல் பேசுகிறது. இற்றைக்கு நானூறு வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் பொன்னாலயம் என்ற தலப்பெயருடன் இவ்வூர் விளங்கியது. காலக்கிரமத்தில் புன்னாலை எனத் திரிபு அடைந்து புன்னாலைக்கட்டுவன் ஆகியது என்பதற்கான சான்று ஷயாழ்பாண வைபவ கௌமுதி। என்ற நூலிலே காணப்படுவதாகவும், இலங்கையை ஆட்சிசெய்த போர்த்துக்கேயர், டச்சுக்காரர் காலத்திலிருந்தே புன்னாலைக்கட்டுவனில் புகழ்பெற்ற பேரறிஞர்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதற்கான சான்றுகளும் மேற்படி நூலிலே காணப்படுகின்றன என்ற குறிப்புகள் நூலின் முதல் அத்தியாயத்திலே அடங்கியுள்ளன. புன்னாலைக்கட்டுவன் கிராமத்தை புன்னைநகர்। என்று சிறப்புப் பெயர்கொண்டு



அழைக்கப்படும் வழக்கம் நீண்டகாலமாகவே இருந்து வருகிறது எனவும் அதற்கான காரணம் அயற்கிராமங்களில் கோயில் தோன்றுவதற்கு முன்னரே புன்னாலைக்கட்டுவனில் கோயில் தோன்றியது, அயற்கிராமங்களில் பாடசாலைகள் தோன்று முன்னரே புன்னை நகரில் பாடசாலைகள் தோன்றின, அயற்கிராமங்களில் தபாற்கந்தோர், வைத்தியசாலை போன்றவை ஆரம்பிப்பதற்கு முன்னரே இவ்வூரில் இவை ஆரம்பிக்கப்பட்டன போன்ற விபரங்கள் நூலிலே அடங்கியுள்ளன.

புன்னாலைக்கட்டுவன் இருபெரும் புலமையாளர்களை தமிழ்கூறு நல்லுலகிற்குத் தந்துள்ளது. ஒருவர் வித்துவ சிரோமணி கணேசையர். மற்றவர் காசிவாசி செந்திநாத ஐயர். கணேசையர் புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்டவர். காசிவாசி செந்திநாத ஐயரின் தாயார் கௌரிஅம்மா அவர்கள் புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் கணேசையரின் தந்தையாரது சகோதரி ஆவார். மேலும் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றாக விளங்கும் கீரிமலை நகுலேஸ்வரத்தைப்பற்றி 1895ஆம் ஆண்டளவில் நகுலகிரிப் புராணம்। பாடிய கவிஞர் சிகாமணி கா. அப்பாச்சாமி ஐயர் அவர்களும் புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நல்லைநகரில் திருஞான சம்பந்தர் ஆதீனம் அமைத்துச் சைவப்பணிபுரிந்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளின் பூர்வீகமும் புன்னாலைக் கட்டுவன் கிராமமே.

புன்னாலைக்கட்டுவனில் வாழ்ந்த அறிஞர்களது வாழக்கைச் சரிதங்களும் அவர்கள் எழுதிய நூல்கள் பற்றிய விபரங்களும் இந்நூலில் அடங்கியுள்ளன. இயலிசை வாரிதி ந. வீரமணிஐயர் திருமணபந்தம் காரணமாக தன் வாழ்நாளில் அதிகூடிய காலம் புன்னாலைக்கட்டுவனில் வாழ்ந்தவர். அவர் பற்றிய சரிதமும் இந்நூலில் அடங்கியுள்ளது. புன்னாலைக்கட்டுவனில் அமைந்துள்ள முன்னூறு வருடப் பழமை வாய்ந்த ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலயம், ஐயனார் ஆலயம், குளத்தடி நாச்சிமார் ஆலயம், ஸ்ரீவிஷ்ணு துர்க்காதேவி ஆலயம், கட்டுக்குள கந்தசாமி ஆலயம் மற்றும் ஈவினை கற்பக விநாயகர் ஆலயம் ஆகியவற்றின் வரலாறுகளும் நூலில் அடங்கியுள்ளன. அத்தோடு இவ்வாலயங்களுக்கான திருவூஞ்சல் பாடல்களும் இந்நூலில் அடங்கியுள்ளன. இவ்வூரில் உள்ள சமூக நிறுவனங்கள் மற்றும் ஊருக்கு உழைத்த பெருமக்கள், இவ்வூரில் தோன்றிய நூலாசிரியர்கள் பற்றிய விபரங்களும் அடங்கியுள்ளன. புன்னை நகரின் மாண்புகளை ஆவணப்படுத்தும் வரலாற்று நூலான புன்னைநகர் மான்மியம் என்ற 170 பக்கங்களில் அமைந்த இந்நூல் ஞானம் பதிப்பகத்தின் வெளியீடாக வெளிவந்துள்ளது. 3பி., 46 ஆவது ஒழுங்கை, கொழும்பு06 என்ற முகவரியில் இந்நூலைப் பெற்றுக் கொள்ளலாம்.

## இலண்டன் பலகலைக்கழக வளாக முன்றலில் திருவள்ளுவர் சிலை.




2013ஆம் ஆண்டு, முதல் தடவையாக உலகத்தமிழியல் ஆய்வு மாநாடு இலண்டன் மாநகரில் அங்குள்ள உலகப் புகழ்பெற்ற இலண்டன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. அந்த ஆய்வு மாநாட்டில் நானும் மனைவியும் கலந்து ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்தோம்.

மாநாடு நடைபெற்ற இந்தப் பல்கலைக்கழகம் மாணவர் தொகை அடிப்படையில் ஐக்கிய இராச்சியத்தின் மிகப் பெரிய பல்கலைக் கழகமாகும். பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் இங்கு கல்வி பயில்கிறார்கள் என அறிய முடிந்தது. இந்தப் பல்கலைக்கழகம் பல பீடங்கள் கொண்ட பல வளாகங்கள் கொண்ட மிகப்பெரிய பல்கலைக் கழகமாகும். இப்பல்கலைக் கழகம் 1836ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. காலத்துக்குக் காலம் பல்வேறு பீடங்கள் இணைக்கப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட்டது. எங்கள் நாட்டவர்களில், பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் சி. பத்மநாதன், பேராசிரியர் ஆ. கந்தையா ஆகியோர் இந்தப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்கள். சுவாமி விபுலானந்தர் 1920இல் இந்தப் பல்கலைக்கழகம் நடத்திய பி.எஸ்.ஸி. தேர்வில் சித்தியடைந்தவர். இங்கு மாநாடு நடைபெற்ற காலகட்டத்தில் என்னைச் சந்தித்த எழுத்தாளர் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் அவர்கள் தானும் இந்தப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றதாகக் கூறினார். ஆசிய ஆபிரிக்க மத்தியகிழக்கு நாடுகளுக்கான கல்விக்கான உலகின் முதல் தரமான பல்கலைக் கழகமாக விளங்கும் இந்தப் பல்கலைக்கழகம் பிரித்தானியாவின் அதியுயர்ந்த பல்கலைக்கழகமாகவும் விளங்குகிறது.

இந்தப் பல்கலைக்கழகத்தின் ஒரு பீடமாக அமைந்திருப்பது S.O.A.S (School of Oriental and Affrica Studies) என்ற பகுதியாகும். இங்குதான் இந்த உலகத் தமிழியல் மாநாடு நடைபெற்றது.

இந்தப் பீடத்தின் முன்பாக எமது தமிழ்ப்பெரும் புலவர் திருவள்ளுவரின் பெரிய சிலை ஒன்றை அமைத்திருக்கிறார்கள். அதனைப் பார்த்தபோது எமக்குப் பெருமையாக இருந்தது. எம்மை அங்கு அழைத்துச் சென்ற நண்பருக்கு திருவள்ளுவர் பற்றியும் திருக்குறள் பற்றியும் விளக்கம்கொடுத்து அவர் இயற்றிய திருக்குறள் உலகின் 90 மொழிகளில் இதுவரை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்ற தகவலையும், 2500 வருடங்கள் பழமை வாய்ந்த மொழியின் சொந்தக்காரர் நாங்கள் என்பதையும் கூறி மகிழ்ந்தேன். (இனி அடுத்த இதழில்)

---

# படித்ததும் பகர்வதும் 44







சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### அன்னையரை கௌரவிப்போம்!



அன்னையரை மதிக்காதோர் அகிலத்தில் எவரும் இல்லையெனலாம். ஒருவர் எத்தகைய உயர் பதவி வகித்தாலும், எத்தகைய தொழில்களை புரிந்தாலும், எத்தகைய கெட்டவராக இருந்தாலும் அவர்களது உள்ளத்தின் ஒரு மூலையிலே தனது தாய் மீதான அன்பும் பாசமும் தவறாது இருக்கவே செய்யும். இது அன்னையருக்கே உரிய அரிய சிறப்பு.

பெற்றெடுத்து, பாலூட்டி, தாலாட்டி, காலாட்டி, பெயர் சூட்டி, அரவணைத்து ஆதரிக்கும் அம்மாக்கள்தான் உலகத்தின் அதி உயர்ந்த பிரஜைகள். தன் உதிரத்தையே பாலாக்கி எமக்கூட்டி. தனது சுகத்தையெல்லாம் எமக்கு சொந்தமாக்கி. காலமெல்லாம் தனது எண்ணங்களிலே அன்போடு, மகிழ்வோடு, அதீத பாசத்தோடு எம்மை சுமக்கும் அம்மாக்களுக்கு ஈடு, இணை உண்டா?

அன்னையருக்காக 'அன்னையர் தினம்' என வருடத்தில் ஒரு தினத்தை ஒதுக்கி அந்த ஒரு தினத்தில் மட்டுமே அம்மாக்களை புகழ்ந்து, பாராட்டி, கவிதைகளில் வாழ்த்தி, வாழ்த்து அட்டைகளை அனுப்பி, புகழ் மாலைகளை முகப் புத்தகங்களில் பதிந்து விடுவதனால் தாய்மார்களுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகள், பணிகள், சேவைகள் ஒரு போதும் முடிந்து விடாது என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும்.


சிறுவயதில் அவர்கள் எம்மை எவ்வாறு அன்போடு அரவணைத்து வளர்த்தார்களோ அதைவிட சிறப்பாக அவர்களை நாம் பராமரிக்க வேண்டும், அன்போடு, ஆதரவோடு கவனிக்க வேண்டும், உயர்ந்த அந்தஸ்தில் வைத்து அவர்களை கௌரவிக்க வேண்டும். மனைவிக்காகவோ, கணவருக்காகவோ, மற்றவர்களுக்காகவோ எமது தாய்மார்களை விட்டுக்கொடுக்கவோ, ஒதுக்கி விடவோ, ஓரங்கட்டவோ கூடவே கூடாது. மாறாக எல்லா பொழுதுகளிலும் எல்லா நிமிடங்களிலும் அவர்களை மகிழ்ச்சியாகவும் மன நிறைவாகவும் வாழ வைக்க வேண்டும். 'அவர்களது திருப்தி தான் எமக்கு நிம்மதி' எனச் செயல்பட வேண்டும்.

எவரது தாய்மார்களாவது இறந்திருந்தால், அவர்களது பெயரில் தான தர்மங்கள், நற்செயல்கள் புரிய வேண்டும் அவர்களது உறவுகளோடு அன்போடு சேர்ந்து வாழ வேண்டும். அவர்களுக்கு நற்பெயர் கிடைக்கும் வகையில் செயல்பட வேண்டும். இவைதான் அன்னையருக்கு நாம் செய்யும் காணிக்கையாக அமைய முடியும்

நபிகள் நாயகம் கூறினார்கள், "தாயின் பாதத்தடியில்தான் பிள்ளைகளின் சுவர்க்கம் இருக்கிறது." இதனை புரிந்து, உணர்ந்து அன்னையரை உளமார நேசிப்போம்; சரியாக, முறையாக, நேர்மையாக கௌரவிப்போம்.

## நீத்தார் நினைவு

### ஏம்பல் தஜம்முல் முகம்மது



தமிழ் நாட்டை சேர்ந்த இலக்கிய ஆளுமை ஏம்பல் தஜம்முல் முகம்மது அவர்கள் இரு வாரங்களுக்கு முன்னர் இவ் உலகத்தை விட்டும் பிரிந்தார். இலங்கையின் பிரபல அறிஞர்களான கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி, பேராசிரியர் எம்.எஸ். எம். அனஸ் முதல் பிரபல எழுத்தாளர்களான கவிக்கோ ஜின்னா ஷரீப்தீன், ஜவாத் மரிக்கார், மேமன் கவி உட்பட கவிமணி நஜ்முல் ஹுசைன், நூருல் ஐன் நஜ்முல் ஹுசைன் வரை பல இலக்கிய வாதிகளுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தவர். அடிக்கடி இலங்கை வந்து எழுத்தாளர்களுடன் உறவுகளை புதுப்பித்துக் கொள்ளும் நல்ல உள்ளம் கொண்டவராகத் திகழ்ந்தார்.

1948 ஒக்டோபர் 13ம் திகதி தமிழ் நாடு ஏம்பல் எனும் இடத்தில் பிறந்து, புதுக்கோட்டை திருவள்ளுவர் நகரில் வசித்தவர். இவருக்கு திருவள்ளுவரை மிகவும் பிடிக்கும். புகழ் பெற்ற திருக்குறள் உரைகள் அனைத்திலும் பரிச்சயம் உள்ளவர். ஆங்கில இலக்கியத்தில் அதிக ஆர்வம் கொண்டவராக இருந்ததோடு ஆங்கில இலக்கியங்களை தமிழுலகுக்கு வழங்குவதில் ஆர்வம் காட்டினார்..

அனைத்துலக இஸ்லாமிய இலக்கிய மாநாடுகளிலே ஆர்வத்தோடு பங்குபற்றி சிறந்த பங்களிப்புகளை வழங்கி வந்த இவர், வீரம் செறிந்த இஸ்லாம், நிழலில்லாத சூரியன், தூது வந்த வீரர், இஸ்லாமும் மேற்கு நாடுகளும், இஸ்லாம் நாடும் சமய நல்லிணக்கம் உட்பட பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

அண்மைக் காலங்களில் முகநூல் மூலம் தனது இலக்கிய கருத்துக்களை அவ்வப்போது வெளியிட்த வந்தார். தனது அந்திம காலத்தில் அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களான அஸ்மாஉல் ஹுஸ்னாவுக்கு விளக்க உரை எழுதிக்கொண்டிருந்தார்.

'இஸ்லாமிய இலக்கிய கழகம்' நடாத்திய கருத்தரங்குத் தொடரின் 25ஆவது வெள்ளிவிழா கருத்தரங்கில் நான் அருள்வாக்கி அப்துல் காதிர் அவர்களைப் பற்றி உரையாற்றிய பின்னர் அவரது முக நூலில் அவர் எழுதிய பின்வரும் குறிப்பு என்றும் என் உள்ளத்தில் பசுமையாக இருக்கும்.

"இஸ்லாமிய இலக்கிய கழகத்தின் 25ஆவது கருத்தரங்கில் அருள்வாக்கி அப்துல் காதிர் அவர்களைப் பற்றிப் பேருரையாற்றிய ரஷீத் எம் இம்தியாஸ் அவர்களின் பணி, தனிசிறந்த நற்றமிழ்ப் பணியாக அமைந்தது. வாழ்த்துக்கள். பாராட்டுக்கள் அல்ஹம்துலில்லாஹ். அகச்சான்று, புறச்சான்று முதலியவற்றுடன் ஆற்றொழுக்கான மொழிநடையோடு அமைந்த அவருடைய பேருரை ஆவணப்படுத்த வேண்டிய மதிப்பு மிக்கதாகும்."

ஏம்பல் தஜம்முல் முகம்மது அவர்களுக்கு அல்லாஹ் தனது மேலான சுவனத்தை வழங்கியருள பிரார்த்திப்போம்!

## புது வரவு

### கலாபூஷணம் பீரீ. அஸீஸ் எழுதிய "மஞ்சள் குருவி"




கலாபூஷணம் பீ. ரீ. அஸீஸ் இலக்கிய உலகில் பன்முக ஆளுமைகளைக் கொண்ட ஓர் எழுத்தாளர். இலக்கியத் துறையில் பல விருதுகளைப் பெற்றவர் . சுமார் 20க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளவர். அண்மையில் வெளிவந்துள்ள இவரது சிறுவர் இலக்கிய நூல் "மஞ்சள் குருவி". மனதுக்கினிய சிறுவர் பாடல்கள் இதில் அடங்கியுள்ளன.

சிறுவர்கள் சுயமாக சிந்திப்பதற்கும், செயற்படுவதற்கும், நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் உரித்துடையவர்கள். அவர்களது உலகம் சந்தோசம் நிறைந்த தனி உலகு. நாளைய தலைவர்களாகும் அவர்களுக்கு அன்பு, ஆளுமை, ஒற்றுமை, சகோதரத்துவம், நற்பண்புகள் போன்றன போதிக்கப்படல் வேண்டும். இதன்மூலம் முன்மாதிரியான ஒரு சமூகம் தோற்றம் பெற வழிபிறக்கும். இதற்கு சிறுவர் இலக்கியங்கள் பெரிதும் துணை நிற்கும்.

இந்த வகையில் பீ. ரீ. அஸீஸின் சிறுவர் இலக்கியப் படைப்புகள் மிகவும் பிரபல்யமானவை. இவரது 'சின்னப் பாப்பா', 'செவ்வானச் சித்திரம்' போன்றவை தேசிய நூலக ஆவணவாக்கல் சபையின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ளமை இவரது சிறுவர் இலக்கிய படைப்புகளின் அங்கீகாரத்தைப் பறைசாற்றி நிற்கின்றன.

அழகிய அட்டைப் படத்துடன் 50 பக்கங்களைக் கொண்டதாக வெளிவந்திருக்கும் "மஞ்சள் குருவி" நூலில் 19 சிறுவர் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடலும் ஒன்றுக்கொன்று வித்தியாசமான அணுகுமுறையை கொண்டதாக இருப்பதைக் காண முடிகிறது.

நூல் மஞ்சள் குருவி, நூலாசிரியர் பீ.ரீ. அஸீஸ், வகை சிறுவர் இலக்கியம், பக்கங்கள் – 50, வெளியீடு பாத்திமா ருஸ்தா பதிப்பகம், விலை 250 ரூபாய்

## செந்தமிழ் அது தேன் தமிழ்

### காற்றின் பெயர்கள் !

**தமிழ் மொழியில் காற்றுக்கு இத்தனை பெயர்களா?**


காற்று வீசும் திசையின் அடிப்படையில் காற்றின் பெயர்கள் இவ்வாறு கூறப்படுகின்றன.

தெற்கிலிருந்து வீசுவது தென்றல் காற்று
வடக்கிலிருந்து வீசுவது வாடைக் காற்று
கிழக்கிலிருந்து வீசுவது கொண்டல் காற்று
மேற்கிலிருந்து வீசுவது மேலைக் காற்று

**காற்று வீசும் வேகத்தைப் பொருத்து பின்வரும் பெயர்கள் தெரிவிக்கப்படுகின்றன.**

6 கி.மீ. வேகத்தில் வீசும் காற்று "மென் காற்று"
611 கி.மீ. வேகத்தில் வீசும் காற்று "இளந்தென்றல்"
1219 கி.மீ. வேகத்தில் வீசும் காற்று "தென்றல்"
2029 கி.மீ. வேகத்தில் வீசும் காற்று "புழுதிக் காற்று"
3039 கி.மீ. வேகத்தில் வீசும் காற்று "ஆடிக் காற்று"
100 கி.மீ. வேகத்தில் வீசும் காற்று "கடுங்காற்று"
101120 கி.மீ. வேகத்தில் வீசும் காற்று "புயற்காற்று"
120 கி.மீ. மேல் வேகத்தில் வீசும் காற்று "சூறாவளிக் காற்று"

## கைவண்ணம் காணீர்



யானையின் படம்தான். ஆனால் இதில் எத்தனை விலங்குகள் கானப்படுகின்றன. கண்டு பிடியுங்களேன்.

## பேசும் கவிதை

### தாயின் மடியில்

கருவில் என்னை சுமந்து
வலிகள் பல கடந்து
என்னை ஈன்ற தாயே!
உன் மடியில் தலைவைத்து
உறங்கும் போதினிலே
என் மனவலிக்கு மருந்திட்டு
என்னை தேற்றும் தாயே !
உன்மடித்தூக்கம்க
ளைந்து விழிக்கும்
போதினிலே கண்டேன்
என் துயரங்கள் துளைந்து
புதிதாய் பிறந்தேன் என்று !
என் ஜீவன் பிரியும்
முன்னே என் மடியில்
உன்னை வைத்து
தாலாட்ட வேண்டும்.

– நிஜாம்

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மே மாதம் 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2021 மே 09 ஞாயிற்றுக்கிழமை
நடிகை
மாளவிகா மேனன்

# மைக்கல் மலோயும் சதிகார நண்பர்களும்

பூகோள சஞ்சாரம்
பிர்தௌஸ்

மைக்கல் மலோய் 1920கள் மற்றும் 1930களில் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் வசித்தவர். அயர்லாந்தைச் சேர்ந்த முன்னாள் தீயணைப்பு வீரரான மலோய் உறவினர் எவரும் இல்லாத ஒரு அனாதை. அதனால் தான் அவர்




சதிகாரர்களிடம் சிக்கிக் கொண்டார்.

பெரும் குடிகாரரான மலோய்க்கு மதுபான விடுதியில் வைத்தே புதிய நண்பர்கள் அறிமுகமானார்கள். ஆனால் நண்பர்களின் திட்டம் வேறு. எது பற்றியும் கவலை இல்லாத மலோய்க்கு நண்பர்களின் திட்டம் பற்றி தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை.

அதாவது மலோயின் பெயரில் மூன்று காப்புறுதித் திட்டங்களை எடுத்த நண்பர்கள் அந்த காப்புறுதிப் பணத்தை பெறுவதக்காக மலோயை கொல்வது தான் திட்டம். அந்தக் கொலை விபத்துப் போல் இருக்க வேண்டும் என்பதிலும் கவனமாக இருந்தார். அதன்மூலம் கிடைக்கும் 3576 டொலர் பணத்தை பங்குபோட்டுக்கொள்ள முடிவெடுத்தார்கள்.

ஆனால் அந்தத் திட்டம் நினைத்தது போல் இலகுவாக இருக்கவில்லை. மலோயை கொல்ல ஒன்று, இரண்டு அல்ல பத்துத் தடவை முயற்சித்தார்கள். ஆனால் அனைத்துமே தோல்வியில் தான் முடிந்தது.

முதலில் மதுபான விடுதிக்கு மலோயை அழைத்துச் சென்று மூச்சு முட்ட குடிக்கக் கொடுத்தார்கள். போதைத் தலைகேறி அவர் இறந்து விடுவார் என்ற சதிகார நண்பர்கள் நினைத்தார்கள். ஆனால், சர்வசாதாரணமாக மதுமான கோப்பைகளை குடித்த அவர் ஆடாமல் அசையாமல் எழுந்து நின்று, நாளை பார்ப்போம் என்று சொல்லிவிட்டு போய்விட்டார்.

இரண்டாவதாக உயிருக்கு ஆபத்தான மதுபானத்தை குடிக்கக் கொடுத்தார்கள். வூட் அல்கஹோல் என்று அழைக்கப்படும் அதனை அதிகம் குடித்தவர்கள் உயிர் வாழ்ந்ததாக சரித்திரம் இல்லை. ஆனால், மைக்கல் மலோய் அதனை வயிறு முட்ட குடித்தார் ஒன்றுமாகவில்லை.

முன்றாவது முயற்சியாக மதுபானத்தையும் சிப்பி உணவு ஒன்றையும் மலோயிற்கு கொடுத்தார்கள். அப்போது செரிமான பிரச்சினை ஏற்பட்டு அந்த அனாதை இறந்து விடும் என்று சதிகாரர்கள் நம்பினார்கள். அதுவும் தோல்வியிலேயே முடிந்தது. நான்காவது முயற்சியாக அவரின் உணவில் கூரான இரும்புத் துண்டுகளை கலந்து உண்ணக் கொடுத்தார்கள். ஆனால் அதுவும் தோல்வியில் முடிந்தது.

பணம் செலவாகிறதே ஒழிய மலோய் இறப்பதாகத் தெரியவில்லை. அடுத்த அடித்துக் கொல்வதாகத் திட்டம். மலோயை மயக்கம் வரும் வரை அடித்தார்கள். அவரும் வீதியில் மயங்கி விழுந்தார். உடலை பனி மூடியது. 'செத்தது போ' என்று சதிகாரர்கள் நினைத்தார்கள். ஆனால் அடுத்த நாள் சாதாரணமாக எழும்பி நடந்தார் மலோய்.




அடுத்த நான்கு திட்டங்களும் அவரை காரை மோதவிட்டு கொல்வதாக இருந்தது. முதல் முயற்சியில் ஆட்கள் அதிகம் கூடியிருந்ததால் வாகனத்தை மோதவிட பயந்தார்கள். அடுத்த இரண்டு முயற்சிகளிலும் மலோய் ஓரமாய் பாய்ந்து தப்பித்துக் கொண்டார். பத்தாவது கொலை முயற்சியில்






Scenes of an insurance scam (clockwise from top): the Bronx speak-easy owned by Anthony Marino; the Fulton Ave. room where Mike Malloy was gassed to death; headlines from the 1933 crime, Malloy's body after being exhumed. Photo illustration by Charles George/Daily News

மணிக்கு 50 மைல் வேகத்தில் வந்த கார் மலோயை மோதியது. ஆனால் காயங்களுடன் தப்பித்துக் கொண்டார்.

எப்படியோ, பதினோறாவது முயற்சி துரதிருஷ்டவசமாக வெற்றிபெற்றது. மலோயின் அறைக்குச் சென்ற சதிகாரர்கள் உறங்கிக்கொண்டிருந்த மலோயின் வாய்க்குள் மூச்சு நிற்கும் வரை எரிவாயு குழாயை வைத்து அமிழ்த்தினார்கள்.

கடைசியில் அந்த மரணத்தை நிமோனியா என்று ஏமாற்றி காப்புறுதிப் பணத்தையும் சதிகாரர்கள் பெற்றார்கள். எங்கோ உதைக்கிறது என்று சந்தேகித்த பொலிஸார் இதனை துருவி விசாரித்தபோதே உண்மை தெரியவந்தது.

நான்கு சதிகாரர்கள் கைது செய்யப்பட்டனர். கொலை குற்றவாளிகளாக நிருபிக்கப்பட்ட அவர்கள் மின்சாரக் கதிரையில் உயிர் விட்டார்கள். ஆனால் மைக்கல் மலோய் இன்றும் கூட அமெரிக்கர்களிடம் பிரபலம். அவரது கதை திரைப்படமாகக் கூட வந்திருக்கிறது. 'இரும்பு மலோய்' என்று தான் அவரை செல்லமாக அழைப்பார்கள்.

# உலகின் பயங்கர ஆண்டு கி.பி. 536



முதலாம் உலகப் போர், இரண்டாம் உலகப் போர், சுனாமி, ஹிட்லர் அட்டகாசங்கள் என்று உலகின் பேரழிவுகளின் கதை நீண்டது. ஆனால், வரலாற்றில் மிக மோசமான, பயங்கரமான ஆண்டு எதுவாக இருக்கும்?

அந்த பெருமைக்குரிய ஆண்டு கி.பி. 536 என்பது வரலாற்று ஆய்வாளர்களின் பொதுவான கணிப்பு. அந்த ஆண்டிலே உலகின் பெரும்பகுதி 18 மாதங்கள் முழுவதும் இருள் சூழ்ந்திருந்தது. ஐரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் ஆசியாவின் பெரும் பகுதி மக்கள் சூரியனை காணவில்லை.

பகல் முழுவதும் கறுமேகம் சூரியனை மறைத்திருந்ததால் தட்பவெப்பநிலை குறைந்தது, பயிர்கள் முளைக்கவில்லை, பெரும் பஞ்சம் ஏற்பட்டது. அதனால் உயிரிழப்புகளுக்கு பஞ்சம் இல்லாமல் போனது. அதனை உலகின் இருண்ட காலம் என்று பொதுவாக அழைப்பார்கள்.

536 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ஐஸ்லாந்தில் இடம்பெற்ற எரிமலை வெடிப்பே இந்த பயங்கரத்திற்குக் காரணம் என்று ஆராய்ச்சியாளர்கள் அண்மையிலேயே கண்டுபிடித்தார்கள். அந்த எரிமலை வெடிப்பின் சாம்பல் புகை உலகெங்கும் பரவியது.

அந்த 18 மாத இருள் எப்படி இருந்திருக்கும்? பைசாந்திய வரலாற்றாசிரியர் பிரகோபியஸ் அது பற்றி விபரித்து எழுதி இருக்கிறார், 'சூரியன் நான்கில் ஒரு பங்கு வெளிச்சத்தையே தந்தது. சரியாக சந்திரன் போல் தான் ஒட்டுமொத்த வருடமும் தெரிந்தது. அது தொடர்ச்சியான சூரிய கிரகனம் போல் இருந்தது' என்கிறார்.

'சூரியன் உச்சத்திற்கு வரும் நண்பகல் நேரத்தில் கூட எமது உடலின் நிழல் பூமியில் படாது' என்று ரோமானிய அரசியல்வாதியான கசியோடோரஸ் எழுதி இருக்கிறார்.

சீனாவில் பெரும் பஞ்சம் ஏற்பட்டு ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்தார்கள். மத்திய கிழக்கிலும் இதே நிலை தான்.

# மலையக கிழக்கு எல்லையில் அற்புத நீரூற்று!

## இயற்கையால் இதயங்களை கவரும் கொள்ளை அழகு




**ரீ.எல்.ஜவ்பர்கான்**
**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

நீரூற்றுகளாலும் அருவிகளாலும் நதிகளாலும் நிறைந்து வழியும் இயற்கையின் அரவணைப்பிலுள்ள தேசமே இலங்கை மண்.

அற்புதமான அருவியொன்று தொடர்பான கதையே இது.

மலையகமும் கிழக்கு மாகாணமும் இணைகின்ற பிரதேசமொன்றில் காணப்படும் இயற்கை எழில் கொஞ்சும் ஆனந்தமும் அமைதியும் இதயங்களை வருடிச் செல்லும் அருவி அது.

மொணராகலை மாவட்;டத்தின் வெல்லவாய பிரதேச சபைப் பிரிவில் காணப்படும் எல்லவல கிராமத்தலிருந்து சுமார் மூன்று கிலோ மீற்றர் காட்டு வழியாகச் சென்றால் வருவதுதான் தியஅல்ல நீரூற்று. எல்லவல கிராமத்தின் பிரதான சாலையிலிருந்து சுமார் மூன்று கிலோ மீற்றர் கடுமையான அடர்ந்த காடுக்ளையும் பாரிய பாறைகள் நிறைந்த பாதைகளையும் கடந்தே குறித்த நீருற்றை அடைய வேண்டும்.

குறிப்பிட்ட தூரத்தை கால்நடையாகவே கடக்க வேண்டும். வாகனங்கள் செல்லுகின்ற அளவிற்கு சீரான பாதை கிடையாது.



பூமியிலிருந்து உயர்ந்து செல்லும் மலைப் பாங்கான பாறைகள் நிறைந்த காட்டு வழிப்பாதை. நீண்ட தூரத்தை ஒருவர் பின்னர் ஒருவராகவே கடக்க வேண்டும். நீண்ட நடை பயணத்தின் பின்னர்தான் தியஅல்ல நீருற்று வருகிறது.





தியஅல்ல நீருற்று உயரமான மலையிலிருந்து கீழ்நோக்கிப் பாய்கிறது..காற்றினால் அள்ளுண்டு கீழே பாய்கின்ற நீருற்றின் அழகோ அழகு..அதனை ரசிப்பதற்கும் பாய்ந்தோடும் நீருற்றின் குளிர்மையான நீரில் குளிப்பதற்கும் கடுமையான கரடு முரடான மலைப் பாறைகளையும் கடந்து சிறுவர் முதல் முதியோர் வரை இனம், மதம், மொழி மறந்து அலை மோதுவதை அவதானிக்க முடிந்தது.

விடுமுறை நாட்களில் பெருமளவிலான மக்கள் குறித்த திய அல்ல நீர்வீழ்ச்சியின் அழகை ரசிக்கவும் அதில் குளிக்கவும் வருகை தருவதாக அக்கிராமத்தவர்கள் தெரிவிக்கின்றனர் .

இப்போது கிழக்கில் உஷ்ணமான காலநிலை ஆரம்பித்துள்ளது. இதனால் இயற்கையான காற்றைச் சுவாசிக்கவும் குளிர்மையான இடங்களைக் காணவும் இவர்கள் இப்படியான இடங்களை நோக்கி பயணிக்க ஆரம்பித்துள்ளனர்.

நமது நாட்டில் பல்வேறு நீரோடைகள் இருந்தாலும் தியலஅல்ல அருவி மிகவும் அற்புதமானது என்பது குறிப்பிடத்தக்கது.




## பிறந்த நாள் வாழ்த்து

அனுப்ப வேண்டிய முகவரி:
**பிறந்தநாள் வாழ்த்து,**
**செந்தூரம், தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல. 834, கொழும்பு.**
**Senthooramtkn@gmail.com**



செந்தூரம் பிறந்த நாள் பகுதிக்கான உங்கள் அன்புச் செல்வங்களின் படங்களை எமது மின்னஞ்சல் முகவரிக்கோ 0714901181 எனும் வட்ஸ் அப் இலக்கத்திற்கோ அனுப்பலாம்.



**ஷெர்லின் செட்ரிக்**
**வயது 2 வருடம்**
**பிறந்த திகதி**
**30 / 5 / 2019.**



**சபீயா ஸைனப்**
**முஹம்மட் சலாட்**
**பாத்திமா ஸப்றூன்,**
**வெலிப்பன்னை.**

## என் மகளே!



என் மகளே!
நாங்கள் கேட்காமலே
கிடைத்த என்றும்
திகட்டிடாத
தேன் போன்றவள் நீ....
இறைவன் தந்த
மாபெரும் செல்வமே
சிற்பன் செதுக்கிய
சிலையென்று
வியப்படைவார்கள்
விலையே! இல்லாமல்
இறைவன் செதுக்கிய
அழகிய சிலை நீ!
என் கண்ணே
கனியமுதே

உன் தாயின் வயிற்றில்
இருக்கும் போதே
என் மகிழ்ச்சியின்
எதிரொலி
உனக்குள்
எதிரொலித்ததோ
குழந்தையிலும்
புன்னகையின்
அரசியாகவே
இருக்கிறாய்....
பாத்திமா தில்றஸ்
என்றால்
நவரசங்களில் ஒன்று
நீ உனது வழியில்
நடக்காமல்
பெண்களின் தலைவி
பாத்திமா நாயகி (ரழி)
அவர்களின் வழியில் நட

உன் வருகையின்
பின்தான்
பிள்ளை என்ற
சொல்லுக்குள்
இத்தனை அர்த்தங்கள்
இருக்கிறது என்று
தெரியப்படுத்தியவளும்
தெளிவுபடுத்தியவளும்
நீயே....

மார்க்கக் கல்வியிலும்
உலகக் கல்வியிலும்
நீ உயர்ந்திட நான்
என்றும்
ஏணியாக காத்து
நிற்பேன்.

**மு. கா. முகம்மது அஸ்வர்,**
**திருகோணமலை**
**(பெயர் .பாத்திமா தில்றஸ்**

# யுத்தம் இல்லாத உலகம் சாத்தியமா?

ஒருமுறை ஆல்பர்ட் ஐன்ஸ்டீனிடம் மூன்றாம் உலகப் போர் வந்தால் மனிதர்கள் என்ன வகையான ஆயுதங்களைப் பயன்படுத்துவார்கள்? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு ஐன்ஸ்டீன் "மூன்றாம் உலகப்போரில் என்ன மாதிரியான ஆயுதங்களை பயன்படுத்துவார்கள் என்று தெரியாது ஆனால் நான்காம் உலகப்போரில் கல், வில், அம்பு, கற்கோடாரி ஆகியவற்றை தான் பயன்படுத்துவார்கள்" என்றார்.

கேள்வி கேட்டவருக்கு வியப்பு மூன்றாம் உலகப் போர் பற்றி கேட்டால் நான்காம் உலகப் போரை பற்றி சொல்கிறார் என்று.

இரண்டு பெரும் உலகப் போர்களின் பேரழிவுகளை கண்ணால் கண்ட ஒரு வகையில் அந்தப் பேரழிவு ஆயுதங்களின் சூத்திரத்தை உருவாக்கிய ஆராய்ச்சியாளராகவும் சாட்சியாகவும் இருந்த ஐன்ஸ்டீன் தன் கருத்தை விளக்கினார்.

"மூன்றாம் உலகப் போரில் பயன்படுத்தப்படும் அதிஉயர் தொழில்நுட்பம் வாய்ந்த ஆயுதங்கள் முழு மனித குலத்தையும் அடியோடு அழித்துவிடும். எனினும் இயற்கையின் பரிணாம வளர்ச்சியில் ஆண்டுகள் பல ஆயிரம் கடந்து மீண்டும் மனித உயிர் புதிய பரிணாமம் பெறும். அப்போது அவர்களுக்குள் போர் வந்தால் கற்கால ஆயுதங்கள் தான் பயன்படுத்தப்படும். மனிதர்கள் போரில் ஈடுபடாமல் இருக்கவே முடியாது. ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி அவர்கள் போர்புரிந்து கொண்டுதான் இருப்பார்கள்"

நீங்கள் போர் இல்லாத உலகம் சாத்தியமா என்று கேட்கிறீர்கள்.

ஐன்ஸ்டீன் அவர்களின் விடையே உங்களுக்குப் போதுமானது.

போர் இல்லாத உலகம் எந்தக்கலத்திலும் சாத்தியமில்லை.

மனிதனின் ஆணவத்தால்தான் உலகில் 80 விழுக்காடு போர்கள் நிகழ்கின்றன. பழந்தமிழர் மரபுப்படி சொல்வதானால் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை.

சுய மரியாதைக்காகவும் வெளிப்புறத்திலிருந்து வரும் தாக்குதல்களை தடுத்து தன்னுடைய இருப்பை தக்கவைத்துக் கொள்ளும் தற்காப்பு தொடர்புடைய போர்கள் குறைந்த அளவில் தான் நடைபெறுகின்றன.

சற்று சிந்தித்துப் பார்த்தால் போருக்குக் காரணம் மனிதனின் மரபணுவில் ஆழ்மனதில் பொதிந்துள்ள ஆழ்மன அச்சம் தான் காரணம் என்று கூடத் தோன்றுகிறது.

சிறுசிறு இனக்குழுக்களாக ஆதியில் சேர்ந்து வாழ்ந்து வேட்டையாடி உண்டு வந்த போது ஒரு சில சமயம் அவனுக்கு உணவு கிடைக்காமல் போயிருக்கலாம். அப்பொழுது மற்ற இனக்குழுக்களிடம் உள்ள உணவை கைப்பற்றுவதற்காக அவன் முதன்முதலில் மோதலைத் தொடங்கினான்.

அதில் வெற்றி பெற்றவுடன் அவனுக்கு ஒரு அச்சமும் தொற்றிக்கொண்டது இதேபோல் மற்றவர்கள் நம்மிடம் உள்ளவற்றை கைப்பற்ற முடிந்தால் என்ன செய்வது என்று எண்ணி தன்னுடைய வலிமையைப் பெருக்கிக்கொண்டு மற்றவர்கள் தன்னை சீண்டாத போதும் மற்றவர்கள் மீது வலிந்து தாக்குதல் நடத்தினான்.

இந்தக் காலம்தான் போர் என்பதற்கான இலக்கணங்கள் உருவாகத் தொடங்கிய காலம்.

அவன் பெற்ற சிறுசிறு வெற்றிகளால் அவனுடைய நிலப்பரப்பு பெரிதானது. சிற்றரசுகள் பேரரசுகளாக உருவான கதை இதுதான்.

நவீன காலத்தில் அமெரிக்கா போன்ற வல்லாதிக்க நாடுகள் போரை தங்களது ஒரு கடமையாகவே செய்து வருகின்றன போரின் மூலம் உலகின் இயற்கை வளங்களை தங்களது கட்டுப்பாட்டில் வைத்து உலகத்தின் ஆளுகையை தங்களது கட்டுப்பாட்டில் இருப்பதை உறுதி செய்கின்றன.

இரண்டாம் உலகப்போருக்கு பிந்தைய அமெரிக்க வரலாற்றை எடுத்துப் பார்த்தால் போரில்லாத ஆண்டு என்று ஒன்றுமே இருக்காது.

தங்களிடமுள்ள ஆளுகை மற்றவர்களின் கைக்கு மாறிவிடக்கூடாது, தங்களது ஆளுமையை தங்களது கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும் என்று ஆதி மனிதனின் அதே ஆழ்மன அச்சம்.

அமெரிக்க ராணுவத்தை எப்பொழுதும் உயிர்த்துடிப்போடு தான் வைத்திருப்பார்கள். இவர்களாகவே தீவிரவாத இயக்கங்களை உருவாக்குவார்கள். இஸ்லாமிய அடிப்படைவாத எண்ணத்தில் செயல்படும் சில இயக்கங்களை உரம் போட்டு வளர்ப்பார்கள் அவர்கள் பெரும் வலிமை பெற்றவுடன் அமெரிக்க ராணுவத்தை அவர்களோடு மோத விடுவார்கள் எனவே அமெரிக்க ராணுவம் எப்போதும் கூர்மையுடன் இருக்கும்.

ஏறக்குறைய எல்லா உலக நாடுகளும் மூன்றாம் உலகப்போரை எதிர்நோக்கி தங்களது ராணுவத்தை வலிமைப்படுத்தி வரும் சூழலில் போர் இல்லாத உலகம் சாத்தியமே இல்லை.

அமெரிக்கப் பேரறிஞர் நோம் சாம்ஸ்கி சொல்கிறார் "வயதானவர்கள் போரை திட்டமிடுகிறார்கள் இளைஞர்கள் வாழ்வைத் தொலைக்கிறார்கள்"

தங்களது புகழைப் பரப்பவும் தங்களது ஆளுமையை நிலை நிறுத்தவும் தாங்கள் சார்ந்த கூட்டத்தின் பெருமைகளை பரப்பவும் அதன் மூலம் தங்களுடைய மக்கள் கூட்டத்தை தங்களையே தெய்வம் போல தொழ வைக்கவும் அரசியல்வாதிகளுக்கு போர் தேவைப்படுகிறது.

எனவே காரணங்களுக்காக போர் என்பதெல்லாம் கடந்து போர் புரிவதற்காக ஒரு காரணத்தை ஏற்படுத்தும் காலகட்டம் இது.

உலக நாடுகள் தமது ராணுவ படைகளுக்கு செலவிடும் தொகையில் ஆறில் ஒரு பங்கு கல்விக்கு செலவிட்டால் உலகம் முழுவதும் கல்வி வசதி பெறும் என்று UNICEF கூறினாலும் அதனால் எந்த பயனும் இல்லை.

அவை வெறுமனே தாள்களில் தூங்கும் புள்ளிவிபரங்கள் ஆக மட்டுமே மாறிவிட்டன.

சரி ஒருவேளை முழு மனித குலமே அழிந்து விட்டால் அது உலகம் யுத்தம் இல்லாமல் இருக்குமா?

அப்பொழுது கூட அது சாத்தியப்பட வாய்ப்பில்லை.

ஏனெனில் காடுகளில் வாழும் விலங்குகள் கூட்டம் குறிப்பாக சில வகை குரங்குகள் கூட்டம் கூட்டமாக சண்டை போட்டுக்கொள்வது எல்லாம் நாம் தொலைக்காட்சிகளில் பார்த்திருக்கிறோம்.

பரினாம வளர்ச்சிக்கு ஏற்ப போரின் முறை பரிணாமம் அடைந்து வேறு வேறு வடிவங்களை எடுத்து வருகிறது.

**பொருளாதாரப் போர்:**

அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் ஐரோப்பாவிற்கும் சீனாவிற்கும் இடையே தற்போது இது தான் நடந்து வருகிறது. இரண்டு தரப்பும் மற்ற தரப்பு தங்கள் நாட்டில் இறக்குமதி செய்யும் பொருள்கள் மீது கூடுதல் வரி விதிக்கின்றன.

பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் இதைத்தான் "சீனாவுடனான பொருளாதாரப் போர் ஏற்கனவே தொடங்கிவிட்டது" என்று சொல்கிறார்.

**மின்னணு தொழில்நுட்ப போர்:**

இணையவெளியின் மீது நிகழ்த்தப்படும் நேரடித் தாக்குதல் இது. போட்டி நாடுகளின் தகவல்தொழில்நுட்பம் சார்ந்த செயல்பாடுகளை முடக்கும் முகமாக சீனா ரஷ்யா போன்ற நாடுகள் நீண்டகாலமாகவே இதை செய்து வருகின்றன.

**மறைமுகமான உயிரியல் போர்:**

குறிப்பிட்ட ஒரு பகுதியில் ஒரு செயற்கையாக உருவாக்கப்பட்ட நோய்த் தொற்றைதிட்டமிட்டுபரப்புவது. கோவிட் 19 கூட அப்படி ஒருதிட்டமிடப்பட்ட போர் என்று கூட ஒரு கருத்து உள்ளது. நாம் அந்த சதிக் கோட்பாடுகளுக்குள் (CONSPIRACY THEORIES) எல்லாம் செல்ல வேண்டியதில்லை. இதே கொரோனா குடும்பத்தைச் சேர்ந்த சார்ஸ் வைரஸை அல்கொய்தா அமெரிக்காவிற்கு எதிராக பயன்படுத்தியதை நாம் அறிவோம்.

போரின் வடிவம் தான் மாறுமே தவிர மனிதனின் மனநிலை ஒருபோதும் மாறாது.

ஆசை இருக்கும் இடத்தில் போட்டி இருக்கும் பேராசை இருக்கும் இடத்தில் போர் கண்டிப்பாக இருக்கும்.

"ஒரு 10 வயது சிறுவன் தன் வாழ்நாளில் ஒரு நாளைக்கு 39 முறை வன்முறை சார்ந்த காட்சிகளை தொலைக்காட்சிகளிலும் இணையதளங்களிலும் பார்க்கிறான்" இது அமெரிக்காவில் குழந்தைகள் வாழ்வியல் தொடர்பாக தேசிய ஆவண காப்பகம் தயாரித்துள்ள தரவு.

WWE போன்ற வணிக மயமாக்கப்பட்ட நாடக சண்டைகளைப் பாருங்கள். ஒருவனை இன்னொருவன் அல்லது ஒருவனை ஐந்து பேர் சேர்ந்து போட்டு அடிக்கிறார்கள் சுற்றி ஆயிரக்கணக்கானோர் அதை மிகவும் வன்மத்துடன் கைதட்டி ரசிக்கிறார்கள்.

நன்றாக கவனித்துப் பாருங்கள் அதில் 5 முதல் 15 வயது வரையிலான குழந்தைகள் எண்ணிக்கை மிக மிக அதிகம்.

இணையதள விளையாட்டுகளில் முழுக்க முழுக்க போர்வெறி தான் மையமாக உள்ளது.

இப்படி தலைமுறைகள் உருவாகும் போதே ஆழ்மனத்தில் போரின் வக்கிர எண்ணங்கள் பதிக்கப்படும் பொழுது போர் இல்லாத உலகம் சாத்தியமா? என்ற உங்களின் வெகுளித்தனமான எதிர்பார்ப்பு பொருளற்றதாகிறது.

உங்களால் முடிந்ததெல்லாம் தனிப்பட்ட வாழ்வில் போரில் இருந்து தப்பிக்க நீங்கள் போர்த் தொழில் பழகலாம். கேட்க வியப்பாக இருக்கும்.

ஏனென்றால் பெரும்பாலும் பேராசையின் காரணமாக எழும் போர் வலியவர்களால் எளியவர்களின் மீது திணிக்கப்படும்.

எனவே நீங்கள் உங்களை வலிமையாக்கி கொள்வதன் மூலம் உங்களுடன் பிறர் நேரடியாக மோத வாய்ப்பில்லை.

இது தனிப்பட்ட வாழ்வியலுக்கு மட்டுமே. நாடுகளுக்கு இடையிலான போர் என்றால் உங்களின் பெயர் எதிரி நாடுகளின் விமானங்கள் தாங்கிவரும் ஆயுதங்களின் மீது எழுதப்பட்டிருந்தால் ஒன்றும் செய்வதற்கில்லை. எனவே மனிதர்கள் எப்பொழுதும் அமைதியாக இருக்க மாட்டார்கள் அவர்களுக்கு சண்டை போடுவதற்கு ஏதாவது ஒரு காரணம் கண்டிப்பாக வேண்டும். போர் தொடர்ந்து கொண்டே தான் இருக்கும்.

குமரேசன்





ஒருவர் : அந்த டாக்டருக்கு சொந்தக்காரங்கன்னு சொல்லிக்க யாருமே கிடையாது
மற்றொருவர் : ஏன் ?
ஒருவர் : எல்லாருக்கும் அவருதான் ஆபரேஷன் பண்ணினாரு



ரமனன் : பாப்பா, இந்த டிரஸ் தீபாவளிக்கு எடுத்ததா..?
பாப்பா : இல்ல, எனக்கு எடுத்தது..என்ன..,



# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி

பாலு : படகுல ஏறி பார்க்கலாமா?
வேலு : முடியாதே! ஏரியிலதான் படகைப் பார்க்கலாம்.





ரமேஷ் : எத்தனை பெரிய ஆபத்து வந்தாலும் யானை, குதிரை எல்லாம் கத்தாது.
சுரேஷ் : ஏன்?
ரமேஷ் : யானை பிளிறும்! குதிரை கனைக்குமே!



ஆசிரியர் : எங்கே ஆங்கில எழுத்துகளை வரிசையாய் சொல்லு.
மாணவன் : பி, சி, டி, இ, எப்,....
ஆசிரியர் : டேய்! ஏன் முதல் எழுத்து ஏஐ விட்டுட்டே.
மாணவன் : அது வயது வந்தவங்களுக்கு மட்டும் தான் சார்.



அப்பு : டேய்! நான் காட்டுல சிங்கத்தைப் பார்த்தேன். அது மேலே எச்சில் துப்பினேன். பயந்து ஓடிப் போயிடுச்சு.
சுப்பு : அட நானும் காட்டில சிங்கத்தைப் பார்த்தேன். அதோட முதுகுல தடவினப்ப ஈரமா இருந்துச்சு. அது நீ செஞ்ச வேலைதானா?



கோபு : இந்த ஸ்பிரே வாசம் பிணத்துக்கு அடிக்கிறமாதிரி இருக்குது..?
பாபு : அது 'பாடி ஸ்பிரே' அப்படிதான் இருக்கும்..



முட்டாள் கோபு : நேரு ரொம்ப மோசமான ஆளு..எப்படி சொல்றீங்க..?
முட்டாள் பாபு : அவர்தான் ரோஜாவை 'வச்சி'ருக்காரே..



நண்பர் 1 : மொழிப் பிரசினையால என் மகன் ஜெயிலுக்குப் போயிட்டான்.
நண்பர் 2 : மொழிப் போராட்டமா ?
நண்பர் 1 : தேன்மொழியைக் கெடுத்துட்டான்.

# மகத்துவம் மிக்க பரதக்கலைக்கு மகுடம் சூட்டும்

# அரங்க ஆற்றுகைகளை நிகழ்த்துவதே இலட்சியம்

**இந்தியாவின் ஆடல் வகைகளில் ஒன்று பரதநாட்டியம். இக்கலை வடிவம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் உருவாகியது. இந்த நடனத்தை ஆடுபவர்கள் மிகப்பெரும்பான்மையோர் பெண்களேயென்றாலும், ஆண்களும் இதனை ஆடுவதுண்டு. இவ்வாறான ஒருவர்தான் "ஸ்ரீ கைலேஸ்வரன் நாட்டியலயா" நிறுவனரும் ஆசிரியருமான ஜெகநாதன் சஞ்ஜீவன். அவரை அண்மையில் சந்தித்து பேட்டி கண்டபோது அவர் அளித்த தகவல்கள் வருமாறு,**

**● ஸ்ரீ கைலேஸ்வரன் நாட்டியாலயா எப்போது ஆரம்பிக்கப்பட்டது?**

2019ம் ஆண்டு 9ம் மாதம் 29ம் திகதி இலங்கையில் முதன் முதலில் கட்டப்பட்ட சிவஸ்தலம் என போற்றப்படும் மருதானை கபித்தாவத்தை ஸ்ரீ கைலாசநாதர் தேவஸ்தானத்தில் உத்தியோகபூர்வமாக "ஸ்ரீ கைலேஸ்வரன் நாட்டியாலயா" என்ற பெயருடன் தோற்றம் பெற்றது. எனினும் 2015ம் ஆண்டு முதலே ஸ்ரீ கைலாசநாதர் தேவஸ்தானத்திலும், கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவானேஸ்வரர் ஆலயத்தில் அறநெறி வகுப்பில் நடன ஆசிரியராகவும், கொழும்பு விவேகானந்த சபையிலும் வகுப்புக்களை நடாத்தி வந்தேன். அவைகளே "ஸ்ரீ கைலேஸ்வரன் நாட்டியலயாவின் தோற்றத்திற்கான வேர்கள்.

**● ஸ்ரீ கைலேஸ்வரன் நாட்டியாலயா எங்கே இயங்குகின்றது? அதனை நடாத்தி வரும் உங்களைப் பற்றி கூற முடியுமா?**

ஸ்ரீ கைலேஸ்வரன் நாட்டியாலயாவுக்கான நிரந்தரமான ஒரு இடம் இன்னும் அமையவில்லை, அதனால் தற்போது தற்காலிகமாக கொழும்பு விவேகானந்தா சபையில் இயங்கி வருகின்றது.

என்னைப்பற்றி கூறுவதென்றால், எனது பெயர் ஜெகநாதன் சஞ்ஜீவன், பிறந்து வளர்ந்தது கொழும்பில்தான். எனது அப்பா இ.கி.ஜெகநாதன். அம்மா திருமதி சரஸ்வதி ஜெகநாதன். கல்வி கற்றது கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில்



**● நீங்கள் பரதநாட்டியம் எங்கே கற்றீர்கள்?**

முகத்துவாரம் "கிருஷ்ண சிருஷ்டி" ஆடற்களத்தில் குரு நாட்டிய கலைமணி, நாட்டிய வித்தகி திருமதி திலகா மகேஸ்வரனிடம் முறையாக 15 வருடம் நடனக் கலையை கற்றுக் கொண்டேன்.

அதுபோல 2016ம் மெகாபொலிஸ் திட்டத்தின் கீழ் ஒன்றரை வருட டிப்ளோமாவை பூர்த்தி செய்து "நாட்டியசூரத்தா" பட்டம் பெற்றுக் கொண்டேன். அது மட்டுமல்லாமல் கலாநிதி அருந்ததி ஸ்ரீரங்கநாதனின் "அருஸ்ரீ கலையகத்தில்" நாட்டிய கலைஞனாக பணியாற்றும் பாக்கியம் பெற்றேன். மற்றும் அபிநயச்ஷேத்ரா நாட்டியப்பள்ளி இயக்குணர் கலாசூரி திவ்யா சுஜேன் அவர்களிடமும் நட்டுவாங்க மற்றும் நாட்டிய முறைமைகளைக் கற்று வருகின்றேன்.

**● இந்தக் கலையைப் பயில வேண்டும் என்ற ஆர்வம் எவ்வாறு வந்தது?**

ஏன் என்று தெரியாமல் சிறுவயது முதலே எனக்கு ஆர்வம் காணப்பட்டது. பாடசாலையில் சாதாரண தரக்கல்வியை பூர்த்தி செய்யும் வரை முறையாக நடனக்கலையை கற்க ஆரம்பிக்கவில்லை, சாதாரணதர கல்வியை பூர்த்தி செய்த பின்னரே திடீரென நடனக்கலையை முறையாகப் பயில வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது.

**● உங்களிடம் எத்தனை பேர் கற்றுக்கொண்டிருக்கிறார்கள்?**

வேவ்வேறு இடங்களில் நடாத்திய வகுப்புகளில் பல மாணவர்கள் என்னிடம் கற்க வந்தார்கள், இடமாற்றம் போன்ற பல்வேறு காரணங்களால் மாணவர்கள் வெவ்வேறு திசைகளில் சென்றுவிட்டதால் தற்போது ஒரு சில மாணவர்களே என்னிடம் கற்று வருகிறார்கள்.

**● உங்கள் இலட்சியம் அல்லது நோக்கம் என்ன?**

மகத்துவம் வாய்ந்த பரதக்கலைக்கு மகுடம் சூட்டும் வகையில் எனது ஸ்ரீ கைலேஸ்வரன் நாட்டியலயாவை விஸ்தரிப்பதுடன், கலைமீது ஆர்வமுடைய அதனை கற்றுக்கொள்ள சிரமப்படும் மாணவர்களிற்கு முடிந்தளவில் வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்து பல கலைஞர்களை உருவாக்கி பெரியளவிலான அரங்க ஆற்றுகைகளை நிகழ்த்த வேண்டும் மற்றும் ஸ்ரீ கைலேஸ்வரன் நாட்டியாலாயவை உலகறியச் செய்ய வேண்டும் என்பதே எனது இலட்சியம்.

**● இவ்வாறான நடனப் பள்ளி ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் எப்படி வந்தது?**

வெவ்வேறு இடங்களில் பரத நாட்டிய குருவாக என் கடமைகளை செய்துகொண்டிருந்த போது எனது மாணவச் செல்வங்கள் பல தேசிய ரீதியான போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிவாகை சூடிவந்தனர். அதனால் ஏற்பட்ட உத்வேகத்தாலும், எனக்கு பரத நாட்டியத்தின் மீது காணப்பட்ட தீராத காதலாலும் இக்கலையை இன்னும் பல விதங்களில் ஒப்பனை செய்து பார்க்க வேண்டும் என்று ஸ்ரீ கைலேஸ்வரன் நாட்டியாலயாவை உருவாக்க இயலுமை கொண்டேன்.

**● பொதுவாக அரங்கேற்றம் செய்வது என்றால் பாரிய செலவு ஏற்படுமே வறிய பிள்ளைகளால் இதனை கற்றுக்கொள்ள முடியாதா?**

அரங்கப் பிரவேசம் செய்வது என்பது செலவுதான் ஆனால் பின்தங்கிய குடும்ப பின்னணியைக் கொண்டவர்களால் கற்றுக்கொள்ள முடியாது என்று கூறமுடியாது. இதற்கு ஒரு சிறந்த உதாரணம் எனது கலை வாழ்க்கையே. நானும் இன்னும் அரங்கேற்றம் செய்ய வில்லை. ஆனால் இலங்கை தேசிய இளைஞர் விருது வழங்கும் போட்டிகளில் மாகாண ரீதியில் முதலாவது இடத்தையும் தேசிய ரீதியில் இரண்டாவது இடத்தையும் கடந்த வருடம் பெற்றுக்கொண்டேன், அதுமட்டும் இல்லாமல் இலங்கை லயன்ஸ் கிளப் நடாத்திய நடனப் போட்டியில் 3வருட காலமாக தொடர்ந்தும் நானே முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்டேன். நடனம் பயிலும் மாணவர்கள் கட்டாயம் அரங்கேற்றம் செய்வதில்லை. அதுமாத்திரமல்லாது கலையை ஈடுபாட்டுடன் கற்றால் அனைவருக்குமுரிய வாய்ப்புக்களும் தானாகவே அமையும்.

**● இத்துறையில் ஈடுபட விரும்புபவர்களுக்கு நீங்கள் கூறும் ஆலோசனை.**

எந்த விடயமாக இருந்தாலும் அங்கு







சவால்கள் காணப்படும். சவால்களை கடந்து சென்று வெற்றியடைய சுயஆர்வமும், முயற்சியுமே அவசியம். சுயஆர்வம், விடாமுயற்சி இருந்தால் எதனையும் அடையலாம். பரதக் கலையை கற்க அர்ப்பணிப்பும், விடாமுயற்சியும், ஆர்வமும் அவசியம். முழு நேர கலைஞராக சீவிப்பதன் சவால்களை அனைவரும் அறிவர். அதனால் கலையை பயின்றுகொண்டு அதனை போதித்து கொண்டும் என்னை ஒரு நிரந்தரமான தொழிலுக்குள் தக்க வைத்து கொள்வதற்காக இப்போதுவரை போராடிக்கொண்டிருக்கிறேன். இதுவரை 13 தடவைகள் தொழிலை இழந்திருக்கிறேன். நிரந்தரமான தொழிலை பெற்றுக்கொண்டால் கலையை கைவிட வேண்டும் என்ற கட்டாய சூழ்நிலைகளிலெல்லாம் இறுதிமுடிவாக எனக்கு அமைந்தது தொழிலை விட்டு கலையை கைபிடிப்பதே. ஆகவே எதையும் இலகுவாக அடைய முடியாது. ஒவ்வொருவருக்குள் ஏற்படும் அணையாத தீயும், ஆறாத தாகமும் தான் அவர்களது இலட்சியத்தை அடைய வழிநடத்தும். எனவே சவால்களைக் கண்டு மனம் தளராமல் போராடுங்கள்.

**● இதனை நீங்கள் வியாபாரமாக அல்லது வருமானம் பெறுவதற்காக செய்கின்றீர்கள்? அல்லது கலையை வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு செய்கின்றீர்களா?**

வருமானம் பெறும் தொழிலாக நினைத்து கலையை கையில் எடுக்கவில்லை, எனக்குள் ஏற்பட்ட ஆர்வத்தால் கலைக்குள் ஈர்க்கப்பட்ட நான் கலைக்கு பங்காற்றவே இதனை செய்து வருகின்றேன்.

**● பரத நாட்டிய கலையை முழுமையாகக் கற்றுக் கொள்ள எவ்வளவு காலம் எடுக்கும்?**

பரதக் கலை என்பது மகா சமுத்திரம் போன்றது. அதன் ஆழத்தை அளவிட முடியாது. எமது ஜீவன் உள்ளவரை கற்றுக்கொண்டே இருக்கலாம், எனினும் அதன் அடிப்படையை முறையாக கற்று தேர்ந்து கொள்ள வேண்டும் என்றால் 6 வருடகாலமாவது தேவைப்படும்.

**● இதில் எத்தனை பிரிவுகள் அம்சங்கள் இருக்கின்றன?**

நிருத்தம், நிருத்தியம் என இரு பிரிவுகள் உள்ளன. அத்துடன் இந்த இரண்டிலும் நிறைய பிரிவுகள் உள்ளடங்குகின்றன. உடல் அசைவுகள், பாத அசைவுகள் அபிநயங்கள், பாவங்கள், இராக பாவங்கள், லயம், ஜதி, பிரயோகங்கள் என பல உண்டு.

**● கையசைவுகள் அல்லது முத்திரைகள் பற்றி விளக்கமளியுங்கள்.**

இவை பரத நாட்டியத்தில் குறியீட்டு பிரயோகங்களாக காணப்படுகின்றன. இவை கருத்துக்களாக நேரடி அர்த்தங்களை வெளிப்படுத்தும். வாய்பேசாமல் கைகளினாலேயே எதையும் வெளிப்படுத்தும் ஒரு பூரணமான மௌன மொழியே முத்திரைகள் எனப்படும்.

**● பரத நாட்டியத்தில் உள்ள சிறப்பு அம்சங்கள் என்ன?**

இது ஒரு தெய்வீகமான கலை. இதனை கற்பவர்கள் தனித்தவமாக தெரிவார்கள். ஆரோக்கியமானவர்களாகவும் சுறுசுறுப்பானவர்களாகவும் திகழ்வார்கள். இவர்களால் வாழ்வில் மகிழ்வு நிறைந்தவர்களாக வாழ முடியும்.

**● இக் கலையை கட்டாயமாக நாம் கற்றுத் தான் ஆக வேண்டுமா? காரணம் என்ன?**

இக் கலையை கட்டாயமாக கற்க முடியாது. உண்மையாக கலைமீது காதல் கொண்டவரால் மட்டுமே இக் கலையை கற்க முடியும்.

**● பல்கலைக்கழக அளவில் மேற்படிப்பு படிக்க இதில் வாய்ப்பு உள்ளதா?**

நிச்சயமாக உள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணம் இராமநாதன் நுண்கலைப்பீடம் உள்ளது. அத்துடன் மட்டக்களப்பு விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம் உள்ளது. கொழும்பு பல்கலைகழக கட்புலகலைப்பீடம் உள்ளது. அத்துடன் இக்கற்கை நெறியில் கலாநிதி பட்டம் பெறும் அளவிற்கு பல்கலைக்கழகங்களில் வாய்ப்புக்கள் உள்ளன. அது மட்டுமல்லாமல் இந்தியாவில் சென்றும் இத்துறை சார்ந்த மேற்படிப்புக்களை படிக்க முடியும்.



ராஜ்குமார் அருணி, பாலகிருஷ்ணன் ருக்சிகா சிவபாலன் கிஷாமிகா, வாமதேவன் தீஷ்ஷா சுரேஷ்குமார் அம்சிதா, திருச்செல்வம் தனுகா சுரேஸ் ருஷ்மிதா, சசிகுமார் விஷ்னுகா ரவீந்திரன் யுவேதா

**● பரதநாட்டிய அடவுகள் என்று சொல்வார்களே அதைப் பற்றி விளக்கமளியுங்கள்.**

அடவு என்பது பரத நாட்டிய கலையின் ஜீவநாடி போன்றதொரு ஆதார உறுப்பாகும். இதனை அடிப்படையில் ஒழுங்காக கற்றால்தான் மேலே செல்லும் போது நடன உருப்படிகளை அங்க சுத்தமாகவும் தாள கட்டுப்பாடுகளுடனும் ஆடமுடியும். இவர்களின் பின்னிணைப்பு மற்றும் விஸ்தரிப்பக்கள் உருப்படிகளாக பரிணாமிக்கின்றன.

**● நாட்டிய கலைஞர்களின் முகபாவனையில் நவரசங்களின் பாவங்களையும் வெளிக்கொண்டுவருதலை "காலம்" என்று கூறுகிறார்களே! இதனைப் பற்றி உங்கள் கருத்து என்ன?**

ஒரு நர்த்தகி அல்லது நர்த்தகன் தம் முகத்தின் மூலம் கருத்தினை வெளிப்படுத்தும்போது அது உருப்படி அல்லது இராகத்திற்கு சந்தர்ப்பத்திற்கும் ஏற்றது போல் முகத்தில் தோன்றும் மாறுபாடுகள் அபிநயங்கள், பாவம் என்று சொல்லப்படுகின்றன. இவை பல வகைப்படும். அவற்றுள் நவரசம் உண்டு. அத்துடன் ஒவ்வொருவருக்கும் தோன்றும் ரசங்கள் வித்தியாசப்படும். ஒரே ரசம் வெவ்வேறு நபர்களிடையே வித்தியாசமாக வெளிப்படும் இது இயல்பு. மற்றும் அவர் தன் குருவிடம் ஆத்மார்த்மாக கற்று அதை அவரின் உள்ளுணர்வோடு வெளிப்படுத்தும் போது அது ஒரு சிறந்த ரசத்தை உண்டாக்கும். பார்ப்பவர்களுக்கும் இலகுவில் புரியும்.

**● தாளலயம், அலாரிப்பு, 8 தட்டடவுகள், 4 வகை அபிநயங்கள் என்றெல்லாம் கூறப்படுகின்றதே. அது பற்றி விளக்கம் அளிக்க முடியுமா?**

எட்டுவகை அடவுகள் பரத நாட்டியத்தின் அடிப்படை பயிற்சிக்கு உரியன. இதனை முறையாக பயிற்சி செய்தால்தான் பரத நாட்டியத்தை மேலும் மேலும் பயில முடியும். அத்துடன் பரத நாட்டியத்தில் உருப்படி வகைகள் காணப்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் படிப்படியாக வளர்ச்சியடைந்து செல்லும் போக்கினை காணலாம். அதாவது ஆரம்பத்தில் நிருத்த வகை சார்ந்த அலாரிப்பு இடம்பெறும். அது நமது ஆரம்ப உருப்படியாக காணப்படுகின்றது. இது நிருத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஆரம்ப கட்ட உருப்படியாகும். அதனைத் தொடர்ந்து ஜதீஸ்வரம் பின்னர் நிருத்தியம் இணைந்து சப்தம் இடம்பெறும். தொடர்ந்து பரதத்தின் உயிர்நாடியான வர்ணம் நிருத்தம், நிருத்தியம் இரண்டையும் முதன்மைப்படுத்தி இதிலே ஆடப்படும். அனைத் தொடர்ந்து கீர்த்தனை, பதம் தில்லானா என உருப்படிகள் இடம்பெறும்.

**● இத்துறையில் ஈடுபடுவதால் நமக்கு ஏதாவது முன்னேற்றம் ஏற்படுமா?**

நிச்சயமாக முன்னேற்றம் ஏற்படும். அதனை நாம் கற்று சிறிது காலத்திலேயே உணர முடியும். இதனை நாம் எப்படி தேர்ந்து எடுத்துக் கொள்கிறோமோ அதற்கமைய அதன் பயன் நம்மை வந்தடையும்.







கே.ஈஸ்வரலிங்கம்

Senthooram செந்தூரம்



# கேரளத்து ஐஸ்வர்யா ராய்



இவன் வேற மாதிரி திரைப்படத்தின் மூலம் தமிழ் சினிமாவிற்கு அறிமுகமானவர் நடிகை மாளவிகா மேனன்.

இதுவரை தமிழ் மற்றும் மலையாள படங்களில் மட்டுமே நடித்து வந்த இவர் தற்போது தெலுங்கில் நடிக்க தொடங்கியுள்ளார்.

பேய் மாமா, அருவா சண்டை உள்ளிட்ட தமிழ் படங்களில் நடித்து வரும் மாளவிகா மேனன் இப்போது வெளியிட்டுள்ள புகைப்படத்தை பார்த்த ரசிகர்கள் கேரளத்து ஐஸ்வர்யா ராய் என புகழ்ந்துள்ளனர்.

மலையாளத்தில் வெளியான நித்ரா என்ற திரைப்படத்தில் நடித்து திரைத்துறைக்கு அறிமுகப்படுத்தப்பட்டவர் நடிகை மாளவிகா மேனன் தமிழ் சினிமாவிலும் பிரபலமான நடிகையாக உள்ளார். விக்ரம்பிரபு நடிப்பில் வெளியான இவன் வேற மாதிரி படத்தில் ஹீரோயினுக்கு தங்கையாக நடித்து வந்த இவருக்கு அடுத்த படத்திலேயே ஹீரோயின் வாய்ப்பு கிடைத்தது.

விழா என்ற படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் கதாநாயகியாக அறிமுகமான மாளவிகா மேனன் அதைத் தொடர்ந்து வெத்து வேட்டு, பிரம்மன், நிஜமா நிழலா ஆகிய படங்களில் நடித்திருந்தார். தமிழில் தொடர்ந்து வாய்ப்புகள் கிடைக்காததால் மலையாளத்தில் அசுர வேகத்தில் நடித்துக் கொண்டிருந்தவருக்கு இப்பொழுது தெலுங்கில் பல வாய்ப்புகள் குவிந்து வருகின்றன.

இதுவரை தமிழ் மற்றும் மலையாளத்தில் மட்டும் நடித்துக்கொண்டிருந்த மாளவிகா மேனன் அம்மாயிலு அந்தே அதே டைப் படத்தில் நடித்து டோலிவுட்டுக்கு அறிமுகமாக அதைத் தொடர்ந்து வந்தனம் என்ற மற்றொரு தெலுங்கு திரைப்படத்திலும் ஒப்பந்தமாகி இருக்கிறார்.

தமிழில் தற்போதைக்கு பேய் மாமா, அருவா சண்டை உள்ளிட்ட படங்களில் நடித்து வரும் மாளவிகா மேனன் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ள புகைப்படங்கள் இப்போது வைரல் ஆகியுள்ளது. அதில் கருப்பு பாவாடை தாவணியில் சிக்கென்று இருக்கும் இடையைக் காட்டி கொண்டு எடுத்த புகைப்படங்களை வெளியிட்ட மாளவிகாவை ரசிகர்கள் கேரளத்து ஐஸ்வர்யா ராய் என புகழ்ந்துள்ளனர்.

# 6 அடி Action Heroக்கு ப்ரியா பவானி சங்கரா?



நடிகை ப்ரியா பவானி சங்கர் சிம்பு, கௌதம் கார்த்திக் நடிக்கும் பத்து தல திரைப்படத்தில் கதாநாயகியாக நடித்து வருகிறார்.

இந்தியன் 2, பத்து தல, ருத்ரன் பொம்மை, ஹாஸ்டல், ஓ மணப் பெண்ணே, என ஒரு டஜன் திரைப்படங்களில் படு பிஸியாக நடித்து வருகிறார் ப்ரியா பவானி சங்கர்.

இந்தநிலையில் முன்னணி அக்சன் ஹீரோவின் திரைப்படத்தில் கதாநாயகியாக நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

மிகப்பெரிய பொருட்செலவில் இயக்குனர் ஷங்கரின் இயக்கத்தில் கமல்ஹாசன் நடித்து வரும் இந்தியன்2 மிகப்பெரிய பொருட்செலவில் உருவாகி வருகிறது. இந்த திரைப்படத்தை லைகா நிறுவனம் தயாரிக்க ப்ரியா பவானி சங்கர் இதில் நடித்து வருகிறார்.

இந்தியன்2, ஓமணப்பெண்ணே பத்து தல, பொம்மை, ருத்ரன் உள்ளிட்ட படங்களிலும் நடித்து வருகிறார்.

மலையாளத்தில் மாபெரும் வெற்றி பெற்ற "அடி கப்யாரே கூடமணி" திரைப்படத்தின் தமிழ் ரீமேக் ஹாஸ்டல் படத்தில் நடித்து வரும் ப்ரியா பவானி சங்கர் இதில் முதல்முறையாக அசோக் செல்வனுக்கு ஜோடியாக நடித்துள்ளார். இதன் படப்பிடிப்பு சமீபத்தில் முடிவடைந்துள்ளது ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியானது.

இவ்வாறு தமிழ் சினிமாவில் மிக விரைவிலேயே முன்னணி நடிகையாக வலம் வர இருக்கும் இவருக்கு தொலைக்காட்சியிலிருந்தே மிகப் பெரிய ரசிகர் பட்டாளம் இருக்க இப்பொழுது திரைப்படங்களிலும் கலக்கிக் கொண்டிருக்கும் ப்ரியாவுக்கு தெலுங்கிலும் வாய்ப்புகள் குவிந்து வருகிறது.

இந்தநிலையில் அடங்கமறு திரைப்படத்தை இயக்கிய கார்த்திக் தங்கவேலு அடுத்து இயக்கும் அக்சன் திரைப்படத்தில் விஷால் கதாநாயகனாக நடித்த ப்ரியா பவானி சங்கர் ஜோடியாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இதை 5 ஸ்டார் கதிரேசன் தயாரிக்கிறார். விஷால் ப்ரியா பவானி சங்கர் முதல் முறையாக இணையும் இந்த திரைப்படத்தின் படப்பிடிப்பு வரும் ஜூன் மாதம் தொடங்கப்பட உள்ளது.

# அம்சமான நடிகை



முன்னணி நடிகையான காஜல் தனது இன்ஸ்டா கிராம் பக்கத்தில் மன அழுத்தத்தில் இருந்து விடுபட அருமையான யோசனை கூறியுள்ளார். படப்பிடிப்பில் பிஸியாக இருந்த நடிகர் ,நடிகைகள் ஊரடங்கால் வீட்டில் இருந்து வருகின்றனர்.

இதனால் பலர் மன அழுத்தத்திற்கு ஆளாகின்றனர். இதற்கு காஜல் அகர்வால் யோசனை ஒன்றை கூறியுள்ளார்.'

பாரதி ராஜாவின் இயக்கத்தில் உருவாக பொம்மலாட்டம் திரைப்படத்தின் மூலம் திரைத்துறையில் அறிமுகமான காஜல் அகர்வால், அம்சமான நடிகை என பெயர் எடுத்த இவர், அஜித், விஜய், சூர்யா என முன்னணி நடிகர்களின் படங்களில் நடித்து வருகிறார்.

தமிழ் , தெலுங்கு, இந்தி படங்களில் நடித்து வந்த இவருக்கு தெலுங்கில் வெளியான மஹதீரா திரைப்படம் மிகப்பெரிய வெற்றிப்படமாக அமைந்தது. அதைத்தொடர்ந்து அப்படம் மொழி மாற்றம் செய்யப்பட்டு மாவீரன் என்ற பெயரில் வெளியானது தமிழிலும் இப்படம் வெற்றி பெற்றதால் தமிழில் இவருக்கு பட வாய்ப்பு குவியத் தொடங்கியது.

அண்மையில் இவர், கௌதம் என்பரை திருமணம் செய்து கொண்டார். இவர் சங்கர் இயக்கத்தில் உருவாகி வரும் இந்தியன் 2வில் கமலஹாசனுக்கு ஜோடியாக நடித்து வருகிறார். மேலும், துல்கர் சல்மானின் ஹே சினாமிக்காவிலும் நடித்து வருகிறார். இவர் கடைசியாக லைவ் டெலிகாஸ்ட் என்ற வெப் தொடரிலுல் நடித்துள்ளார்.

தற்போது கொரோனாவின் 2வது அலை இந்தியாவையை குலுக்கி வருகிறது. இதனால் தொற்று மேலும் பரவாமல் இருக்க இரவு நேர ஊரடங்கு, ஞாயிற்றுக்கிழமை முழு ஊரடங்கு மற்றும் திரையரங்குகள் மூடல் என புது கட்டுப்பாடுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதனால் படங்களில் பிசியாக நடித்த நடிகர் நடிகைகள் வீட்டில் தற்போது ஓய்வெடுத்து வருகின்றனர். வீட்டில் இருப்பது மிகவும் சிரமமாக இருப்பதாக அவர்கள் பதிவிட்டுள்ளனர்.

இந்நிலையில், நடிகை காஜல் அகர்வால், தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், உல்லன் நூல் மற்றும் ஊசியை பதிவிட்டுள்ளார். அதில், நிலைமை மிகவும் கடுமையானதாக இருக்கிறது. இந்த நேரத்தில் நம்மைச் சுற்றி நடக்கிற நிகழ்வு நம்மை பதற்றம் அடைய செய்கிறது. இந்த நேரத்தில் நம் கவனத்தை வேறு திசையில் மாற்றி பிடித்ததை செய்யுங்கள் என்று கூறியுள்ளார். மேலும், நான் பின்னலை கையில் எடுத்துள்ளேன், அது எனக்கு ஓய்வெடுக்க உதவுகிறது. அதாவது மன அழுத்தத்தை குறைக்கிறது என்று கூறியுள்ளார்.

# என்ஜோய் எஞ்சாமி




'குக்கூ குக்கூ' என்று குருவிகள் கூவுகின்றனவோ இல்லையோ...

பலரின் திறன்பேசிகள் கூவுகின்றன. காரணம்? அண்மையில் வெளியாகிப் பலரின் கவனத்தை ஈர்த்துள்ள "எஞ்சாய் எஞ்சாமி" பாடல்.

இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயண் தயாரிப்பில் வெளியாகியுள்ள அந்தப் பாடலின் காணொளி, YouTubeஇல் இதுவரை சுமார் 55 மில்லியன் முறை பார்க்கப்பட்டுள்ளது. ஏ. ஆர். ரஹ்மானின் Maajja நிறுவனத்தின் கீழ் அந்தப் பாடல் வெளியிடப்பட்டுள்ளது. சுயேச்சை இசைக் கலைஞர்களுக்கு ஆதரவு அளிக்கவும் அவர்களை ஊக்குவிப்பதற்காகவும் அந்த நிறுவனம் துவங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

"எஞ்சாய் எஞ்சாமி" பாடலுக்கு உயிர் கொடுத்தது அதைப் பாடிய பின்னணிப் பாடகி தீ (Dhee). அவர் "ரௌடி பேபி", "காட்டுப் பயலே" ஆகிய பிரபல தமிழ் திரைப்பாடல்களைப் பாடியவர். பாடலை எழுதியவர் சொல்லிசைக் (Rap) கலைஞர் அறிவு.

"எஞ்சாய் எஞ்சாமி" பாடலில் இயற்கையைப் பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவம், முன்னோர்களின் உழைப்பு, இந்தியாவிலுள்ள சமூகப் பிரச்சினைகள் ஆகியவை இடம்பெற்றுள்ளன. பாரம்பரியத் தமிழ் மரபின் அடையாளங்களாகத் திகழும் ஒப்பாரி, குலவை ஆகியவற்றை இளையர்களுக்குப் பிடித்த சொல்லிசையுடன் இணைக்கும் பாடல் இது என்று இணையரசிகர்கள் புகழ்கின்றனர். திரைப்படப் பாடல்களைத் தாண்டி, தனிப் பாடல்கள் மூலமாகவும் தமிழ் மக்களின் மனத்தைக் கவர முடியும் என்பதற்கு இந்தப் பாடல் சான்றாக இருப்பதாக இணையரசிகர்கள் கூறுகின்றனர்.

குக்கூ குக்கூ
தாத்தா தாத்தா களவெட்டி
குக்கூ குக்கூ
பொந்துல யாரு மீன் கொத்தி
குக்கூ குக்கூ
தண்ணியில் ஓடும் தவளக்கி
குக்கூ குக்கூ
கம்பளி பூச்சி தங்கச்சி
அள்ளி மலர்க்கொடி அங்கதமே
ஓட்டரே ஓட்டரே சந்தனமே

முல்லை மலர்க்கொடி முத்தாரமே
எங்கூரு எங்கூரு குத்தாலமே
சுருக்கு பையம்மா
வெத்தலை மட்டையம்மா
சொமந்த கையம்மா
மத்தளம் கோட்டுயம்மா
தாயம்மா தாயம்மா
என்ன பண்ண மாயம்மா
வள்ளியம்மா பேராண்டி
சங்கதியை கூறேண்டி


கண்ணாடியே காணோடி
இந்தர்ரா பேராண்டி
அன்னைக்கிளி அன்னைக்கிளி

அடி ஆலமரக்கிளை வண்ணக்கிளி
நல்லபடி வாழச்சொல்லி இந்த
மண்ணை கொடுத்தானே பூர்வகுடி
கம்மங்கரை காணியெல்லாம்
பாடி திரிஞ்சானே ஆதிக்குடி
நாய் நரி பூனைக்கெல்லாம்
இந்த ஏரிகுளம் கூட சொந்தமடி
Enjoy எஞ்சாமி
வாங்கோ வாங்கோ ஒன்னாகி
அம்மா ஏ அம்பாரி
இந்த இந்த மும்மாரி
Enjoy எஞ்சாமி

வாங்கோ வாங்கோ ஒன்னாகி
அம்மா ஏ அம்பாரி
இந்த இந்த மும்மாரி
குக்கூ குக்கூ
முட்டைய போடும் கோழிக்கு
குக்கூ குக்கூ
ஒப்பனை யாரு மயிலுக்கு
குக்கூ குக்கூ
பச்சையை பூசும் பாசிக்கு
குக்கூ குக்கூ
குச்சிய அடுக்குனே கூட்டுக்கு

# பித்ரா கொடுப்போம்!
# ஈதுல் பித்ரை வரவேற்போம்!

**இறை அருளையும் பாவ விமோசனத்தையும் அடைய ரமழான் எனும் விஷேட மகத்துவமான மாதத்தை வழியனுப்பி வைத்து கவலையில் ஆழ்ந்த இறை விசுவாசிகளுக்கு ஆறுதலாகவும் மகிழ்ச்சியாகவும் இறைவன் வழங்கிய மாண்பு மிக்க தினமே புனித நோன்புப் பெருநாள் தினமாகும்.**




கொரோனா வைரஸ் பரவல் காரணமாக, அதிலிருந்து எம்மையும் சமூகத்தையும் பாதுகாக்க இந்த வருடம் நோன்புப் பெருநாளை வீடுகளிலேயே கொண்டாடுவோம்.

புனித ரமழான் மாதத்தில் பகல் முழுவதும் நோன்பு நோற்று, இரவெல்லாம் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு வந்த முஸ்லிம்கள் ஷவ்வால் மாத தலைப்பிறை தென்பட்டவுடன் ஈதுல் பித்ர் எனும் ஈகைத் திருநாளை குதூகலமாக கொண்டாடுகின்றனர்.

ரமழானில் நன்மைகளைக் கொள்ளையிட்ட உள்ளங்கள் ஷவ்வால் மாத தலைப் பிறையுடன் ரமழானுக்கு விடை கொடுத்து விட்டு நோன்புப் பெருநாள் குதூகலத்தில் திளைக்கின்றன.

பெருநாள் தினம் என்பது சிறியோர், பெரியோர், ஏழை, பணக்காரன், முதியவர் என்ற எவ்வித பாகுபாடும் இன்றி மகிழ்ச்சியுடன் கழிக்கக் கூடிய தினமாகும். இப்பெருநாள் தினத்தில் நோன்பு நோற்பதை தடுத்துள்ள இஸ்லாம் அல்லாஹ்வின் உவப்புக்குரிய வழிகளில் பெருநாளைக் கொண்டாட வழிகாட்டியுள்ளது.

பெருநாள் தினம் அல்லாஹ்வை ஞாபகமூட்டக் கூடிய, அவனைப் புகழக் கூடிய தினமாக இருக்க வேண்டுமே தவிர நற்செயல்களுக்கு மூட்டை கட்டும் தினமாக அமையலாகாது.

ஈதுல் பித்ர் பெருநாளில் அதிகமானளவு நன்மைகளை செய்ய நாம் முன்வர வேண்டும். நாம் மட்டும் பெருநாளைக் கொண்டாட அயல் வீட்டார் பெருநாளைக் கொண்டாட வசதியற்றவனாக இருப்பானேயானால் நாம் கொண்டாடும் பெருநாளில் என்ன தாற்பரியம் உண்டு என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

நோன்புப் பெருநாளுக்கு ஒவ்வொரு முஸ்லிமும் தயாராகும் போது பித்ரா (தர்மம்) கொடுப்பதைக் கொண்டே தயாராக வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். நோன்புப் பெருநாள் தர்மம் நோன்பின் போது ஏற்பட்ட தவறுகளுக்குப் பரிகாரமாகவும் ஏழை, எளியவர்கள் பெருநாள் தினத்தில் பசி, பட்டினியோடு இருக்கக் கூடாது என்ற நோக்கங்களின் அடிப்படையிலும் கடமையாக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் பெருநாள் தினம் தனித்துவமானதாகவும் முன்மாதிரியானதாகவும் அமைய வேண்டுமென்று இஸ்லாம் எதிர்பார்க்கின்றது.



முஸ்லிம்கள் இந்த நாட்டில் தனியாக வாழ்பவர்கள் அல்லர். நாம் பெரும்பான்மை சமூகங்களுடன் இரண்டறக் கலந்தே வாழ்கிறோம். எனவே அவர்களின் உணர்வுகளை மதிக்க வேண்டும். அவர்கள் ஆவேசப்படுகின்ற, ஆத்திரப்படுகின்ற சூழ்நிலைகளை நாம் உருவாக்கக் கூடாது.

இஸ்லாம் இம்மை, மறுமை பயன்களை அடைந்துகொள்ளக் கூடிய வகையில் பெருநாளைக் கொண்டாட வழிகாட்டியுள்ளது.

வறிய மக்களின் துயர் துடைக்கும் பித்ரா என்ற கடமையுடன் பெருநாள் தொடங்குவதன் காரணமாகவே பித்ர் என்ற வார்த்தையுடன் சேர்ந்து ஈதுல் பித்ர் என்று இப்பெருநாள் அழைக்கப்படுகின்றது. பெருநாள் தினத்தில் இரவு, பகல் இரண்டு வேளைகளுக்கு தனக்கும் தனது பராமரிப்பிலுள்ள குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் போதுமான அத்தியாவசிய வாழ்க்கை வசதிகளையுடைய ஒவ்வொரு முஸ்லிமும் இத்தகைய வசதிகள் அற்ற அல்லது வசதிகள் குறைந்த ஏழைகளுக்கு கட்டாயமாகக் கொடுப்பதற்குரிய நன்கொடையே ஸகாதுல் பித்ர் எனப்படும்.

பெருநாள் தினத்தன்று சகல முஸ்லிம்களும் சந்தோஷமாக உண்டு மகிழ வேண்டும், எவரும் பசியுடன் இருக்கக் கூடாது என்ற சமுதாய நோக்கு முதலாவதாகவும், பித்ராவை வழங்கும் ஒவ்வொருவரும் ரமழான் மாதத்தில் விட்ட தவறுகளுக்குப் பரிகாரமாகவும் ஸகாதுல் பித்ர் இருப்பதனால் நோன்பாளிகள் பரிசுத்தவான்களாக மாறுவதனால் தனிநபர்கள் நன்மை பெறுவது இரண்டாவது நோக்கமாகவும் திகழ்கின்றது.

ஒவ்வொரு முஸ்லிமின் செயல்கள் மற்ற சகோதர முஸ்லிம்களின் சுகதுக்கங்களில் பங்குபற்றக் கூடிய விதத்தில் அமைந்திருக்க வேண்டும். இந்த உண்மையை ஸகாதுல் பித்ர் அமைப்பு முறையிலும் காணக்கூடியதாக உள்ளது.

பெருநாள் தினத்தில் நாங்கள் எல்லோரும் அதிகாலையில் குளித்து, புத்தாடைகள் அணிந்து, நறுமணம் பூசி, அறுசுவை உணவுகளை உண்டு மகிழ்கின்றோம் அல்லவா? இதே போன்று அன்றைய தினத்தில் நாம் பின்பற்றி நடக்க வேண்டிய நபி வழியில் வந்த செயற்பாடுகளும் உண்டு.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினர், பள்ளிவாசல்களுக்கு விடுத்துள்ள கொவிட் 19 கட்டுப்பாடுகளை கண்டிப்பாக இத்தருணத்தில் ஏற்று நடத்தல் அவசியம்.

தற்போது கொரோனா வைரஸ் பரவல் காரணத்தால் கண்டிப்பாக சுகாதார வழிகாட்டல்களை முற்று முழுதாக பின்பற்ற வேண்டும்.

இலங்கையில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்களாகிய நாம் எமது பெருநாளின் சிறப்புக்களை மாற்று மதத்தவர்களுடன் பகிர்ந்துகொள்வதில் எந்தத் தவறுமில்லை. அவ்வாறு நாம் முன்மாதிரியாக நடந்து கொள்ளும் போதுதான் இந்த நாட்டில் இன நல்லுறவைக் கட்டியெழுப்ப முடியும். ஒருவருக்கு இருக்கும் உரிமைகளும் மத, கலாசார கொள்கைச் சுதந்திரங்களும் தொழில் நடவடிக்கைகளும் இன்னுமொருவருக்கு இடைஞ்சலாக இருக்க முடியாது என்பது ஜனநாயக தத்துவங்களில் ஒன்றாகும். அண்மைக்காலமாக நாம் கட்டிக்காத்து வந்த இன நல்லுறவுச் செயற்பாடுகள் பல்வேறு சிக்கல்களை, இன விரோதங்களை அரசியல் மட்டத்தில் ஏற்படுத்தி வருவதால் இப்பெருநாள் தினங்களில் மிகுந்த அவதானத்தோடும் பொறுப்புணர்வோடும் குரோதம், விரோதம் ஏற்படாத வகையில் புரிந்துணர்வையும் சக வாழ்வையும் இப்பெருநாள் ஏற்படுத்த அல்லாஹ் அருள் புரியவேண்டும்.

மேலும் இலங்கையில் வாழும் சிறுபான்மை முஸ்லிம்களாகிய நாம் பெரும்பான்மையினருடனும் ஏனைய சிறுபான்மை சமூகங்களுடனும் சமாதானமும் சகவாழ்வும் இனங்களுக்கிடையே சகிப்புத் தன்மையும் புரிந்துணர்வும் மேலோங்குவதற்கு ஏற்ப செயற்படுவோம்.



**பரீட் இக்பால்**
**யாழ்ப்பாணம்**


# செல்ஃபி உலா


டார்வின் வத்தளை


யு.எல்.எம் சஜீத், திருகோணமலை


தினேஸ் சங்கரில்லா ஹோட்டலில்


கிரிஷாந்தினி வத்தளை


சந்திரமோகன் அரோமா உணவகத்தில்


சாரிக் அமீன்

தினகரனின் செந்தூரம் இதழின் செல்பிஉலா பக்கத்தில் உங்களது செல்பிக்களும் இடம்பெற விரும்பினால் selfiulla@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு படத்தையும் விபரங்களையும் அனுப்பி வையுங்கள். செல்பிக்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.


மேரி ஸ்ரெல்லா


ஜோன்சன் ஞானசீலி


பலாச்சோலை கோயிலிலிருந்து யதீஸ், பாரி, விது மற்றும் தினேஷ்


ரஜனி முகத்துவாரம்

## எல்பர்ட் ஐன்ஸ்டைன்

சார்பியல் கோட்பாடு






## வழி காட்டுங்கள்



## நிறம் தீட்டுங்கள்



## 8 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



# தொடர்ச்சியாக நிராகரிக்கப்பட்டும் தளராமல் முன்னேறிய அலிபாபா உரிமையாளர் ஜாக் மா

**அமெரிக்காவில் பில்கேட்ஸ், இந்தியாவில் முகேஷ் அம்பானி போன்றவர்கள் எப்படி கஷ்டப்பட்டு முன்னேறி முன்மாதிரி நாயகர்களாக பேசப்படுகிறார்களோ அதே போலவே சீனாவில் ஜாக் மா [Jack Ma] வும் ஆதர்ச நாயகனாக உலகில் பெரிய பணக்காரர்களில் ஒருவராக மாறியவர். வெறும்கையுடன் வாழ்க்கையை ஆரம்பித்து ஆன்லைன் உலகை ஆட்டிப்படைத்துவரும் அலிபாபா என்ற நிறுவனத்தை தனது கடும் முயற்சியினால் கட்டமைத்தவர்தான் இவர். அலிபாபா நிறுவனர் ஜாக் மா பல நிராகரிப்புகளை தனது வாழ்க்கையில் சந்தித்து இருக்கிறார்.**




அக்டோபர் 15, 1964 ஆம் ஆண்டு ஹாங்செள என்ற இடத்தில் தான் ஜாக் மா பிறந்தார். இவருக்கு ஒரு அண்ணன் மற்றும் ஒரு தங்கை உண்டு. இவர்களின் இளமைக்காலத்தில் செல்வசெழிப்பான குடும்பமாக இவர்களது குடும்பம் இருக்கவில்லை. ஜாக் மா நன்றாக படிக்கக்கூடிய மாணவனும் இல்லை. ஆகவே பாடசாலை படிப்புகளை சில வகுப்புகளை இரண்டு மூன்று முறை படித்துதான் கரையேறினார். ஒருவழியாக படிப்பை முடித்துவிட்டு வேலைக்கு செல்லலாம் என்றால் வேலையும் அவ்வளவு எளிதாக கிடைக்கவில்லை. KFC இல் பணிக்கு விண்ணப்பித்த 24 பேர்களில் இவருக்கு மட்டும் வேலை கிடைக்கவில்லை .

படிப்பில் கெட்டிக்காரராக இல்லாவிட்டாலும் கூட கல்வி ஒன்று தான் ஒருவரை உயர்த்தும் என்பதில் அதித நம்பிக்கை கொண்டிருந்தார் . அதேபோல ஆங்கில மொழி கற்றுக்கொள்வதிலும் அவர் ஆர்வத்தோடு பங்கேற்றார். இந்த ஆர்வத்தின் காரணமாக ஹாங்செள வில் இருக்கும் ஒரு ஆசிரியர் பயிற்சி மையத்தில் சேர விண்ணப்பித்தார். படித்து முடித்துவிட்டு வெளியே வந்த அவர் ஆங்கில ஆசிரியராக சில ஆண்டுகள் பணியாற்றினார். அப்போது அவருக்கு சம்பளம் 10 டொலர்கள் தான். இவரிடம் பல மாணவர்கள் சிறப்பாக பயிற்சி பெற்று வெளியேறினார்கள். இதன் தொடர்ச்சியாக சியாங் காங் பல்கலைக்கழகத்தில் மேற் படிப்பையும் முடித்தார் ஜாக் மா.





1994 ஆம் ஆண்டு ஜாக் மா விற்கு இண்டெர்நெட் பற்றிய அறிமுகம் கிடைக்கிறது. இண்டெர்நெட் உலகில் மிகப்பெரிய மாற்றத்தை உண்டாக்கப்போகிறது என நினைத்த இன்றைய ஜாம்பவான்களில் ஒருவர் ஜாக் மா வும் ஒருவர். ஆம் அவர் இண்டெர்நெட் மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்தப்போகிறது என நம்பினார். நம்பியதோடு மட்டுமில்லாமல் அது பற்றி கற்றுக்கொள்ள ஆரம்பித்தார், நண்பர்கள் உதவியோடு அமெரிக்காவிற்கு சென்று கற்றுக்கொண்டார். அப்போதைய ஆரம்ப கால கூகுள் நிறுவனத்தில் Google Search இல் சீனா பற்றிய தகவல்களை தேடிப்பார்த்தார் ஜாக் மா. ஒரு தகவலும் கிடைக்கவில்லை, காரணம் எவரும் அதுபற்றிய தகவல்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்துவைக்கவில்லை.

ஜாக் மா இண்டெர்நெட் துறையில் இறங்கலாம் என முடிவெடுத்தபோது பலர் அவரது முடிவை ஒரு முட்டாள்தனமான முடிவு என விமர்சித்தார்கள். ,இருந்தும் அந்த முயற்சியில் இறங்கிய அவர் கடன் வாங்க வங்கியிடம் முயற்சித்தபோது அதிலும் தோல்வியே மிஞ்சியது. பிறகு 18 தனியார் முதலீட்டாளர்களிடம் இருந்து பெற்ற $50,000 உடன் நிறுவனம் துவங்கப்பட்டது. மிகவும் கடுமையாக உழைத்தார் ஜாக் மா, அதற்கு காரணம் இருந்தது. அவர் மட்டுமே இது வெற்றி அடையும் என நம்பிக்கை கொண்டிருந்தார்.

முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு டாலர் கூட வருமானம் கிடைக்கவில்லை என கூறும் ஜாக் மா ஆனாலும் இந்த நிறுவனத்தை நடத்துவதற்கு காரணம் இருக்கிறது, நான் கொண்ட நம்பிக்கை வீண் போகாது என நம்புவதற்கு காரணம் இருக்கிறது. இவரது இணையதளத்தின் மூலமாக தகவல்களை பெற்றவர்கள் பெரும் நன்மை அடைந்திருந்தார்கள். அவர்களில் நிறையபேர் நன்றி சொல்லி ஜாக் மா விற்கு மின்னஞ்சல்களை அனுப்பி வந்தனர்.

ஆரம்ப காலத்தில் அலிபாபா, சீனாவில் இருக்கும் பல்வேறு நிறுவனங்கள் சந்திக்கிற பிரச்சினைகளை சரிசெய்திட உதவுகிற நிறுவனமாக தனது பயணத்தை துவங்கியது, பின்னர் உலக அளவில் இதன் நீட்சி அதிகரித்தது. தற்போது அலிபாபா பல்வேறு கிளை நிறுவனங்களுடன் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.

இளைஞர்களுக்கு செய்தியாக ஜாக் மா சொல்வது என்னவென்றால் நீங்கள் மிகச்சிறந்த தொழில்நுட்பம் இருக்கின்ற நூற்றாண்டில் வாழும் வாய்ப்பை பெற்று இருக்கிறீர்கள். இளைமை பருவமும் கூடவே இருக்கிறது. குறை கூறாதீர்கள், குறை கூறினால் உங்களது பார்வைக்கு வாய்ப்புகள் தெரியாமல் போய்விடும். ஆகவே வாய்ப்புகளை தேடுங்கள், அதில் உங்களது கவனத்தை செலுத்துங்கள். இன்றைய தலைமுறைக்கு மாலை பொழுதில் நல்ல யோசனைகள் தோன்றுகின்றன.

அனைவருக்கும் போல பில்கேட்ஸ் தான் ஜாக் மாவினதும் நாயகன். பில்கேட்ஸ் செய்த தொழில்நுட்ப சாதனைகளைப்போல தன்னால் செய்திட முடியாது என அடக்கமாக சொல்லும் ஜாக் மா ஒரு விசயத்தில் தான் அவரை வென்று விட்டதாக கூறுகிறார். பில்கேட்ஸ் தனது 58 வயதில் தான் தனது பணியை ராஜினாமா செய்துவிட்டு அறக்கட்டளை ஒன்றினை நிறுவி பொதுப்பணிகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். ஆனால் ஜாக் மா தனது 55 ஆம் வயதிலேயே தனது பணியை ராஜினாமா செய்துவிட்டு மீண்டும் தனது ஆசிரியர் பணிக்கே திரும்பிவிட்டார். இதில் தான் பில்கேட்ஸை முந்திவிட்டதாக ஜாக் மா கூறுகிறார்.

**(நன்றி இணையம்)**




# மாதவிடாய் காலத்தில் பெண்கள் செய்யும் தவறுகள்...

மாதவிடாய் காலத்தில் பெண்களுக்கு எத்தனை மணி நேரத்திற்கு ஒருமுறை 'சானிட்டரி நப்கின்' மாற்ற வேண்டும் என்று தெரிவதில்லை. அதிக நேரம் 'சானிட்டரி நாப்கின்' மாற்றாவிட்டால் பல்வேறு உடல் பிரச்சினைகள் வரலாம்.

எத்தனை மணிநேரத்திற்கு ஒருமுறை 'சானிட்டரி நப்கின்' மாற்ற வேண்டும்! பெண்கள் தங்கள் மாதவிடாய் காலங்களை சமாளிக்க எப்பொழுதும் சுகாதார நாப்கின்களையே சார்ந்து உள்ளனர். தற்போது நாப்கின்களின் பயன்பாடு அதிகரித்து வருகிறது என்றே கூறலாம்.

சானிட்டரி நப்கின், டம்பான்கள் மற்றும் மாதவிடாய் கப் என அனைத்தும் தற்போது கிடைக்கிறது. ஆனால் இதில் பெரும்பாலான பெண்கள் பயன்படுத்துவது சானிட்டரி நப்கின்களைத் தான். ஏனெனில் சானிட்டரி நப்கின்களை அகற்றுவது செய்வதும் பயன்படுத்துவதும் எளிது. நம்மில்





பெரும்பாலானோர் சானிட்டரி நப்கின்கள் முற்றிலும் பாதுகாப்பானது என்று நினைக்கின்றனர்.

பெண்கள் மாதவிலக்கு காலகட்டத்தில் (28 நாட்களுக்கு ஒரு முறை) சுத்தத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் ஏனெனில் கிருமி தொற்று ஏற்பட வாய்ப்பு அதிகம். மாதவிலக்கு நாட்களில் 3 முதல் 5 மணி நேரத்திற்குள் 'சானிட்டரி நப்கின்' மாற்ற வேண்டும். அந்தப் பகுதியை நன்றாக சுத்தம் செய்யவும் வேண்டும்.

உங்கள் மாதவிடாய் காலங்களில் இரத்த போக்கு இல்லாவிட்டால் கூட ஒவ்வொரு 34 மணி நேரத்திற்கு ஒரு முறை பேடுகளை மாற்ற வேண்டும்.

எப்போதும் சுத்தமான மற்றும் உலர்ந்த உள்ளாடைகளை அணியுங்கள். ஈரமான உள்ளாடைகள் உங்களுக்கு நோய்த்தொற்றை உண்டாக்க வாய்ப்பு உள்ளது.

முடிந்த வரை கெமிக்கல்கள் நிறைந்த சானிட்டரி நப்கின்களுக்கு பதிலாக ஆர்கானிக் நப்கின்களை வாங்கி பயன்படுத்துங்கள்.

உங்கள் பிறப்புறுப்பு பகுதியை எப்போதும் சுத்தமாக வைத்திருங்கள்.

உங்கள் பிறப்புறுப்பு பகுதியில் அரிப்பு மற்றும் தடிப்புகள்





காணப்பட்டால் அதற்கு தகுந்த சிகிச்சையை எடுத்துக் கொள்ளுங்கள்.

சானிட்டரி நாப்கின்களை சரியாக அகற்றி குப்பையில் போடுங்கள். சானிட்டரி நாப்கின் மாற்றாவிட்டால் பாக்டீரியா தொற்றுகள் உருவாகி, நாற்றம் வீசத் தொடங்கிவிடும். மாதவிலக்கு நாட்களில் தினமும் இருமுறை இளம் சுடுநீரும், வீரியம் குறைந்த சோப்பும் பயன்படுத்தி, பிறப்பு உறுப்பு பகுதியை சுத்தம் செய்ய வேண்டும் பெண்கள் பொதுவாக இதனை பின்பற்றுவ தில்லை.

# சுவையான மசாலா அப்பம்



**தேவையான பொருட்கள்:**

- அப்ப மா 2 கப்
- எண்ணெய் தேவைக்கேற்ப
- துருவிய தேங்காய் 2 மேசைக்கரண்டி
- சோம்பு 1/4 தேக்கரண்டி
- பச்சை மிளகாய் 1
- வெங்காயம் 100 கிராம்
- மஞ்சள் தூள் தேவைக்கேற்ப

**செய்முறை:**

தேங்காய் துருவல், சோம்பு, பச்சைமிளகாய், வெங்காயம் மற்றும் மஞ்சள் தூள் ஆகியவற்றை சிறிது தண்ணீர் விட்டு அரைத்துக்கொள்ளவும்.
அதை அப்ப மாவுடன் சேர்த்துக் கரைத்துக்கொள்ளவும்
ஒரு தவாலை சூடாக்கவும் ஒரு பெரிய கரண்டியில் மாவை எடுத்து தவாவில் ஊற்றவும்.
சுற்றிலும் எண்ணெய் ஊற்றி மூடி வைத்து வேக வைக்கவும்.
சில நிமிடங்கள் கழித்து திருப்பவும்.
மீண்டும் 1 2 நிமிடங்கள் வேக வைக்கவும்.
தவாவில் இருந்து எடுக்கவும்.
சுவையான மசாலா அப்பம் தயார்

# தமிழ்த் திரையிசைப் பாடல்கள்

## நயப்பும் வியப்பும் 08

# இதயங்களை வருடி நிற்கும் S.A.ராஜ்குமாரின் பாடல்கள்

**தமிழ்த் திரையிசை வெளியில் தோற்றம் பெறுகின்ற ஒவ்வொரு பாடல்களும் ஏதோவொரு மாத்திரத்தில் தனிச்சிறப்புமிக்கனவாய் அமைந்து அனைவரையும் ரசிக்கவைப்பதில் இசையமைப்பாளர்களின் பங்கு மிகக் குாத்திரமானது.**

எழுதப்பட்ட வரிகளிற்கு மெட்டுக்கட்டி இசைக்கோர்பு செய்வது ஒரு ரகம் என்றால் மெட்டை உருவாக்கி அதற்கு வரிகளை எழுதப் பெற்றபின் பாடல்களை உருவாக்கம் செய்தல் இன்னுமொரு ரகம் ஆகும். இப்படியான இந்த இரசனைபூர்வ ஓட்டத்தில் 1980களின் பிற்பகுதியில் "சின்னப் பூவே மெல்லப் பேசு" என்கின்ற தனது அறிமுகத்திரைப்படம் வாயிலாக இசையமைப்பாளராக அறிமுகமானவரே இசையமைப்பாளர் S.A.ராஜ்குமார் ஆவார்.

1990 கள் தொடங்கி 2010 கள் வரையும் இவர் இசையமைத்த பல திரைப்பாடல்களும் இவரின் தனித்துவமான இசைப் பாடல்களிற்கூடாகவும், மனதை உருக்குகின்ற பின்னணி இசைக்கூடாகவும் நன்கு பேசப்பட்ட பாடல்களாக அமையப்பெற்றன. கோரஸ்கள் என்று சொல்லப்படுகின்ற பலர் சேர்ந்து ஹம்மிங் செய்யும் இசையை மிகத் தத்ரூபமாக திரைப்பட பின்னணி இசைகளில் பிரயோகித்து அனைவரையும் கவர்கின்ற பாங்கு இவரின் தனிச்சிறப்பு எனலாம். குறிப்பாக இயக்குனர் விக்கிரமனின் திரைப்படங்கள் என்றால் S.A.ராஜ்குமாரின் இசை தான் என்று சொல்லக்கூடிய வரையில் இருவரின் கூட்டிணைவிலும் வெளியான அநேக திரைப்படங்களும் அந்தச் சிறப்பிற்கு கட்டியம் கூறுகின்றனவாய் அமைகின்றது.

பாடல்களை பொறுத்தவரை ஒரு திரைப்படத்தின் வெற்றியை தீர்மானிப்பதில் மிகமுக்கியமானது எனலாம். அப்படியான பாடல்களை ஹிட் செய்து கொடுப்பதில் S.A.ராஜ்குமார் விற்பன்னர் என்றே சொல்ல வேண்டும். 1990களின் நடுப்பகுதியில் அவர் செய்த இசை ராஜாங்கத்தை அன்றைய இளசுகள் அவ்வளவு சுலபத்தில் மறந்துவிடமுடியாது. இன்று கேட்டாலும் ரம்மியமான இவரின் பாடல்கள் தனித்துவம் வாய்ந்தவை.

"பூவே உனக்காக" திரைப்படம் இவரின் இசைவாழ்வில் மிக முக்கியமான திரைப்படம் என்றே சொல்ல வேண்டும். பாடல்கள் அனைத்தும் மிக அருமையாக அமையப்பெற்ற திரைப்படமாக இது அமைந்தது. இத்திரைப்படத்தில் இடம் பெற்ற

**"ஆனந்தம் ஆனந்தம் பாடும் – மனம் ஆசையில் ஊஞ்சலில் ஆடும்.**

என்ற பாடலை கேட்டு உருகாதோர் இருக்க முடியாது என்னும் அளவிற்கு



உன்னிக்கிருஷ்ணனை மிகச் சிறப்பாக பயன்படுத்தியிருப்பார். S.A.ராஜ்குமார் அவர்கள் அடுத்து அதே திரைப்படத்தில் இடம்பெற்ற மற்றுமொரு பாடலான

**"சொல்லாமலே யார் பார்த்தது**
**நெஞ்சோடுதான் பூ பூத்தது"**

இந்தப் பாடலை பொறுத்தவரை பாடகர் ஜெயச்சந்திரன் அவர்களை இப்படியான பாடல்களில் பாடவைத்து பாடலை மெருகூட்டி அவர் குரலையும் வித்தியாசமான தோரணையில் ரசிக்க வைத்திருப்பார். S.A.ராஜ்குமார் அவர்கள் இந்தப் பாடலில் சேர்கப்பட்டிருக்கும் அந்த தபேலாவில் உருண்டுவரும் அந்த நாதம் இந்தப்பாடலின் சிறப்பிற்கு மேலும் வலுச்சேர்த்திருக்கும்.

"சூரியவம்சம்" திரைப்படம் தமிழ் திரைப்பட வரலாற்றில் அன்றைய நாளில் பலராலும் விரும்பி ரசிக்கப்பட்ட மாபெரும்







வெற்றிப்படமாக அமைந்தது. அந்த வெற்றியின் பிரதான பங்கில் முக்கியமானவராக இவர் திகழ்ந்தார். பாடல்கள் அனைத்தும் முத்தானவையாகவும், குறிப்பாக பின்னணி இசைக்காக அந்தப்படம் பலராலும் வியந்து பேசப்பட்டது. அதில் அமைந்துள்ள

**"ரோசாப்பூ சின்ன ரோசாப்பூ**
**உன் பேரை சொல்லும் ரோசாப்பூ"**
**"நட்சத்திர யன்னலை வானம் எட்டி பாக்குது**
**சிறகை விரித்து பறப்போம்"**
**"நலக்கு சலக்கு சரிய சேலை**
**சலக்கு சலக்கு"**

போன்ற பாடல்கள் இன்றுவரை மிகப்பிரபல்யம் வாய்ந்தனவாக இருக்கின்றன. "சூரிய வம்சம்" திரைப்படத்திற்காக தமிழக அரசின் அதியுயர் விருதையும் 1997ம் ஆண்டு இவர் பெற்றுக் கொண்டார்.

1998ம் ஆண்டு திரையில் மலர்ந்த திரைப்படம் "அவள் வருவாளா" இந்தத் திரைக்காவியத்திலும் இடம்பெற்ற அனைத்துப் பாடல்களும் அந்நாளில் மெகா ஹிட் ஆகின. அவற்றில்

**"இது காதலின் சங்கீதம்**
**புது குங்கும சந்தோஷம்"**
**"சேலையில் வீடு கட்டவா**
**சேர்ந்து ரசிக்க"**
**"காதல் என்ன கண்ணாமூச்சி**
**ஆட்டமா"**

போன்ற பாடல்கள் பலரின் விருப்பபாடல்களாக அமைந்தது.

"துள்ளாத மனமும் துள்ளும்" திரைப்படம் இவரின் சிறப்பான இசைக்கு சான்றாக நிற்கும் மற்றுமொரு சிறப்பான படையல் ஆகும். இந்தத் திரைப்படத்திலும்

**"இன்னிசை பாடி வரும்**
**இளம் காற்றுக்கு உருவமில்லை"**
**"மேகமாய் வந்து போகிறேன்**
**வெண்ணிலா உன்னை தேடியே"**
**"தொடு தொடு எனவே**
**வானவில் என்னை"**

போன்ற அனைத்து பாடல்களும் ரசனை பூர்வமானவையாக அமைந்து அனைவரைம் முணுமுணுக்க வைத்தது.

பாடல்களின் இடை இசை சொல்லப்படுகின்ற இன்ரலூட்களில் மிக நீளமாக இசையை இணைத்து அதைக்கூட இரசிக்கவைப்பதில் இவர் கைதோர்ந்தவர் ஆவார். இயக்குனர் விக்கிரமனின் இயக்கத்தில் வெளியான "வானத்தைப் போல" திரைப்படமும் இவருக்கு நல்ல நாமத்தை இட்டுக் கொடுத்தது. அந்த படத்தில் இடம்பெற்ற

**"காதல் வெண்ணிலா**
**கையில் சேருமா"**
**"எங்கள் வீட்டில்**
**எல்லா நாளும் கார்த்திகை"**
**போன்ற பாடல்களும் மிக நல்ல**
**பாடல்களாக அமைந்தன.**

"மறுமலர்ச்சி" திரைப்படத்தில் ஒரு அற்புதமான பாடலை மிக விரைவாக சிறிய பாடலாக அமைத்து இன்னும் ஒரு சரணத்தை சேர்த்திருக்கலாமே என்ற ஏக்கத்தை தத்ரூபமாக தட்டிவிட்டிருப்பார் S.A.ராஜ்குமார் அவர்கள். அந்தப் பாடல்தான்

**"நன்றி சொல்ல உனக்கு**
**வார்த்தையில்லை எனக்கு"**

என்பதாக அமைந்து பட்டி தொட்டியெங்கும் ஹிட்டாக அமைந்த பாடலாக வெளியாகியது.

S.A.ராஜ்குமாரின் பாடல்களை பொறுத்தவரை வாத்தியச் சேர்க்கையில் எப்போதும் கவனம் செலுத்துகின்ற ஒருவராக ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து செதுக்குவார். "கண்ணுபடப் போகுதையா" திரைப்படத்தில் அமைந்த ஒரு பாடலில் வண்டில் சலங்கையொலியையும் திரைக்காட்சிக்கு ஏற்ப இணைத்து அதில் வெற்றியும் கண்டிருப்பார்.

**"மூக்குத்தி முத்தழகு**
**மூன்றாம் பிறை பொட்டழகு"**

என்ற அந்தப்பாடலும் இன்று கேட்டாலும் இனிமை சொரிகிறதாகவே அமையும்.

S.A.ராஜ்குமாரை பொறுத்தவரை அவரது திரைப்படங்களில் வருகின்ற அனைத்து பாடல்களையும் ஹிட் பண்ணி கொடுப்பதில் கைதேர்ந்தவர். அதற்கு அவர் இசையமைத்த திரைப்படங்களே சாட்சிகளாகி நிற்கின்றன. இவ்வாறு பல்திறன் கொண்ட இவரின் இசையமைப்பில் வெளியான ஒவ்வொரு பாடல்களும் தனிச்சிறப்பு வாய்ந்தனவாகவே இன்னமும் மிளிர்கின்றன.

**வெற்றி துஷ்யந்தன்**



மருதானை கபிகாவத்தை ஸ்ரீ கைலேஸ்வரம் நாட்டியாஞ்சலி நிகழ்வில் எடுக்கப்பட்ட படம் . (ஜெகநாதன் சஞ்ஜீவன், சத்திவேல் நிதுாஷபிரியா, பாலசுப்பிரமணியம் அனிதா, பாலசந்திரன் டினிஷா)

*படம் இராமநாதன் பரிலோஜிதன்*

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மே மாதம் 09 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.